# சித்திரக் கலை

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

## தரம் 12



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# சித்திரம் கலை

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 12

**(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**அழகியற் கல்வித்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**இலங்கை**
**www.nie.lk**
**info@nie.lk**

**சித்திரம் கலை**
தரம் - 12
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2017

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

**அழகியற் கல்வித்துறை**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களையும் கல்வி தொடர்பாக பல்வேறு கல்வி விற்பன்னர்கள் முன்வைத்த கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட கலைத்திட்ட நியாயப்படுத்தல் செயன்முறையின் விளைவாக, பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வித்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ் நியாயப்படுத்தல் செயன்முறையானது அடிப்படை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில், தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் நேயப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து

விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், வேலை உலகிற்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் சமூகத்தினை மேம்படுத்துவதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன பூகோள நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத் துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன் படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாட நிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத் தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அங்கீகாரமும்**
கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**பாடஇணைப்பாக்கம்**
திரு. ரவீந்திர தேனுவர - விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

**பாட நிபுணர்கள்**
பேராசிரியர் சுசிரிபால மாலிம்பட - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியல் பல்கலைக்கழகம்
பேராசிரியர் ரம்யவர்தன பொடிநிலமே - சிரேஷ்ட விரிவுரையாளர் அழகியல் பல்கலைக்கழகம்
பேராசிரியர் மங்கலிக்கா ஜயதுங்க - சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்
கலாநிதி தா. சனாதனன் - சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலாநிதி உபாலி ரஞ்சித் ரணவக்க - உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணியகம், ஹொரண

**உள்வாரி வளப்பங்களிப்பு**
திரு. எம்.ஜீ.ஏ.கே.யூ. பண்டார - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
திரு. ஞானசிரி பீ. கமகே - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
திரு. ரவீந்திர தேனுவர - விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
திருமதி. சமரி தபஸ்வரகே - உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
திருமதி. எம்.பீ. பிரேமதிலக்க - உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

**வெளிவாரி வளப்பங்களிப்பு**
திருமதி. எச்.ஏ. சஞ்சீவி மஞ்சரி - ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு
திரு. ஜே.ஏ. வஜிர நளிந்த ஜயதிலக்க - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியல் பல்கலைக்கழகம்
திரு. பிரசன்ன ரணபாகு - விரிவுரையாளர், தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவனம், கொழும்பு
செல்வி. சிறீமதி ஏக்கநாயக்க - விரிவுரையாளர் (வெளிவாரி) களனி பல்கலைக்கழகம்
திரு. எச்.எம்.பீ.எச். பண்டார - சித்திரக்கலை ஆசிரியர் புனித சில்வெஸ்டர் வித்தியாலயம், கண்டி
திரு. தீப்த ஸ்ரீ உதயங்க - சித்திரக்கலை ஆசிரியர், ரோயல் கல்லூரி, மொனராகல
திருமதி. கே.எம்.ஏ. அனுபமா பண்டார - உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு

**மொழி செம்மையாக்கம்** திரு. திரு. ஸ்ரீநாத் கணேவத்த

**மொழிபெயர்ப்பு** திருமதி. யூ. விவேகானந்தன்
ஓய்வு பெற்ற ஆசிரியை, ஹட்டன் வலயம்
திரு. பிஷ்ரூள் ஹாசி காசிம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம் கொழும்பு

**அட்டை வடிவமைப்பு** திரு. ரவீந்திர தேனுவர, அழகியற் கல்வித்துறை

**கணினி வடிவமைப்பு** திருமதி. எம்.என்.எப். றிஹானா, தே.க.நி.

**நானாவித உதவிகள்** செல்வி. தீபா சிரோமணி, அழகியற் கல்வித்துறை,
திரு. பிரேமரத்தின பெரேரா, அழகியற் கல்வித்துறை

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2015ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படும் 12ம் தரத்துக்கான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இவ் ஆசிரியர் வழிகாட்டி 2017ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும். வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செற்பாடடை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணை புரிவதற்காக இவ் வழிகாட்டி உங்களுக்கு வழங்கப்படுகிறது. இதனைப் பயன்படுத்தும்போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்துவது முக்கியமானது.

- பாடசாலையின் ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய, சித்திரக்கலை பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான நேரத்தை முகாமைததுவம் செய்து கொள்ளவும்.
- ஆளுமை வளர்ச்சியை அடிப்பயையாகக் கொண்டு இவ்வாசிரியர் வழிகாட்டியில் 7 தேர்ச்சிகளில் பாடங்கள் வரிசைப்படுததப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் கட்டாயமாக கற்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- பாட உள்ளடக்கத்தில் 1.0 இல் இருந்து 5.0 வரைக்கான செயன்முறை தேர்ச்சிகளில், ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திலும் மாதிரி செயற்பாடு ஒன்று மட்டும் உள்ளடக்கப்படடுள்ளது. அத்தேர்ச்சி மடடங்களுக்கு எற்ற விதத்தில் விதந்துரைக்கப்பட்ட தலைப்புகளில் அல்லது பொருத்தமான வேறு தலைப்புகளில் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டுக்கொள்க. விதைந்துரைக்கப்பட்டுள்ள, மற்றும் தாமே தயாரித்த செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.
  - அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்னிலையொன்றின் மூலம் களியூட்டத்தக்கவாறு பாடத்தைத் தொடங்குவதன் மூலம், மாணவரை பாடத்தின்பால் ஈர்த்தல், முன்னறிவை வினவியறிதல் ஆகியன மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு விதைந்துரைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் முறைகளைப் போலவே உங்களால் பின்பற்றப்படும் வேறு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளையும் உப்யோகித்து தேவையான முன்னூட்டல்களையம் பின்னூடடல்களையும் வழங்கி, செய்றபாடுகளை இறுதி வரை இட்டுச் சென்று எதிர்பாரக்கப்படும் கற்றல் பேறுகளை அணுகுதல்.
  - முன்வைப்புகள், மதிப்பீடு, மீட்டாய்வு, பின் தொடர் வேலைகள், ஒப்படைத்தல் போன்வற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்த பாடத்தை நிறைவு செய்தல்.
- 6.0, 7.0 எனும் தேர்ச்சிகளுக்கான தேர்ச்சி ம்டங்களில் அடங்கும் பாடங்களை உள்ளடக்கிய செயற்பாடுகள் திட்டமிட்டுள்ளன. சகல செயற்பாடுகளுக்குமான பாடக் குறிப்புகள் சுருக்காகத் தரப்பட்டுள்ளன.

அவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாடக் குறிப்புகளை போதியளவிலான விபரிப்புடன் கற்பிக்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்களுக்குப் பின் 6.0, 7.0 எனும் தேர்ச்சிகளில் உள்ளடங்கும் பாடக் குறிப்புகளுக்கான சகல நிழற் படங்களும் உருவப் படங்களும் தரப்பட்டுள்ளன. மாணவருக்கு பாடவிடயங்களைக் கற்பிக்கும் போது அவற்றை பொருத்மான விதத்தில் உபயோகிப்பது பயன் தரக்கூடியது.

- இவ் ஆசிரியர் வழிகாட்டியானது ஒரு வழிகாட்டி மட்டுமே வழிகாட்டியின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துடன் தொடர்புபட்ட நூல்களையம், இணையத்தளங்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வேறு கல்வி சார்ந்த ஊடகங்களையும் பரிசீலனை செய்வதால் அசிரியர்களும் மாணவர்களும் அறிவு, விழிப்புணர்வு என்பவற்றை முழுமையாகப் பெற்றுவிடுவர். அதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடு மேலும் சிறப்படையும்.
- ஆக்கபூர்வமான ஆசிரியராகத் தொழிற்படுவதற்காக எண்ணி எளிமையான வழிகாட்டலாக முன்வைக்கப்பட்ட இவ்வாசிரியர் வழிகாட்டி சித்திரக்கலைப்பாட கற்றல் கற்பித்தலையும் கணிப்பீட்டுச் செயற்பாட்டையும், செம்மையாக்க உறுதுணையாக இருக்கட்டும் என வாழ்த்துகிறோம்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii-iv |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vii-viii |
| பாடத்திட்டம் | x-liii |
| தவணைக்குரிய செயற்பாடுகள் | liv–lxi |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | 1– 214 |
| புகைப்படத்திரட்டு | 215 – 350 |
| மேலதிக வாசிப்பு நூல்கள் | 351– 354 |

# பாடத்திட்டத்தின் உள்ளடக்கம்

# 1.0 அறிமுகம்

தனியாட்களிடத்தே இரசனைத்திறன்களை மேம்படுத்த பெரிதும் உதவும் அழகியற் கலைப்பாடம் சித்திரப் பாடமெனலாம். கட்புலக் கலைகளின் கீழ் வகைப்படுத்தப்படும் சித்திரக்கலைப்பாடமானது, பாடசாலைக் கலைத்திட்டத்தில் குறிப்பான ஓர் இடத்தைப் பெறும் ஒரு பாடமாகும். அது பாடசாலை மாணவரிடத்தே சமனிலையான ஆக்கியல் ஆளுமையை வளப்பதில் பங்களிப்புச் செய்யவல்லது. தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சித்திரக்கலைப் பாடத்திட்டத்தில் கோட்பாட்டறிவுப் பகுதிகளையும் செய்முறைப்பகுதிகளையும் சமனிலையாக கற்க வகை செய்யப் பட்டுள்ளமையால் அக்கருமத்தை மேன்மேலும் விளைதிறனுடையதாய் நிறைவுசெய்து கொள்ள வழிகோலப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் 6 ஆந் தரம் தொடக்கம் நடைமுறைக்கு வந்த புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்களின் கீழ் 2016 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதப்பத்திர உயர்தர 12ஆம், 13 ஆம் தரங்களுக்குரிய சித்திரக்கலைப் பாடத்துக்குரிய புதிய பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்படுகின்றது. எமது நாட்டுப் பிள்ளைகளிடத்தே அறிவு, திறன்கள், மனப்பாங்குகளோடு பூரணமான வாழ்க்கை அனுபவங்களையும் வழங்கும் நோக்குடன் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏழு தேர்ச்சிகளை இப்பாடத்திட்டம் கொண்டுள்ளது. செய்முறைப் பாடப்பகுதிகளை உள்ளடக்கிய ஐந்து தேரச்சிகளும் கலை நயப்பு மற்றும் கலை வரலாற்றை உள்ளடக்கிய இரண்டு தேர்ச்சிகளுமே அவையாகும். பாடசாலை மாணவர்களது ஆக்கியல் சிந்தனை, செய்முறைத்திறன் விருத்தி ஆகியவற்றை கலைத்துவ பரிமாணங்களின் வழியே வெளிப்படுத்தி அவர்களிடத்தே பொறுமை, தன்னடக்கம், மனவெழுச்சிக் கட்டுப்பாடு, ஒத்துழைப்பு போன்ற காத்திரமான ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யப் பங்களிப்புச் செய்யத்தக்கவாறு சித்திரக்கலை செய்முறைப்பாடப்பகுதிகளை உள்ளடக்கிய தேர்ச்சி மட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பகுத்தறிவுடனும் தர்க்கரீதியிலும் சமனிலையான மனதுடனும் கலைப் படைப்புக்களை மதிப்பிடுவதற்கும் நயப்பதற்கும் அதனூடாகக் கிடைக்கும் அறிவைச் சுய படைப்பாக்கத் துக்கு அடிப்படையாகக் கொள்வதற்கும் தேவையான கற்பனா சக்தியை மேம்படுத்துவதற்கும் கலை வரலாற்றுக்கும் நயப்புக்கும் உரிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களையும் கற்பதனூடாகச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

அந்தந்தத் தேர்ச்சிக்கும் தேர்ச்சி மட்டங்களுக்குமுரிய கற்றற் பேறுகளும் பாடத்திட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் பாடம் தொடர்பாக மாணவர் அடைய வேண்டிய அடைவுமட்டங்களை முன்கூட்டியே விளங்கிக் கொள்ள ஆசிரியருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். கற்றற் பேறுகள் குறித்துக் கவனஞ் செலுத்துதலானது, கற்றல் - கற்பித்தற் செயன்முறையைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் முறைமையான வகையில் கணிப்பீடு - மதிப்பீட்டுச் சென்முறையை நடைமுறைப்படுத்து வதற்கும் துணையாக அமையும்.

அந்தந்தத் தேர்ச்சியின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள பாடவிட உள்ளடக்கம் ஒழுங்காக வரிசைப்படுத்தப்பட்டள்ளது. கலை வரலாற்றுக்கும் நயப்புக்குமுரிய பாடவிடய உள்ளடக்கத்தை வரிசைப்படுத்துகையில்,

தேர்ச்சிகளுக்கும் தேர்ச்சிமட்டங்களுக்கு அமையலான பாடவிடயங்களை மாத்திரம் தெரிவு செய்வதில் கவனஞ் செலுத்தப்பட்டுது. இந்திய ஐரோப்பிய கலை வரலாற்றிலிருந்து தெரிவு செய்த விடய உள்ளடக்கத்தைக் கொண்டு, சித்திரக்கலையின் வெவ்வேறு திசைமுகங்கள் பற்றிக் கற்றற் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

மாணவர், இப்பாடத்திட்டத்தைப் பயிலுவதனால் சித்திரக்கலையின் பல்வேறு பாடப்பரப்புக்கள் தொடர்பான அடிப்படையான விளக்கத்தை இனிவரும் கற்கைக் கருமங்களுக்குரிய சரியான வழிகாட்டலும் கிடைக்கும். மேலும் தனியாளின் வாழ்க்கைக்குத் தேவையான அழகியல் நயப்பு தொடர்பான சரியான விளக்கத்தையும் வாழ்க்கை யின் பல்வேறு சவால்களின் முன்னிலையில் தெளிவான நலிமையாக்கத்தக்க முடிவுகள் தீர்மனங்களை ஆக்கியல் அணுகு முறைகளின் கீழ் பெறுவதற்கும் தேவையான உள ஆயத்தத்தை ஏற்படுத்துவதற்கும் துணையாகும். நவீன வேலை உலகுக்கு இன்றியமையாத செயன்முறைத்திறன்கள் மற்றும் அவற்றின் வெவ்வேறு பரிமாணங்கள் தொடர்பாக மாணவர்க்கு அறிவூட்டம் செய்வதால் எதிர்கால அறைகூவல்களை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும். எதிர்கால உலகின் பொறுப்பாளர்களான நிகழ்கால பாடசாலை மாணவர்கள் நல்ல நடத்தைகளைக் கொண்ட ஆக்கியல்மிக்க பிரசைகளாகச் சமூகப்படுத்தலை எனும் இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக இப்பாடத்திட்டம் ஆசிரியர்க்குப் பேருதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## 3.0 அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | | |
|---|---|---|
| எழுத்தறிவு | : | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம். |
| எண்ணறிவு | : | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல். |
| சித்திர அறிவு | : | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழினுட்பத் தகைமை | : | கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |



### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்வயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## 4.0 சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள்

1. **சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல்** - சூழலில் இடம்பெறும் எல்லாத் தோற்றப்பாடுகளும் மனித வாழ்க்கையுடன் தொடர்புடையவை. இயற்கையின் அழகும் எழிலும் சந்தமும் தனியாளிடத்தே ஏற்படுத்தும் களிப்பூட்டும், அனுபவங்கள், கலைப்படைப்புக்களை உருவாக்குவதற்குத் தேவையான கற்பனா சக்தியை மலரச் செய்யும். எனவே இயற்கையின் அழகியல் அனுபவங்கள் மற்றும் பெறுமானங்களை ஆக்கியல் அணுகுமுறைகளின் வழியே மாணவர்கள் அடையச் செய்து அவர்களது இரசனைத்திறனை வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

2. **ஆக்கியற் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்** - போட்டாபோட்டியான வாழ்க்கையின் போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்களின் முன்னிலையில், சளைக்காது, ஆக்கியல் தீர்வுகள் மற்றும் அணுகுமுறைகளை எட்டுவதற்குத் தேவையான சிந்தனா சக்தியை வளர்த்தலும் கலையுடன் தொடர்புடைய தனியாளின் எதிர்பார்ப்புக்களையும் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்வதற்காக ஆக்கியல் ரீதியான கலைப்படைப்புக்களை ஆக்குவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

3. **வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.** - வினைத்திறன், பரஸ்பர நட்புணர்வு, ஒருவரையொருவர் மதித்துச் செயற்படு தன்மை போன்றவை வினைதிறனான வாழ்ககையில் தெள்ளத் தெளிவான அம்சங்களாகும். அதுமட்டுமன்றி, கலைத்துவப் பரிமாணங்களின் வழியே தமது மனப்பாங்குகளைம் திறன்களையும் வளர்த்துக் கொள்ளலானது வாழ்க்கையில் செழுமை மீது பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். அதற்கான வழிகாட்டலை வழங்குவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

4. **சுதேச மற்றும் வெளிநாட்டு கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும்** - சுதேச மற்றும் வெளிநாட்டுச் சித்திரக்கலைத்துறைகள்பற்றிப் பயிலுவதற்கும் அதன் வழியே பெறும் தேர்ச்சிகளை, சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதற்கும் சுதேச பண்பாட்டுப் பல்வகைமையை இனங்காண்பதற்கும் உலகக் கலைப்படைப்புக்களில் குறித்துப் பயின்று தமது கலைத்துவ அறிவை விரத்தி செய்து கொள்வதற்கும் தேவையான பாடத்தோடிணைந்த தேர்ச்சிகளை அடைய வகை செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

5. **திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.** - பல்வகை ஊடகங்களின் வழியே எதிர்ப்படும் சித்திரக் கலையுடன் தொடர்புடைய, தரமிக்க உயரிய பெறுமானமுள்ள ஆக்கங்களைத் தெரிவு செய்துகாள்வதற்கும் அவற்றை திறனாய்வு பூர்வமாக இரசிப்பதற்கும் தேவையான திறன்களை வளர்த்தலே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

6. **எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.** - எதிர்கால வேலையுலகு சவால்மிக்கது. தெளிவான, ஆக்கியல்புகளை உள்ளத்துடன் சமனிலையாக வெற்றி கொள்ளலாம். கலைத்துவச் சிந்தனையுடன், தமது எதிர்கால இலக்குகளை களைக்காது எதிர்கொள்ளக்கூடிய சமனிலையான ஆளுமையைக் கொண்ட எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே இக்குறிக்கோளின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

## 5.0 தேசிய இலக்குகள் மற்றும் சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்களுக்கிடையிலான தொடர்பு

| சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள் | தேசிய இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | i | ii | iii | iv | v | vi | vii | viii |
| 1. சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல் | | | ✓ | ✓ | ✓ | | | |
| 2. ஆக்கியற் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல் | | | ✓ | | ✓ | | | |
| 3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல | | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ |
| 4. சுதேச மற்றும் வெளிநாட்டு கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும | ✓ | ✓ | | | | | | ✓ |
| 5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல | | | | | ✓ | | ✓ | |
| 6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல் | | ✓ | | | ✓ | | ✓ | |

**6.0 தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம், கற்றற்பேறுகள், பாடவேளைகள்**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0 சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.** | 1.1 இரேகையைப் உபயோகித்து மனிதர், விலங்குகளின் உருவங்களைக் கற்பார். | • இரேகைக் கற்றல்<br>– மனித உடல் நிலைகள்<br>– விலங்குகளின் உடல் நிலைகள்<br>• வர்ணப் பயன்பாடு | • இரேகை, வர்ணங்களின் தன்மையை அறிந்து கொண்டு பல்வேறு, மனிதர், விலங்குகளின் வடிவங்களைப் பருமட்டமாக வரைவார். | 45 |
| | 1.2 ஓவிய ஒருங்கிணைப்பின் யதார்த்த முறைகளைக் கொண்டு இயற்கை, செயற்கைச் சூழலை ஓவியங்களாக வரைவார். | • மனிதர், விலங்கு, உருவங்கள்<br>• தாவரங்கள்<br>• செயற்கைப் பொருட்கள்<br>• உணர்வு வெளிப்பாடு<br>• பல்வேறு சமூக நிகழ்வுகள் | • இரேகையைக் கையாளுகின்ற திறனை வெளிக்காட்டி பல்வேறு தொனிப் பொருள்களுக்கு உரிய பருமட்டங்களை வரைவார். | |
| | 1.3 மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளை உபயோகித்து இயற்கை செயற்கை சூழலை ஓவியமாக வரைவார். | • ஒழுங்கமைப்புக் கோட்டுகளின் பயன்பாடு<br>– சித்திரம் ஒழுங்குபடுத்தல்<br>– தூர நோக்கு<br>– அளவு, பிரமாணம்<br>– முப்பரிமாண இயல்பு<br>– சமநிலை<br>• பல்வேறு வர்ண ஊடகமும் நுட்ப முறைகளும்<br>– கொலாஜ் | • இயற்கைச் செயற்கை சுற்றாடல் சார்ந்த தலைப்புக்களை யதார்த்த வடிவிலும் மோடிப்படுத்தியும் ஒழுங்கமைப்பார்.<br>• சித்திர ஒழுங்கமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை சரியான முறையில் பயன்படுத்துவார்.<br>• பல்வேறு வர்ண ஊடகங்களின் நுட்ப முறைகளைச் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – போஸ்ரர் வர்ணம்<br>• நீர் வர்ணம் (நீர்முறை, தடிப்பு முறை)<br>• பஸ்ரல்<br>• அக்ரலிக்<br>• பல்வேறு கலைப் பாணி<br>• கலைத்துவ இயல்பு | சரியான முறையில் கையாண்டு சித்திரத்தை ஒழுங்கமைப்பார்.<br>• சித்திர ஒழுங்கமைப்பின் போது சுய நுட்ப இயல்பை வெளிப்படுத்தி நிருமாணிப்பில் ஈடுபடுவார்.<br>• சுற்றாடல் தொடர்பில் உணர்வுடன் செயற்படுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **2.0 சுற்றாடலில் காணப் படும் பொருள்களை ஒழுங்கிணைத்துச் ஓவியமாக வரைவார்.** | 2.1 பல்வேறு இயற்கைச் செயற் கைப் பொருட்களை, வெவ்வேறாகக் கற்றறிந்து பருமட்டான படங்களை வரைவார். | • இரேகைக் கற்றல்<br>• இயற்கை, செயற்கைப் பொருட்கள்<br>– பல்வேறு கேத்திர கணித வடிவுடைய பொருட்கள்<br>– தாவரப் பகுதிகள்<br>• பல்வேறுபட்ட இரேகைகள்<br>• முப்பரிமாண இயல்பு, ஒளி, நிழல்<br>• பல்வேறுபட்ட வர்ண ஊடகப் பயன்பாடு | • பொருட்கள், தாவரப் பகுதி களின் தன்மை, இயல்பு களை நன்றாக அவதா னித்து பருமட்டான படங் களை வரைவார்.<br>• பல்வேறுபட்ட இரேகைக ளைப் பயன்படுத்தி பொருட் கள், தாவரப் பகுதிகளின் முப்பரிமாண இயல்பை, தன்மைகளைக் கற்பார். | 40 |
| | 2.2 இயற்கை, செயற்கைப் பொருட்களை ஒருங்கி ணைத்து ஓவியமாக வரை வார். | • தளப் பயன்பாடு<br>• கண்மட்டம்<br>• ஒழுங்கமைத்தலின் அடிப்ப டைக் கோட்பாடுகள்<br>– அளவுப் பிரமாணம்<br>– தூர நோக்கு<br>– முப்பரிமான இயல்பு, ஒளி, நிழல்<br>– சமநிலை<br>• மேற்பரப்புத்தன்மை<br>• வர்ணப் பயன்பாடும் நுட்ப முறையும்<br>– நீர்வர்ணம் | • உரிய அடிப்படைக் கோட் பாடுகளை சரியான முறை யில் பயன்படுத்தி தளத் திற்கு ஏற்ற வகையில் பொருட் கூட்டத்தை வரை வார்.<br>• பல்வேறு வர்ண ஊடகங் களுக்குப் பொருத்தமான, நுட்ப முறைகளைச் சரி யான முறையில் பயன் படுத்தி பொருட்களின் முப் பரிமாண இயல்பு, ஒளி, நிழல், புற இயல்பு | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – பஸ்ரல்<br>– அக்றலிக்<br>– கலப்பு ஊடகம்<br>• கலைத்துவ இயல்பு | ஆகியன வெளிப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுவார்.<br>• பொருட் கூட்டத்திற்கு பொருத்தமானவாறு பின்னணியை வர்ணம் தீட்டுவார். | |
| **3.0 பயன்பாட்டுத் தேவைகளுக்காக அலங்கார நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.** | 3.1 பல வடிவம் கொண்ட பாத்திரங்களைத் திட்டமிட்டு அதற்குரிய அலங்கார வடிவங்களை நிர்மாணிப்பார். | • பயன்பாடு/ அன்றாடப் பாவனைத் தேவைகள்<br>• சுற்றாடலைக் கற்றல்<br>• திட்டமிடுகின்ற எண்ணக்கரு<br>• அலங்கரிப்பின் பொருட்டு வைக்கும் பலவிதமான பாத்திரங்கள்<br>– வரலாற்றுக் காலத்துக் குரியவை<br>– தற்காலத்துக்குரியவை<br>– உள்நாட்டு/வெளிநாட்டு<br>• பருமட்டான வரைபடம்<br>• பல்வேறுபட்ட வடிவமைப்புடைய நிர்மாணங்கள்<br>– விலங்குருவம்<br>– தாவர வடிவம்<br>• திட்டமிடல் | • சுற்றாடலைக் கற்பதன் மூலம் பாண்டத்தை அலங்கரிப்பதன் பொருட்டு திட்டமிட்ட பருமட்ட வரைபடத்தை நிர்மாணிப்பார்.<br>• உரிய முறையைப் பயன்படுத்தி ஊடகத்தைத் தயாரிப்பார்.<br>• நிருமாணிப்பின் தரம் அதிகரிக்கும் வகையில் உபகரணங்களைக் கையாளும் திறமையை வெளிப்படுத்துவார்.<br>• கற்றல் செயல்கள் பற்றி முறையான தகவல்களைச் சேகரித்து அறிக்கையைத் தயாரிப்பார். | 45 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • திட்டமிடல் கோட்பாடுகள்<br>– சந்தம்/ இலயம்<br>– சமநிலை<br>– ஒத்திசைவு<br>– ஒருமைப்பாடு<br>• திட்டமிடப்பட்ட ஓவியங்கள்<br>• முப்பரிமாண வரைபுகள்<br>• மாதிரி ஆக்கம்<br>• ஊடகப் பயன்பாடு<br>– சீமெந்து<br>– கடுதாசிக் கூழ்<br>• வர்ணம், நுட்பமுறைப் பயன்பாடு<br>• ஆய்வறிக்கைகள்/ அறிக்கை தயாரித்தல் | • வருங்காலத் வேலை உலகிற்கு ஏற்றவகையில் செயல் முறைத் திறனை வெளிப்படுத்தி நிருமாணிப்பில் ஈடுபடுவார்.<br>• விருத்தி செய்யக்கூடிய கருத்துக்களை முன் வைத்து நிருமாணிப்பை மதிப்பிடுவார். | |
| | 3.2 வீட்டின் நிலையான பகுதிகளின் பொருட்டு புதிய நிர்மாணப்புகளைச் செய்வார். | • பாவனை/ அன்றாடப் பயன்பாட்டுத் தேவை<br>• திட்டமிடப்பட்ட எண்ணக்கரு<br>• காற்றோட்ட அலங்காரத் துவாரங்கள் (கதவு)<br>– வரலாற்றுக்குரியவை<br>– தற்காலத்துக்குரியவை<br>• பருமட்டான வரைபடம்<br>• பல்வேறுபட்ட வடிவம் | • பல்வேறுபட்ட மூலங்களைப் பயன்படுத்தி காற்றோட்ட துவாரச் செதுக்கல் பற்றிய தகவல்களை ஆய்வு செய்து தேவையான குறிப்புகளைச் சேகரிப்பார்.<br>• காற்றோட்ட துவாரச் செதுக்கலில் காணப்பட வேண்டிய பண்பு பற்றிய | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • திட்டமிடல்<br>• திட்டமிடலின் கோட்பாடு<br>– சந்தம்/ இலயம்<br>– சமநிலை<br>– ஒத்திசைவு<br>– ஒருமைப்பாடு<br>• முப்பரிமாண ஓவியங்கள்<br>• மேற்பரப்புத் தன்மைகள்<br>• வர்ண உபயோகம்<br>• ஆய்வறிக்கைகள், அறிக்கைகள் அமைத்தல் | விளக்கத்துடன், திட்டமிடலின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைவாகத் திட்டமைப்பை வரைவார்.<br>• திட்டமிடலுக்கு ஏற்ப இறுதி ஆக்கத்திற்கு பயன்படுத்தும் ஊடகத்தின் தன்மை வெளிப்படும் வகையில் திட்டமிட்ட சித்திரத்தை வர்ணம் தீட்டுவார்.<br>• நிருமாணிப்புச் செயலுக்குப் பொருத்தமான நுட்ப முறையைச் சரியாகப் பயன்படுத்துவார்.<br>• தரமான பூரணப்பாட்டின் பொருட்டு அடக்கத்துடன், முறையாக செயலில் ஈடுபடுவார்.<br>• நிர்மாணச் செயற்பாடுகள் பற்றி, ஒழுங்குமுறையில் குறிப்பெடுத்து வைத்து அறிக்கையொன்றைத் தயாரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3 பல்வேறு தேவைகளின் பொருட்டு அலங்கரிப்பு ஓவியங்களை நிர்மாணிப்பார். | • பாவனை/ அன்றாட பயன்பாட்டுத் தேவை<br>• பல்வேறுபட்ட அலங்கரிப்பு<br>– பரவுரூப அலங்கரிப்பு<br>– முழுதள அலங்கரிப்பு<br>– கரை அலங்கரிப்பு<br>• கைத்தொழிலுக்கு பொருத்தமுடையதாக<br>• பருமட்டான வரைபடம்<br>• பல்வேறுபட்ட வடிவம்<br>• அலங்கரிப்பு அலகு<br>• மீண்டும், மீண்டும் பயன்படுத்தல்<br>• கோலம்<br>• அளவு<br>• திட்டமிடலின் அடிப்படைக் கோட்பாடுகள்<br>– சந்தம்/ இலயம்<br>– சமநிலை<br>– ஒத்திசைவு<br>– ஒருமைப்பாடு<br>• நவீன நிருமாணிப்பு<br>• வர்ணப் பயன்பாடு<br>• நுட்ப முறை<br>• நிறைவு/ பூரணத்துவம் | • பல்வேறு அலங்கரிப்புக்களின் இயல்பு பற்றி உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• உரிய அடிப்படை அங்கங்கள் கோட்பாடுகளைப் பின்பற்றி அலங்கரிப்பு நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• பாவனைத் தேவைக்கும் கைத்தொழிலுக்கும் பொருந்தும் வகையில் கவனம் எடுத்து ஆக்கச் சிறப்புடைய அலங்கரிப்பை வரைவார்.<br>• பொருத்தமான வர்ணங்களையும் நுட்ப முறைகளையும் உபயோகித்து அலங்கரிப்புகளை வர்ணம் தீட்டுவார்.<br>• கவனத்துடனும் சுத்தமாகவும் பொறுமையுடனும் செயலைப் பூர்த்தி செய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **4.0 உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்.** | 4.1 பரந்த தொனிப்பொருள்களில் சுவரொட்டிகளை நிர்மாணிப்பார். | • தேவை<br>• திட்டமைப்பு<br>• தளத்தையும் வெளியையும் பயன்படுத்தல்<br>• அச்சுப் பதிப்பதற்கு ஏற்றதாக<br>• தொடர்பாடலின் உட்கருத்து<br>• ஆக்கச் சிறப்புடைய எழுத்துக்கள்<br>• குறியீட்டு சித்திரம்<br>• வர்ண நுட்பமுறைப் பயன்பாடு | • தொனிப்பொருளைச் சிறப்பாகத் தொடர்பாடக் கூடிய வகையில் குறியீட்டு வடிவம் கொண்ட சுவ ரொட்டிச் சித்திரத்தின் பொருட்டு பருமட்டதிட்ட மைப்பை வரைவார்.<br>• தளம், தளப்பரப்பு தொடர் பான விளக்கத்துடன், குறியீட்டுருக்களையும் எழுத்துக்களையும் சரியாக நிலைநாட்டி சுவரொட்டிச் சித்திரத்தைத் திட்டமிடுவார்.<br>• தொனிப்பொருளுக்கும் திட்டமைப்பிற்கும் ஏற்ப எழுத்துகளின் கோலத்தை யும் அளவையும் பயன் படுத்துவார்.<br>• தொடர்பாடலின் உட் கருத்து வெளிப்படும் வகை யில் வர்ணங்களைப் பயன் படுத்தி நிர்மாணிப்பில் ஈடுபடுவார். | 45 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • சுவரொட்டிச் சித்திர நிருமாணிப்பிற்கு பொருத்தமான வர்ண ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் பயன்படுத்தும் திறமையை வெளிப்படுத்துவார். | |
| | 4.2 பல்வேறு உற்பத்திக்கும் சேவைப் பிரசாரத்தின் பொருட்டும் கிரபிக் நிர்மாணிப்புகளைச் செய்வார். | • வியாபாரத் தேவை<br>• தொடர்பாடலின் உட்கருத்து<br>• இரேகை, வடிவங்கள் என்பவற்றின் உபயோகம்<br>• வர்ணங்களும் நுட்ப முறையும்<br>• எழுத்தமைப்பு<br>– எழுத்துக் கோலம்<br>– எழுத்துக்களின் அளவுப் பிரமாணம்<br>• பல்வேறு கிரபிக் நிர்மாணம்<br>– விளம்பர சுட்டிகள் (லேபிள்)<br>– பொதியுறை, கொள் கலன்கள்<br>– இலச்சினைகள்<br>– விளம்பரங்கள்<br>– வாழ்த்திதழ்கள் | • கிரபிக் நிருமாணிப்பில் வியாபாரத் தேவைக்கேற்ப உருவங்கள், வடிவங்களைப் பயன்படுத்தி பருமட்டான திட்டமைப்பை வரைவார்.<br>• பொருத்தமான எழுத்தமைப்பு என்பவற்றுடன் பிரமாணம் உருவத்தையும் இணைத்து தளத்திற்கும் தளப்பரப்புக்கும் பொருத்தமாக ஒருங்கிணைப்புகளைச் செய்வார்.<br>• உற்பத்திச் சேவைப் பிரச்சாரம் மிக முனைப்பாகும் வகையில் வர்ணங்களையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3 தெரிவு செய்யப்பட்ட கணினி யின் மென்பொருள் ஒன்றை உபயோகித்து கிரபிக் நிர் மாணிப்பை செய்வார். | • கணினி மென்பொருள்<br>– GIMSHOP<br>– INKSCAPE<br>– POTOSHOP<br>– ILLUSTRATOR<br>– PAINT<br>– POWERPOINT<br>• பல்வேறு கிரபிக் நிர்மாணிப்புகள்<br>– சுவரொட்டிகள்<br>– இலச்சினைகள்<br>– வாழ்த்திதழ், அழைப் பிதழ்<br>– பெயர்ப்பலகை<br>– புத்தக அட்டை<br>• வியாபாரத் தேவை<br>• காண்பியம்<br>• எழுத்துகள்<br>• வர்ணங்கள்<br>• தொடர்பாடல்<br>• அச்சிடுதலுக்கு ஏற்றதாக | • பல்வேறு கிரபிக் நிர்மாணிப் புக்களில் தொடர்பாடல் கருத்தை இனங்கண்டு நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• கிரபிக் நிர்மாணிப்பிற்கு ஏற்ற கணனி மென்பொரு ளைச் செயல்படுத்தும் திற மையை வெளிப்படுத்துவார்.<br>• வியாபாரத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் கிரபிக் நிர் மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• அச்சிடுதல் தொடர்பான அறிவாற்றலுடன் கணினி கிரபிக் நிர்மாணிப்பைத் திட்டமிடுவார்.<br>• கணனி தொழில் நுட்ப முறையும் கலைநுட்பத்திற மையையும் இணைத்து கிரபிக் நிர்மாணிப்புத் திற மையை வெளிப்படுத்திக் காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.4 சிறப்புக் கட்டுரைகள், சிறுவர் கதைப் புத்தகங்கள் ஆகிய வற்றின் பொருட்டுக்காட்சி விளக்கக்காட்சி சித்திரங் களை நிர்மாணிப்பார். | • சிறப்புக்கட்டுரைகள்<br>• சிறுவர் கதைகள்<br>• பருமட்டமான வரைபடம்<br>• இரேகைகள்<br>• வடிவங்கள்<br>• வர்ணப்பயன்பாடும் நுட்ப முறைகளும்<br>• தொடர்பாடல் கருத்து<br>• உள்ளடக்கத்திற்கு பொருத் தமுடையதாக<br>• அச்சிடுதல் பணிக்கு ஏற்ற அளவுப் பிரமாணம்<br>• நுட்பப் பண்பு | • உள்ளடக்கம், அளவு தொடர்பான அவதானிப் புடன் இரேகை, வடிவங்க ளைக் கையாண்டு பருமட்ட மான வரைபடத்தை வரைவார்.<br>• பொருத்தமான வர்ணங் களையும் நுட்ப முறை களையும் பயன்படுத்தி கதை விளக்கக் காட்சி சித்திரத்தை வர்ணம் தீட்டுவார்.<br>• சுயமான கலைத்திறன் இயல்பை நிர்மாணிப்புப் பணியில் ஈடுபடும்போது போற்றத்தக்க வகையில் பயன்படுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **5.0 வெவ்வேறு ஊடகங் களைப் பயன்படுத்தி சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.** | 5.1 தெரிவு செய்யப்பட்ட தொனிப் பொருளுக்கேற்ப அப்புதல் நுட்ப முறையைப் பயன் படுத்தி புடைப்புச் செதுக்கல் ஒன்றை நிர்மாணிப்பார். | • தொனிப் பொருளுக்கு ஏற்றதாக பருமட்ட வரைபடம்<br>• நுட்ப முறைக்கு ஏற்றதாகத் திட்டமிடல்<br>• ஊடகப் பயன்பாடு<br>– சீமெந்து<br>• நுட்ப முறைப் பயன்பாடு<br>• கலைத்திறனின் இயல்பு<br>• மேற்பரப்புத்தன்மை<br>• வர்ணப் பயன்பாடு<br>• ஒழுங்கமைப்பு<br>• கற்பனைத் திறன் | • அப்புதல் நுட்பமுறை பற்றிய விளக்கத்துடன், புடைப்பு செதுக்கலுக்கான பருமட்டான வரைபடத்தை வரைவார்.<br>• தொனிப் பொருளின் வெளிப்பாட்டிற்கு மிகப் பொருத்தமான வடிவங் களை வரைவார்.<br>• ஊடகத்தைத் தயாரிப்பதற் கும், கையாளுதலுக்கும் உரிய சரியான முறைகளைப் பின்பற்றுவார்.<br>• அப்புதல் நுட்பமுறையை சிறப்பாகப் பயன்படுத்தி நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• செதுக்கலைப் பூர்த்தி செய் யும் பொழுது விருப்பமான மேற்பரப்புத் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவர்.<br>• உபகரணங்களைக் கையாளும் கலைத்துவ திறமையை வெளிக்காட்டு வார்.<br>• திட்டமிடப்பட்ட ஒழுங்கில் செயலில் ஈடுபடுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.2 கலப்பு ஊடகங்களைப் பயன் படுத்தி திறந்த வெளிச் சிற்பம் ஒன்றை நிர்மாணிப்பார். | • பருமட்டான வரைபடம்<br>• நுட்ப முறைக்கு ஏற்றதாகத் திட்டமிடல்<br>• பல்வேறு ஊடகப் பயன்பாடு<br>• நுட்ப முறைகளைப் பயன் படுத்தல்<br>• முப்பரிமாணத்தன்மை<br>• கலைத்துவப் பண்பு<br>• வர்ணப் பயன்பாடு<br>• ஒழுங்கமைப்பு<br>• ஆக்கச் சிறப்புடையதாக | • திறந்த வெளி சிற்பம் ஒன்றிற்கு பொருத்தமான இடம், இடப்பரப்பை தெரிவு செய்வார்.<br>• பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி திறந்த வெளி சிற்பம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான பருமட்டான வரை படத்தை வரைவார்.<br>• ஊடகங்களின் தனித்துவமான இயல்புகளுக்கு பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• பொருத்தமான வர்ணமும் வர்ணம் தீட்டும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தி முப் பரிமாண இயல்பு வெளிப் படும் வகையில் வர்ணம் தீட்டுவர். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • உபகரணங்களை சரியான முறையில் உபயோகிக்கும் திறமையை வெளிப்படுத்து வார்.<br>• தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களை ஒன்றி ணைத்த செயற்பாட்டில் பங்களிப்புச் செய்வார்.<br>• ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை தன்னடக்கத்துடன் செயலில் ஈடுபடுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **6.0 சமய, பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு/ வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசன தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை, விமர்சன ரீதியில் கிரகித்து இரசித்து, அவற்றின் இயல்பு களைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.** | 6.1 கட்புலக் கலையும் அதன் அடிப்படை அம்சங்கங்களை யும் கோட்பாடுகளையும் கற்பார். | • கட்புலக் கலையை இனங் காணல்<br>• கட்புலக் கலையின் அடிப் படை அம்சங்கங்கள்<br>– வர்ணம்<br>– இரேகை<br>– வடிவங்கள்<br>– இடப்பரப்பு<br>– மேற்பரப்புத்தன்மை<br>– உருவம்<br>• கட்புலக் கலையின் கோட் பாடுகள்<br>– சமநிலை<br>– சந்தம்/ இலயம்<br>– ஒருமைப்பாடும் பல்வகை யும்<br>– ஒத்திசைவு<br>– தூரதரிசனம்<br>– அளவுத்திட்டமும் அளவுப் பிரமாணம்<br>– முப்பரிமாணம்<br>• கட்புல கலையின் பல்வகை கலை, கலைப்பாணி மற்றும் கருத்துகள்<br>– அக்கடமிக் யதார்த்த வாதம்<br>– யதார்த்த வாதம்<br>– மனப்பதிவு வாதம்/ஒளியி யல் வாதம்<br>– கனவடிவ வாதம்<br>– மீ யதார்த்தவாதம் அகவய தாத்விக வாதம்<br>– மனோரதிய வாதம்<br>– கீழைத்தேய வாதம் | • கட்புலக் கலையின் பரந்த தன்மையும் அதன் பலவித பிரிவுகளையும் இனங் கண்டு விளக்குவார்.<br>• கட்புலக்கலையின் அடிப் படை அம்சங்களையும் கோட்பாடுகளையும் வகைப்படுத்துவார்.<br>• கலை ஆக்கத்தின் வெளிப் பாட்டின் பொருட்டு, கட் புலக் கலையின் அடிப்படை அம்சங்கள், கோட்பாடு களின் பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி விளக்குவார்.<br>• கட்புலக் கலையின் பல்வகை கலைப் பாணி மற்றும் கருத்துக்கள் பற்றி ஆய்வு செய்வார்.<br>• பல்வேறுபட்ட கலைப் பாணிகளுக்கான கட்புலக் கலையின் அடிப்படை அம்சங்கள், கோட்பாடு களின் உபயோகம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்கு வார். | 40 |

| **தேர்ச்சி** | **தேர்ச்சி மட்டம்** | **பாட உள்ளடக்கம்** | **கற்றற்பேறுகள்** | **பாட வேளைகள்** |
| --- | --- | --- | --- | --- |
| | 6.2 தெரிவு செய்யப்பட்ட உண்ணாட்டு கலைஞர்களின் நிர்மாணங்களை நயந்துரைப் பார். | • ஏ.சீ.ஜீ.எஸ். அமரசேகர<br>– பேய் ஓட்டுபவனின் மகள்<br>– தச்சன் வீடு/ வேலைத் தளம்<br>• டேவிட் பெயின்டர்<br>– வெற்றியுடன் ஜெருசலத் திற்குள் நுழைதல்<br>– நல்லசமாரியன் (Good sumaritan)<br>• ஜே.டீ.ஏ. பெரேரா<br>– நடனமாது (சந்திரலேகா)<br>– சீதாடி சேரமின் சித்திரம்<br>• எம். சார்லிஸ்<br>– மகாமாயா தேவியின் கனவு<br>– திருமணக்காட்சி<br>• சோளியஸ் மெண்டிஸ்<br>**– களனி விகாரைச் சுவரோவியங்கள்**<br>– புத்த பெருமான் மகியங் கனைக்கு வருகைதரல்<br>– புனிதப் பாதங்களைப் பதித்தல்<br>• சோமபந்து வித்தியாபதி<br>**– பெல்லன்வில விகா ரைச் சுவரோவியங்கள்**<br>– திருமணக்காட்சி | • தெரிவு செய்த இலங்கைக் கலைஞர்களின் ஆக்கங் களின் பின்னணியையும் அவர்களின் (சமயம், சமயத் தொடர்பற்ற) கலை ஆரம்பம் பற்றியும் விளக்குவார்.<br>• இலங்கை கட்புலக்கலையில் வெளிநாட்டு, உள்நாட்டு கலைமரபுகளின் ஆதிக்கம் பற்றி விளக்குவார்.<br>• இலங்கைக் கலைஞர்களு டைய தெரிவு செய்த நிர்மா ணங்களின் சேகரிப்புக்களை விமர்சன ரீதியில் ரசிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – இயமனைத் தோற்கடித்தல்<br>• **வல்வெட்டித்துறை முத்து மாரியம்மன் கோவில் சுவரோவியங்கள்**<br>– சூர சங்காரம்<br>– அசராசுர சங்காரம் | | |
| | 6.3 இந்தியக் கலைஞர்களுடைய கலை நிர்மாணங்களைக் கற்றறிவார். | • ராஜா ரவி வர்மா<br>– சரஸ்வதி<br>– இந்திரஜித்தின் வெற்றி<br>• அபினிந்திரநாத் தாகூர்<br>– பாரத மாதா<br>– அசோக அரசனின் ராணியும் அரசமரமும்<br>• நந்தலால் போஸ்<br>– நஞ்சுண்ட சிவன்<br>– ராதாவின் விரகதாபம் | • காலனித்துவமும் கீழைத் தேய வாதமும் இந்திய கட்புலக் கலையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பற்றி விளக்குவார்.<br>• இந்திய தற்கால புதிய கலைப் பயணத்தின் இயல்புகள், அதன் முன்னோடிக் கலைஞர்களின் ஆக்கங்களினூடாகக் கலந்துரையாடுவார்.<br>• ஆங்கிலேய - இந்திய மற்றும் இந்திய மறுமலர்ச்சி நிர்மாணிப்புக்களுக்கிடையே உள்ள கலைப்பாணி, கருப்பொருள் நுட்ப முறைகளில் காணப்படும் வேறுபாடுகளை பகுத்தாய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.4 ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால கலைஞர்களின் கலை யாக்கங்களைக் கற்றறிவார். | • லியனாடோ டாவின்சி (Leonardo da Vinci)<br>– மொனாலிசா (Mona Lisa)<br>– இறுதி இராப்போசனம் (The Last Supper)<br>– பாறையின் மீது கன்னி மரியாள் (Vergin of the Rocks)<br>• மைக்கல் ஆஞ்சலோ (Michelangilo)<br>– சிஸ்ரைன் தேவலாய ஓவியங்கள் (Paintings in the Systine Chapel)<br>– இறுதித்தீர்ப்பு - (Last Judegement)<br>– ஆதாமைப் படைத்தல் (Creation of Adam)<br>– பியெற்றா சிலை (Pieta)<br>– டேவிட் சிலை (David)<br>– மோசஸ் சிலை (Moses) | • ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கலை நிர்மாணிப்பிற்கு அடிப்படையாக அமைந்த சமூக நிலையை விளக்கு வார்.<br>• மறுமலர்ச்சிக் கலையின் பண்பு, அக்கடமி வாத கோட்பாட்டு பயன்பாடுகள் பற்றி, தெரிவு செய்த கலைஞர்களது ஆக்கங்கள் மூலம் விளக்குவார்.<br>• மேலைத்தேசக் கலைஞர் களின் நிர்மாணிப்புக்களை விமர்சன ரீதியில் நயப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • றபாயெல் சன்சியோ Raphael Sanzio<br>– ஏதன்ஸ் பள்ளி (School of Athens) (ஏதன்ஸ் குருகுலம்)<br>– உருமாற்றம் (Parnassus)<br>– அல்பா மடோனா (Alba Madona) | | |
| | 6.5 ஐரோப்பிய மனப்பதிவு வாதிகளினதும், பின் மனப்பதிவு வாதிகளினதும் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார். | **மனப்பதிவு வாதிகள்**<br>**Impressionists**<br>• கிளோட் மொனே (Claude Monet) (ஒளியியல் வாதம்)<br>– சூரிய உதயத்தின் மனப்பதிவு (Sunrise, Impression)<br>– நீர் அல்லிகளும் யப்பானியப் பாலமும் (Water Lilies and Japanese Bridge)<br>– றோவுன் தேவாலயம் (முழுமையான சூரிய வெளிச்சம்) (Rouen Cathedral;Full Sunlight) | • மனப்பதிவு வாதக் கலையின் அடிப்படைப் பண்புகளையும், மனப்பதிவு வாதக் கலையின் பொருட்டு அடிப்படையாக அமைந்த பின்னணியையும் பற்றி விளக்குவார்.<br>• மனப்பதிவு வாதக் கலை ஆக்கங்களின் நுட்பமுறை, கருப்பொருள், கலைப் பாணியின் இயல்புகளைப் பற்றி விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • எட்கா டெகா (Edgar Degas)<br>– நடன வகுப்பு (The Dance Class)<br>– குளிக்கும் தொட்டி (The Tub)<br>– தலைவாரும் பெண் (Women Combing Her Hair)<br>• மேரி கசற் (Mary Cassat)<br>– நீல அறை (The blue room)<br>– தலையை சீர் செய்யும் பெண் பிள்ளை (Girl Arranging Her hair)<br>– ஸ்னானம் (The Bath) | | |
| | | **பின் மனப்பதிவு வாதம் (Post - Impressinists)**<br>• வின்சன்ட் வன்கோ – (Vincent Van Gogh)<br>– உருளைக் கிழங்கு உண்போர் (The Potato Eaters) | • பின் மனப்பதிவு வாதக் கலைஞர்களால் செய்யப் பட்ட ஆக்கச் சிறப்புடன் கூடிய மாற்றங்களும் கையாண்டு பார்த்த கட்பு லக் கலையின் புதிய வாத பிரவேசிப்பால் ஏற்பட்ட தாக் கம் பற்றியும் விமர்ச்சிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – நட்சத்திரங்கள் நிறைந்த இரவு (The Starry Night)<br>– கதிரை (Vincent's Chair)<br>• போல் கொகேன் (Paul Gauguin)<br>– மஞ்சள் நிற கிறிஸ்து நாதர் (The Yellow Christ)<br>– தெய்வத்தின் தினம் (The Day of the God)<br>– நாம் எங்கிருந்து வருகிறோம் நாங்கள் யார், நாம் எங்கு போகின்றோம் (Where do we come from?What are we? Where are we going?)<br>• போல் செசான் – (Paul Cezanne)<br>– சீட்டாடுவோர் (The Card Players)<br>– அப்பிள் தட்டு – (The Basket of Apple)<br>– தரைக் காட்சி<br>– வெடித்த சுவருடன் கூடிய வீடு - (The House with the Cracked Walls) | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.6 ஐரோப்பிய கனவடிவு வாதக் கலைஞர்களின் நிர்மாணிப்புக்களை கற்றறிவார். | • பப்லோ பிகாசோ (Pablo Picasso)<br>– அவிக் நோன் யுவதிகள் (The Maids of Avignon/ Les Demoiselles d'Avignon)<br>– குவர்ணிக்கா (Guernica)<br>– ஓலமிடும் பெண் (The Weeping Woman)<br>• ஜோர்ஜ் பிராக் (Georges Braque)<br>– வீடுகளும் மரங்களும் (Houses and Trees)<br>– மனிதனும் கிட்டாரும் (Man with a Guitar)<br>– பீடத்துடன் கூடிய மேசை (Pedestal Table) | • கனவடிவ வாதக் கலைகளின் அடிப்படைப் பண்புகள், தற்காலக் கலையில் கனவடிவ வாதம் ஏற்படுத்தி இருக்கும் தாக்கம் பற்றி ஆராய்வார்.<br>• கனவடிவ வாத நிர்மாணிப்புக்களை விமர்ச்சித்து ரசிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0 வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.** | 7.1 இலங்கையின் வரலாற்றுக்கு முற்கால ஓவியங்களைக் கற்றறிவோம் | • இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட சித்திரங்கள்<br>– தந்திரிமலை<br>– தொரவக்குகை<br>– பில்லாவ (Billawa)<br>– வெட்டம்புகல | • இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட குகை ஓவியங்களின் கருப் பொருள், குறியீட்டுப் பாவிப்பு, நுட்ப முறை வெளிப்பாட்டுத் தன்மைகளை விளக்குவார். | 70 |
| | 7.2 ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதியின் குகை ஓவியங்களைக் கற்றறிவார். | • ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட கால குகை சித்திரங்கள்<br>– லஸ்கோ (Lascaux-France)<br>– அல்ராமீரா (Altamira –Spain)<br>– ஷூவெட் (Chauvet-France)<br>– பொண்டிகோமி (Font de Gaume – France) | • ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட குகை ஓவியங்களின் கருப் பொருள், எண்ணக்கரு, பாணி, நுட்ப முறை, வெளிப்பாட்டுத் தன்மைகள் பற்றி விளக்குவார். | |
| | 7.3 இலங்கையின் தூபிகளும் அதனுடன் தொடர்புபட்ட கட்டடக் கலையையும் கற்றறிவர். | • தாதுகோபத்தின் தோற்றமும் பரவலும்<br>• தாதுகோபங்களின் மாதிரி அமைப்புகள்<br>• தாதுகோபத்தின் அங்கங்கள்<br>• இலங்கையின் வரலாற்றுத் தாதுகோபங்கள் | • இலங்கைத் தாதுகோபக் கலையின் தோற்றமும் அதன் பரம்பலும் பற்றி விளக்குவார்.<br>• தாதுகோபங்களின் மாதிரியமைப்புகளை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – தூபாராமய<br>– ருவன்வலி மகாசாய<br>– அபயகிரி<br>– ஜேத்தவனராமய<br>– ரன்கொத் விகாரை<br>– கிரி விகாரை<br>– அங்குராங்கெத்த விகாரையின் தூபி | • அநுராதபுரம், பொலநறுவைக் காலத்தின் தெரிவு செய்த தாதுகோபங்களின் மாதிரிகள், கட்டடக்கலை ஆக்கங்கள் பற்றி விளக்கமாக விபரிப்பார்.<br>• இலங்கை வரலாற்றுத் தாதுகோப நிர்மாணிப்பின், கலைப்பாங்கான அம்சங்களை நயப்பார். | |
| | 7.4 தெரிவு செய்த இலங்கை வரலாற்றுக் கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார். | • இலங்கையில் தெரிந்தெடுத்த வரலாற்று ரீதியான கட்டடக்கலை நிர்மாணங்கள்<br>– ஆசனகர<br>– போதிகர<br>– பதானகர<br>– உபோசதகர<br>– ஜந்தாகர | • இலங்கை வரலாற்றுக் கட்டடக் கலை நிர்மாணிப்புக்களின் நோக்கம், எண்ணக்கரு, கலைப் பண்புகள் பற்றி விபரிப்பார்.<br>• இலங்கை வரலாற்றுக் கட்டடக் கலை நிர்மாணிப்புக்களின் நுட்பமுறை, ஊடகப் பயன்பாடு, பயன்படுத்தி உள்ள தன்மை பற்றி விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.5 தூபிகளையும் ஏனைய வரலாற்று ரீதியான கட்டடங்களுடன் தொடர்புடைய நிர்மாணங்களையும் கற்றறிவார். | • வாகல்கடம்<br>• சந்திரவட்டக்கல்<br>• காவற்கல்<br>• கைப்பிடி<br>• படிகள்<br>• புன்கலசம் | • தாதுகோபமும் வரலாற்றுக் கட்டடத்துடன் தொடர்புற்ற கலை நிர்மாணிப்புக்களின் தோற்றம், பரவல், மாதிரியமைப்புகள், கலைத்துவப் பண்புகளை விளக்குவார். | |
| | 7.6 அனுராதபுரம், பொலநறுவைக் காலத்து கட்டடக் கலை நிர்மாணிப்புகள் பற்றிக் கற்றறிவார். | • திவங்க சிலை மனை<br>• தூபாராம சிலை மனை<br>• இலங்காதிலக்க சிலை மனை<br>• சிவாலயம் இல. 1<br>• சிவாலயம் இல. 2<br>• வைஜந்தி மண்டபம்<br>• நிசங்கலதா மண்டபம்<br>• பொலநறுவை வட்டதாகே<br>• திரியாய வட்டதாகே<br>• மெதிரிகிரிய வட்டதாகே<br>• குளங்கள் | • அனுராதபுர, பொலநறுவைக் காலத்து கட்டடக் கலை நிர்மாணிப்பின் பொருட்டு அடிப்படையாக அமைந்த நோக்கம், சமய வெளிநாட்டு ஆதிக்கம் பற்றி நுணுகி ஆராய்வார்.<br>• அனுராதபுர, பொலநறுவைக் காலத்து கட்டடக் கலை நிர்மாணிப்புக்களின் திட்டமைப்பு, தொழில் நுட்பம், ஊடகக்கையாளல், நுட்ப முறையும் கலைத்துவப் பண்புகளும் பற்றி விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.7 இசுருமுனிய விகாரையுடன் தொடர்புடைய கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார். | • காதலர் சிலை<br>• மனிதனும் குதிரைத் தலையும்<br>• அரச குடும்பம்<br>• நீர் ஆடும் யானைகளைக் காட்டும் செதுக்கல்கள் | • இசுருமுனிய செதுக்கல்களுக்கு தொடர்புபட்ட கருப்பொருள், அது பற்றி நிலவும் முரண்பாடான கருத்துகளை விமர்சிப்பார்.<br>• இசுருமுனி செதுக்கல்களின் ஊடகப் பயன்பாடு, நுட்ப முறை கலைப்பண்பு, அதற்கு செல்வாக்கு செலுத்திய விடயங்களைப் பற்றி விளக்குவார். | |
| | 7.8 அநுராதபுரக் காலத்து புத்தர் சிலைகளைக் கற்பார். | • புத்தர் சிலையின் ஆரம்பம்<br>• மகா இலுப்பல்லம நின்ற நிலைச் சிலை<br>• சமாதி புத்தர் சிலை (மகாமேவு பூங்கா)<br>• தொழுவில புத்தர் சிலை<br>• பங்குளிய புத்தர் சிலை<br>• அவுக்கன நின்ற நிலை புத்தர் சிலை | • இலங்கையின் புத்தர் சிலையின் தோற்றம், பரவல் என்பவற்றை நுணுகியாய்வார்.<br>• அநுராதபுர காலத்து தெரிந்தெடுத்த புத்தர் சிலைகளின் ஊடகப் பயன்பாடு, நுட்ப முறை, கலைத்துவப் பண்பு, தழுவல் பற்றி விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.9 பொலநறுவை, கம்பளை மற்றும் கண்டி காலத்து சிலைகளை கற்றறிவார். | • பொலன்னறுவைக் காலத்து சிலைகள்<br>- கல்விகாரையின் புத்தர் சிலை<br>- வட்டதாகே புத்தர் சிலை<br>- பொத்குள் விகாரைச் சிலை<br>• கம்பளை, கண்டிக் காலத்து சிலைகள்<br>- கடலாதெனிய புத்தர் சிலை<br>- இலங்காதிலக்க புத்தர் சிலை<br>- தம்புள்ள புத்தர் சிலைகள் | • பொலநறுவை, கம்பளை, கண்டிக் காலங்களினதும் புத்தர்சிலைகளின் ஊடகப் பயன்பாடு, நுட்பமுறை, கலைத்துவப் பண்புகளை விபரிப்பார்.<br>• பொத்குள் விகாரைச் சிலை யின் நுட்ப முறை, ஊடகப் பயன்பாடு, கலைத்துவப் பண்பு அச்சிலை பற்றி உள்ள கருத்து வேறுபாடு கள் பற்றிக் கலந்துரையாடு வார். | |
| | 7.10 இலங்கை உலோக வார்ப்பு களைக் கற்றறிவார். | • அர்த்த நாரீஸ்வரர்<br>• அவலோதிகேஸ்வர - போதி சத்துவர் சிலை<br>• தாராதேவி (மாலாதாரா)<br>• ததிகம கொட்ட வெஹெர யானை விளக்கு (எத்பஹன)<br>• நடராஜர்<br>• சிவ சோமஸ்கந்த மூர்த்தி | • இலங்கையில் தெரிவு செய்த உலோகச் சிலைகளின் சமயப் பின்னணி, கலைப் பண்பு பற்றி விமர்சிப்பார்.<br>• அநுராதபுரம், பொலன்ன றுவைக் காலத்து உலோகக் கலை நிர்மாணிப்பில் தாக்கத்தை ஏற்படுத்திய வெளிநாட்டுத் தழுவல் பற் றிக் கலந்துரையாடுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.11 இலங்கையில் வரலாற்று ரீதியான சித்திரக் கலையைக் கற்றறிவார். | • அநுராதபுரக் காலத்து ஓவியம்<br>– சீகிரியா<br>– ஹிந்தகல<br>– கொனாகொள்ள<br>– மகியங்கனை தாது அண்டம்<br>• பொலநறுவைக் காலத்து ஓவியம்<br>– திவங்க சிலை மனை<br>– வித்தியாதரக் குகை<br>– திம்புலகல மாராவீதி<br>• கண்டிக்கால பாரம்பரிய சித்திர மரபு<br>– மலைநாட்டுக் கலைப் பாணி<br>– தெகல் தொறுவ<br>– மதவல தம்பிட்ட விகாரை<br>– தம்புள்ள குகை விகாரை<br>• தாழ்பிரதேச கலைப்பாணி<br>– கதலுவ பூர்வாராமய<br>– முள்கிரிகல விகாரை<br>– கரகம்பிட்டிய சுபோதா ராமய<br>– தெல்வத்த விகாரை | • இலங்கையின் வரலாற்று ரீதியான ஓவியக் கலையில் தாக்கத்தை ஏற்படுத்திய சமய, லௌகீகப் பின்னணியை நுணுகி ஆராய்வார்.<br>• அனுராதபுரம், பொலநறுவைக் காலங்களின் ஓவியங்களின் ஊடகப் பயன்பாடு, தொழில் நுட்பம், நுட்ப முறை பாணி, கலைப் பண்புகளை விளக்குவார்.<br>• கண்டிக் காலத்து பாரம்பரிய ஓவியங்களின் கலைப் பாணி, கருப் பொருள், நுட்ப முறை, தொழில் நுட்பம், கலைப் பண்புகளை விமர்சிப்பார்.<br>• கண்டிக் காலத்து பாரம்பரிய ஓவியங்களின் மலைநாட்டு, தாழ்பிரதேசப் பாணிகளில் காணப்படும் வேறுபாடுகளுக்கான காரணிகளையும் தழுவல்களையும் விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.12 சிந்து நதிக்கரை நாகரிகத் துக்கு உரித்தான கலை நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார். | • கட்டடக்கலை நிர்மாணம்<br>– உள் நகரம்<br>– வெளிநகரம்<br>• சிலைகள்<br>– முண்ட வடிவம்<br>– நடன மாது உருவம்<br>– பூசகர் வடிவம்<br>– தாய்த் தெய்வம்<br>• முத்திரைகள்<br>– யோகாசன தெய்வ உருவங்கள் (பசுபதி)<br>– விருட்ச தேவதை (கடவுள், அடியார்கள் மற்றும் ஆடு)<br>– இரு புலிகளுடன் போர் புரியும் மனிதன் | • சிந்து நதிக்கரை நாகரிகத் தின் கட்டடக் கலை நிர்மாணிப்புக்களின் சிறப் பியல்புகளை விளக்குவார்.<br>• சிந்து நதிக்கரை நாகரிகத் துக்குரிய சிலை நிர்மாணிப் புக்களின் கருப்பொருள், ஊடகப் பாவிப்பு, நுட்ப முறை, கலைப்பண்புகளை விளக்குவார்.<br>• சிந்து நதிக்கரை முத்திரை நிர்மாணங்களின் தொழில் நுட்பம், எண்ணக்கரு, நுட்ப முறை, கலைப்பண்பு பற்றிய தகவல்களை வர்ணனை செய்வார். | |
| | 7.13 இந்திய மௌரியக் கலை ஆக்கங்களைக் கற்பார். | • சாஞ்சி தூபம் (சாஞ்சி தாதுகோபம்)<br>• அசோகத் தூண்<br>– லௌ நந்தன்கர் தூண்<br>– சாரனாத் தூணின் உச்சி<br>– ராம்பூர்வா தூணின் உச்சி | • பௌத்த தூபி (தாதுகோப) கலையின் ஆரம்பப் பண் பை சாஞ்சி ஸ்தூபத்தின் ஊடாக விமர்சிப்பார்.<br>• சாஞ்சி ஸ்துபத்தின் கட்டடக் கலை, கலைப் பண்புகளை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • அசோகத்தூண், தூணின் உச்சிப் பகுதி நிர்மாணிப் புக்களின் கருப்பொருள், ஊடகப் பயன்பாடு, நுட்ப முறை கலைப் பண்புக ளைக் கலந்துரையாடுவார். | |
| | 7.14 இந்திய சாதவாகனர் காலத் துக்குரிய கலை நிர்மாணிப் புக்களைக் கற்பார். | • சாஞ்சி தோரணச் செதுக்கல்<br>• பாருத் கல்வேலிச் செதுக்கல் | • இந்திய சாஞ்சி பாருத் செதுக்கல்களின் கருப் பொருள்களில் சுதேசிய சமய எண்ணக்கருக்களின் தாக்கம் பற்றி பகுத்தாய் வார்.<br>• இந்திய சாஞ்சி, பாருத் செதுக்கல்களின் ஊடகப் பயன்பாடு, நுட்பமுறை, நிர்மாணிப்புக்களின் மாதிரி மற்றும் கலைப்பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் விளக்கு வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.15 இந்திய காந்தார, மதுரா, மரபுக் கலை நிர்மாணிப்புக் களைக் கற்பார். | • காந்தார மரபுக் கலை நிர் மாணிப்புக்கள்<br>– கணிஷ்க அரசனின் நாணயம்<br>– ஹோர்ட் மந்தார் புத்தர் சிலை<br>– பிரெகம் புத்தர் சிலை<br>– தக்தி பஹீர் புத்தர் சிலை<br>– சஹரி ப.்.லொல் சிலை<br>– கடினச் செயல்<br>• மதுரா மரபின் கலை ஆக்கங்கள்<br>– கத்ரா புத்தர் சிலை<br>– கணிஷ்க அரசனின் உருவம் | • இந்திய சாஞ்சி பாருத் செதுக்கல்களின் கருப் பொருள் மீது செல்வாக்குச் செலுத்திய உண்ணாட்டு மதம் சார்ந்த எண்ணக் கருக்களை பகுத்தாய்வார்.<br>• இந்திய சாஞ்சி பாருத் செதுக்கல்களில் உபயோ கித்துள்ள ஊடகம் நுட்ப முறைகள், நிர்மாண அமைப்புக்கள், கலைப் பண்புகள் என்பவற்றை ஒப்பிட்டு விபரித்துக் கூறுவார்.<br>• இந்திய பௌத்த சிற்பக் கலையின் ஆரம்பத்தையும் பரவலையும் பகுத்தாய்வார்.<br>• இந்திய காந்தார, மதுரா மரபு புத்தர்சிலை நிர்மா ணிப்புக்களில் வெளியூர் மற்றும் உள்ளூர் கலா சாரத்தின் ஆதிக்கத்தை பற்றி தர்க்க ரீதியில் விளக்குவார்.<br>• இந்திய காந்தார, மதுரா, மரபு பௌத்த சிலை நிர் மாணிப்புக்களின் ஊடகப் பயன்பாடு, உணர்வு வெளிப்பாடு, நுட்பமுறை, கலைப் பண்புகளை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.16 இந்திய அமராவதி மரபுக் கலை ஆக்கங்களைக் கற்பார். | • அமராவதி செதுக்கல்கள்<br>– ராகுல இளவரசன் வரம் கேட்டல்<br>– மகாமாயா தேவியின் கனவு<br>– இல்லற வாழ்க்கையை துறத்தல் (அபிநிஷ்கிரமணய)<br>– நளாகிரி யானையை அடக்குதல் (நலாகிரி தமனய)<br>• அமராவதி செதுக்கல்களில் உள்ள புத்தர் சிலைகள் | • அமராவதி கலைமரபுக் கல்வேலி, சைத்திய தகட்டுச் செதுக்கல்களின் கருப்பொருள், ஊடகப் பயன்பாடு, பாணி, நுட்ப முறை, தளப்பரப்பின் பயன்பாடு கலைப் பண்புகளைக் கற்பார்.<br>• அமராவதி கலை மரபுக்குரிய புத்தர் சிலகளின் கலைப் பண்புகளை விளக்குவார். | |
| | 7.17 இந்திய குப்த கலை மரபுப் புத்தர் சிலைகளைக் கற்பார். | • மதுரா நின்ற நிலை புத்தர் சிலை<br>• சாராநாத் அமர்ந்த நிலை புத்தர் சிலை | • இந்திய குப்த கலை மரபுப் புத்தர் சிலை நிர்மாணிப்பில் உண்ணாட்டு சிலை கலை மரபின் ஆதிக்கத்தை பகுத்தாய்வார்.<br>• குப்த கலைமரபு புத்தர் சிலைகளின் ஊடகப் பயன்பாடு, நுட்பமுறை உணர்ச்சி வெளிப்பாடு, கலைத்துவப் பண்புகளை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.18 இந்திய குகை ஓவியங்களைக் கற்றறிவார். | • அஜந்தா ஓவியம்<br>– பத்மபாணி போதிசத்துவர் வடிவம்<br>– அப்சரா வடிவம்<br>– நினைவிழந்த அரசிளங் குமரி<br>– தூணில் சாய்ந்து நிற்கும் அரசிளங் குமரி<br>– விஜயனின் இலங்கை வருகை (சிகளாவதானய)<br>– புத்த பெருமான் கிம்புள் வத் புரிக்கு வருகை தரல்<br>– ஐத்தன்த ஜாதகக் கதை | • இந்திய அஜந்தா ஓவியங்களின் கருப்பொருள், தொனிப்பொருள்களைப் பயன்படுத்தி இருத்தல் தொடர்பாக பகுத்தாய்வார்.<br>• அஜந்தா ஓவியங்களின் நுட்பமுறை, கலைப்பாணி, ஒழுங்கமைப்பு, உணர்வு வெளிப்பாடு, கலைத்துவப் பண்புகளை விளக்குவார். | |
| | 7.19 எகிப்திய கட்டடக்கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார். | • குப்பு (சியோப்ஸ்) பிரமிட் (Pyramid of Khufu/Cheops)<br>• கப்றே பிரமீட் (Pyramid of Khafre)<br>• அபுசிம்பல் தேவாலயம் (Temple of Abu Simbel)<br>• லக்சோர் தேவாலயம் (Temple of Luxor) | • எகிப்திய கட்டடக்கலைக்கு காரணமாக அமைந்த நம்பிக்கை, எண்ணக்கரு, கட்டடக்கலை முறை, தொழில் நுட்பம், நுட்ப முறைகளை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.20 எகிப்திய (மிசர) சிற்பங்களையும் செதுக்கல்களையும் கற்றறிவார். | • நாமர் பலகம் (The Palette of king Narmer)<br>• மென்குறே அரசனும் அவனது மகாராணியும் (King menkaure and his wife, queen khamerernebty)<br>• ஸ்கிறைப் சிலை (The Seated Scribe)<br>• நெபர்ரிரி (மார்பளவு சிலை) (The Bust of Nefertiti) | • எகிப்திய சிற்பங்கள் மற்றும் செதுக்கல் கலையின் கருப்பொருள், பாணியின் இயல்பு, நுட்பமுறை, பயன்பாடு என்பன தெரிவு செய்த நிர்மாணிப்புக்களின் ஊடாக விளக்குவார். | |
| | 7.21 எகிப்திய ஓவியங்களைக் கற்றறிவார். | • பறவை வேட்டை (Hunting Birds)<br>• மீடம் வாத்துக்கள் (Geese of Meidum)<br>• நடன மங்கைகளும் இசைக் கலைஞர்களும் (Musicians and Dancers) | • எகிப்திய ஓவியக்கலையின் கருப்பொருள், பாணியின் இயல்பு, நுட்பமுறை என்பன தெரிவு செய்த ஆக்கங்கள் ஊடாக விளக்குவார். | |
| | 7.22 கிரேக்க கட்டடக்கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார். | • பாதினன் தேவாலயம் (The Parthenon Temple) | • பாதினன் தேவாலயத்தின் கட்டடக் கலைப்பண்புகள், அலங்காரமான அங்கங்கள், சமயத்தளமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளதை விளக்கிக் கூறுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • கிரேக்க தூண்கள் (Greek Columns)<br>• டொரிக் தூண்கள் (Doric)<br>• அயோனிக் தூண்கள் (Ionic)<br>• கொரிந்தியன் தூண்கள் (Corinthian) | • கிரேக்க கட்டடக் கலையில் உள்ள தூண்களை வகைப் படுத்தி அவற்றில் காணப் படும் ஆக்கச் சிறப்புடன் கூடிய பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் விளக்குவார். | |
| | 7.23 கிரேக்க களி மட்பாத்தி ரங்களை ஆராய்ந்தறிவார். | • கிரேக்க மட்பாண்டம் (Greek Pottery)<br>–கறுப்பு உருவ மட்பாண்டம் (Black Figure pottery)<br>–சிவப்பு உருவ மட்பாண்டம் (Red figure pottery) | • கிரேக்க மட்பாண்டக் கலையின் தொழில்நுட்பம், பயன்பாடு அலங்கரிப்பின் பொருட்டுப் பயன்படுத்திய ஓவிய அலங்கரிப்புக்களை விளக்கி எழுதுவார். | |
| | 7.24 கிரேக்க சிற்பங்களைக் கற்பார். | • கிரேக்க தொன்மை மற்றும் செந்நெறிக் காலம் (Greek Old and Classical Period)<br>– குரோஸ் மற்றும் கோறி சிலை (Kouros and Kore)<br>– பரிதி வட்டம் வீசுபவன் (Discobolus) | • கிரேக்க செந்நெறிக்கலை, கெலனிஸ்ரிக் கலையின் கருப்பொருள், பாணியின் இயல்பு, நுட்பமுறை, கலைப் பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – டொறிப்றஸ் (ஈட்டி ஏந்தி நிற்பவன்) (Doryphoros)<br>– ஹர்மிஸ்சும் டயோனி சிஸ்சும் (Hermes and the Infant Dionysus)<br><br>• கெலனிஸ்டிக் காலம் (Hellenistic Period)<br>– லெஓக்கூன் (Laocoon)<br>– சமோதராசின் வெற்றித் தேவதை/ நய்கி (Winged Victory of Samothrace/ Nike)<br>– இறக்கும் கலாத்தியன் (The dying Galatian) | | |

## முதலாம் தவணை



| | செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1.1.1 | பல வித உடல் நிலைகளையுடைய மனித உருவங்களை இரேகைகளினால் கற்றறிவோம். | 02 | 1 |
| 1.1.2 | பல்வித விலங்குகளின் உடல் நிலைகளை இரேகைகளினால் கற்றறிவோம். | 02 | 3 |
| 1.2.1 | "அரிவி வெட்டும் உழவர்களும் உழத்திகளும்" எனும் தொனிப் பொருளில் சித்திரமொன்றை வரைவோம். | 04 | 5 |
| 1.3.1 | "வருடப் பிறப்பு" எனும் தலைப்பில் சித்திரமொன்றை வரைவோம். | 04 | 8 |
| 1.2.2 | "நகர்புறச் சூழல்" எனும் தொனிப்பொருளின் கீழ் மனதைக் கவர்ந்த சம்பவமொன்றை வரைவோம் | 04 | 7 |
| 2.1.1 | சதுரமுகி, அரைவாசி நீருடன் கூடிய கண்ணாடிப் போத்தலினுள் வைக்கப்பட்ட பூவுடன் கூடிய கிளைத் தொகுதியை இரேகைச் சித்திரமாக வரைவோம். | 02 | 10 |
| 2.1.2 | பெட்டியொன்றும் (வெள்ளைத் தாளினால் மறைக்கப்பட்ட) அதன் மீது விரிக்கப்பட்ட துணித்துண்டொன்று ஆகியவற்றை பல் ஊடகங்களைக் கொண்டு வரைவோம். | 02 | 11 |
| 2.1.3 | பிளாஸ்டிக் ஜக்கொன்றில் இடப்பட்டுள்ள குரோட்டன் கிளையொன்றை வரைவோம். | 02 | 11 |
| 2.1.4 | சிறிய குடமொன்றுக்கு ஒத்த வடிவமுடைய மட்பாத்திரமொன்று, ஒரு பெட்டியொன்று மற்றும் கண்ணாடிக் குவளையொன்று ஆகியவற்றை வரைவோம். | 02 | 11 |
| 2.2.1 | ஒரு பெட்டி, ஒரு துணித்துண்டு, சிறிய களிமண் குடத்தில் இட்ட அலரிப் பூக்கிளை, ஒரு பப்பாசிக்காய், கண்ணாடிக் குவளை (Bowl) ஒன்றினுள் இடப்பட்ட கடதாசிச் சுருள் எனும் தொகுதியை ஒழுங்கிணைத்து சித்திரம் வரைவோம். | 04 | 12 |
| 3.1.1 | விறாந்தையில் அழகுக்காக வைக்கப்படும் சாடியொன்றை நிர்மாணிப்போம். | 05 | 15 |
| 3.1.2 | பாரம்பரிய வேலைப்பாடுகளைக் கொண்ட தங்க ஆபரண பேழையொன்றை வரைந்து வர்ணம் தீட்டுவோம். | 03 | 17 |
| 3.3.1 | அறுகோண வடிவமுடைய தாம்பாளம் ஒன்றுக்குப் பொருத்தமான முழுதள அலங்காரமொன்றை வரைவோம். | 04 | 20 |
| 3.3.2 | சிறுவர்களின் தேவைகளுக்கு உபயோகிக்கக்கூடிய துணிக்குப் பொருத்தமான பரவுருவ அலங்காரமொன்றை வரைவோம். | 04 | 22 |
| 4.1.1 | "சமய சகவாழ்வுடன் நல்ல சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் சுவரொட்டியொன்றை நிர்மாணிப்போம். | 04 | 23 |
| 4.2.1 | யுவதிகளின் கேசத்துக்குப் பயன்படுத்தும் புதிய எண்ணெய் (Hair oil) போத்தலுக்கான முகப்புறை ஒன்றை (Label) நிர்மாணிப்போம். | 04 | 25 |
| 4.2.2 | புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட சொக்கலேட் வகையொன்றக்குப் பொருத்தமான சுற்றுறையொன்றை நிர்மாணிப்போம். | 02 | 26 |
| 4.3.1 | எமது சிறந்த நண்பனின் பிறந்த நாளுக்கான வாழ்த்து இதழொன்றை நிர்மாணிப்போம். | 02 | 27 |

| செயற்பாடு | | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 4.4.1 | "தை மாதத்தின் சிறப்பு" எனும் தலைப்பில் பத்திரிகை ஒன்றில் வெளியாகும் சிறப்புக் கட்டுரைக்கான வர்ண விளக்கப்பட சித்திரமொன்றை நிர்மாணிப்போம். | 04 | 29 |
| 5.1.1 | புடைப்புச் செதுக்கலொன்றை நிர்மாணிப்போம். | 07 | 31 |
| 6.1.1 | கட்புலக் கலையை அறிந்து கொள்வோம். | 02 | 35 |
| 6.1.2 | கட்புலக் கலையின் அடிப்படை அம்சங்களைக் கற்போம். | 02 | 37 |
| 6.1.3 | கட்புலக் கலைக் கோட்பாடுகளைக் கற்றறிவோம். | 02 | 39 |
| 6.1.4 | கட்புலக் கலையின் பல கலைத் தொழில்கள், கலைப் பாணிகள், எண்ணக்கருக்கள் என்பவற்றை அறிவோம். | 02 | 41 |
| 6.2.1 | இலங்கை கலைச் சங்கத்தின் கலைஞர்களின் ஆக்கங்களை மதிப்பிடுவோம். (ஏ.சீ.ஜீ.எஸ். அமரசேகர, டேவிட் பெயின்டர், ஜே.டீ.ஏ. பெரேரா) | 03 | 43 |
| 6.3.1 | இராஜா ரவி வர்மாவின் ஆக்கங்களை மதிப்பிடுவோம். | 01 | 53 |
| 7.1.1 | இலங்கையின் வரலாற்றுக்கு முட்பட்ட கால ஓவியங்களைக் கற்போம் (தந்திரிமலை, பிலோவ, தொரவக்குகை, வெட்டம்புகல) | 02 | 90 |
| 7.2.1 | ஐரோப்பாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியின் குகை ஓவியங்களை கற்றறிவோம். (லஸ்கோ, அல்ராமீரா, ஷுவெட் பொண்டிகோமி) | 02 | 95 |
| 7.3.1 | இலங்கையின் தூபிகளை கற்றறிவோம். (தூபாராமய, ருவன்வெலிசாய, அபயகிரிய, ஜேதவனராமய, ரன்கொத் விகாரை, கிரிவிகாரை, ஹங்குரன்கெத்த ரஜ மகா விகாரையின் தூபி) | 02 | 99 |
| 7.4.1 | வரலாற்று ரீதியான கட்டட கலை நிர்மாணங்களை கற்றறிவோம். (ஆசனகர, போதிகர, பதானகர, உபோசதகர, ஜந்தாகர) | 02 | 103 |
| 7.5.1 | தூபிகள் மற்றும் ஏனைய வரலாற்று ரீதியான கட்டடங்களுடன் தொடர்புடைய நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம். (வாகல்கட, சந்திரவட்டக்கல், காவற்கல், கொரவக்கல் (கைப்பிடி), படிவரிசை, புன்கலச) | 02 | 106 |
| 7.12.1 | இந்து நதிக்கரை கட்டட கலை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். | 02 | 161 |
| 7.12.2 | இந்து நதிக்கரை சிலைகள் மற்றும் முத்திரைகளை கற்றறிவோம். (சிலைகள் - கவந்த உருவம், நடனமாடும் வடிவத்தைக் கொண்ட கவந்த உருவம், நடனமாது உருவம், பூசகர் உருவம், தாய் தெய்வ உருவம்)<br>முத்திரைகள் - யோகாசன தெய்வ உருவம் (கொம்புடன் கூடிய கடவுள்/ பசுபதி)<br>விருட்ச தேவதை (கடவுள் அடியார்கள் மற்றும் ஆடு)<br>இரு புலிகளுடன் போராடும் மனிதன் | 03 | 164 |

| செயற்பாடு | | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 7.13.1 | சாஞ்சித் தூபிகள் மற்றும் அசோக தூண்களைப் பற்றி கற்றறிவோம். (சாஞ்சித்தூபியின் கலைப்பண்புகள் அசோகத் தூண்கள் - லௌரியா நந்தன்கர் தூண், சாரனாத் தூணின் உச்சி, ராம்பூர்வா தூணின் உச்சி) | 02 | 169 |
| 7.14.1 | சாஞ்சித் தோரணத்தின் செதுக்கல்கள், பாரூத் கல்வேலியின் செதுக்கல்கள் என்பன பற்றி கற்றறிவோம். | 02 | 173 |
| 7.19.1 | குபு காப்ரே பிரமிட்டுக்களை கற்றறிவோம். | 01 | 194 |
| 7.19.2 | அபுசிம்பல், லக்சோர் தேவாலயங்களை பற்றி கற்றறிவோம். | 01 | 196 |
| 7.20.1 | நர்மேர் / நாமர் மன்னனின் பலகை, மென்குறேயும் அவரது மனைவியும், ஸ்கிறைப் சிற்பம், நெபர்ரிரி மார்பளவுச் சிலை என்பவற்றை கற்றறிவோம். | 02 | 198 |
| 7.21.1 | எகிப்திய ஓவியங்களை கற்றறிவோம். பறவை வேட்டை, மீடம் வாத்துகள், நடன மங்கையர்களும் இசைக் கலைஞர்களும் | 01 | 201 |

## இரண்டாம் தவணை



| செயற்பாடு | | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1.2.3 | கரையோர மீனவர் சூழல் ஒன்றை வரைவோம். | 04 | 7 |
| 1.2.4 | விவசாய சூழல் சார்ந்த நிகழ்வொன்றை வரைவோம். | 04 | 7 |
| 1.3.2 | ஆறுகள், நதிகள், குளங்கள் சார்ந்த நிகழ்வொன்றை வரைவோம் | 04 | 9 |
| 1.3.3 | மகிழ்ச்சி, சோகம், திகில் போன்ற உணர்வுகளை பிரதிபலிக்கும் சந்தர்ப்பமொன்றை வரைவோம். | 04 | 9 |
| 2.1.5 | அந்தூரியப் பூச்சாடியொன்றை இரேகைகளினால் கற்றறிவோம். | 02 | 11 |
| 2.1.6 | ஒரு பப்பாசிப் பழம், அரைவாசி நீர் நிரம்பிய கண்ணாடி போத்தலிலிட்ட செவ்வரத்தை கிளையொன்றை கற்றறிவோம். | 02 | 11 |
| 2.2.2 | பொருள் கூட்டமொன்றை வரைவோம். | 04 | 14 |
| 2.2.3 | பொருள் கூட்டமொன்றை வரைவோம் | 04 | 14 |
| 3.1.3 | மழை பீலியிலிருந்து நீர் கொட்டும் இடத்தில் வைக்க பொருத்தமான அழகான பாத்திரம் ஒன்றுக்காக முப்பரிமாண அமைப்பொன்றை வரைந்து வர்ணம் தீட்டுவோம். | 03 | 17 |
| 3.1.4 | நிறுவனங்களில் பாவனைக்கு உகந்த ஈரக் குடைகளை வைக்கப் பொருத்தமான ஆக்கப்பூர்வமான பாத்திர மொன்றை வரைந்து எகிப்திய, கிரேக்க சித்திரங்களினால் அலங்கரிப்போம். | 03 | 17 |
| 3.2.1 | பூங்கொடிகளால் அலங்கரித்த காற்று துளை செதுக்க லொன்றை வரைவோம். | 04 | 18 |
| 3.3.3 | வட்ட வடிவமான தழுவணை (Cushion) உறையொன்றுக் காக அரூப வடிவங்கள் உள்ளடக்கிய அலங்கார வேலைப் பாடொன்றை நிர்மாணிப்போம். | 04 | 22 |
| 4.1.2 | "வன வளம் எங்கள் நண்பன். நாங்கள் அதனைப் பாதுகாப்போம்" என்ற தொனிப் பொருளின் கீழ் சுவரொட்டி யொன்றை நிரமாணிப்போம். | 04 | 24 |
| 4.2.3 | பாடசாலையின் ஊடகப் பிரிவுக்குப் பொருத்தமான இலட்சினையொன்றை நிர்மாணிப்போம். | 02 | 26 |
| 4.3.2 | கலை விழாவொன்றுக்கான அழைப்பிதழொன்றை நிர்மாணிப்போம் | 02 | 28 |
| 4.3.3 | டெங்கு நோயின் கொடூரமான தன்மையை உணர்த்தும் அறிவித்தலொன்றை நிர்மாணிப்போம். | 02 | 28 |
| 4.4.2 | சிறுவர் கதை புத்தகமொன்றின் உள் பக்க தாளுக்காக விளக்கப் படமொன்றை வரைவோம். | 04 | 30 |
| 5.2.1 | பூங்கா உருவங்களை நிர்மாணிப்போம் | 08 | 33 |
| 6.2.2 | 20ம் நூற்றாண்டின் சமயம் சார்ந்த இலங்கை ஓவியங்களை மதிப்பிடுவோம் (சோளியஸ் மென்டிஸ், சோமபந்து வித்தியாபதி) | 03 | 47 |

| செயற்பாடு | | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 6.3.2 | இந்திய ஓவியக் கலைஞர்களின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம் (அபினிந்திரனாத் தாகூர், நந்தலால் போஸ்) | 02 | 55 |
| 6.2.3 | நாராயணசுவாமி அவர்களின் கலை நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம். | 01 | 51 |
| 6.4.1 | ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால கலைஞர்களின் கலை நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம். (லியோனாடோ டாவின்சி) | 02 | 58 |
| 6.4.2 | ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால கலைஞர்களின் கலை நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம். (மைக்கல் ஆஞ்சலோ) | 02 | 61 |
| 6.4.3 | ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால கலைஞர்களின் நிர்மாணிப் புக்களை மதிப்பிடுவோம். (ரபாயல் சன்சியோ) | 02 | 64 |
| 7.6.1 | சிலைமனைககளின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம் (திவங்க சிலைமனை, தூபாராம சிலைமனை, இலங்கா திலக்க சிலைமனை) | 02 | 112 |
| 7.6.2 | பொலநறுவை காலத்து சிவ தேவலாயங்களை கற்றறிவோம் (சிவாலயம் இல 1, சிவாலயம் இல. 2) | 01 | 115 |
| 7.6.3 | விஜயோத்பாய மற்றும் நிசங்கலதா மண்டபம் ஆகிய வற்றை கற்றிவோம். | 01 | 117 |
| 7.6.4 | வட்டதாகே நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம் (பொலநறுவை வட்டதாகே, திரியாய வட்டதாகே, மெதிரிகிரிய வட்டதாகே) | 01 | 119 |
| 7.6.5 | குள நிர்மாணிப்புக்களை கற்றறிவோம் (அநுராதபுர குட்டம் பொக்குண, இசுருமுனியவின் ரன்மசு உயன பொக்குண, பொலநறுவையின் குமார பொக்குண, பொலநறுவையின் நெலும் பொக்குண | 01 | 122 |
| 7.7.1 | இசுருமுனி செதுக்கல்களை கற்றறிவோம் (இசுருமுணிய காதலர் சிலை, மனிதனும் குதிரைத்தலையும், அரச குடும்பம், நீராடும் யானைகள் | 02 | 125 |
| 7.8.1 | அனுராதபுர காலத்து புத்த சிலைகளை மதிப்பிடுவோம் (மகா இலுப்பல்லம நின்ற நிலை சிலை, சமாதிரி புத்தர் சிலை, தொலுவில புத்தர் சிலை, பங்குலிய புத்தர் சிலை, அவுக்கன புத்தர் சிலை) | 02 | 129 |
| 7.11.1 | அனுராதபுர காலத்து சித்திரங்களை கற்றறிவோம் (சிகிரியா ஓவியங்கள், ஹிந்தகல ஓவியங்கள், கொனாகொல்ல ஓவியங்கள், மகியங்கனை சாய தாது கர்பத்தின் ஒவியங்கள்) | 04 | 146 |
| 7.15.1 | காந்தார கலை மரபுக் கலை நிர்மாணிப்புக்களை கற்றறிவோம் (கனிஷ்க மன்னனின் நாணயம், ஹோர்ட் மந்தார் புத்தர் சிலை, பிரேகம் சிலை, தக்தி பகீர் சிலை, சஹரி ப.்.லொல் சிலை, துஷ்கர கிரியாவ சிலை | 02 | 177 |

| செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|
| 7.15.2 மதுரா கலை மரபுக் கலை நிர்மாணிப்புக்களை கற்றறிவோம் (கந்தாரா புத்தர் சிலை, கனிஷ்க அரசனின் உருவம்) | 01 | 181 |
| 7.16.1 அமராவதி கலை மரபுக் கலை நிர்மாணிப்புக்களை கற்றறிவோம் (மகாமாயா தேவியின் கனவு, ராகுல இளவரசன் வரம் கேட்டல், நளாகிரி யானையை அடக்குதல், இல்லற வாழ்க்கையை துறத்தல் (அபிநிஷ்கிரமணய), அமராவதி செதுக்கல்களில் காணப்படும் புத்தர் சிலைகள்) | 02 | 184 |
| 7.17.1 குப்த கலை மரபுக் கலை நிர்மாணிப்புக்களை கற்றறிவோம் (மதுரா நின்ற நிலை புத்தர் சிலை, சாரணாத் புத்தர் சிலை) | 02 | 188 |
| 7.22.1 பாதினன் தேவாலயம் மற்றும் கிரேக்க தூண்களை கற்றறிவோம் (கிரேக்க தூண்கள் - டொரிக் தூண்கள், அயொனிக் தூண்கள் - கொரிந்தியன் தூண்கள்) | 02 | 204 |
| 7.23.1 கிரேக்க மட்பாண்டங்களைக் கற்றறிவோம் (கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்கள், செந்நிற உருக் களுடைய மட்பாண்டங்கள்) | 02 | 207 |

தரம் 12



## மூன்றாம் தவணை


| | செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1.2.5 | விளையாட்டுப் போட்டியொன்றின் விறுவிறுப்பான நிலையொன்றை ஓவியமாக வரைவோம். | 04 | 7 |
| 1.3.4 | தேசிய கைத்தொழில் சார்ந்த தொனிப்பொருளொன்றின் கீழ் வரைவோம். | 04 | 9 |
| 1.3.5 | சமய சூழல் சார்ந்த தொனிப்பொருளொன்றின் கீழ் வரைவோம். | 04 | 9 |
| 2.2.4 | பொருள் கூட்டமொன்றை வரைவோம். | 04 | 14 |
| 2.2.5 | பொருள் கூட்டமொன்றை வரைவோம். | 04 | 14 |
| 2.2.6 | பொருள் கூட்டமொன்றை வரைவோம். | 04 | 14 |
| 3.1.5 | தேயிலை ஏற்றுமதியின் போது பொதி செய்யப் பயன்படுத்த உகந்த பாத்திரமொன்றை வரைவோம். | 03 | 17 |
| 3.1.6 | ஔடத பான விற்பனை நிலையமொன்றுக்கு முன்னால் வைக்கக் கூடிய கருத்து வெளிப்படும் பாரிய அளவிலான பாத்திரமொன்றை வரைவோம். | 03 | 17 |
| 3.3.4 | செவ்வக வடிவிலான கம்பளம் ஒன்றுக்கு பொருத்தமான அலங்கரிப்பொன்றை நிர்மாணிப்போம். (ஒரு வர்ணத்தை உபயோகிக்குக.) | 04 | 22 |
| 3.3.5 | ஆண் அல்லது பெண் ஆடை ஒன்றுக்காக கரை அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக. | 04 | 22 |
| 3.3.6 | பாரம்பரிய அலங்கார வடிவங்களைக் கொண்டு செவ்வக வடிவ உட்கூறையொன்றை அலங்கரிக்க உகந்த நிர்மாணிப்பொன்றை செய்வோம். | 04 | 22 |
| 4.1.3 | “சிறந்த ஆரோக்கியத்துக்காக நற்பழக்கங்களை பேணுவோம்” என்ற தொனிப்பொருளின்கீழ் சுவரொட்டி யொன்றை நிர்மாணிப்போம். | 04 | 24 |
| 4.2.4 | புத்தாண்டு வாழ்த்துக்காக பொருத்தமான வாழ்த்தட்டை யொன்றை நிர்மாணிப்போம். | 02 | 26 |
| 4.3.4 | பாடசாலையில் நடைபெறும் விஞ்ஞான கண்காட்சியொன்று பற்றி அறிவுறுத்த விளம்பர சுவரொட்டியொன்றை நிர்மாணிப்போம். | 04 | 28 |
| 4.4.3 | உலக தொழிலாளர் தினத்துக்காக பத்திரிகையொன்றில் வெளிவரும் சிறப்புக் கட்டுரையொன்றுக்காக கறுப்பு - வெள்ளை விளக்கப்படமொன்றை வரைவோம். | 03 | 30 |
| 6.5.1 | மனப்பதிவுவாதக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். - க்லோட் மொனே | 01 | 67 |
| 6.5.2 | மனப்பதிவுவாதக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். - எட்கா டெகாஸ் | 01 | 70 |
| 6.5.3 | மனப்பதிவுவாதக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். - மெரி கசற் | 01 | 73 |
| 6.5.4 | பின் மனப்பதிவுவாதக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்பு களை மதிப்பிடுவோம். - வின்சற் வன்கோ | 01 | 76 |

| செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|
| 6.5.5 பின் மனப்பதிவுவாதக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்பு களை மதிப்பிடுவோம். - போல் கொகேன் | 02 | 79 |
| 6.5.6 பின் மனப்பதிவுவாதக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்பு களை மதிப்பிடுவோம். - போல் செசான் | 02 | 82 |
| 6.6.1 கனவடிவுவாத ஓவியக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்பு களை மதிப்பிடுவோம். - பப்லோ பிக்காசோ | 02 | 85 |
| 6.6.2 கனவடிவுவாத ஓவியக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்பு களை மதிப்பிடுவோம். - ஜோர்ஜ் பிராக் | 01 | 88 |
| 7.9.1 பொலநறுவை கல்விகாரை புத்தர் சிலைகள் மற்றும் வட்டதாகை புத்தர் சிலைகளை கற்றறிவோம். | 02 | 133 |
| 7.9.2 பொலநறுவை பொத்கல் விகாரை சிலையை மதிப்பிடுவோம். | 01 | 137 |
| 7.9.3 கம்பளை கண்டி காலத்து புத்தர் சிலைகளை மதிப்பிடுவோம். (கடலாதெனிய அமர்ந்த நிலை புத்தர் சிலை, இலங்காதிலக்க அமர்ந்த நிலை புத்தர் சிலை, தம்புள்ள புத்தர் சிலைகள்) | 02 | 139 |
| 7.10.1 உலோகக் கலை நிர்மாணிப்புகளை கற்றறிவோம். (அர்த்த நாரீஸ்வர், புத்தரின் தேவலோக நிலை, கண்ணகி தெதிகம கொடடவெகர யானை விளக்கு, நடராஜர், சோமஸ்கந்த மூர்த்தி) | 03 | 142 |
| 7.11.2 பொலநறுவை காலத்து சித்திரங்களை கற்றறிவோம். (திவங்க சிலை மனை ஓவியங்கள், கல்விகாரையின் வித்தியாதரக் குகை ஓவியங்கள்) | 04 | 150 |
| 7.11.3 கண்டிக்கால பாரம்பரிய மலைநாட்டுக் கலைப்பாணி சித்திரங்களை கற்றறிவோம். (மலைநாட்டுக் கலைப் பாணி - தெகல் தொருவ, மெதவல டெம்பிட்ட விகாரை, தம்புள்ள குகை விகாரை) | 03 | 153 |
| 7.11.4 கண்டிக்கால பாரம்பரிய தாழ்பிரதேச கலைப்பாணி ஓவியங்களை கற்றறிவோம். (தாழ்பிரதேசத்துக் கலைப் பாணி - கத்தலுவ பூர்வாராமய, முள்கிரிகல விகாரை, கரகம்பிட்டிய சுபோதாராமய, தெல்வத்த விகாரை) | 04 | 157 |
| 7.18.1 அஜந்தா ஓவியங்கள் மற்றும் எல்லோரா செதுக்கல்களை கற்றறிவோம். | 04 | 191 |
| 7.24.1 கிரேக்க தொன்மை மற்றும் செந்நெறி காலத்துக்குரிய சிற்பங்களை கற்றறிவோம். (குறோஷ் மற்றும் கோறி சிலைகள், பரிதி வட்டம் வீசுபவன், டொரிபரஸ் ஹர்மிஸ் மற்றும் டயோனீ சியஸ்) | 02 | 209 |
| 7.24.2 கிரேக்க ஹெலனிஸ்டிக் காலத்துக்குரிய சிலைகளை கற்றிவோம். (லெஓக்கூன்,சமோதராசின் வெற்றித் தேவதை, இறக்கும் கலாத்தியன்) | 02 | 212 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : இரேகைகளை உபயோகித்து மனித உருவங்களையும் விலங்குருவங்களையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 1.1.1 : பல வித உடல் நிலைகளையுடைய மனித உருவங்களை வரைவோம்.**

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

இரேகை வரையப் பொருத்தமான கடதாசிகள், பென்சில்கள், (2B, 4B, 6B), பெஸ்டல், கரி, பல மனித மெய் நிலைகளையுடைய இரேகைச் சித்திரங்கள், பிரசித்தி பெற்ற கலைஞர்களின் மாதிரி இரேகைச் சித்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- மனித செயற்பாடுகளை அவதானித்து பல உடல் நிலைகளின் பருமட்டான படங்களை வரைவார்.
- அளவு, பரிமாணம் எனும் பண்புகளுடன் மனித உருவங்களின் பருமட்டான படங்களை வரைவார்.
- மனித உடல் நிலைகளின் இயற்கை இயல்புகள், சந்தம் எனும் பண்புகளுடன் பருமட்டான படங்களை வரைவார்.
- பல வயது மட்டங்கள் உடையவர்களை வரையும் திறமையைக் கொண்டிருப்பார்.
- பல வித முறைகளில் இரேகைகளைக் கையாண்டு முப்பரிமாண இயல்புகள் வெளிப்படும் விதத்தில் மனித உருவங்களை வரைவார்.
- பல ஊடகங்களின் தனித்துவமான இயல்புகளுக்கிணங்க, அதற்கே உரிய நுட்ப முறைகளில் இரேகைச் சித்திரங்கள் வரையும் திறமையை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள் :-**

கலந்துரையாடல் முறை, ஆய்வு, அவதானிப்பு, செயன்முறை செயற்பாடுகள்.

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- மனித உருவங்களின் அடிப்படை வடிவங்களும் பரிமாணமும்.
- பல உடல் நிலைகளுடனான மனித உருவங்கள்.
- ஒளி, நிழல், முப்பரிமான இயல்பு.
- இரேகைகளின் பலவகைமையை உரிய விதத்தில் உபயோகித்தல்.
- பல வர்ண ஊடகங்களை கையாளும் திறமை.

**செயற்பாட்டு விருத்திக்கான அறிவுரைகள் :-**

- பாடசாலைச் சூழலில் ஆசிரியர்களும் மாணவர்களும் பல வித செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களது உடல் நிலைகளை அவதானிக்கச் செய்க.
- அவ் அவதானிப்புகளைக் கொண்டு மனித உடல் நிலைகளின் பருமட்டான படங்களை வரைய அறிவூட்டி வழிகாட்டுக.
- நேரடியாக அவதானித்து மனித உருவங்களை உடனடியாக வரைய வேண்டின் குறிப்பிட்ட உடல் நிலைகளுக்குரிய மனித உருவங்களின் பருமட்டான அமைப்பைக் குறித்துக் கொள்ள வேண்டிய எளிமையான முறைகளை உதாரணங்களுடன் மாணவர்களுக்கு விளக்குக.
- அவதானிப்பு மூலமும் மாணவர்களின் கற்பனை மூலமும் மனித உருவங்களை வரையச் செய்க.
- யதார்தமான முறையில் மனித உருவங்களை வரையும் போது அளவு, பரிமாண இயல்பு என்பவற்றை பேணும் முறைகள் பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
- தடித்த இரேகைகள், மென்மையான இரேகைகள் என்பனவை உபயோகித்து பொருள்களின் வடிவங்களையும் முப்பரிமாண இயல்புகளையும் வெளிக்கொணரத் தேவையான அறிவுரைகளையும் உதவியையும் வழங்குக.
- வரைய உபயோகிக்கும் ஊடகத்துக்குகந்த விதத்தில் நுட்ப முறைகளையும் இரேகைகளின் பல்வேறுபட்ட இயல்புகளைக் கருதி உருவங்களின் முப்பரிமாணத் தன்மையை வெளிக்கொணர மாணவர்களை வழிகாட்டுக.
- பல வயது எல்லைகளுடைய மனித உருவங்களின் பரிமாணம், உடல் நிலைகள், உணர்வு வெளிப்பாடு, உடலின் வெளிப்புறத் தோற்றம் என்பனவும் இனங்காணக்கூடிய வேறு இயல்புகளும் வேறுபடும் விதத்தினை உதாரணங்களுடன் விளக்குக.
- பல வயது எல்லைகளையுடைய ஆண் பென் உருவங்களின் வேறுபட்ட உடல் நிலைகளை வரையச் செய்க.
- மாணவர்களின் அடைவு மட்டங்களைக் கருதி, மனித உருவங்களின் பாகங்களின் (கைகள், பாதங்கள், முகம்) பருமட்டான படங்களைத் தனித்தனியாக வரைய வழிகாட்டுக.
- தொடர்ச்சியான பயிற்சியில் ஈடுபடுவதால் தரமான மனித உருவங்களை வரையும் திறனை வளர்க்கலாம் என்பது பற்றி அறிவுறுத்துக.

**கணிப்பீடு :-**

- பல உடல் நிலைகளையுடைய மனித உருவங்களின் பருமட்டான படங்களை வரைக.
- மனித உருவங்களின் உடல் நிலைகளின் தன்மைக்கேற்ப உருவங்களின் சந்தம், அளவு, பரிமாணம், குண இயல்பு என்பவற்றை பருமட்டானபடங்கள் மூலம் வெளிக் கொணருக.
- பல்வேறுபட்ட ஊடகங்களுக்குரிய நுட்ப முறைகளைக் கொண்டு மனித உருவங்களை வரைக.
- பல வயதெல்லைகளுக்குரிய மனித உருவங்களை வரைக.
- மனித உருவங்களுக்குரிய பருமட்டான படங்களை வரையப் புத்தகம் ஒன்றைத் தயார் செய்து, அது இற்றைப்படுத்தும் (update) விதத்தில் உரிய பயிற்சிகளில் ஈடுபடுக.

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : இரேகைகளை உபயோகித்து மனித உருவங்களையும் விலங்குருவங்களையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 1.1.2 : விலங்குகளின் உடல் நிலைகளை இரேகைகளினால் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

இரேகைகள் வரையப் பொருத்தமான தாள்கள், பென்சில்கள், (2B, 4B, 6B), பெஸ்டல், கரி, விலங்கு உடல் நிலைகள் அடங்கிய மாதிரிச் சித்திரங்கள், விலங்குகளின் உடல் நிலைகளைக் காட்டும் நிழற் படங்களும், இறுவெட்டுகளும்.

**கற்றற் பேறுகள் :**

- விலங்குகளின் நடத்தைகளை அவதானித்து அவற்றின் உடல் நிலைகளின் பருமட்டான படங்களை வரைவார்
- விலங்குருவங்களை வரையும் போது அளவு, பரிமாணம் எனும் பண்புகளைச் சரியாக உபயோகிப்பார்.
- விலங்குகளின் இயற்கை வடிவங்களையும் உடல் நிலைகளையும் பருமட்டான படங்கள் மூலம் வரைந்து காட்டுவார்.
- இரேகைகள் வரையும் பல முறைகளை உபயோகித்து விலங்குருவங்களின் முப்பரிமான இயல்புகளையும், நடத்தைக் கோலங்களையும் வெளிக்கொணர்வார்.
- பல ஊடகங்களை உபயோகித்து இரேகைகள் வரையும் திறமையைக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள் :-**

ஆய்வு, அவதானிப்பு, செயன்முறை செயற்பாடுகள், ஒப்படை, செயற்றிட்டம்

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- பல வேறுபட்ட விலங்குகளின் உடல் நிலைகளும் அவற்றின் நடத்தைக் கோலங்களும்.
- விலங்குருக்களின் அடிப்படைக் கட்டமைப்பும், தோற்றமும்.
- விலங்குருக்களின் சரியான அளவும், பரிமாணப் பண்புகளும்.
- ஒளி நிழல், முப்பரிமாணத் தன்மை எனும் பண்புகளை வெளிக் கொணருதல்.
- இரேகைகளின் பல் வேறுபட்ட தன்மையை உகந்த விதத்தில் உபயோகித்தல்.
- பல வர்ண ஊடகங்களை உபயோகித்தல்.

**செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் :-**

- பல விலங்குகளைச் சித்தரிக்கும் நிழற் படங்கள், காணொளிகள் என்பவற்றை அவதானித்து அவற்றின் தோற்றங்களையும், உடல் நிலைகளையும் செயற்பாடு களையும் இனங்காணச் செய்க.
- இரேகைகளால் வரையப்பட்ட பல விலங்கு உடல் நிலைகளைக் கொண்ட மாதிரிச் சித்திரங்களை உபயோகித்து விலங்கு உடல் நிலைகளைக் காட்ட இரேகைகள் எந்த விதத்தில் கையாளப்பட்டுள்ளன என்பதை விளக்குக.
- மாணவர்களை இரேகைகளால் விலங்குருவங்களை வரையச் செய்க.
- அடிப்படைக் கட்டமைப்பினைக் கொண்டு படிப்படியாக விலங்கின் சரியான உருவத்தை வரையும் விதத்தினை விளக்குக.
- இயற்கைப் பாணியில் விலங்குகளின் உடல் நிலைகளை வரைகையில் அளவு, பரிமாணம், குண இயல்பு என்பன பற்றிக் கவனஞ் செலுத்தும் படி அறிவுறுத்துக.
- பல முறைகளில் வரையப்பட்ட இரேகைகளினால் ஒளி நிழல் என்பனவைக் காண்பித்து, முப்பரிமாணத் தன்மை, குண இயல்புகள் என்பனவற்றையும் வெளிக்கொணரச் செய்க.
- பல வர்ண ஊடகங்களை உபயோகித்து உருவங்களை வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- மாணவர்களுக்குத் தேவையான கோட்பாட்டு ரீதியான அறிவு மற்றும் ஏனைய உதவிகளையும் வழங்குக.

**கணிப்பீடு :-**

- பல விலங்கு உடல் நிலைகளையுடைய பருமட்டான படங்களை வரைக.
- விலங்குருவங்களின் அளவு, பரிமாணம் எனும் இயல்புகளைச் சரியாகக் காண்பிக்குக.
- பல முறைகளில் இரேகைகளை வரைந்து ஒளி நிழல், முப்பரிமாணத் தன்மை எனும் பண்புகளைக் காட்டுக.
- பல வர்ண ஊடகங்களை உபயோகித்து விலங்குருக்களை வரையும் செயற்பாடுகளில் ஈடுபடுக.

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : ஓவிய ஒருங்கிணைப்பின் யதார்த்த முறைகளைக் கொண்டு இயற்கை, செயற்கை சூழலை ஓவியங்களாக வரைவார்.**

**செயற்பாடு 1.2.1 : "அரிவி வெட்டும் உழவர்களும் உழத்திகளும்" எனும் தொனிப் பொருளில் சித்திர நிர்மாணிப்பொன்றை செய்வோம்.**

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சித்திரம் வரையும் தாள்கள், பென்சில்கள், தூரிகைகள், பல வித வர்ண ஊடகங்கள் (பெஸ்டல், நீர் வர்ணம், அக்கிறலிக்)
- பல் வேறுபட்ட ஊடகங்களைக் கொண்டு யதார்த்தமான சித்தரிப்பு முறைகளில் நிர்மாணிக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.
- தேர்ச்சி பெற்ற உண்ணாட்டு வெளிநாட்டு கலைஞர்கள் யதார்த்தமான சித்தரிப்பு முறைகளில் நிர்மாணித்த ஓவியங்களின் நிழற்படங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- "அரிவி வெட்டும் உழவர்களும் உழத்திகளும்" எனும் தொனிப் பொருளில் யதார்த்தமாக நிர்மாணிக்கப் பருமட்டான படத்தை வரைவார்.
- சித்திரம் வரையும் கோட்பாடுகளை உரிய முறையில் உபயோகித்து இரேகைகளால் சித்திரத்தை வரைவார்.
- தெரிவு செய்யப்பட்ட வர்ண ஊடகங்களுக்குப் பொருந்தும் விதத்தில் சித்திரத்தை வர்ணம் தீட்டுவார்.
- ஒளி நிழலைச் சரியாகக் காண்பித்து முப்பரிமானத் தன்மையை வெளிக்கொணர்வார்.
- யதார்த்தமான கலைப்பாணியில் ஓவியங்களை வரையும் திறமையை காண்பிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள் :-**

கலந்துரையாடல் முறை, ஆய்வு, அவதானிப்பு, செயன்முறை செயற்பாடுகள்.

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- தொனிப் பொருளுக்கு ஏற்ற யதார்த்தமான வடிவங்களையுடைய பல்வேறுபட்ட மனித உடல் நிலைகளும் அவற்றுக்கான சூழலும்.
- சித்தரிப்பு முறைகளின் கோட்பாடுகளை உபயோகித்தல்.

- வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்ப முறைகளைக் கையாளுதல்.
- உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துதல்.
- தமக்கே உரித்தான நுட்பத் திறன்கள்.
- வெளிப்பாட்டுத் திறனும் ஆக்கபூர்வமான தன்மையும்.

**செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் :-**

- மாதிரிச் ஓவியங்களும், தேர்ச்சி பெற்ற ஓவியக் கலைஞர்களினதும் ஆக்கங்கள் அடங்கிய நிழற்படங்களை ஆதாரமாகக் கொண்டு, யதார்த்தமான சித்தரிப்பு முறையில் சித்திரம் நிர்மாணிப்பது பற்றிக் கற்றறிய வாய்ப்பளிக்குக.
- யதார்த்தமான சித்திரங்களில் காணப்படும் பண்புகளை இனங்காண மாணவருக்கு உதவுக.
- இயற்கை மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட வடிவங்களை யதார்த்தமாக வரைந்து வர்ணம் தீட்டி அவற்றின் யதார்த்தமான தன்மையை வெளிப்படுத்தும் முறை பற்றி உதாரணங்கள் மூலம் விளக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமாக யதார்த்தமான அவ் வடிவங்களின் பருமட்டான படங்களை வரைய மாணவர்களை ஈடுபடுத்துக.
- சித்திரம் வரையும் தளத்தைச் சரியாக உபயோகித்து, சித்தரிப்பு முறைகளின் கோட்பாடுகளையும் பின்பற்றி இரேகைகளால் சித்திரத்தை வரைய அறிவுரை வழங்குக.
- தொனிப் பொருளுக்குப் பொருத்தமான மனித உருவங்களின் சந்தம், செயற்பாட்டு உடல் நிலைகள், உணர்வு வெளிப்பாடு, தனக்கே உரித்தான திறன் என்பவற்றை வெளிப்படுத்த மாணவர்களை அறிவுறுத்துக.
- பயன்படுத்தும் வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்பமுறைகள் மற்றும் உபகரணங்களைச் சரியாக உபயோகித்துச் சித்திரத்தின் யதார்த்த இயல்புகளை வெளிப்படுத்த அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்குக.
- யதார்த்தமான பண்புகள் வெளிப்படுத்துகையில் ஒளி நிழல் உபயோகித்து வெளிப்படுத்தும் முப்பரிமாணத் தன்மை தூரநோக்கு எனும் சித்திரக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.
- கட்டுப்பாட்டுடன் செயற்பாடொன்றில் ஈடுபடுவதால் அந்நிர்மாணிப்பு திறமையான தொன்றாக அமையக் காரணமாகும் என விளக்குக.

**கணிப்பீடு :-**

- தொனிப் பொருளுக்குப் பொருந்தும் யதார்த்தமான வடிவங்களை உபயோகித்துச் சித்திரத்தின் பருமட்டான படத்தை வரைக.
- தளத்தைச் சரியாக உபயோகித்து (தளப் பிரயோகம் - முன்னணி, இடையணி, பின்னணி என்பன கருதி) ஓவியத்தை ஒருங்கிணைக்குக.
- ஓவியத்தின் யதார்த்தமான கலைப்பாணிக்குரிய இயல்புகள் தோன்றும் விதத்தில் வர்ண ஊடகங்களை உபயோகிக்குக.
- உரிய கோட்பாடுகளையும் நுட்ப முறைகளையும் சரியாகப் பின்பற்றுக.
- தனித்துவமான நுட்பத் திறமை வெளிப்படும் விதத்தில் நிர்மாணிப்பில் ஈடுபடுக.

**உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் :-**

கீழே தரப்பட்ட தொனிப் பொருள்களின் கீழ் பொருத்தமான தலைப்புகளை அமைத்து இயற்கை மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட சூழல் தொடர்பான ஓவியங்களை வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

1.2.2. - ''நகர்புறச் சூழல்'' தொனிப் பொருளின் கீழ் மனதைக் கவர்ந்த சம்பவமொன்றை ஓவியமாக வரைவோம். (4 பாடவேளைகள்)

1.2.3. - ''கடற்கரையை அண்மித்த மீனவச் சூழல்'' எனும் தொனிப் பொருளின் கீழ் ஓவியமொன்றை வரைவோம். (4 பாடவேளைகள்)

1.2.4. - ''விவசாயச் சூழல்'' எனும் தொனிப் பொருளுடன் தொடர்புடைய சம்பவமொன்றைச் ஓவியமாக வரைவோம். (4 பாடவேளைகள்)

1.2.5. - விளையாட்டுப் போட்டியொன்றின் விறுவிறுப்பான நிலையொன்றை ஓவியமாக வரைவோம். (4 பாடவேளைகள்)

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளை உபயோகித்து இயற்கை, செயற்கை சூழலை ஓவியமாக வரைவார்.**

**செயற்பாடு 1.3.1 : "வருடப் பிறப்பு" எனும் தலைப்பில் ஓவியமொன்றை நிர்மாணிப்போம்.**

**பாடவேளைகள் :** 4

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சித்திரம் வரையும் தாள்கள், பென்சில்கள், பல வர்ண ஊடகங்கள், (பெஸ்டல், நீர் வர்ணம் - அக்றலிக், போஸ்டர் வர்ணம்)
- பல வித ஊடகங்களை உபயோகித்துத் தமக்கே உரிய பாணியில் நிர்மாணிக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.
- கண்டிக் காலத்து விகாரை ஓவியங்கள் அடங்கிய நிழற்படப் பிரதிகள்.

## கற்றற் பேறுகள் :

- தொனிப் பொருளுக்குப் பொருத்தமான மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளின் உருவங்களை உபயோகித்துப் பருமட்டான படங்களை வரைவார்.
- மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளில் இரேகை சித்திரத்தை வரைவார்.
- கலைப்பாணிக்கு உகந்ததாக வர்ணங்களையும் இரேகைகளையும் உபயோகிப்பார்.

## கற்றல் கற்பித்தல் முறைகள் :-

கலந்துரையாடல் முறை, ஆய்வு, அவதானிப்பு, செயன்முறைச் செயற்பாடுகள்.

## பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-

- தொனிப் பொருளுக்குப் பொருத்தமான மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளில் பல வித மனித உடல் நிலைகளும் அதற்குரிய சூழலும்.
- உரிய ஒருங்கிணைப்பு முறைகள்.
- கலைப் பாணிக்குப் பொருத்தமான வர்ண ஊடகங்களின் உபயோகமும் இரேகைகளும்.
- நுட்ப முறைகளுக்கு ஏற்ற விதத்தில் உபகரணங்களைக் கையாளும் திறமை.
- வெளிப்பாட்டுத் தன்மையும் ஆக்கபூர்வமான தன்மையும்.

### செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்:-

- மாதிரி ஓவியங்களையும் கண்டிக்கால விகாரை சுவர் ஓவியங்களின் பிரதிகளையும் நோக்கி, மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளில் நிர்மாணிக்கப்பட்ட ஓவியங்கள் பற்றி கற்றறிய மாணவருக்குச் சந்தர்ப்பம் அளிக்குக.

- மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளில் நிர்மாணிக்கப்பட்ட ஓவியங்களின் பண்புகளை இனங்காண மாணவருக்கு உதவுக. அதைப் பற்றிக் கலந்துரையாடுக.
- இயற்கை மற்றும் மனிதனாலான வடிவங்கள் மோடிப்படுத்தப்பட்ட இயல்பில் வரையும் போதும் வர்ணமிடும் போதும் பின்பற்ற வேண்டிய முறைகளை விளக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமான பருமட்டான படங்களை வரையச் சந்தர்ப்பமளிக்க.
- தளத்தைச் சரியாக உபயோகித்து மோடிப்படுத்தப்பட்ட இயல்பு வெளிப்படும் விதத்தில், சந்தத்துடன் உருவமைத்த வடிவங்களை உபயோகித்து சித்திரத்தை இரேகைகளால் வரையச் செய்க.
- மோடிப்படுத்தப்பட்ட இயல்பு தோன்றும் விதத்தில் தட்டையான / இருபரிமாணம் கொண்டதாகச் சித்திரத்தை வர்ணம் தீட்டும் படி வழிகாட்டுக.
- உபகரணங்களைச் சரியாக உபயோகித்துப் பொருத்தமான நுட்ப முறைகளில் வர்ணம் தீட்ட வழிகாட்டுக.
- வர்ணம் தீட்டிய பின் இரேகைகளினூடாக உருவங்களைத் தெளிவாகத் தோற்றுவிக்க வேண்டிய அறிவுரைகளை வழங்குக.
- மன அடக்கத்துடன் சித்திரத்தைப் பூர்த்தி செய்யத் தேவையான உதவியையும் அறிவுரைகளையும் வழங்குக.

**கணிப்பீடு :-**

- தொனிப் பொருளுக்குப் பொருத்தமாக மோடிப்படுத்தப்பட்ட இயல்பை உபயோகித்து பருமட்டான படங்களை வரைந்து இரேகைகளால் ஓவியத்தை அமைத்துக் கொள்ளுக.
- பல வித வர்ண ஊடகங்களை உபயோகித்து மோடிப்படுத்தப்பட்ட இயல்புக்கு ஏற்றதாக வர்ணம் தீட்டுக.
- ஓவியத்தில் உள்ள உருவங்களை வெளிக்கொணர மென்மையான, லயத்துடனான இரேகைகளை உபயோகிக்குக.
- பொருத்தமான விதத்தில் மோடிப்படுத்தப்பட்ட இயல்பு வெளிப்படும் விதத்தில் ஓவியத்தைப் பூர்த்தி செய்க.

**உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் :-**

தேர்ச்சி மட்டம் 1.3 இன் கீழ், கீழே தரப்பட்ட தலைப்புகளுக்குப் பொருந்தும் ஓவிய நிர்மாணிப்புகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

1.3.2. - குளம், வாய்க் கால், நீரோடை அண்மித்த சூழலைக் கொண்ட மனித விலங்கு உருவங்களைக் கொண்ட சம்பவமொன்றை ஓவியமாகத் தீட்டுவோம். (4 பாடவேளைகள்)

1.3.3. - சோகம், மகிழ்ச்சி, திகில் எனும் உணர்வுகள் வெளிப்படும் சந்தர்ப்பம் ஒன்றை ஓவியமாக தீட்டுவோம். (4 பாடவேளைகள்)

1.3.4. - உண்ணாட்டுக் கைத்தொழிலுடன் தொடர்புடைய தொனிப் பொருளை ஓவியமாக தீட்டுவோம். (4 பாடவேளைகள்)

1.3.5. - சமயச் சூழலுடன் தொடர்புடைய தொனிப்பொருளைக் கொண்டு மனங்கவர் சந்தர்ப்பம் ஒன்றை ஓவியமாகத் தீட்டுவோம். (4 பாடவேளைகள்)

**தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருட்களைக் கூட்டாக ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : பல்வேறு இயற்கை, செயற்கைப் பொருட்களை வேறுவேறாகக் கற்றறிந்து பருமட்டான படங்களை வரைவார்.**

**செயற்பாடு 2.1.1 :** சதுரமுகி, அரைவாசி நீருடன் கூடிய கண்ணாடிப் போத்தலினுள் வைக்கப்பட்ட பூவுடன் கூடிய கிளைத் தொகுதியை இரேகை படமாக வரைவோம்.

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சதுரமுகி, அரைவாசி நீருடன் கூடிய கண்ணாடிப் போத்தலினுள் வைக்கப்பட்ட பூவுடன் கூடிய கிளைத் தொகுதி (செவ்வரத்தம் பூக்கிளை/ குரோட்டன் கிளை). சித்திரம் வரைவதற்குப் பலகை (Drawing Board), சித்திரம் வரையும் கடதாசி, பென்சில் (2B, 4B, 6B), பஸ்ரல் வர்ணம், வரையப்பட்ட பல மாதிரிப் படங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பலகை மீது வைக்கப்பட்டுள்ள பொருட்களின் பல வடிவங்களையும் அவற்றின் மேற்பரப்புத் தன்மையையும் விபரித்துக் கூறுவார்.
- அவதானிப்பதன் மூலம் பொருட்களின் வேறுபாட்டை இனங்காணலாம் என எடுத்துக் கொள்வார்.
- கனவளவு, அளவிடை பற்றிய பரந்தறிவுடன் பொருட்களை இரேகைகளால் வரைவார்.
- பல ஊடகங்களை உபயோகித்து தடித்த மென்மையான இரேகைகளால் பொருட்களின் வடிவம், முப்பரிமாண இயல்பு மேற்பரப்புத் தன்மை என்பவற்றை வெளிப்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- பலகை மீது கண் மட்டத்துக்குக் கீழே பொருட்களை வைத்து அவற்றை அவதானித்தல்
- பொருட்களின் வடிவம் மேற்பரப்புத் தன்மையின் வேறுபாடு
- ஒளிக்கேற்ப பொருட்களின் வடிவம் முப்பரிமாண இயல்பு என்பன வெளிப்படுத்தல்
- பொருட்களை பார்த்து வரையும் போது அதற்குரிய கோட்பாடுகளை உபயோகித்தல். (கனவளவு, அளவுத்திடடம், தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு, மேற்பரப்புத் தன்மை என்பன)
- வெவ்வேறு வகையான பென்சில், வெவ்வேறான ஊடகங்கள் உபயோகிக்கும்போது இரேகைகளின் பல்வகைத்தன்மைகளைக் கொண்டு பொருட்களின் முப்பரிமாணத் தன்மையையும் இயல்புகளையும் வெளிக்கொணருதல்.

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பலகை மீது கண் மட்டத்துக்குக் கீழே பொருத்தமான விதத்தில் பொருட்களை வைத்து அதன் மேற்பரப்புத் தன்மையைப் பற்றி வினவுக.
- ஒளி பொருளின்மீது படும் தன்மைக்கு ஏற்ப, பொருட்களின் வடிவம், ஒளி நிழல் மூலம் முப்பரிமாணத் தன்மை வெளிப்படும் விதம் என்பவற்றை விளக்குக.
- மாதிரி படங்கள் மூலம் பல் ஊடகங்களை உபயோகிக்கும் விதம் பற்றி ஆராய மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- கேத்திர கணித உபகரணங்கள் இன்றி சுயாதீனமாக வரைய மாணவருக்கு அறிவுரை வழங்குக.
- பொருட்களின் அடிப்படையான கேத்திர கணித வடிவத்தை இனங்கண்டு, அதனூடாக அதற்குரிய பொருளின் அடிப்படை வடிவத்தை வரைய வழிகாட்டுக.
- தடிப்பான இரேகைகளையும் மென்மையான இரேகைகளையும் உபயோகித்து பொருட்களின் முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்தத் தேவையான அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- இரேகைளின் பல விதங்களைக் கொண்டு பொருட்களின் இயல்பை திறம்படக் காண்பிக்கக் கூடிய விதத்தினை விளக்குக.
- பல ஊடகங்களை உபயோகித்து செயன்முறைப் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

## கணிப்பீடு

- பொருட்களில் காணக்கூடிய வேறுபாட்டுத் தன்மை விபரிக்குக.
- கனவளவு அளவுத்திட்டம் என்பவைக்கு ஏற்ப பொருள் தொகுதியை இரேகைகளால் வரைக.
- இரேகைகளின் பல்வகையைக் கொண்டு பொருட்களின் முப்பரிமாணத்தன்மை வெளிப்படுமாறு ஒளி நிழல் காட்டுக.
- பலவித ஊடகங்களை நிர்மாணிப்புக்கு ஏற்ற விதத்தில் கையாளும் திறமையை வெளிப்படுத்துக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

2.1.2 பெட்டியொன்று (வெள்ளைத்தாளினால் மறைக்கப்பட்ட) அதன் மீது விரிக்கப்பட்ட துணித்துண்டொன்று ஆகியவற்றை பல் ஊடகங்களை உபயோகித்து வரைதல்

2.1.3 பிளாஸ்டிக் ஜக் ஒன்றில் இடப்பட்ட குறோட்டன் கிளையொன்றை வரைதல்

2.1.4 சிறிய குடம் ஒன்றுக்கு ஒத்த வடிவமுடைய களி மட்பாத்திரமொன்று, பெட்டியொன்று, கண்ணாடிக் குவளையொன்று என்பவற்றை வரைதல்

2.1.5 அந்தூரியம் பூச்சாடியொன்றை வரைதல்

2.1.6 பப்பாசிக்காய் ஒன்று, அரைவாசி நீரால் நிரப்பப்பட்ட கண்ணாடிப் போத்தல் ஒன்றுக்குள் இடப்பட்ட செவ்வரத்தம் பூக்கிளையொன்று என்பவற்றை வரைதல்.

**தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருட்களைக் கூட்டாக ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : இயற்கை, செயற்கைப் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார்.**

**செயற்பாடு 2.2.1 :** ஒரு பெட்டி, ஒரு துணித்துண்டு, சிறிய களிமண் குடத்தில் இட்ட அலரிப் பூக்கிளை, ஒரு பப்பாசிக்காய், கண்ணாடிக் குவளை ஒன்றினுள் இடப்பட்ட கடதாசிச் சுருள் எனும் தொகுதிகளை ஒழுங்கிணைத்து ஓவியம் வரைவோம்.

**பாடவேளைகள் :** 04 ப

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- வெள்ளை நிறக் கடதாசியினால் சுற்றப்பட்ட பெட்டியொன்று (உதா: மாரி பிஸ்கட் பெட்டியொன்று) அதன் மீது மடிப்புகளுடனான வர்ணத் துணித்துண்டொன்று.
- பொருட்களை வைக்கப்பொருத்தமான பலகை ஒன்று
- வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான காகிதத் தாள்கள்
- தூரிகைகளும் வர்ணங்களும்
- பல வர்ண ஊடகங்களை உபயோகித்து வரையப்பட்ட மாதிரிச் ஓவியங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பலகை மீது வைக்கப்பட்டுள்ள பொருட்களின் பல்வேறுபட்ட தன்மையை விபரித்துக் கூறுவார்.
- கனவளவு, அளவுத்திட்டம், கண்மட்டம், தூரநோக்கு, தளப்பிரயோகம் என்பவை பற்றிய அறிவுடன் பொருள் தொகுதியை இரேகைகளால் வரைவார்.
- பொருள் தொகுதிக்குப் பொருந்தும் விதத்தில் பலகையின் அளவுப் பரிமாணத்தைத் திட்டமிட்டுக் கொள்வார்.
- பல வர்ண ஊடகங்களுக்குப் பொருந்தும் நுட்ப முறைகளை உபயோகிப்பார். அத்துடன் பொருள் தொகுதியின் ஒளி நிழல் காட்டுதல், முப்பரிமாணத் தன்மை, மேற்பரப்புத் தன்மை, தூரநோக்கு எனும் பண்புகளை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- பொருள் தொகுதியை கண் மட்டத்துக்குக் கீழே ஒழுங்கிணைத்து அவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்க.
- பொருட்களின் வடிவங்களும் பண்புகளும் வேறுபடும் விதம்

- பொருள் தொகுதியை வரையும் போது பின்பற்ற வேண்டிய கோட்பாட்டு முறைகள் (கனவளவு, அளவுத்திட்டம், தூரநோக்கு, முப்பரிமாணத்தன்மை, மேற்பரப்புத் தன்மை, தளப் பிரயோகம், கண்மட்டம்)
- பல வர்ண ஊடகங்களை உபயோகித்தல் (நீர் வர்ணம், பெஸ்டல், அக்ரலிக்)
- பல உபகரணங்களைக் கையாளுதல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- கண் மட்டத்துக்குக் கீழே இருக்கும் படி பலகையொன்றின் மீது பொருட்களை ஒழுங்கிணைக்குக. பின்னணிக்கு வெள்ளைத் தளம் ஒன்றை ஒழுங்குபடுத்துக. (White board/ Regiform)
- வகுப்பறையில் உள்ள மேசைகள் கதிரைகளை அரைவட்ட வடிவில் ஒழுங்குபடுத்துக. சகல பொருட்களும் எல்லா மாணவர்களும் பார்க்கக் கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்துக.
- பொருள் தொகுதியை குழுவின் சகல மாணவர்களும் பார்க்கக் கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்துக.
- பொருள் தொகுதியின் வடிவங்கள் பண்புகள் வேறுபடும் விதம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- ஒளிபடும் விதத்துக்கு ஏற்ப பொருட்களின் வடிவம், முப்பரிமாணத்தன்மை வெளிப்படும் விதம் பற்றி விளக்குக.
- மாதிரி படங்களைக் கொண்டு தளம் உபயோகிக்கப்பட்டுள்ள விதம் ஊடகங்களுக்குப் பொருந்தும் படி நுட்ப முறைகள் உபயோகித்துள்ளவிதம் பற்றி ஆராய்ந்தறியச் சந்தர்ப்பம் வழங்குக.
- தளத்தின் சமநிலை பேணப்பட்டு பொருள் தொகுதி இரேகைகளால் வரையும் விதத்தை வெண்பலகையில் விளக்குக. இங்கே பொருள் தொகுதியின் ஒட்டு மொத்த உயரம், அகலம் என்பவற்றுக்கிணங்க வரையும் தாளை உயோகித்தல், பொருள் தொகுதிக்கு பொருந்தும்படி பலகையின் அளவீடு பற்றிக் கவனம் செலுத்துக.
- உரிய கோட்பாடுகளுக்கு ஏற்ப வர்ண ஊடகங்களுக்குப் பொருந்தும் நுட்ப முறைகளை உபயோகித்து பொருள் தொகுதியை வர்ணம் தீட்டச் செய்க.
- வர்ண ஊடகங்களையும் உபகரணங்களையும் சரியாக கையாளத் தேவையான அறிவுரைகளை வழங்குக.
- பொருள் தொகுதிக்குப் பொருந்தும் படி பின்னணியை வர்ணம் தீட்ட அறிவுரை வழங்குக.
- செயற்பாட்டில் ஈடுபடும் போது மாணவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையம் அவ்வப்போது வழங்குக.
- பொருத்தமான விதத்தில் நேர முகாமைத்துவம் செய்து பலவித பொருள் தொகுதிகளை வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- அளவு, பரிமாணம், தூரநோக்கு பண்புகளுக்கு ஏற்ற விதத்தில் தளத்துக்குப் பொருத்தமாக பொருட் கூட்டத்தை வரைக.
- பொருட்களின் பல்வகைமை, மேற்பரப்புத் தன்மை, புலப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுக.
- சித்திரக் கோட்பாட்டு விதிகளுக்கு அமைய வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்ப முறைகளை உபயோகிக்க.
- பொருள் தொகுதிக்குப் பொருத்தமாகப் பின்னணியை வர்ணம் தீட்டி ஓவியத்தைப் பூர்த்தி செய்க.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

- சதுரமுகி, கனவுரு வடிவங்கள் - வெள்ளைத் தாளினால் சுற்றப்பட்ட பெட்டிகள்
- அலங்காரங்கள் உள்ள அல்லது இன்றிய வர்ணத் துணிகள்
- கோளவடிவப் பொருட்கள் - கரப்பந்து/ காற்பந்து, பப்பாசிக்காய், செவ்விளநீர், தர்பூசனிக்காய், அப்பிள், தோடை, அன்னாசி, மட்பாத்திரங்கள்
- உருளை வடிவமான பொருட்கள் - போத்தல்/ குவளை/ பேணி/ கோப்பை/ கண்ணாடிக் குவளை
- பூக்களைக் கொண்ட/ பூக்களற்ற விசித்திரமான தாவரங்கள், கிளைகள், அந்தூரியம், தேமா, குறோட்டன்
- தேநீர் கோப்பைத்தட்டு (Saucer) , தாம்பாளம், கண்ணாடிப் பாத்திரங்கள், மேசைக்கத்திகள், கடதாசிச்சுருள்கள், தூரிகைகள்

மேற்குறிப்பிடப்பட்ட பல வடிவங்களையும் பல இயல்புகளையும் கொண்ட இயற்கை, செயற்கைப் பொருட்களுள் சிலவற்றைத் தெரிவு செய்து பொருட் தொகுதியை ஒழுங்கிணைத்து வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

பின்வரும் செயற்பாடுகளைப் பொருத்தமான காலத்துடன் ஒழுங்குபடுத்துக.
2.2.2, 2.2.3, 2.2.4, 2.2.5, 2.2.6 எனும் செயற்பாடுகளுக்காக 4 பாடவேளைகள் வீதம் பயன்படுத்துக.

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக அலங்கார நிர்மாணிப் புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : பல வடிவம் கொண்ட பாத்திரங்களைத் திட்டமிட்டு அதற்குரிய அலங்கார வடிவங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.1.1 :** விறாந்தையில் அழகுக்காக வைக்கப்படும் சாடியொன்றை திட்டமைத்து நிர்மாணிப்பார்.

**பாடவேளைகள் :** 05

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி உருவப் படங்கள், இறுவெட்டுக்கள், சீமெந்து கூழ், சித்திரம் வரையும் தாள்கள், சீமெந்து ஊடகப் பாவனைக்குத் தேவையான உபகரணங்கள், கட்டுக் கம்பி, கம்பி வலை, டிமை கடதாசிகள், கம்பி

**கற்றற் பேறுகள் :**

- சூழலைக் கற்றறிவதன் மூலம் பொருட்களையும் அலங்கரிப்பு முறைகளையும் திட்டமிடத் தேவையான எண்ணக்கருக்களை நிர்மாணிப்பார்.
- இறுதி ஆக்கத்துக்குரிய திட்டமைப்பை, வர்ண ஊடகத்துக்கு உகந்த நுட்பமுறைகளைக் கொண்டு வர்ணம் தீட்டுவார்.
- பொருத்தமான முறைகளை உபயோகித்து ஊடகத்தைத் தயார்ப்படுத்துவார்.
- நிர்மாணிப்பின் தரம் அதிகரிக்கும் வண்ணம் உபகரணங்களை நேர்த்தியுடன் கையாள்வார்.
- கற்றற் செயற்பாடுகள் தொடர்பாக ஒழுங்கான தகலவ்களைத் திரட்டி அறிக்கையொன்றைத் தயாரிப்பார்.
- எதிர்கால வேலை உலகிற்கு ஏற்ற செயன்முறைத் திறன்களை வெளிப்படுத்தி நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- சூழலைக் கற்றறிதல்
- திடடமிடல் எண்ணக்கருக்கள்
- அழகுக்காக வைக்கப்படும் பல்வேறுபட்ட சாடிகள்
    - வரலாற்று ரீதியான
    - சமகால (உண்ணாட்டு அல்லது வெளிநாட்டு)

- பருமட்டான படங்கள்
- படவடிவங்களுடனான நிர்மாணிப்புக்கள்
    - விலங்குருவங்கள்
    - தாவர உருவங்கள்
- திட்டமிடல்
- திட்டமிட்ட நுட்பமுறைகள்

– சந்தம்

– சமனிலைத்தன்மை

– பொருத்தப்பாடு

– ஒருமைப்பாடு

- திட்டமிடல் சித்திரங்கள்
- முப்பரிமாணச் சித்திரம்
- மாதிரிக் கட்டமைப்பை நிர்மாணித்தல்
- ஊடகப் பயன்பாடு
    - சீமெந்து
    - கடதாசி
- வர்ணங்களும் நுட்பமுறைகளும்
- ஆய்வறிக்கைகள் / அறிக்கைகளை உருவாக்குதல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- அழகுக்காக வைக்கப்படும் சாடிகளைப் பற்றி பண்டைய கால, தற்கால உண்ணாட்டு, வெளிநாட்டு காரணிகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்தறிய வழி நடத்துக.
- சூழலை அவதானித்துக் கண்டறிந்த வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய நிர்மாணிப்புக்காக பருமட்டான படம் ஒன்றை வரைய மாணவர்களை வழி நடத்துக.
- திட்டமிட்ட வடிவங்களை நிர்மாணிக்கையில் சாடியை வைக்க உத்தேசித்துள்ள இடத்தின் மீது கவனஞ் செலுத்துக.
- சூழலில் இருந்து கண்டறிந்த வடிவங்களை ஆக்கபூர்வமான முறையில் எளிமையாக நிர்மாணிக்கலாம் என்பது பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
- நிர்மாணிப்பின் பக்கத் தோற்றம் தென்படும் விதத்தை விளக்க இரு படங்களை அமைக்கும் படி மாணவர்களை வழி நடத்துக.
- திட்டமிட்டதற்கிணங்கச் சாடியை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கும் ஊடகத்தினையும் நிர்மாணிப்பின் இயல்பையும் தீர்மானிக்க உதவி புரிக.
- திட்டமிட்டதற்கிணங்க தெரிவு செய்யப்பட்ட சாடியை நிர்மாணிக்கவிருக்கும் ஊடகத்தைத் தயார் செய்து கொள்ள உதவுக.
- கம்பி, கம்பி வலை, கட்டுக் கம்பி போன்றவற்றின் துணையுடன் அடிப்படைக் கட்டமைப்பை அமைக்க அறிவுறுத்தல்களை வழங்குக.
- நிர்மாணிப்பின் போது ஏற்படும் சிக்கலான நிலைமைகளுக்குத் தீர்வு காண உதவுக.
- பயன்படுத்தும் ஊடகம், உபகரணங்கள் என்பவற்றை நேர்த்தியாகக் கையாள உதவுக.
- நிர்மாணிப்பு நல்ல பூரணப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துக.
- அழகிய சாடிகளை நிர்மாணித்தல் பற்றிய தகவல்களைக் கற்றறிய ஆரம்பித்த வேளையிலிருந்து இறுதிவரை சேகரித்த தகவல்களை உள்ளடக்கி சிறிய புத்தகம் ஒன்றை நிர்மாணித்து சமர்ப்பிக்க வேண்டும் என்று பாடத்தின் ஆரம்பத்திலேயே மாணவர்களை அறிவுறுத்துக.

## கணிப்பீடு

- சூழலில் காணப்படும் விலங்கு, தாவர வடிவங்களை அலங்கார வேலைப்பாடுகளில், அலங்கார அலகாக ஆக்கபூர்வமான விதத்தில் உபயோகிக்கக்கூடிய விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.
- விலங்கு, தாவர வடிவங்களை உள்ளடக்கி அழகிய சாடியொன்றுக்குப் பொருத்தமான பருமட்டான படத்தைத் திட்டமிடல் கோட்பாடு விதிகளுக்கமைய வரைக.
- திட்டமிட்ட இரேகைச் சித்திரங்களை எதிர்பார்க்கப்படும் இறுதி ஆக்கத்திற்கு உகந்ததாக முப்பரிமாண இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுக.
- திட்டமிட்டதற்கு இணங்க சீமேந்து/ கடதாசிக்கூழ் என்பன உபயோகித்து சாடியை நிர்மாணிக்க.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

3.1.2 பாரம்பரிய வேலைப்பாடுகளைக் கொண்ட தங்க ஆபரணப் பேழையொன்றை வரைந்து வர்ணம் தீட்டுவோம். (03 பாடவேளைகள்)

3.1.3 மழைப்பீலியில் இருந்து மழை நீர் விழும் இடத்தில் வைக்கப் பொருத்தமான அழகிய சாடியொன்றுக்கான படத்தை முப்பரிமாணத்துடன் வரைந்து வர்ணம் தீட்டுவோம். (03 பாடவேளைகள்)

3.1.4 நிறுவனமொன்றில் பாவனைக்குகந்த விதத்தில் ஈரக்குடைகளை இடக்கூடிய அழகிய சாடியொன்றினை திட்டமிட்டு, கிரேக்க களி மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்களைச் சார்ந்த வேலைப்பாடுகளால் அலங்கரிப்போம். (03 பாடவேளைகள்)

3.1.5 தேயிலை ஏற்றுமதி செய்ய உகந்த பொருத்தமான சாடியொன்றை வரைவோம். (03 பாடவேளைகள்)

3.1.6 மூலிகைப் பானம் விற்பனை செய்யும் விற்பனை நிலையத்துக்கு முன்னால் வைக்கக் கூடிய பொருள் புலப்படும் விதத்திலான பாரிய அளவிலான சாடியொன்றினை வரைவோம். (03 பாடவேளைகள்)

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக அலங்கார நிர்மாணிப் புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : வீட்டின் நிலையான பகுதிகளின் பொருட்டு புதிய நிர்மாணிப்புக்களைச் செய்வார்.**

**செயற்பாடு 3.2.1 :** காற்றோட்டத் துவாரங்களில் இடப்படும் பூவேலைப் பாடுகளைக் கொண்ட செதுக்கல்களை வரைவோம்.

**பாடவேளைகள் :** பொருத்தமான விதத்தில் நேர முகாமைத்துவம் செய்து கொள்க.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பல வடிவங்களைக் கொண்ட யன்னல் நிலை, யன்னல்கள் அடங்கிய படங்கள், செதுக்கல் அலங்காரங்களுடனான காற்றோட்டத் துவாரங்கள் அடங்கிய இறுவெட்டுகள், கணினி இயந்திரங்கள், பல அலங்கார வடிவங்களைக் கொண்ட உருவப்படங்கள், சித்திரம் வரையும் தாள்கள், வர்ணங்கள், பிரதி செய்யும் தாள்கள் (Tracing papers)

**கற்றற் பேறுகள் :**

- பலவித காற்றோட்டத் துவாரங்களின் அவசியம் பற்றிக் கலந்துரையாடுவார்.
- திட்டமிடல் கோட்பாடுகளை உபாயோகித்துத் திட்டப்படத்தை வரைவார்.
- மர ஊடகம் வெளிப்படும் விதத்தில் சித்திரங்களை வர்ணம் தீட்டுவார்.
- மன ஒருமைப்பாட்டுடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- படமாக வரையும் காற்றோட்டத் துவாரங்களின் செதுக்கலை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, செயன்முறைச் செயற்பாடுகள், எழுத்து மூலமாக முன்வைக்கும் முறை

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-**

- காற்றோட்டத் துவாரங்களின் செதுக்கல்கள்
  - வரலாற்று ரீதியான
  - தற்காலத்துக்குரிய
- பல்வேறு வடிவங்கள்
- கலைப் பண்புகள்
- புதிய பாணியிலான நிர்மாணிப்புக்கள்

- சந்தம்
- சமநிலைத்தன்மை
- ஒருமைப்பாடு
- மர ஊடகத்தை உபயோகித்தல்
- திட்டப்படமும் முப்பரிமாணப் படமும்
- மாதிரிக் கட்டமைப்பை நிர்மாணித்தல்
- வர்ண உபயோகம்
- கற்றல் குறிப்புக்கள்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பொருத்தமான விதத்தில் தர உள்ளீடுகளை உபயோகித்து பலவித மூலாதாரங்களைக் கொண்டு காற்றோட்டத் துவாரம் பற்றிக் கற்றறிய மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- கற்றிந்து பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு காற்றோட்டத் துவாரத்தின் வடிவம் ஒன்றுக்குப் பொருத்தமான பூ வேலைகப்பாடுகளைக் கொண்ட படத்தைத் திட்டமிட்டு வரைக.
- பாடக் குறிப்புகள் உறுதியாகும் விதத்தில் திட்டமிட்ட படத்தை முழுமைச் சித்திரமாக்க உதவுக.
- மர ஊடகத்தின் மேற்பரப்புத் தன்மையின் பண்புகள் வெளிப்படும் விதத்தில் வர்ணம் தீட்ட மாணவர்களுக்கு வழிகாட்டுக.
- நேர்த்தியான நிர்மாணிப்பைப் பெற மாணவருக்கு உதவுக.
- வகுப்பின் அனைத்து நிர்மாணிப்புக்களையும் உள்ளடக்கி கலந்துரையாடல் மூலம் அவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்துக.
- செயற்பாடு ஆரம்பித்த நிலையிலிருந்து இறுதி வரை சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி, இறுதி நிர்மாணிப்புடன் முன்வைக்க வேண்டும் என்பதை செயற்பாடு ஆரம்பிக்க முன்னரே மாணவர்களிடம் கூறி அறிவுறுத்துக.

## கணிப்பீடு

- காற்றோட்டத் துவாரம் ஒன்றில் இருக்க வேண்டிய விசேட பண்புகள், அதன் தேவை என்பன பற்றி விளக்குக.
- காற்றோட்டத் துவாரம் பற்றிய வரலாற்று ரீதியான தகவல்களையும் தற்காலத் தகவல்களையும் கலந்துரையாடுக.
- பூ வேலைப்பாடுகளைக் கொண்ட செதுக்கல் ஒன்றின் திட்டமிட்ட படத்தை வரைக.
- விரும்பிய வடிவம் ஒன்றில் காற்றோட்டத் துவாரம் ஒன்றின் செதுக்கல் ஒன்றை சித்திரமாக வரைக.

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக அலங்கார நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : பல்வேறு தேவைகளின் பொருட்டு அலங்கரிப்பு ஓவியங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.3.1 :** அறுகோண வடிவமுடைய தாம்பாளம் ஒன்றுக்குப் பொருத்தமான முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிப்பார்.

**பாடவேளைகள் :** 4

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்ட பித்தளை/ வெள்ளி மற்றும் வேறு உலோகத் தாம்பாளங்களின் நிழற்படங்கள், உருவப்படங்கள், நிழற்படங்கள் அடங்கிய இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.
- பாரம்பரிய அலங்கார காட்டுருக்களின் உருவப்படங்கள்
- சித்திரம் வரையத் தேவையான உபகரணங்கள்.
- வர்ண ஊடகங்கள்.
- பிரதியிடத் தேவையான தாள்கள், சித்திரம் வரையும் தாள்கள்.

## கற்றற் பேறுகள் :

- அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணிக்கும் போது பாரம்பரிய அலங்கார உருக்களை ஆக்கபூர்வமாக உபயோகிக்கக் கூடிய விதத்தினை உதாரணங்களுடன் விளக்குவார்.
- பித்தளை, வெள்ளி, செப்பு மற்றும் வேறு உலோகங்களால் நிர்மாணிக்கப்பட்ட தாம்பாளங்களில் காணப்படும் அலங்காரக் கோலங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- அலங்கார வேலைப்பாடொன்றை நிர்மாணிக்கும் கோட்பாடுகளைச் சரியாகப் பின்பற்றி முழுத் தள அலங்காரமொன்றைச் சித்திரமாக வரையும் திறனை வெளிப்படுத்துவார்.
- திட்டமிடல் சந்தர்ப்பத்தில் இருந்து இறுதி படம் வரை சரியான நுட்பமுறைகளைப் பின்பற்றுவார்.
- பாவனைத் தேவையையும், ஊடகங்களின் இயல்பையும் பற்றிய நல்லறிவுடன் நிர்மாணிப்புகளில் ஈடுபடுவார்.

## கற்றல் கற்பித்தல் முறைகள் :-

கலந்துரையாடல் முறை, ஆய்வு, செயன்முறைப் பயிற்சிகள்.

## பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணை புரிபவை:-

- பாவனைத் தேவை.
- பல் வேறுபட்ட அலங்கரிப்புகள்.
  - முழுத் தள அலங்காரம்.

- கரை அலங்காரம்.

- கைத்தொழிலுக்குப் பொருந்தும் தன்மை.
- பருமட்டான படங்கள்.
- பல வித வடிவங்கள்.
- பாரம்பரிய அலங்கரிப்பு உருக்கள், கோலங்கள்.
- அளவு.
- திட்மிடும் கோட்பாடுகள்.
  - சந்தம்.
  - சமநிலைத் தன்மை.
  - பொருத்தப்பாடு.
  - ஒருமைப்பாடு.
- புதிய நிர்மாணிப்புகள்.
- வர்ணங்களும் நுட்பமுறைகளும்.
- நிறைவு.

**செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் :-**

- பாரம்பரிய அலங்கார உருக்களை நோக்கி, கற்றறியச் சந்தர்ப்பம் வழங்குக.
- அலங்காரங்களின் அடிப்படை இயல்புகள், கோட்பாடுகள் என்பன பற்றிப் பெறப்பட்ட உதாரணங்களைக் கொண்டு கலந்துரையாடுக.
- பல்வேறு அலங்கரிப்பு முறைகளைக் கொண்ட பித்தளை, வெள்ளி, செப்பு மற்றும் வேறு உலோகத் தாம்பாளங்கள் அடங்கிய நிழற்படங்களை அவதானிக்க மாணவர்களை ஈடுபடுத்துக.
- குறிப்பிட்ட எல்லைக்குள் அலங்காரங்களை இட்டுச் செய்யப்படும் அலங்கார வடிவமைப்பு முழுத் தள அலங்காரம் எனப்படும். இதனை உதாரணங்கள் மூலம் மாணவர்களுக்கு விளக்குக.
- அறுகோண வடிவமுடைய தாம்பாளத்துக்கு அலங்காரங்களைத் திட்டமிடும் போது பின்பற்ற வேண்டிய திட்டமிடல் முறைகள், படிமுறைகள் என்பன பற்றி மாணவர்களை அறிவுறுத்திப் பருமட்டான படங்களை வரைதலில் ஈடுபடுத்துக.
- பரிமாணங்களைப் பெறும் போது கேத்திர கணித உபகரணங்களை சரியாக உபயோகித்துத் திட்மிடும் படத்தை வரைய மாணவருக்கு வழிகாட்டுக.
- தாம்பாளத்தின் மொத்த தளத்துக்கு (மேற்பரப்புக்கு)பொருத்தமான அலங்காரங்களை உள்ளடக்க வேண்டும் என்பதை விளக்குக.
- நிர்மாணிக்கப்பட்ட அலங்கார உருக்களைத் தாம்பாளத்தின் மேற்பரப்புக்குப் பிரதியிட்டுக் கொள்ள/ வரைந்து கொள்ள மாணவர்களை ஈடுபடுத்துக.
- ஓர் அலங்கார அலகை திரும்பத் திரும்ப உபயோகப்படுத்துவதாக இருந்தால், அதற்காக பிரதியிட உபயோகப்படும் தாள்களை (Tracing paper) உபயோகிக்கும். படி அறிவுறுத்துக.
- இரேகைச் சித்திரத்தை வர்ணமிடும் போது தாம்பாளம் செய்யப் பயன்பட்ட உலோகத்தின் தன்மை வெளிப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்த அறிவுறுத்துக.
- உபயோகித்த அலங்கார உருக்களின் குழிவு, குவிவுத் தன்மை வெளிப்படும் விதத்தில் வர்ணமிட்டு, சித்திரத்தின் முப்பரிமானத் தன்மையையும் அழகையும் வெளிக் கொணரலாம் என்பதை உறுதிப்படுத்துக.

## கணிப்பீடு :-

- பாவனைத் தேவை மற்றும் ஊடகத்தின் தன்மையைக் கருதி அறுகோண வடிவிலான உலோகத் தாம்பாளத்துக்குப் பொருத்தமான முழுத் தள அலங்காரமொன்றைத் திட்டமிட்டு வரைக.
- பல வித உலோக நிர்மாணிப்புகளின் முழுத் தள அலங்காரங்களுக்காகப் பாரம்பரிய அலங்காரங்களை ஆக்கபூர்வமாக உபயோகிக்குக.
- அலங்காரங்களை நிர்மாணிக்கும் கோட்பாடுகளை முழுத் தள அலங்காரச் சித்திர நிர்மாணிப்பின் போது உகந்த விதத்தில் உபயோகிக்குக.
- நிர்மாணிப்புக்குப் பொருந்தும் வர்ணங்கள் நுட்பமுறைகள் என்பவற்றை உபயோகிக்குக.

**உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் :-**

3.3.2 சிறுவர்களின் கட்டில் விரிப்புக்கு பொருத்தமான முழுத் தள அலங்காரத்தை நிர்மாணிப்போம். (4 பாடவேளைகள்)

3.3.3. வட்ட வடிவமான தழுவணை (குஷன்) உறை ஒன்றுக்காக அரூப உருவங்கள் அடங்கிய அலங்கரிப்பு ஒன்றை நிர்மாணிப்போம். (4 பாடவேளைகள்)

3.3.4. செவ்வக வடிவ நிலவிரிப்புக்குப் பொருந்தும் அலங்காரம் ஒன்றை நிர்மாணிப்போம். (ஒரு வர்ண பேதத்தில் வர்ணமிடுக) (4 பாடவேளைகள்)

3.3.5. ஆண் அல்லது பெண் ஆடையொன்றுக்கான கரை அலங்காரம் ஒன்றை நிர்மாணிப்போம்.

(4 பாடவேளைகள்)

3.3.6. பாரம்பரிய அலங்கார உருக்களைக் கொண்டு செவ்வக வடிவ உட்கூரையொன்றை அலங்கரிக்கப் பொருத்தமான அலங்காரம் ஒன்றை நிர்மாணிப்போம். (4 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : பரந்த தொனிப்பொருள்களில் சுவரொட்டிகளை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 4.1.1 :** "சமய சகவாழ்வுடன் நல்ல சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் சுவரொட்டியொன்றை நிர்மாணிப்பார்.

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பல தொனிப் பொருட்களில் நிர்மாணிக்கப்பட்ட சுவரொட்டிகள், சித்திரக் கடதாசிகள், பிரதியிடும் தாள்கள், பென்சில்கள், கேத்திர கணித உபரணங்கள், தூரிகைகள், போஸ்டர் வர்ணங்கள் அல்லது வேறு பொருத்தமான வர்ண ஊடகங்கள்

**கற்றற் பேறுகள் :**

- சுவரொட்டிச் சித்தரங்கள் கிராபிக் சித்திரக் கலைக்குரியது எனக் கூறுவார்.
- சுவரொட்டிச் சித்திரமொன்றின் பண்புகளை இனங்கண்டு ஏனைய சித்திரங்களில் இருந்து வேறுபடும் விதத்தினை விபரித்துக் கூறுவார்.
- தொனிப் பொருளுக்குப் பொருந்தும் குறியீடுகள், உருவங்கள், எழுத்துக்கள் உரிய விதத்தில் தளத்தை உபயோகித்து சுவரொடடியைத் திட்டமிடுவார்.
- தொடர்பாடலுக்கான பொருள் புலப்படும் வித்தில் சுவரொட்டியை நிர்மாணிக்கப் பொருத்தமான ஊடகங்களை யும் நுட்ப முறைகளையும் உபயோகிப்பார்.
- சுவரொட்டிச் சித்திரங்களை மதிப்பிடுவார். நயந்துரைப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, நோக்கும் முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- சுவரொட்டிச் சித்திரமொன்றின் பண்புகளும் முக்கியத்துவமும், கூட்டுத் தொனிப்பொருளின் செய்தியை எளிமையாகவும் அர்த்தமுள்ளதாகவும் உடனடியாகவும் அறிவிக்கும் விதத்தையும் தெரிந்து கொள்ளல்.
- உருவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டு வடிவில் உபயோகித்தல்
- எளிமையான, அர்த்தமுள்ள, குறுகிய, ஆக்கபூர்வமாக, தலைப்பின் தொனிப் பொருளுக்கும் பொருத்தமான எழுத்துருக்களை உபயோகிக்கத் திட்டமிடல்
- குறியீடுகளையும் தலைப்பையும் தளத்துக்குப் பொருந்தும் படி திட்டமிடல்
- சுவரொட்டியை பூரணப்பாட்டுடன் நிர்மாணித்தல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- சுவரொட்டிச் சித்திரமொன்றின் பண்புகளை மாணவர்களிடம் வினவி அவை ஏனைய சித்திரங்களில் இருந்து வேறுபடும் விதத்தினைக் கலந்துரையாடுக.
- மாதிரிச் சுவரொடடிச் சித்திரங்களை அவதானித்து அவற்றின் தளம், இடப்பரப்பு, குறியீட்டுருக்கள், எழுத்துருக்கள், வர்ணங்கள் தலைப்புக்குரிய வித்ததில் உபயோகிக்கப் பட்டிருக்கும் விதத்தினை ஆராய்ந்தறியச் சந்தர்ப்பம் வழங்குக.
- சுவரொட்டிச் சித்தரமொன்றின் மூலம் கொடுக்கவிருக்கும் செய்தி தெளிவாகவும் விரைவாகவும் பார்வையாளரைச் சென்றடைய வேண்டும் என்பதை விளக்குக.
- வெவ்வேறான சந்தர்ப்பங்களில் உருவங்களும் வர்ணங்களும் குறியீட்டு வடிவில் உபயோகப்படுத்துவதை விளக்குக.
- தொனிப் பொருளுக்குப் பொருத்தமாகத் திட்டமிடும் போது முதலில் பருமட்டான படம் வரைய வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்க.
- சுவரொட்டி நிர்மாணிக்கும்போது கேத்திர கணித உபகரணங்களைச் சரியாக உபயோகிக்க அறிவுறுத்துக.
- சுவரொட்டிச் சித்திரத்துக்குப் பொருந்தும் தலைப்பை நிர்ணயித்து, எழுத்துருக்களின் சரியான வடிவத்தையும் புரிந்து கொண்டு அவற்றை சுவரொட்டியில் உள்ளடக்க வழிகாட்டுக.
- பொருத்தமான முறைகளை உபயோகித்து திட்டமிட்ட தாளில் அவற்றைப் பிரதிசெய்யச் செய்க. (காபன் தாளை உபயோகித்து அல்லது வேறு எந்த முறையிலும்)
- உரிய நுட்ப முறைகளை உபயோகித்து சுவரொட்டி வர்ணம் (Poster colour) அல்லது வேறு பொருத்தமான வர்ண ஊடகத்தைக் கொண்டு வர்ணம் தீட்டச் செய்க.
- வர்ணம் தீட்டிய சுவரொட்டிச் சித்திரத்தின் மீது உரிய தலைப்பைப் பிரதியிட்டு வர்ணம் தீட்ட வழி காட்டுக.
- சுவரொட்டிச் சித்திரம் பூரணப்பாட்டுடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.
- செயற்பாட்டின் போது மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் உதவியையும் வழங்குக.
- பொருத்தமாக நேர முகாமைத்துவம் செய்து தேர்ச்சி மட்டம் 4.1 க்குரிய மேலதிக செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

## கணிப்பீடு

- சுவரொட்டியொன்றின் அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடுக.
- தொனிப்பொருளுக்குப் பொருத்தமான தளம், இடப்பரப்பு, குறியீட்டுருக்கள், எழுத்துருக்கள் என்பன உபயோகித்து சுவரொட்டிகளைத் திட்டமிடுக.
- பொருத்தமான வர்ண ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பன உபயோகித்துப் பூரணப்பாட்டுடன் சுவரொட்டியை நிர்மாணிக்க.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

4.1.2 “வன வளம் எங்கள் நண்பன். நாங்கள் அதனைப் பாதுகாப்போம்” எனும் தொனிப் பொருளில் சுவரொட்டியை நிர்மாணிப்போம். (04 பாடவேளைகள்)

4.1.3 “சிறந்த ஆரோக்கியத்துக்காக நற்பழக்கங்களை பேணுவோம்” என்ற தொனிப்பொருளின்கீழ் சுவரொட்டி யொன்றை நிர்மாணிப்போம். (04 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : பல்வேறு உற்பத்திக்கும் சேவைப் பிரசாரத்தின் பொருட்டும் கிராபிக் நிர்மாணிப்புக்களைச் செய்வார்.**

**செயற்பாடு 4.2.1 :** யுவதிகளின் கேசத்துக்குப் பயன்படுத்தும் புதிய எண்ணெய் (Hair oil) போத்தலுக்கான முகப்புறை ஒன்றை (Label) நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பல்வேறுபட்ட உற்பத்திகளின் முகப்புறைகள் (Label), வரைதற் தாள்கள், நிழல் பிரதிக் கடதாசிகள், பென்சில்கள், கேத்திர கணித உபரணங்கள், தூரிகைகள், வர்ண ஊடகங்கள் (நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், அக்கிரலிக்)

**கற்றற் பேறுகள் :**

- உற்பத்தித் தேவைக்கான முகப்புறைகள் கிராபிக் கலையின் முக்கிய அங்கங்கள் எனக் கூறுவார்.
- முகப்புறையில் முக்கியமாக அடங்கும் விடயங்களைக் குறிப்பிடுவார்.
- திட்டமிடும் போது கேத்திர கணித உபகரணங்களை உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.
- தளம், இடப்பரப்பு என்பனவற்றைப் புரிந்து கொண்டு உருவங்கள், எழுத்துருக்கள், வர்ணங்கள் என்பவற்றை ஒழுங்கிணைப்பார்.
- வர்ண ஊடகத்துக்குப் பொருந்தும் நுட்ப முறைகளை உபயோகித்துத் தலைப்புக்குப் பொருந்தும் முகப்புறைகளை (Label) நிர்மாணிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- பல உற்பத்திப் பொருள்களை விளம்பரம் செய்யும் போதும் விற்பனை செய்யும் போதும் முகப்புறைகளை உபயோகித்தல்
- உற்பத்திப் பொருளை நேரடியாக தொடர்பாடுவதற்குப் பொருத்தமான உருவங்களும் வர்ணங்களும்
- உற்பத்திப் பெயரை வெளிப்படுத்தப் பொருத்தமான எழுத்துருக்கள்
- போத்தலின் வடிவத்துக்கு ஏற்ற முகப்புறையை பொருத்துதல்

- முகப்புறையில் உள்ளடக்க வேண்டிய அங்கங்களை தொகுத்தல்
- அச்சுக்கு ஏற்றவாறு தெளிவு, பூரணத்துவம்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- முகப்புறை ஒன்றின் தேவையை வினவுக.
- மாதிரி முகப்புறைகளை அவதானித்து அதில் இருக்கும் அடிப்படை அங்கங்கள் உற்பத்திப் பொருளுக்கு ஏற்ற விதத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் விதத்தை ஆய்வுக்குட்படுத்துக.
- தலைப்புக்குப் பொருந்தும் உருவங்கள், எழுத்துருக்கள், வர்ணங்கள் உபயோகப்படும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.
- முகப்புறையின் வடிவம் போத்தலுக்கு பொருந்த வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.
- திட்டமிட்ட படத்தைப் பருமட்டாக வரைந்து பிரதியிடும் தாள்களை உபயோகித்து வரையும் தாளில் பிரதியிடத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குக.
- விரும்பிய ஊடகத்தைப் பயன்படுத்திப் பொருத்தமான நுட்ப முறையில் வர்ணம் தீட்டுக.
- தெளிவாகவும் பூரணப்பாட்டுடனும் முகப்புறையை ஆக்கபூர்வமாக நிர்மாணிக்க.

## கணிப்பீடு

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீட்டை நடத்துக.

- முகப்புறை ஒன்றின் தேவையும் அடிப்படைப் பண்புகளும் காணப்படுதல்
- உருவங்களையும் எழுத்துருக்களையும் பொருத்தமாக இடுதல்
- பொருத்தமான வர்ண ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் உபயோகித்தல்
- கருத்தின்வெளிப்பாடும் ஆக்கபூர்வமான தன்மையும் வெளிப்படுதல்
- தெளிவும் பூரணப்பாடும் (நிறைவு)

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

4.2.2 புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட சொக்கிளெட் வகையொன்றுக்குப் பொருத்தமான சுற்றுறையொன்றை நிர்மாணிப்போம். (02 பாடவேளைகள்)

4.2.3 பாடசாலையின் ஊடகப் பிரிவுக்குப் பொருந்தும் இலச்சினையொன்றை நிர்மாணிப்போம். (02 பாடவேளைகள்)

4.2.4 புத்தாண்டுக்கான வாழ்த்திதழ் ஒன்றை நிர்மாணிப்போம். (02 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காகக் கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : தெரிவு செய்யப்பட்ட கணினியின் மென்பொருள் ஒன்றை உபயோகித்து கிராபிக் நிர்மாணிப்பைச் செய்வார்.**

**செயற்பாடு 4.3.1 :** சிறந்த நண்பனின் பிறந்த நாளுக்கான வாழ்த்து இதழொன்றை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பல வாழ்த்து இதழ்கள், மென்பொருள்கள் அடங்கிய கணனி, அச்சு இயந்திரங்கள், அச்சுக் கடதாசிகள்

**கற்றற் பேறுகள் :**

- கணினி கிராபிக் நிர்மாணிப்புக்கு உதவும் மென்பொருள் களைக் குறிப்பிடுவார்.
- கணினி கிராபிக் நிர்மாணிப்புகள் தற்காலத்தின் முக்கியமான தொடர்பாடல் முறை என்பதை ஏற்றுக் கொள்வார்.
- கிராபிக் நிர்மாணிப்புக்குரிய கணினி மென்பொருள் பாவனை தொடர்பாகப் பெற்றிருக்கும் அறிவையும் திறனையும் பயன்படுத்துவார்.
- சித்திரக் கலை பாடத்தைக் கற்றுப் பெறும் அனுபவத்தினைக் கிராபிக் நிர்மாணிப்புகளின் கலைப் பண்பை மெருகூட்டுவதற் காக உபயோகிப்பார்.
- கிராபிக் நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, நோக்கும் முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- கணினி கிராபிக் நிர்மாணிப்புத் தொடர்பாகத் தற்காலச் சமூகம் கொண்டுள்ள முக்கியத்துவம்
- கணினி கிராபிக் நிர்மாணிப்புகளுக்கு உதவும் மென்பொருள்களை இனங்காணல் (Gimshop, inkscape, power point, photoshop, paint, illustrator)
- கணினி கிராபிக் நிர்மாணிப்பில் உபயோகப்படுத்தும் அடிப்படை அம்சங்கள் (கட்புலனான உருவங்கள், எழுத்துக்கள், வர்ணங்கள்)
- தேவையின் பொருத்தப்பாடு தொடர்பாடலுக்குரிய விடயத்தை வெளிப்படுத்தலும் அச்சிடப் பொருத்தமாகவும் இருத்தல்
- ஆக்கபூர்வமான தன்மை, கவரும் தன்மை

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பாடசாலையின் கணினி ஆய்வு கூடப் பொறுப்பாசியரியருடன் தொடர்பு கொண்டு செயற்பாட்டுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொள்க.
- கணினி பாடத்துக்குப் பொறுப்பான ஆசிரயிரின் உதவியைப் பெற்று கணனியையும் மென்பொருள்களையும் உபயோகிக்கும் விதம் பற்றிய அடிப்படையான அறிவை மாணவர்களுக்கு வழங்குக.
- பிறந்த தின வாழ்த்து இதழை நிர்மாணிக்கத் தேவையான கட்புலனான உருவங்கள், எழுத்துருக்களின் வகைகள் என்பவற்றைக் கணினியில் இருந்து பெற்றுக் கொள்ள மாணவர்களுக்கு உதவுக. (தேவை ஏற்படின் உருவங்களைக் கையால் வரைந்து ஸ்கேன் செய்து (அலகிட்டு) கணினியினூடாகப் பெற்றுக் கொள்ள உதவுக.)
- மாதிரி வாழ்த்து இதழ்களைக் கொண்டு திட்டமிடுதலினதும் மென்பொருள் நுட்பமறைகளின் உபயோகச் சிறப்பையும் எடுத்துரைக்க.
- நிர்மாணிப்புக்குதவும் மென்பொருள்களைப் பாவிக்கையில் தேவையான உதவிகளை வழங்குக.
- நிர்மாணிப்புகளில் மாற்றங்கள் செய்ய வேண்டி ஏற்படின் அதற்குரிய மென்பொருள் நுட்பங்கள், கருவிகள் என்பன தெரிந்தெடுக்க வழிகாட்டுக.
- நிர்மாணித்த வாழ்த்திதழை அச்சிடச் சந்தர்ப்பம் வழங்குக.

## கணிப்பீடு

- கணினியை உபயோகித்துச் செய்யப்படும் கிராபிக் நிர்மாணிப்புகளுக்கு உதவும் மென்பொருள் வகைகளைக் குறிப்பிடுக.
- கணினியின் துணையுடன் அச்சுத் தொழிலுக்குத் தேவையானவற்றை நிர்மாணித்துக் கொள்வதால் உண்டாகும் அனுகூலங்களைப் பட்டியல்படுத்துக.
- கணினியை உபயோகித்துப் பிறந்த நாள் வாழ்த்தி இதழ் ஒன்றை நிர்மாணிக்க.
- கிராபிக் நிர்மாணத்துக்கு உதவும் மென்பொருள்களின் நுட்ப முறைகளை உகந்த முறையில் நிர்மாணிப்புத் தொழிலில் உபயோகிக்குக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

4.3.2 கலை விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றை நிர்மாணிப்போம். (02 பாடவேளைகள்)

4.3.3 டெங்கு நோயின் கொடூரத்தை விளக்கும் விதத்திலான அறிவித்தல் ஒன்றை நிர்மாணிப்போம். (02 பாடவேளைகள்)

4.3.4 பாடசாலையில் நடைபெறும் விஞ்ஞானக் கண்காட்சியொன்றைப் பற்றி அறிவுறுத்தப்படும் சுவரொட்டியொன்றை நிர்மாணிப்போம். (02 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காகக் கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 : சிறப்புக் கட்டுரைகள், சிறுவர் கதைப் புத்தகங்கள் ஆகியவற்றின் பொருட்டு விளக்கக் காட்சிச் சித்திரங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 4.4.1 :** "தை மாதத்தின் சிறப்பு" எனும் பெயரில் பத்திரிகை ஒன்றில் வெளியாகும் சிறப்புக் கட்டுரைக்கான வர்ண விளக்கப்பட சித்திரமொன்றை நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிறப்புக் கட்டுரைகைளுக்காகப் பத்திரிகைகளில் வெளிவந்த பலவிதமான விளக்கப்படம்
- சித்திரம் வரையும் கடதாசி, பிரதி செய்யத் தேவையான கடதாசிகள், தூரிகைகள், பென்சில்கள்
- வர்ண ஊடகங்கள் (நீர் வர்ணம், பெஸ்டல், ஜெல் பேனைகள்)

**கற்றற் பேறுகள் :**

- விளக்கப்படங்கள் கிராபிக் சித்திரக்கலையின் ஓர் அங்கம் எனக் கூறுவார்.
- விளக்கப்படங்களின் சிறப்பை எடுத்துரைப்பார்.
- இலக்கிய நிர்மாணங்களுக்கு ஏற்ப விளக்கப்படங்களின் தன்மை வேறுபடும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- தலைப்புக்கு பொருந்தும் விதத்தில் பருமட்டான படத்தை வரைவார்.
- சிறப்புக் கட்டுரைக்குப் பொருந்தும் விதத்தில் இரேகைகள், வடிவங்கள், வர்ணங்கள் என்பன உபயோகிப்பார்.
- இடப்பரப்பைப் பொருத்தமாக உபயோகித்து தலைப்புக்குப் பொருந்துமாறு விளக்கக்காட்சிச் சித்திரத்தை நிர்மாணிப்பார்.
- நிர்மாணித்தவற்றை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, நோக்கும் முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- பத்திரிகைகள், சஞ்சிகைகள், கதைப்புத்தகங்கள் ஆகியவற்றில் வெளியாகும் இலக்கிய நிர்மாணிப்புக்களின் பொருளை மேலும் விளங்கிக் கொள்ளவும் நேரடியாக அதனை கிரகித்துக் கொள்ளவும் வரையப்படும் சித்திரங்கள் விளக்கப்படங்களாகின்றன.
- நிர்மாணிப்புக்களின் வகைக்கேற்ப விளக்கப்படங்களின் பாணியை மாற்றிக் கொள்ளலாம்.

- நிர்மாணிப்பின் அர்த்தத்தை விளக்கப்படம் கொண்டிருக்க வேண்டும்.
- இரேகைகள், வடிவங்கள், வர்ணங்கள் உபயோகித்து இயற்கை அல்லது தனக்கே உரிய பாணியில் ஆக்கபூர்வமாக விளக்கப்படத்தை நிர்மாணித்தல்
- பருமட்டாக வரையும் படத்தை பிரதியிடும் தாள்களை உபயோகித்து வரைய வேண்டிய தாளுக்குப் பிரதி செய்தல்.
- எழுத்துருக்கள் அடங்கும் பகுதிக்குப் பொருத்தமாக வெற்று இடப்பரப்பை விளக்கப்படத்துக்காக உபயோகித்தல்.

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- விளக்கப்படங்கள் பற்றி மாணவர் அறிந்துள்ளதை வினவுக.
- விளக்கப்படங்களின் சிறப்பியல்புகளைகட கலந்தரையாடுக.
- நிர்மாணிப்புகளின் தன்மைக்கு ஏற்ப விளக்கப்படங்களின் இயல்பு வேறுபடும் விதத்தினை விளக்குக.
- மாதிரி விளக்கப்படங்களை நோக்கச் செய்து சிறப்புக் கட்டுரைகளில் இவை உபயோகித்துள்ள விதத்தினை ஆராயச் சந்தர்ப்பமளிக்க.
- இரேகைகள், விளக்கப்படங்களின் அடிப்படைக் காரணியாக அமையும் விதத்தை விளக்குக.
- சிறப்புக் கட்டுரையின் உள்ளடக்கம், விளக்கப்படங்களின் மூலம் புலப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துக.
- எழுத்துருக்கள் அடங்கிய பகுதியைத் தவிர்த்து ஏனைய இடப்பரப்பை விளக்கப்படங்களுக்காக உபயோகிக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துக.
- தலைப்புக்கும் நிர்மாணிப்புக்கும் ஏற்றவாறு விருப்பமான பாணியில் கருப்பொருளை தீவிரமாக வெளிப்படுத்தலாம் என்பதை எடுத்துரைக்க.
- உருவங்களையும் வர்ணங்களையம் உபயோகிக்க வேண்டிய விதத்தை விளக்குக.
- எழுத்துருக்கள் அடங்கிய பகுதிக்கும் பொருத்தமாக படத்தின் பின்னணியை வர்ணம் தீட்டலாம் அல்லது விடலாம் என்பது பற்றி விளக்குக.
- பருமட்டான படம் வரைந்த பின் எழுத்துருக்கள் அடங்கிய பகுதிக்கு அதனைப் பிரதியிடும் படி அறிவுறுத்துக.
- படத்தை வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்துக. விரும்பின் வெளிப்புற இரேகைகள் வரையச் சந்தர்ப்பம் அளிக்க. இதற்காக ஜெல் பேனையொன்றை உபயோகிக்கலாம்.

## கணிப்பீடு

- விளக்கப்படங்களின் விசேட பண்புகளைக் குறிப்பிடுக.
- தொனிப்பொருளுக்குப் பொருத்தமான விதத்தில் தளத்தை முழுமையாக உபயோகித்து சித்திரத்தை வரைக.
- இரேகைகள், வடிவங்கள், வர்ணங்கள், நுட்ப முறைகள் என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்துக.
- இலக்கிய ரீதியில் பொருள் புலப்படும் வகையில் விளக்கப்படத்தை வரைக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

4.4.2 சிறுவர் கதை புத்தகமொன்றின் உள் பக்க தாளுக்காக விளக்கப் படமொன்றை வரைவோம். (04 பாடவேளைகள்)

4.4.3 உலக தொழிலாளர் தினத்துக்காக பத்திரிகையொன்றில் வெளிவரும் சிறப்புக் கட்டுரையொன்றுக்காக கறுப்பு - வெள்ளை விளக்கப்படமொன்றை வரைவோம். (03 பாடவேளைகள்)

**தேர்ச்சி 5.0 : வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : தெரிவு செய்யப்பட்ட தொனிப் பொருளுக்கேற்ப அப்புதல் நுட்ப முறையைப் பயன்படுத்திப் புடைப்புச் செதுக்கல் ஒன்றை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 5.1.1 :** புடைப்பபுச் செதுக்கலை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 7

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- 1 1/2` x 1 1/2` அளவிலான கல்நார்த்தகடு
- அப்புதலுக்குத் தேவையான உபகரணங்கள்
- சீமேந்து, மணல், நீர்
- டிமை தாள்கள்
- பொருத்தமான வர்ணங்கள்
- லக்கர், இமல்ஷன், பதாகை (பனர் பூச்சு) பூச்சுவகை
- வெவ்வேறு அளவுடைய தூரிகைகள்

**கற்றற் பேறுகள் :**

- சீமேந்தை ஊடகமாகக் கொண்டு புடைப்புச் செதுக்கல் ஒன்றை நிர்மாணிக்கப் பொருத்தமான பருமட்டான படத்தை வரைவார்.
- தளத்தை அமைப்பதிலிருந்து அதாவது ஆரம்பத்திலிருந்து சரியான படிமுறைகளுடன் நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.
- உபகரணங்களைச் சரியான முறையில் கையாள்வார்.
- முப்பரிமாணத் தன்மை, சமநிலை, சந்தம், மேற்பரப்புத் தன்மை, ஆக்கபூர்வமான தன்மை என்பன மீது அவதானம் செலுத்துவார்.
- பொருத்தமான நுட்ப முறைகளுடன் நிர்மாணிப்பை வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்துவார்.
- செயற்பாட்டில் ஒழுங்கு முறையில் ஈடுபடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- தனிச் செயற்பாட்டு முறை, ஆய்வு, கலந்துரையாடல் முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- புடைப்புச் செதுக்கலுக்கான பருமட்டான படத்தை வரையச் செய்தல்
- சீமேந்தை ஊடகமாகக் கொண்ட தளம் அமைப்பதிலிருந்து நிர்மாணிப்பின் இறுதி நிலை வரையான கோட்பாட்டு விதிகள் அடங்கிய படிமுறைகள் பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
  - அப்புதல் நுட்ப முறை

- முப்பரிமாணத் தன்மை
- சந்தம்
- ஒருங்கிணைப்பு
- சமநிலைத்தன்மை
- மேற்பரப்புத்தன்மை
- வர்ண உபயோகம்
- நுட்பத்திறனும் ஆக்கபூர்வமான தன்மையும்

• உபகரணங்களைச் சரியாக உபயோகித்தல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- புடைப்பு செதுக்கல் ஒன்றின் மாதிரி வடிவங்களை அல்லது நிழற்படங்களைக் காண்பிப்பதன் மூலம் புடைப்புச் செதுக்கல் ஒன்றின் தன்மை பற்றிய விளக்கத்தை மாணவர்களுக்களிக்க.
- அளவீடு பற்றிய அறிவுடன் டிமை கடதாசியில் புடைப்புச் செதுக்கலுக்கான பருமட்டான படத்தை வரையச் செய்க.
- வரைந்த பருமட்டான படங்களுள் மிகவும் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதனை 1 1/2 x 1 1/2 அளவுடைய கல்நார்தகட்டின் மீது பிரதியிட்டுக் கொள்ளச் செய்க.
- கல்நார் தகட்டின் மீது பிரதி செய்த உருவத்தை சீமெந்து மணல் என்பன உபயோகித்து புடைப்புச் செதுக்கலை நிர்மாணிக்கச் செய்க.
- சீமெந்துக் கலவையை நிர்மாணிப்புக்கு பொருத்தமாகத் தயாரிக்க உதவுக. இங்கே மணல், சீமெந்து என்பன 3:1 எனும் விகிதத்தில் அமைய வேண்டும் என்பதை அறிவுறுத்துக.
- நிர்மாணிப்பின் போது அதனைக் கட்டியெழுப்பும் நுட்ப முறைகள், கோட்பாடு விதிகள் என்பன பற்றிய அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் மாணவர்களுக்கு வழங்குக.
- உபகரணங்களைக் கையாளும் சரியான முறைகள் பற்றிய அறிவை மாணவர்களுக்கு வழங்குக.
- செதுக்கல் நன்றாக உலர்ந்த பின் நிர்மாணிப்பின் தலைப்புக்கும் உபயோகித்த நுட்ப முறைக்கும் பொருத்தமாக வர்ணம் தீட்ட அறிவுறுத்தல்களை வழங்குக.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- தளத்தின் அளவையும் தலைப்பையும் கவனத்திற் கொண்டு புடைப்புச் செதுக்கலுக்கான பருமட்டான படத்தை வரைக.
- வரைந்த பருமட்டான படங்களுள் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதனைத் தளத்தின் மீது பிரதியிட்டுக் கொள்க.
- சரியான விகிதத்தில் சீமெந்து மணல் என்பனவற்றைக் கலந்து படிமுறைகளுடன் செதுக்கலை நிர்மாணிக்க.
- கோட்பாட்டு விதிகள் மீதும் உபகரணங்கள் பாவிப்பதன் மீதும் கவனஞ் செலுத்துக.
- உரிய நுட்ப முறைகளைப் பின்பற்றி நிர்மாணித்ததை வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்துக.

**தேர்ச்சி 5.0 : வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : கலப்பூடகங்களைப் பயன்படுத்தித் திறந்த வெளிச் சிற்பம் ஒன்றை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 5.2.1 :** திறந்த வெளிச் சிற்பமொன்றை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 8

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பல் ஊடகம்
- சீமெந்து, இரும்பு, மணல், கல், கம்பி, பிளாஸ்டிக், மரம்
- திறந்த வெளிச் சிற்பம் ஒன்றைக் கட்டியெழுப்பத் தேவையான உபகரணங்கள்
- டிமை தாள்கள், பென்சில்கள்
- வர்ணம் இடப் பொருத்தமான பூச்சுகள், இமல்ஷன், லக்கர், அக்கிரலிக்
- கலப்பூடகங்களை உபயோகித்து நிர்மாணிக்கப்பட்ட திறந்த வெளிச் சிற்பங்கள் அடங்கிய நிழற் படங்கள், படங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கலப்பூடகங்களைப் பயன்படுத்திப் பொருத்தமான தலைப்பில் திறந்த வெளிச் சிற்பம் ஒன்றை நிர்மாணிக்க உகந்த பருமட்டான படத்தை வரைவார்.
- பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவு செய்து, கூட்டாக இணைந்து, திறந்தவெளிச் சிற்பமொன்றை உருவாக்குவார்.
- சிற்ப நுட்ப முறைகள், கோட்பாட்டு விதிகள் என்பவை மீது கவனஞ் செலுத்துவார். (ஒருங்கிணைப்பு, சமநிலைத் தன்மை, இலயம், மேற்பரப்புத் தன்மை, முப்பரிமாணத் தன்மை, கலைப்பாணிக்குரிய இயல்புகள், நுட்ப முறைகள்)
- திறந்த வெளிச் சிற்பத்தை வர்ணம் தீட்டுவார்.
- ஆக்கபூர்வமான தன்மையுடன் நிர்மாணிக்கக்கூடிய திறமையைக் கூட்டுத் தொழிற்பாட்டுக்காக வழங்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஆய்வு, அவதானிப்புக் குழுச் செயற்பாடு, செயற்றிட்ட முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- திறந்த வெளிச் சிற்பத்துக்காகப் பயன்படுத்தக்கூடிய பல் ஊடகங்களை இனங்காணுதல்
- திறந்த வெளிச் சிற்பமொன்று நிர்மாணிப்பதற்காக பாடசாலையில் பொருத்தமான இடமொன்றைத் தெரிவு செய்தல்
- பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்தல்

- இடப்பரப்பை கவனத்தில் கொண்டு கலப்பூடகங்களை பாவித்து நிர்மாணிக்கக்கூடிய சிற்பமொன்றைத் திட்டமிடல்
- சமநிலைத்தன்மை, சந்தம், முப்பரிமாண அம்சங்கள் மற்றும் ஊடகங்களுக்கு உரித்த நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்கும் திறமை
- தலைப்புக்குப் பொருத்தமான நிறங்கள் மற்றும் ஆக்கபூர்வமான தன்மை

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பல ஊடகங்களை ஒன்றிணைத்து நிர்மாணிக்கப்பட்ட திறந்தவெளிச் சிற்பங்கள் பலவற்றை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி அவைகள் பற்றி வினவுக.
- மாணவர்கள் தனித்தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சேர்ந்து பாடசாலையின் தோட்டத்துக்குப் பொருந்தும் திறந்த வெளிச் சிற்பம் ஒன்றின் படத்தை வரையச் செய்க.
- பருமட்டான படங்களுள் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து அச் சிற்பத்தை நிர்மாணிக்க மாணவர்களுக்கு உதவுக.
- சிற்பத்தை நிர்மாணிக்க உபயோகிக்கும் ஊடகத்துக்கு ஏற்ப வரையப்பட்ட பருமட்டான படம் வேறுபடக்கூடும் என்பதால் அவ்விடயம் மீதும் கவனஞ் செலுத்தி, பொருத்தமான செயன்முறைகளில் ஈடுபடும் படி மாணவர்களை வழிகாட்டுக.
- முப்பரிமாணத் தன்மை, சமனிலை, நுட்பமுறை, மேற்பரப்புத் தன்மை என்பன மீது கவனஞ் செலுத்துக.
- நிர்மாணிப்பின் சுபாவத்திற்கு ஏற்ப அது வர்ணம் தீட்ட வேண்டுமா இல்லையா என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிப் பொருத்தமான படிமுறைகளைப் பின்பற்ற சந்தர்ப்பம் வழங்குக.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- கலப்பூடகங்களை உபயோகித்து, திறந்த வெளிச் சிற்பம் ஒன்றை நிர்மாணிக்க தலைப்புக்குப் பொருந்தும் படியான பருமட்டான படத்தை வரைக.
- பாடசாலைத் தோட்டத்தில் பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்து கூட்டாக இணைந்து திறந்த வெளிச் சிற்பம் ஒன்றை நிர்மாணிக்க.
- சிற்பங்கள் நிர்மாணிக்கவிருக்கும் கோட்பாட்டு விதிகளை இந்நிர்மாணிப்புச் செயன்முறையில் உபயோகிக்குக.
- திறந்த வெளியின் சிற்பத்தைப் பூரணப்படுத்துக. வர்ணம் தீட்டுவதாயின் வர்ணம் தீட்டும் நுட்பமுறைகளை உபயோகிக்க.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : கட்புலக் கலையையும் அதன் அடிப்படை அம்சங்களையும், கோட்பாடுகளையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.1.1 : கட்புலக் கலையின் அறிமுகம்**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கலை நிர்மாணிப்பு அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி, எறிவைக் கருவி (Projector) , கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கட்புலக் கலை பரந்த பாடப்பரப்பு என விபரிப்பார்.
- கட்புலக் கலையை வகைப்படுத்துவார்.
- விஞ்ஞான, தொழில்நுட்பம் ஆகியவற்றால் கட்புலக் கலை பரம்பல் அடைந்த விதத்தை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

கட்புலக் கலையின் அறிமுகம்

- கட்புலக் கலை என்பது ‘கண்’ ‘பார்வை’ என்பன அடிப்படையாகக் கொண்ட கலை ஊடகம் எனக் கொள்ளப்படும்.
- சித்திரமும் சிற்பமும் கட்புலக் கலையின் ஆரம்பப் பிரிவென தொன்று தொட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கட்புலக் கலை நிர்மாணிப்புக்களாக சித்திரங்களும் சிற்பங்களுமே காணப்பட்டன.

- பிற்காலத்தில் கட்டடக்கலை நிர்மாணிப்பும் கட்புலக் கலையின் ஒரு கிளையாக வளர்ச்சி பெற்றது. 19ம் நூற்றாண்டில் நிழற்படக் கலையும் அதன்பின் திரைப்படங்களும் கட்புலக் கலையின் கிளைகளாயின.
- திரைப்படத் துறையில் உருவங்களைத் தவிர ஒலியும் சேர்க்கப்பட்டது. இருந்த போதிலும் திரைப்படமானது உருவங்களை மையமாகக் கொண்டு அமைந்ததால் அது இன்னமும் கட்புலக் கலையின் செல்வாக்கிற்கு உட்பட்டு விளங்குகின்றது.
- தற்காலத்தில் கட்புலக் கலை பரந்த பரப்பைக் கொண்டுள்ளது. அதில் அடங்குபவை, உதாரணம்:
  - ஓவியம் (Painting)
  - சிற்பக்கலை (Sculpture)
  - கிராபிக் வேலைப்பாடு (Graphic design)
  - அச்சுக் கலை (Print Making)
  - திரைப்படம் (Cinema)
  - புடைவை மற்றும் ஆடை உற்பத்தி (Textile and Wearable Art)
  - ஆற்றுகைக்கலை (Performance)
  - பீங்கான் உற்பத்தி (Ceremic)
  - கட்டடக்கலை (Architecture)
  - பல் ஊடகம் (Multimedia)
  - நிழற்படக்கலை (Photography)
  - தாபகக் கலை (Installations)

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- கட்புலக்கலையை அறிமுகப்படுத்தி அதன் பரந்த தன்மை பற்றிக் கலந்துரையாடுக.
- கட்புலக்கலையின் கிளைகளைப் பட்டியற்படுத்துக.
- ஓவியங்கள், சிற்பங்கள், கிராபிக் எனும் துறைகளுக்குரிய துணைக் கிளைகள் என்ன என்பதைக் கலந்துரையாடி அட்டவணை ஒன்றை அமைக்குக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக் கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : கட்புலக் கலையையும் அதன் அடிப்படை அம்சங்களையும் கொள்கைகளையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.1.2 : கட்புலக் கலையின் கொள்கைகளை இனங்காண்போம்**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கட்புலக் கலையின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுவார்.
- கட்புலக் கலை நிர்மாணிப்பொன்றின் விளக்கத்தையும், கலையின் அடிப்படை அம்சங்களின் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணத் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களை பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- கட்புலக் கலையின் அடிப்படை அம்சங்கள்

**இரேகைகள் (Line)**: அசையும் புள்ளியின் ஒழுக்கு அல்லது ஒரு பொருளின் எல்லையை குறிப்பது இரேகையாகும். இது நேர் கோடுகள், வளைகோடுகள், தடித்த கோடுகள், மெல்லிய கோடுகள் எனப் பல வகைப்படும். இரேகைகளை மாற்றியமைப்பதால் நிர்மாணிப்பொன்றின் பாவ வெளிப்பாட்டை மாற்றி அமைக்கலாம். அத்துடன் தூரநோக்கு, முப்பரிமாணத் தன்மை என்பவற்றையும் காட்டலாம். இரேகைகள், சித்திரத்தில் மட்டுமன்றி சிற்பம், கட்டடக் கலை என்பவற்றிலும் உபயோகிக்கப்படுகின்றன.

(உதாரணம்: அவுக்கண சிலையின் ஆடை மடிப்புக்கள்)

**வடிவம் (Shape)**: எல்லைக்குட்பட்ட இடப்பரப்பு வடிவம் எனக் கருதப்படுகின்றது. அதிகமாக வடிவம் இருபரிமாணத்தைக் கொண்டுள்ளது. வடிவங்கள் கேத்திர கணித வடிவங்கள், கேத்திர கணித வடிவங்கள் அல்லாதவை என வகைப்படும். கனவளவு வாதிகள் கேத்திர கணித தளவடிவங்களைத் தமது கலை நிர்மாணிப்புக்களில் பாவங்களை வெளிப்படுத்த உபயோகித்துள்ளனர்.

**வெளி (Space)**: கலை ஊடகத் தன்மைக்கேற்ப வெளி மாறுபடும். சித்திரக் கலையின் வெளி முன்னணி, பின்னணி, இடையணி என இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு நோக்கத்தை மட்டும் வெளிப்படுத்த முனையும் போது அவை வெளிப்படும் கருத்துக்கள் வேறுபட்டவையாக அமையும். இதனைத்தவிர இவ்வெளியின் நேர்வெளி எதிர் வெளி என இரு விதமாக உபயோகிக்கப்படுகின்றன. நேர்வெளி ஒரே நோக்கத்தை யும் உண்மைத் தன்மையையும் புலப்படுத்தும் அதேவேளை எதிர்வெளி அந்நோக்கத்திற்குப் புறம்பான பண்புகளை வெளிப்படுத்த முனைகின்றது.

**மேற்பரப்புத்தன்மை (Texture)**: இது இரு வகையைக் கொண்டது. அவை மாயத் தோற்றம், மெய்த் தோற்றம் எனப்படும். உதாரணமாக, பலகை, சீமெந்து, உலோகம் ஆகிய ஊடகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சிற்பத்தின் மேற்பரப்பு மெய்யான மேற்பரப்பு எனப்படும். இரு பரிமாணத்தை கொண்ட நிரமாணிப்புக்களில் அதிகமாக மாயத் தோற்றத்தைக் கொண்ட மேற்பரப்புத்தன்மை உபயோகிக்கப்படுகின்றது. உதாரணமாக, உலோகச் சாடி ஒன்றை ஓவியமாக வரைந்தபோது அச்சாடியின் மேற்பரப்பு மாயத்தோற்றத்தைக் காட்டும்.

**வடிவம் (Form)**: இது அதிகமாக முப்பரிமாணத்தன்மையைக் கொண்டது. அதன்படி நீளம், அகலம், உயரம் அல்லது ஆழம் எனும் பண்புகள் இதில் கலந்துரையாடப்படும். இரு பரிமாண நிர்மாணிப்புக்களில் ஒளிநிழல் காட்டுவதாலும் வடிவமைப்பு வெளிப்படுகின்றது. வடிவமைப்புக்கள் கேத்திர கணித வடிவங்கள், கேத்திர கணித வடிவங்களற்றவையாக காணப்படுகின்றது.

**வர்ணம் (Colour)**: ஒளியை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் கட்புலக் கலையின் முக்கிய அங்கமொன்றாகும். சித்தரிக்கப்பட்ட ஓவிய நிர்மாணிப்பின் மேற்றளப் பரப்பில் ஏற்படும் ஒளித்தெறிப்புக்கு ஏற்ப வர்ணங்கள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. நீலம், மஞ்சள், சிவப்பு எனும் வர்ணங்கள் ஓவியக் கலையின் அடிபபடை வர்ணங்கள் எனக் கருதப்படுகின்றன. அவை கலப்படைந்து உருவாகும் பச்சை, செம்மஞ்சள், ஊதா எனும் துணை வர்ணங்கள் உருவாகின்றன. இவற்றைத் தவிர குளிர் வர்ணம், வெப்ப வர்ணம் எனவும் இரு வகை உள்ளன. கட்புலக்கலைக் கலைஞர்கள் தமது கலை ஊடகத்தின் தன்மைக்கு ஏற்ப சுபுடீ அல்லது ஊஆலுமு வர்ண சக்கரங்களை உபயோகிப்பர். வர்ணம் ஒரு கலை நிர்மாணிப்பின் வெளிப்பாட்டுக்கு பெரும் செல்வாக்கை செலுத்துகின்றன. (உ-ம்: சிவப்பு வர்ணம் எதிர்ப்பு, கோபம், வன்முறை ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்த அதிகளவில் உபயோகிக்கப்படுகின்றன.)

கவனத்திற் கொள்க: (மேற்படி கூறப்பட்ட விடயங்கள் மட்டும் கட்புல கலை அடிப்படை அம்சங்களை கொண்டிருக்காது.)

## கணிப்பீடு

- கட்புலக் கலையின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுக.
- வர்ணங்கள் எவ்வாறு கலை நிர்மாணிப்பில் செல்வாக்கு அல்லது பங்களிப்பு செய்கின்றது என்பது பற்றி உதாரணங்களுடன் கலந்துரையாடுக.
- இரேகைகள் சித்திரக் கலைஞனுக்கு எவ்வாறு பயன்படுகின்றது என்பது பற்றி விளக்குக.
- பல வகையுடைய வடிவங்கள் (Shapes) கலை நிர்மாணிப்பொன்றின் பொருளை விளக்க எவ்வாறு துணைபுரிகின்றன என்று உதாரணங்களுடன் கலந்துரையாடுக.
- மேற்பரப்புத் தன்மையும் வடிவமைப்பையும் விளக்கிக் கட்புலக் கலைஞன் ஒருவன் அவ்வம்சங்களை உபயோகிக்கும் விதத்தையும் விளக்குக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அடிப்படை அம்சங்களையும் அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** **கட்புலனாகும் கலையும் அதன் அடிப்படை அம்சங்களையும் கொள்கைகளையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.1.3 :** **கட்புலக் கலைக் கொள்கைகளைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கட்புலக் கலைக் கோட்பாடுகளைக் குறிப்பிடுவார்.
- கட்புலக் கலை நிர்மாணிப்பொன்றில் காணப்படும் கலைக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- கட்புலக் கலைக் கொள்கைகள்

**சமநிலை (Balance)**: கலை நிர்மாணிப்பொன்றில் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் ஒழுங்கு முறையில் நிலையான சமனிலைத் தன்மையுடன் கட்டியெழுப்பப்படும்.

**இலயம் (Rhythm)**: கோலவடிவில் கட்புலனாகும் விடயங்களை ஒழுங்கு படுத்துவதால் சந்தம் உருவாகும். உதாரணமாகத் தாமரை இதழ்களை மீண்டும் மீண்டும் வரைவதால் சந்தம் உள்ள சித்திரம் உருவாக்கப்படும்.

**ஒருமைப்பாடு (Unity)**: கலை நிர்மாணிப்பொன்றில் உள்ள கட்புல வெளிப்பாடுகள் ஒட்டு மொத்தமாக ஒன்றித்து செயற்படல் ஒருமைப்பாடு ஆகும்.

**ஒத்திசைவு (Harmony)**: கலை நிர்மாணிப்பொன்றிலுள்ள கட்புல வெளிப்பாடுகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துதல் ஒத்திசைவாகும்.

**தூர தரிசனம் (Perspective)**: இரு பரிமாண ஊடகத்தில் அண்மை சேய்மையை காட்டும் ஒரு முறையாகும். இரேகை தூர நோக்கு, இடப்பரப்பு தூர நோக்கு, வர்ணம் தூர நோக்கு என இது வகைப்படும்.

**பிரமாணம் (Proporation)**: பிரமாணம் என்பது ஏதேனும் ஒரு பொருளுக்குரிய கணித ரீதியான விகிதமாகும். ஒரு பொருள் கட்புலனாகும் விதத்தில் சரியாக அமைக்க பரிமாணம் உதவும். அத்துடன் இரு பொருள்களுக்கிடையில் உள்ள வேறுபாட்டை காண்பிக்கவும் பரிமாணம் உதவுகின்றது.

**முப்பரிமாணத்தன்மை (3 dimentional feature)**: பொதுவாக பொருட்களின் தன்மை இரு பரிமாண ஊடகத்திலேயே காட்டப்படுகின்றன. ஒளி நிழல் காட்டல் வர்ண பேதங்களின் உபயோகம், கியரோஸ் குரோ (Chaiaroscuro) முறை என்பன முப்பரிமமாணத் தன்மையை வெளிப்படுத்த உதவுகின்றன.

## கணிப்பீடு

- கட்புலக்கலைக் கொள்கைகளைக் குறிப்பிடுக.
- கலை நிர்மாணிப்பொன்றில் கருத்து வெளிப்படுத்தக் கட்புலக் கலைக் கொள்கைகள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றன என்பதைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக் கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** **கட்புலனாகும் கலையும் அதன் அடிப்படை அம்சங்களையும் கொள்கைகளையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.1.4 :** **கட்புலக் கலையின் பல கலைப்பாணிகளையும் கருத்துக்களையும் இனங்காண்போம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கட்புலக் கலையின் கலைப்பாணிகளின் வகைகள் பலவற்றைக் குறிப்பிடுவார்.
- கலைப்பாணிகளுக்கு இடையில் உள்ள வேறுபாடுகளைக் கட்புலக் கலையின் அடிப்படை அம்சங்களையும் கொள்கைகளையும் கொண்டு விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**(i) அக்கடமிக் யதார்த்தவாதம் (Acadamic Realism)**: பிரித்தானிய "ரோயல் அக்கடமி" ஐ அடிப்படையாகக் கொண்டு இது உருவாகியது. அழகியல் ரீதியில் மனித உடலை வரைதல், குறிப்பிட்ட வர்ணத் தொகுதியை உபயோகித்து நுணுக்கமான வர்ணங்களின் சராசரி நிறத்தை உருவாக்குதல், தூர தரிசனக் கோட்பாடு விதியை நிறம்பட உபயோகித்தல் என்பன முக்கிய குறிக்கோள்களுள் உன்னதமானவை எனக் குறிப்படலாம்.

**(ii) யதார்த்தவாதம் (Realism)**: நடைமுறையிலுள்ள ஓர் விடயத்தை அதே விதத்தில் உள்ளதை உள்ளவாறு புலப்படுத்தும் கலைப் பாணியாகும். 19ம் நூற்றாண்டளவில் இது மிகவும் பிரதிசித்தி பெற்று விளங்கியது.

**(iii) மனப்பதிவுவாதம் (Impressionism)**: வேகமான தூரிகை தடங்களாலும் தூய வர்ணத்தொகுப்பின் ஊடாகவும் உரிய நிகழ்வுகளை, மீள் நிர்மாணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வரையப்படும் ஒரு கலை வடிவமாகும். பிரான்ஸ் நாட்டின் நகர்ப்புற வாழ்க்கையையும் இல்லற வாழ்க்கையையும் அவதானித்தல் இக்கலை வடிவத்தில் ஈடுபட்ட கலைஞர்களின் முக்கிய ஆய்வுகளாக அமைந்தன.

**(iv) கனவடிவவாதம் (Cubism)**: பிராக், பிக்காசோ என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கலைப் பாணியாகும். பலவித கோணங்களில் பொருட்களை அவதானித்து அவற்றை கனவடிவ மாதிரியில் வெளிப்படுத்தும் போக்கு இதுவானது.

**(v) மீயதார்த்தவாதம் (Surrealism)**: ஞானத்திற்கும் தர்க்கத்திற்கும் அப்பாற்பட்ட கற்பனையின் முன்னுரிமை அடிப்படையில் தோற்றம் பெறும் ஓர் கலைப்போக்கு ஆகும். யதார்த்தமும் கனவும் (Fantasy) மிகைப்படுத்தி வெளிப்படும் கலை ஆக்கம் இதுவாகும்.

**(vi) மனோரதியவாதம் (Romantism)**: தனிநபர்களின் அனுபவங்களை வெளிப்படுத்துவதையே முக்கியமாகக் கொண்டது. உணர்வு, பிறவியில் பெற்ற அறிவு வெளிப்பாடு, மனித நேயம், பழைமை வாய்ந்த உன்னதமான கருத்துக்களின் அழகை, வலிதத்தை நடைமுறை மனித நோக்குகளுடன் இணைத்தல், இயற்கை தொடர்பாக அதிக பற்றை வெளிப்படுத்துதல் போன்ற விடயங்கள் மனோரதிய வாத நோக்குகளுள் அடங்குகின்றன. அறிவ, பலன் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட உணர்வுகளும் உணர் திறன்களும் உச்ச நிலையை அடைந்திருப்பதைக் காணக் கூடியதாகவும் உள்ளன.

**(vii) கீழைத்தேய தவாதம் (Orientalism)**: கீழைத்தேய வாதம் என்பது ஓவியம வரையும் கலைப்பணியல்ல. அதனை மேற்கத்தேய எழுத்தாளர்கள், கவிஞர்கள், தத்துவஞானிகள், ஓவியக் கலைஞர்கள் அனைவராலும் கீழைத்தேயம் தொடர்பாக உருவாக்கிய ஒரு கருத்து வெளிப்பாடாகும். இவற்றுள் கீழைத்தேய நாடுகளின் வியப்பு, அருமை, புரிவதற்கரிய தன்மைகள் என்பவற்றை மேற்கத்தேயர் பாராட்டுக்குட்படுத்தினர்.

(கவனத்திற் கொள்க: தெரிவு செய்யப்பட்ட சில கலைப்பாணிகள் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.)

## கணிப்பீடு

- சித்திரக் கலை வரலாற்றில் காணப்படும் கலைப்போக்குகள் 4 ஐக் குறிப்பிடுக.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள கலைப்போக்குகள் நான்கின் அடிப்படை இயல்புகளை ஒப்பிட்டு அட்டவணைப்படுத்துக.
- மனோரதிய வாதத்தினதும் கீழைத்தேய வாதத்தினதும் அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** **தெரிவு செய்யப்பட்ட உண்ணாட்டு ஓவியக் கலைஞர் களின் கலை நிர்மாணங்களை நயந்துரைப்பார்.**

**செயற்பாடு 6.2.1 :** **இலங்கைக் கலைச்சங்கத்தின் கலைஞர்கள்**

- **ஏ.சீ.ஜீ.எஸ். அமரசேகர**
- **டேவிட் பெயின்டர்**
- **ஜே.டி.ஏ. பெரேரா**

**பாடவேளைகள் :** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி (Projector) , கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- இலங்கைக் கலைச் சங்கம் உருவாக அமைந்த பின்னணியை விளக்குவார்.
- இலங்கைக் கலைச் சங்கத்திற்குரிய கலைஞர்களை இனங்கண்டு அவர்களது நிர்மாணங்களைக் குறிப்பிடுவார்.
- இலங்கைக் கலைஞர்கள் பின்பற்றிய கலைப்பாரம்பரிய நுட்ப முறைகளையும் கலைப்பாணியையும் விளக்குவார்.
- இலங்கைக் கலைச் சங்கத்து ஓவியங்களின் கருப்பொருளை ஆராய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- இலங்கைக் கலைச்சங்கம் 1891இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை கலைச் சம்பிரதாயங்களை பேணும் கல்வி நிலையமாக மாற்றமடையச் செய்வதே இவ் அமைப்பின் நோக்கமாக இருந்தது. கலை நிர்மாணங்களில் யதார்த்தவாத பண்புகளில் கவனம் செலுத்துவதே இச்சங்கத்தின் நோக்கமாக இருந்தது. இச்சங்கம் பிரித்தானிய அனுசரணையைக் கொண்டிருந்தது.

**ஏ.சி.ஜி.எஸ். அமரசேகர (1883 - 1983)**

- இவர் எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் ஆகிய மூன்றையும் ஊடகமாக உபயோகித்த ஓர் சித்திரக் கலைஞர் ஆவார்.
- இவரது நிர்மாணிப்புக்கள் யதார்த்தவாதம், மனோரதியவாதம் (ரொமான்ரிக் வாதம்), பூர்வதேச சிறப்புவாதம் (Orientalism) ஆகிய செல்வாக்குகளைக் கொண்டுள்ளன.
- பிரதிமை ஓவியங்கள் வரைவதில் பிரசித்தி பெற்றிருந்த போதிலும் நீர்வர்ணங்களை ஊடகமாகக் கொண்டு நிலவுருக் காட்சிகளை அதிகம் வரைந்துள்ளார்.
- யதார்த்த வாதத்திற்கும் இயற்கைக்கும் ஏற்ப ஒளி நிழல் காட்டல், அளவுப் பரிமாணங்களை உபயோகித்தல், தூர நோக்கு வெளிப்படுத்தல் ஆகிய பண்புகள் அவரது ஓவியங்களில் இடம் பெற்றுள்ளது.

**1. பேயோட்டியின் மகள்:**

- வியப்பு எனும் இரசனை உண்டாகும் விதத்தில் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. தீப் பிளம்பைக் கண்டு பீதி கொண்டுள்ள ஓர் இளம் பெண் இதன் கருப்பொருளாகும்.
- ஒளி நிழல் காட்டி வரையப்பட்டுள்ளமை இதன் சிறப்பாகும்.
- பெண்ணின் பின்னால் உள்ள அவளது பாரிய நிழல், காட்சியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. சுவரில் உள்ள முகமூடி, நிலத்தில் விழுந்துள்ள உடுக்கை, பூட்டப்பட்ட கதவு என்பன ஓவியத்தின் கருப்பொருளை அடையாளப்படுத்துகின்றன.

**தச்சனின் வீடு/ தொழில் இன்மை:**

- சமூகத்தின் ஏழ்மை நிலையை வெளிப்படுத்தும் ஓர் ஆக்கமாக விளங்குகின்றது. அமரசேகர வரைந்த ஓவியங்களில் வேறுபட்ட ஓவியமாக இது அமைநதுள்ளது.
- இல்லத் தலைவனாக அமர்ந்திருக்கும் ஆணின் உருவம் கீழே காணப்படும் ஆயுதப் பொதியை ஏக்கத்துடன் நோக்கிய வண்ணம் இருக்கின்றது. காலடியில் இருக்கும் கறுப்புப் பூனை, கட்டிலில் உள்ள நோய்வாய்ப்பட்ட பிள்ளை, மேசை மீது கவிழ்க்கப்பட்டுள்ள சட்டி பானைகள் என்பன ஓவியத்தின் முக்கிய குறியீடுகளாகின்றன.
- ஒளிநிழல் செம்மையான முறையில் காட்டப்பட்டுள்ளது. இக்காட்சி வெளிப்படுத்தப்படும் அறை இருண்ட சூழ்நிலையைப் புலப்படுத்தி அங்கு வாழ்வோரின் வறுமை நிலையை மேலும் மிகைப்படுத்துகின்றது.

**டேவிட் பெயின்டர் (1900 - 1975):**

- இங்கிலாந்து றோயல் அக்கடமியில் பயிற்சி பெற்ற இவர் யதர்த்தவாத பண்புகளுக்கேற்ப ஓவியங்களை வரைந்தார்.
- உயிரோவியங்களை வரைவதில் பிரசித்தி பெற்ற இவர் நேருவின் பிரதிமை ஓவியத்தையும் வரைந்தார்.

- அவரால் கண்டி திரித்துவக் கல்லூரியில் வரையப்பட்ட கிறிஸ்தவ ஓவியங்கள் சுதேசப்பண்புகளை கொண்டிருந்தமை அதன் சிறப்பம்சமாகும்.
- கிறிஸ்தவ கருப்பொருட்களை வெளிப்படுத்த மனித உருவங்களுடன் இயற்கைச் சூழலையும் பொருத்தப்பாட்டுடன் இணைத்துள்ளார். மனித உயிர் ஓவியங்கள் சுதேச பண்புகளை வெளிப்படுத்துவதுடன் பிரித்தானிய அக்கடமிக் சம்பிரதாயத்திற்கு உட்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**1. வெற்றியுடன் ஜெருசலம் நகரத்துக்குள் நுழைதல்**

- இக்கருப்பொருள் கிறிஸ்தவ மதத்துடன் தொடர்புடையது.
- கபில வர்ணமே கூடியளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. உயரமான மெல்லிய வடிவத்தை கொண்ட உருவங்கள் உள்ளன.
- குன்றுகளைக் கொண்ட காட்சியொன்று பின்னணியில் அமைந்துள்ளது.
- வரையப்பட்ட மனித உருவங்களின் உடற் கட்டமைப்புக்களும் அளவுப்பரிமாணங்களும் சரியாக காட்டப்பட்டுள்ளன. தூரநோக்கும், ஒளி நிழலும் புலப்படுகின்றது.

**2. நல்ல சமாரியன்**

- திரித்துவ தேவ ஆராதனை மண்டபத்தில் இவ் ஓவியத்தைக் காணலாம். இதுவும் கிறிஸ்தவ மதத்தின் கருப்பொருளாக அமைகின்றது.
- சுதேச மனித உருவங்களையம் சூழலையும் பிரதிபலிக்கின்றன.
- நோய்வாய்ப்புற்ற ஒருவருக்கு உதவி செய்யும் ஒருவர் முன்னணியில் காட்டப்பட்டள்ளது. பின்னணி இருண்ட வர்ணத்தால் காட்டப்பட்டுள்ளது.

**ஜே.டி.ஏ. பெரேரா (1897 - 1967)**

- மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் பாட்லர் என்பவரிடம் ஓவியம் கற்றார்.
- பிரதிமை ஓவியங்கள் வரைவதில் இவர் திறமை காட்டினார்.
- இவரது ஒவியங்கள் யதார்த்தவாத போக்குச் சிந்தனையைக் கொண்டிருந்தன.
- அரசாங்க நுண்கலைக் கல்லூரியின் முதல்வராக இருந்து அதன் வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றினார்.

**1. நடனமாது**

- நடன மங்கை ஒருவரினது இடுப்புக்கு மேற்பட்ட பகுதி ஓவியமாக வரையப்பட்டுள்ளது.
- அவள் நடனத்துக்குத் தயாராக இருக்கின்ற போதிலும முகம் சோகத்தை வெளிப்படுத்துவதுடன் ஆழ்ந்த சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது. உடலின் ஒரு பகுதி இருண்ட நிறத்தால் ஒளி நிழல் காட்டப்பட்டுள்ளது. அதனால் அவ்வுருவின் உணர்வுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
- பின்னணியில் தடித்த மடிப்புள்ள இருண்ட திரை காணப்படுகின்றது.
- நடனத்தை விட நடன மங்கையின் உள்ளார்ந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதே இதன் நோக்கமாக உள்ளது.

**2. பிரதிமை ஓவியம் (சீதா டி சேரம்)**

- கதிரையில் இருந்து புத்தகம் வாசிக்கும் ஒரு பெண்ணின் உருவம் காட்டப்பட்டுள்ளது.
- பச்சை நிறச் சேலை அணிந்துள்ளதுடன் கூர்மையாக புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பதாக வரையப்பட்டுள்ளது.
- இவ் ஓவியத்தில் ஓவியர் தூரிகையை மிகவும் வேகமாக பயன்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.
- ஒரு புத்தகம் வாசிக்கும் ஆவலையும் அவளது இருக்கை முறையையும் அவதானித்து சித்திரக் கலைஞரால் இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- இலங்கைக் கலைச் சங்கம் உருவாகக் காரணமாக அமைந்த பின்னணியை விளக்கி முன்னோடிக் கலைஞர்களைக் குறிப்பிடுக.
- ஏ.சி.ஜி.எஸ். அமரசேகரவின் கலை நிர்மாணங்களை மதிப்பீடு செய்க.
- டேவிட் பெயின்டர் அவர்களது கலை நிர்மாணங்களை மதிப்பீடு செய்க.
- ஜே.டீ.ஏ. பெரேராவின் கலை நிர்மாணிப்புகளை மதிப்பீடு செய்க.
- இலங்கைக்கலை சங்க ஓவியர்களின் நிர்மாணிப்புகளில் காணப்படும் பொதுப் பண்புகளை கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** **தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டுச் சித்திரக் கலைஞர் களின் கலை நிர்மாணங்களை நயந்துரைப்பார்.**

**செயற்பாடு 6.2.2 :** **20ஆம் நூற்றாண்டின் சமயம் சார்ந்த இலங்கை ஓவியக் கலைஞர்கள்**
- **எம். சார்ளிஸ்**
- **சோளியஸ் மெண்டிஸ்**
- **சோமபந்து வித்தியாபதி**

**பாடவேளைகள் :** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- 20ம் நூற்றாண்டின் சமயம் சார்ந்த இலங்கை ஓவியக் கலைஞர்களைக் குறிப்பிடுவர்.
- இலங்கை பௌத்த, இந்து கலை நிர்மாணிப்புக்களில் ஈடுபட்ட கலைஞர்களின் நிர்மாணிப்புகளை மதிப்பீடு செய்வார்.
- இலங்கையின் மதம் சார்ந்து தொழிற்பட்ட கலைஞர்கள் கிழக்கு மேற்கு நாடுகளின் கலை மரபுகளை தழுவியுள்ள விதத்தை நுணுகி ஆராய்வார்.
- 20ம் நூற்றாண்டின் பௌத்த இந்து சித்திரங்களில் திருப்பு முனைகளை விளக்கிக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலைநிரமாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:
### முன்னோடிக் கலைஞர்கள்

**எம். சார்ளிஸ் (1880 - 1955)**

- 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் இலங்கையில் வாழ்ந்த மிகப் புகழ்பெற்ற விகாரை ஓவியக் கலைஞராவர். றிச்சாட் ஹென்றிகஸ் என்பவரிடம் ஐரோப்பிய பாணியிலான ஓவியங்களை வரையப் பயிற்சி பெற்றார். ஓவியங்களைப் போலவே, சிற்ப நிர்மாணிப்பிலும் சிறப்புப் பெற்றார்.
- ஐரோப்பிய இயற்கை வாதப் பண்புகள் இவரது ஓவியங்களில் இடம் பெற்றுள்ளது. ஒளி நிழல் காட்டல், முப்பரிமாணப் பண்பு, தூரநோக்கு ஆகிய பண்புகள் இவரது ஓவியங்களில் இடம் பெற்றுள்ளன.
- ஐரோப்பிய பாணியைத் தழுவியபோதும் ஓவியங்களில் கட்டடங்கள் ஆடையணிகள் இந்தியப் பாணியைத் தழுவியுள்ளன.
- எம். சார்ளிஸ் அவர்களின் சட்டகமிடப்பட்ட பௌத்த ஓவியப் பிரதிகள் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் பல வீடுகளில் அலங்காரப் பொருளாகத் தொங்கவிடப்பட்டன.
- மாலிகாகந்த வித்யோதய பிரிவேனாவின் பௌத்த மனைகள் பொத்துபிட்டிய பூஜாராமய, கொழும்பு அசோகாராமய ஆகிய இடங்களில் சார்ளிஸ் அவர்களின் நிர்மாணிப்புகளைக் காணலாம்.

**i) மகாமாயா தேவியின் கனவு**

- நால்வகை தெய்வங்கள் புடைசூழ மகா மாயாதேவி காட்சியளிக்கிறார்.
- வெண்மை நிற ஆடையுடன் காட்சியளிக்கும் மகாமாயா தேவி வலப் பக்கமாக சாய்ந்து சயனித்திருக்கிறார். அவளுக்கு முன்னால் தாமரையொன்றை தும்பிக்கையால் ஏந்திய யானைக்குட்டியொன்று உள்ளது.
- தெய்வ உருவங்களும் யானைக் குட்டியும் நிழல் வடிவில் வெள்ளை இரேகைகளால் காண்பிக்கப்பட்டுள்ளது.
- தூர தரிசனம், முப்பரிமாண இயல்பு, ஒளி நிழல் ஆகிய இயல்புகள் காணப்படுகின்றன.

**ii) திருமணக் காட்சி:**

- சித்தார்த்த குமாரனும் யசோதரா தேவியும் திருமண வைபவத்தை இது குறிக்கிறது.
- அலங்கார ஆடையணிகளைக் கொண்ட அரண்மனை உருவங்களையுடைய ஓவியமாகும்.
- ஐரோப்பிய முறைகளைப் பின்பற்றியுள்ளதுடன் ஆடையணிகள் என்பன இந்தியத்தேச பண்பாட்டு இயல்புகளை வெளிப்படுத்துகின்றன.
- சித்தாத்தரினதும் யசோதரா தேவியினதும் உருவங்களும் அவர்களின் கைகளுக்கு நீர் வார்க்கும் பிராமணரின் உருவமும் வெளிப்படுவதை நோக்காகக் கொண்டுள்ளது.

**சோளியஸ் மெண்டிஸ் (1897 - 1975):**

- 20ம் நூற்றாண்டின் இலங்கை பௌத்த ஓவியக்கலையில் சுதேச மரபினை வெளிப்படுத்திய முன்னோடி ஓவியக் கலைஞராவார். ஆரம்பத்தில் ஓவியர் சார்ளிஸ் ஐரோப்பிய இயற்கை வாதப் பண்புகளை தனது ஓவியங்களில் வெளிப்படுத்தியிருந்த போதும் பின் தனது பாணியில் ஓவியங்களை வரைந்தார்.

- களனிப் புதிய விகாரையில் வரையப்பட்ட அவரது சுவர் ஓவியங்கள் உன்னத படைப்புக்களாக காணப்படுகின்றன.
- அஜந்தா, பார்க், திவங்க சிலைமனை ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்களையும் நந்தலால் போஸ் அவர்களது ஓவியங்களையும் கற்றறிந்த போதிலும் இவர் தனக்கேயுரிய பாணியில் புதிய களனி விகாரை ஓவியங்களை வரைந்தார்.
- இரேகைகளை கையாண்ட முறை, நெகிழும் தன்மையைக் கொண்ட உடலமைப்பு, கபில நிறத்தைக் கொண்ட வர்ணப்பயன்பாடு என்பன இவரது ஓவியங்களில் புலப்படுகின்றன.
- ஓவியனாக இருக்கும் இவர் சிறந்த சிற்பக் கலைஞனுமாவார்.

### i) புத்த பெருமான் மகியங்கனைக்கு வருகை தரல்

- களனி விகாரையில் காணப்படும் ஓவியங்களில் இது அதிக எண்ணிக்கையை கொண்ட மனித உருவங்களால் ஆக்கப்பட்டது.
- பிரதான உருவம் முக்கியத்துவம் பெறும் பொருட்டு பிரகாசம் பயன்படுத்தப் பட்டுள்ளதுடன் சூழ உள்ள உருவங்கள் இருள் கவிழ்ந்தும் காணப்படுகின்றது.
- முகபாவனை, உடல்நிலைகள் திறம்பட காட்டப்பட்டுள்ளன.
- இதில் பிரதான உருவம் புத்தர் பெருமான் ஆவதுடன் அவரைச் சூழ தீப்பிழம்பு காணப்படுகின்றது.

### ii) புனித பாதங்களைப் பதித்தல்

- சோளியஸ் மென்டிஸ் அவர்கள் தனது ஓவியங்களுள் இலங்கையும் அதனுடன் தொடர்புடைய புத்த சரிதைகளின் நிகழ்வுகளுக்கும முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அவைகளுள் இதுவும் ஒன்றாகும்.
- பெருமளவிலான மக்களுக்கு மத்தியில் புத்த பெருமான் தனது புனித பாதத்தை சிவனொளி பாத மலை உச்சியின் மீது பதிக்கும் நிகழவு காண்பிக்கப்பட்டுள்ளது.
- பிரதான உருவம் பிரகாசமாக உள்ளதுடன் ஏனைய உருவங்கள் சற்று மங்கலாக உள்ளன.
- மனித உருவங்கள் நெகிழுந் தன்மையுடையவை. ஆடையணிகள் என்பன நெகிழ்வான மடிப்புகளும் அலங்கார வேலைப்பாடுகளும் கொண்டனவாக காணப்படுகின்றன.

### சோமபந்து வித்தியாபதி (1923 - 2006)

- ஓவியம் பயின்ற இவர் சாந்திநிகேதன கலைக் கல்லூரியில் இந்திய ஓவியரான நந்தலால் போஸ் என்பவரிடம் ஓவியக் கலை தொடர்பான அறிவைப் பெற்றார்.
- சுதேச கலை மரபை பேணிப் பாதுகாத்த ஒர் கலைஞராகவும் விளங்குகின்றார். நடன கலையை பின்னணியாக கொண்ட கலைக் குடும்பத்திலிருந்து வந்த இவர் மேடை அலங்காரங்கள், முக ஒப்பனைகள், ஆடை அணிகள் என்பவற்றை நிர்மாணிப்பதில் ஈடுபட்டிருந்தார்.
- இரேகைகளால் உருவங்களை வரைதல், நேர்த்தியான மனித உடல்நிலைகள், பரந்த பிரகாசமான வர்ணப் பயன்பாடு என்பன இவரது ஆக்கங்களில் வெளிப்படுகின்றன.

### i) திருமணக்காட்சி

- இளவரசன் சித்தார்த்தரினதும் யசோதரா தேவியினதும் திருமணம் இதன் கருப்பொருளாக அமைகிறது. பிரதான உருக்கள் இரண்டும் வெண்மை நிற ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் அது அச்சரிதைகளின் தூய்மையை அடையாளப்படுத்துவதாக உள்ளது.
- மையத்தைக் கொண்டு இரேகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சுற்றியுள்ள உருவங்கள் வெப்ப வர்ணங்களைக் கொண்டுள்ளன. அவர்கள் புதுமணத் தம்பதியினரை வாழ்த்துவதாக உள்ளனர்.
- இளவரசன் சித்தார்த்தர் யசோதரா தேவிக்கு மோதிரம் அணிவிப்பதை இவ்வோவியம் குறிக்கின்றது.

### ii) இயமனை தோற்கடித்தல்

- பௌத்த கலையின் பிரபல்யமான தொனிப்பொருளைக் கொண்டிருக்கும் போதிலும் புதிய பாணியில் இதனை வடிவமைத்துள்ளார்.
- வெற்றிவாகையுடன் காணப்படும் புத்தபெருமானின் உடலில் இந்து வெளிப்படும் ஒளிக்கீற்றுகள் சாதாரண அளவை மீறி அலைவடிவில் நீளமாக வரையப்பட்டுள்ளன.
- புத்தரின் பேரொளிக்குக் கட்டுப்பட்ட இயமதூதர்கள் தோல்வியைத் தழுவி வேதனை ததும்பும் உடல் நிலையுடன் காணப்படுவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு :

- எம். சார்ளில் அவர்களுடைய ஓவியங்களை மதிப்பீடு செய்க.
- சோலியஸ் மென்டிஸ் அவர்களுடைய களனி விகாரை ஓவியங்களில் செல்வாக்கு செலுத்தியுள்ள மரபுகள், தொனிப்பொருளின் சிறப்பியல்புகள், கலைப்பாணி, நுட்பமுறைகள் பற்றிக் கலந்துரையாடுக.
- பெல்லன் வில விகாரை ஓவியங்கள் பற்றி மதிப்பீடு செய்க.
- 20ம் நூற்றாண்டின் இலங்கையின் சமயம் சார்ந்த ஓவியங்களில் காணப்படும் மேலைத் தேய, கீழைத் தேய கலை பண்புகளை ஒப்பிட்டு கூறுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** **தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு சித்திரக் கலைஞர் களின் கலை நிர்மாணங்களை நயந்துரைப்பார்.**

**செயற்பாடு 6.2.3 :** **நாராயணசுவாமி அவர்களின் கலை நிர்மாணங்களை மதிப்பிடுவோம்.**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடு :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிகைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையின் சித்திரக் கலை வளர்ச்சிக்கு அரும்பணி யாற்றிய தமிழ் கலைஞர்களுடைய பங்களிப்பை விபரித்துக் கூறுவார்.
- நாராயணசுவாமியின் ஓவியங்களைக் குறிப்பிடுவார்.
- நாராயணசுவாமியின் ஓவியங்களிலுள்ள கலையம்சங்களை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலைநிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **நாராயண சுவாமி**
  - யாழ்ப்பாண கோவில் ஓவியக்கலையின் முன்னோடியாகத் தொழிற்பட்ட நாராயண சுவாமி தென்னிந்தியக் கலைஞரொருவர் எனவும் கருதப்படுகிறார்.

- அவரது வாழ்க்கை பற்றிய தகவல்கள் கிடைக்காத போதிலும் அவர்களின் ஓவியங்களை வல்வெட்டித் துறை முத்துமாரியம்மன் கோயிலில் காணலாம். அவ்வோவியங்கள் 1966, 1967ம் காலப்பகுதிக்குரியவை.
- இவ்வோவியங்கள் ரெம்பரா ஓவிய வகைக்குரியவை.
- இவர் ஓவியக் கலைஞர் மட்டுமன்றி கோயில் இராஜகோபுர நிர்மாணிப்புக்களையும் செய்ததாகக் கருதப்படுகின்றது.
- அவரால் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயிலில் வரையப்பட்ட ஓவியங்களுள் விநாயகர், முருகன் தொடர்பான புராணக் கதைக் காட்சிகள் காணப்படுகின்றன. அத்துடன் இக்கோயிலுடன் தொடர்புடைய வரலாறும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளது.

**i) சூர சங்காரம்**

- மேற்கத்தேய கலை மரபைத் தழுவி வர்ணங்கள் உபயோகிக்கப்பட்டு முப்பரிமாணத் தன்மை, ஆழம் எனும் பண்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. கீழைத் தேய கலை மரபுக்கமைய கதை கூறும் பண்புடன் இவ்வோவியம் தீட்டப்பட்டுள்ளதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.
- இரேகைகளை விட வர்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முப்பரிமாணத் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தூரநோக்கு பண்புகளுடன் ஆழத்தைக் காட்டவும் முனைந்துள்ளார்.

**ii) அசுராசுர சங்காரம்**

- விநாயகர் பாம்பு வடிவில் உள்ள அசுரரை அழிக்கும் காட்சியே இதுவாகும். இங்கு விநாயகரின் செயல். அதன் பின்னணி என்பன சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளது.
- தென்னிந்திய ஓவிய கலைஞரான இராஜா ரவிவர்மாவின் சாயலைக் கொண்டுள்ளது. கற்பனை வடிவில் அமைந்த உருவங்களும் காட்சிகளும் முப்பரிமாண, தூர நோக்கு இயல்புகளை காட்டுவனவாக உள்ளன.

## கணிப்பீடு :

- நாராயண சுவாமி அவர்களது ஓவியங்களில் செல்வாக்குச் செலுத்திய இந்து புராண, இதிகாச கதைகளை விளக்கி அதில் உள்ள கருப்பொருட்களைக் கட்புலனாகும் வண்ணம் வெளிப்படுத்திய விதத்தினைக் கூறுக.
- நாராயண சுவாமி அவர்களது ஓவியங்களில் காணப்பட்ட ஓவியப்பாணி, நுட்ப முறைகள் அவற்றின் வெளிப்பாட்டு தன்மை பற்றிக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங் கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 :** **இந்திய கலைஞர்களுடைய கலை நிர்மாணங்களை கற்றறிவார்.**

**செயற்பாடு 6.3.1 :** **இராஜா ரவி வர்மா**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- இராஜா ரவி வர்மாவினுடைய கலை நிர்மாணங்களைக் குறிப்பிடுவார்.
- இராஜா ரவி வர்மாவினுடைய ஓவியங்களில் உபயோகிக்கப் பட்ட மேலைத்தேயப் பாணிகளை விளக்குவார். (ஆங்கில - இந்தியக் கலைப்பாணி)
- இராஜா ரவி வர்மாவினுடைய ஓவியங்களின் தொனிப் பொருள்/கருப்பொருட்களுக்கும் இதிகாச கதைகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதை விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகள் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**இராஜா ரவி வர்மா (1848 - 1906)**

- ஐரோப்பிய கலைப்பாணியைப் (யதார்த்தவாதம்) பின்பற்றி இந்திய கருப்பொருட்களை ஓவியமாக உருவாக்கிய ஓர் கலைஞராவார்.

- ஐரோப்பிய அக்கடமிக் கலையின் பல்வேறு முறைகளை உபயோகித்து இந்திய கருப்பொருட்களை வெளிப்படுத்த ரவி வர்மா உபயோகித்த கட்புல மொழியானதை அங்லோ - இந்தீய மரபு என விமர்சகர்கள் கூறுகின்றனர்.
- செல்வந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட இவர் இதிகாச கதைகளில் உள்ள கதாபாத்திரங்கள், புராணக்கதைப் பாத்திரங்கள் ஆகியவற்றை எண்ணெய் வர்ணத்தைக் கொண்டு ஓவியமாக தீட்டியுள்ளதுடன் இவை பிரபல்யம் அடைந்த லித்தோ அச்சு முறையில் அவை பதிக்கப்பட்டு இந்தியா முழுவதும் பரவின.
- இதனைத் தவிர பெருமளவான பிரதிமை ஓவியங்களையும் வரைந்துள்ளார்.

**இவரது படைப்புக்கள்:**

**1. சரஸ்வதி:**

- ஐரோப்பிய இயற்கை வாதக் கலைப் பண்புகளைப் பின்பற்றி வரையப்பட்ட சரஸ்வதி தெய்வத்தின் உருவம் இந்தியா முழுவதும் பிரசித்தி பெற்றது.
- இது ஓர் இந்தியப் பெண்ணின் தோற்றத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இப்பெண் வெள்ளைச் சேலை அணிந்து, கையில் வீணையுடன் அமர்ந்திருப்பது போன்று இவ் ஓவியம் வரையப்பட்டுள்ளது. பின்னணியில் மரங்கள், ஆறு ஆகியன அடங்கிய சூழல் காணப்படுகின்றது.

**2. இந்திரஜித்தின் வெற்றி:**

- இந்திரஜித் அல்லது "மேகநாத" என்பவர் இராவணனின் மகனாவார். மிகச் சிறந்த வீரனான இவனது அம்பெய்யும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.
- ஒளிநிழல் காட்டல், தூரநோக்கு, முப்பரிமாணம், வர்ண உபயோகம் என்பன செம்மையாக வெளிப்படுகின்றன.
- ஓவியத்தின் மத்தியில் இராவணனின் உருவமும் உள்ளது.

## கணிப்பீடு

- இராஜா ரவிவர்மாவின் ஓவியங்கள் பற்றி மதிப்பீடு செய்க.
- இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களில் காணப்படும் ஐரோப்பிய இயற்கை வாத கலைப் பண்புகளைக் கலந்துரையாடுக.
- இந்திய இதிகாச கதைகள், புராணக் கதைகள் ஆகியவற்றை எவ்வாறு ஓவியங்களாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆராய்க.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 :** **இந்திய கலைஞர்களுடைய கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.3.2 :** **இந்திய ஓவியக் கலைஞர்களின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.**

- **அபினிந்திர நாத் தாகூர்**
- **நந்தலால் போஸ்**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- இந்தியக் கலைகளில் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாக இருந்த காரணிகளையும் பின்னணியையும் பொதுப் பண்புகளை விளக்குவார்.
- ஐரோப்பிய கலை மரபை விடுத்து உருவாகிய இந்திய கலையை விளக்குவார்.
- அபனீந்திர நாத் தாகூர் அவர்களது ஒவியங்களை மதிப்பிடுவார்.
- நந்தலால் போஸ் அவர்களது ஓவியங்களை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலைநிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**இந்தீய மறுமலர்ச்சிக்கலை**

- ஐரோப்பிய கலை மரபிலிருந்து விலகி இந்திய, கீழைத்தேய கலை மரபுகளைப் பின்பற்றி உருவாகிய கலை வளர்ச்சியே இந்திய மறுமலர்ச்சி என கருதப்படுகின்றது.
- அஜந்தா, எல்லோரா, மொகலாய, இராஜபுத்தான கலை மரபுகளையும் சீன, யப்பான் போன்ற ஆசிய மரபுகளையும் தழுவி கலைஞர்கள் நிர்மாணிப்புக்களைச் செய்தனர்.

**அபினிந்திர நாத் தாகூர் (1871 - 1951)**

- வங்காளப்பள்ளி முன்னோடிக் கலைஞர் ஆவார்.
- மேற்கத்தேய கலைப் பண்புகளிலிருந்து விலகி மொகலாய, இராஜபுத்திர கலைப் பாணிகளுடன் தனது படைப்புக்களை உருவாக்கினார்.
- பிற்காலத்தில் யப்பான், சீன கலைப் பாணிகளையும் தமது நிர்மாணிப்புக்களில் இணைத்துக் கொண்டார்.

**i. பாரத மாதா:**

- செந்நிறத்தைக் கொண்ட பெண்ணின் உருவமொன்று இதனைக் குறிக்கின்றது.
- அவர் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகிறார். தலையைச் சுற்றி ஒளிவட்டம் காணப்படுகின்றது.
- நான்கு கைகளுடன் இந்தியத் தேவதையைப் போல் காட்சியளிக்கிறது.
- வெப்ப வர்ணத்தைக் கொண்டிருப்பதால் பார்ப்பவர்களது கண்கள் இவ்வோவியத்தை ஈர்த்துக் கொள்ளுகின்றன.
- இந்திய மொகலாய சித்திரங்களைப் போன்று இதிலும் அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்ட கரையலங்காரம் ஒன்று இதனைச் சுற்றியுள்ளது.

**ii. அசோக அரசனின் ராணியும் அரசமரமும்**

- கபில நிறத்தை மட்டும் உபயோகித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- அசோக மன்னனின் மனைவி ஓவியத்தின் மத்தியில் காணப்படுகிறார். அவர் ஆழ்ந்த சிந்தனையுடன் அரச மரத்தை நோக்கிய வண்ணம் இருப்பதாக இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.
- பின்னணியின் கல்வேலியில் பல கற்றூண்கள் காணப்படுகின்றன. இராணியின் ஒரு கைக்குக் கீழே நாகத்தின் அடையாளம் ஒன்று காணப்படுகிறது.
- செந்நிறத்தைக் கொண்ட அரச மரத்தின் இலைகள் கீழ் நோக்கியவண்ணம் வரையப்பட்டுள்ளன.

**நந்தலால் போஸ் (1882 - 1966)**

- இவரும் இந்திய ஓவியக் கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய ஒரு கலைஞனாவார்.
- கல்கத்தா கலைக்கல்லூரியில் 1905 - 1910 வரை உள்ள காலப்பகுதியில் கல்வி பயின்றார்.

- ஓவியக்கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய முன்னோடியாக இருந்தவர்களில் இவரும் ஒருவர்.

**i. நஞ்சுண்ட சிவன்:**

- அஜந்தா எல்லோரா கலை மரபைத் தழுவி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குளிர்ச்சியான வர்ணங்களைப் பயன்படுத்தி இது உருவாக்கப்பட்டுள்ளது.
- சிவனின் இரு கால்களின் பாதங்கள் இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தும் வகையில் சாந்த சொரூபியாக அமர்ந்திருப்பதுடன் வலது கையில் நச்சுக் கிண்ணம் ஒன்றை ஏந்தியுள்ளார். சாம்பல் வர்ணத்தில் ஒளி வட்டம் காட்டப்பட்டுள்ளது. உடலின் மேற்பகுதி ஆடைகளின்றி காணப்படினும் கழுத்தில் மாலையொன்று காணப்படுகின்றது.

**ii. ராதாவின் விரகதாபம்**

- கேத்திர கணிதப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
- ராதை கட்டிலில் சயனித்திருப்பது போன்றும் அருகில் அவரது இரு நண்பிகள் அவருக்கு ஆறுதல் கூறும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- குளிர், வெப்ப வர்ணங்கள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- பிரபல்யமான தலைப்பாக இருந்த போதிலும் தந்தலால் போஸ் இதனை புதிய பாணியில் மீள்நிர்மாணம் செய்துள்ளார்.

## கணிப்பீடு

- இந்திய ஓவியக்கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கலைஞர்களைக் குறிப்பிடுக.
- அபினிந்திரநாத் தாகூரின் நிர்மாணங்களை மதிப்பிடுக.
- நந்தலால் போஸ் அவர்களுடைய நிர்மாணங்களை மதிப்பிடுக.
- இந்திய ஓவியக் கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கலைஞர்களின் ஆக்கங்களின் பொதுப்பண்புகள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4 :** **ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால கலைஞர்களின் கலையாக்கங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.4.1 :** **லியானாடோ டாவின்சி எனும் கலைஞனின் நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமான சமூகப் பின்னணியின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- மறுமலர்ச்சிக்கால கலைஞர்கள் கலை நிர்மாணிப்பில் கையாண்ட பழமைவாய்ந்த முதல்த்தர நியதிகளை விளக்குவார்.
- லியானாடோ டாவின்சியின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- லியானாடோ டாவின்சியின் நிர்மாணிப்புக்களின் கருப்பொருள் கலைப்பாணி, நுட்பமுறை என்பனவற்றில் அவதானம் செலுத்தி கலை நிர்மாணங்களை நயந்துரைப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகள் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**மறுமலர்ச்சி:**

- கி.பி. 14ம் - 15ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமூக, விஞ்ஞான, கலை, தொழில் நுட்பத் துறைகளில் ஏற்பட்ட எழுச்சியே இதுவாகும்.
- கட்புலக் கலையைக் கருதும்போது கிறிஸ்தவ தேவாலய நிர்வாக ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பழமைவாய்ந்த கிரேக்க உரோம நியதிகளைப் பின்பற்றிய நிலை காணப்பட்டது. இது இத்தாலியில் ஆரம்பித்து பின்னர் ஐரோப்பா முழுவதும் பரவல் அடைந்தது.
- **மறுமலர்ச்சிக்கால ஓவியங்களின் பொதுப்பண்புகள்**
    - மனிதலைப்பேறு (Humanism), தனி மனிதவாதப் (Individualism) பண்புகளை வெளிப்படுத்தல்.
    - பழமைவாய்ந்த கிரேக்க, உரோம நியதிகளை மீண்டும் உபயோகித்தல்
    - நிலவுருக்காட்சி கலையின் வளர்ச்சி
    - கண்ணுக்குப் புலப்படும் பொருள் அதே விதத்தில் அதாவது இயற்கையாக புலப்படுத்துதல். இதன் விளைவாக தூரநோக்கு எனும் கோட்பாடு வளர்ச்சியடைந்தது.
    - உடற் கட்டமைப்பும் (Anatomy) அளவுப் பரிமாணங்களும் (Propotions) வெளிப்படுத்தப்பட்டுள்ளமை
    - கிரேக்க, உரோம கருப்பொருட்கள் மீண்டும் பிரபல்யம் அடைந்தது.
    - பிரதிமை ஓவியக்கலை வளர்ச்சியடைந்தது.

**லியனாடோ டாவின்சி**

- மறுமலர்ச்சி காலத்து முன்னோடிக் கலைஞரான டாவின்சி இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஓவியராவார். இவர் சிற்பக் கலை, கட்டடக்கலை, சங்கீதம், பொறியியல், கணிதம் போன்ற பல பாடங்களில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்.
- டாவின்சி தனது நிர்மாணிப்புகளின் கட்புல நோக்கங்களை திட்டமிட்டு அமைத்திருப்பதுடன் கணித விகிதங்களையும் அதிகளவில் உபயோகித்துள்ளார். முக்கோண அமைப்பொன்றுக்குள் மனித உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதம் இதற்கு உதாரணமாக விளங்குகிறது.
- மனித உருவங்களை வரையும்போது டாவின்சி உயிரோட்டமான மாதிரிகளை உபயோகித்ததுடன் மானிட உடலமைப்பின் இயல்புகளையும் அளவுப் பரிமாணங்களையும் சரியாக உபயோகித்துள்ளார்.
- மறுமலர்ச்சிக் கால ஓவியர்களுள் மனித பாவ உணர்வுகளை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த ஓவியராக டாவின்சி காணப்படுகின்றார்.

**i. மொனாலிசா (Mona lisa):**

- டாவின்சியால் வரையப்பட்ட ஓர் பெண்ணின் பிரதிமையாகும். மரப்பலகையில் எண்ணெய் வர்ணத்தைக் கொண்டு இது வரையப்பட்டுள்ளது.
- இது முக்கோண கட்டமைப்புக்குள் வரையப்பட்டுள்ளது. பார்வையாளரை நோக்கி யிருக்கும் இவரது பார்வை (Gaze) முக்கியத்துவம் வாய்ந்ததுடன் உணர்வுகள் பலவற்றின் வெளிப்பாடு எனவும் விமர்சகர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

- பின்னணியில் மலைக்குன்றுகளைக் கொண்ட அமைதியான சூழல் காணப்படுகின்றது. அவரது பாவ வெளிப்பாடு பலவித கருத்துக்களைத் தோற்றுவிக்கின்றது.
- ஓவியம் பெருமளவு இருண்ட வர்ணங்களைப் பயன்படுத்தப்பட்டு முகம், கைகள், மார்பு என்பன ஒளி பெறும் பகுதிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆபரணங்கள் இன்றி எளிமையான முறையில் வரையப்பட்டுள்ளது. இது புகைபோன்ற (Sfumoto) நுட்பமுறையில் மங்கலான முறையில் வரையப்பட்டுள்ளது.

### ii. இறுதி இராப் போசனம் (The Last Supper)

- இயேசு கிறிஸ்து தனது சீடர்களுடன் உணவுண்ணும் காட்சியில் தன் சீடர்களுள் ஒருவனால் தான் காட்டிக் கொடுக்கப்படப் போகின்றேன் என்று வெளிப்படுத்திய போது ஏற்பட்ட பதற்ற நிலை இதன் கருப்பொருளாக உள்ளது.
- சீடர்கள் காட்டிக் கொடுப்பவன் யாரென்று அறிய மிகவும் பதற்றத்துடனனம் குழப்பத்துடனும் இயேசு கிறிஸ்துவை நோக்கிய வண்ணம் உள்ளனர். சீடர்கள் பதற்றத்துடன் காணப்பட்ட போதிலும் அதற்கு மாறாக சாந்தம் அமைதி வெளிப்படும் வகையில் இயேசு கிறிஸ்துவை ஓவியத்தின் மத்தியில் வரைந்துள்ளார்.
- ஓவியத்தில் யேசுவின் தலை “மறையும் புள்ளி” (Vanishing Point) யில் அமைந்துள்ளது.
- 25 x 19 அடி பரப்புள்ள இவ் ஓவியம் புனித மரியாள் டிலா கிறேஷ் (Santa maria adblle grazie, Milan) கன்னியர் மடத்தின் போசனசாலைச் சுவரில் நாடகப் பாங்கில் வரையப்பட்டுள்ளது.
- மூவர் கொண்ட நான்கு குழுக்களாக யேசுவின் இரு புறமும் சீடர்கள் உயிர்ப்புடன் காணப்படுகின்றனர்.

### iii. பாறையின் மீது கன்னிமரியாள் (Virgin of the Rocks):

- டாவின்சியால் வரையப்பட்ட இக்கருப் பொருளைக் கொண்ட இரு ஓவியங்களில் ஒன்று பிரான்சின் லூவர் நூதனசாலையிலும், மற்றையது இங்கிலாந்து லண்டன் தேசிய நூதனசாலையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- கன்னி மரியாள், குழந்தை யேசு, குழந்தை யோவான், தேவதூதர் ஆகிய உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. கருணை, தயவு, தாய்மை என்பன இச்சித்திரத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன.
- பாறைகளைக் கொண்ட சூழலை பின்னணியாகக் கொண்டதால் இவ்வோவியம் இப்பெயரால் அழைக்கப்படுகிறது. மனித உருவங்கள் முக்கோண கட்டமைப்புக்குள் வரையப்பட்டுள்ளன.
- பனிமூட்டம் ஊடுருவிச் செல்லும் விதத்தில் உருவங்கள் காட்சியளிக்கின்றன. உருவங்கள் மீது புகை போன்ற (Sfumoto) நுட்ப முறையை இதிலும் காணலாம். அது தெய்வீக ஒளியை அடையாளப்படுத்தப்படுவதாக உள்ளது.

## கணிப்பீடு

- மறுமலர்ச்சிக்கால சமூகப் பின்னணியை விபரிக்க மறுமலர்ச்சிக்கால ஓவியர்கள் கவனம் செலுத்திய பொதுப் பண்புகளைக் கலந்துரையாடுக.
- லியனாடோ டாவின்சியின் நிர்மாணிப்புக்களை ஒழுங்குபடுத்துக.
- லியனாடோ டாவின்சியின் நிர்மாணிப்புக்களை விரிவாக மதிப்பிடுக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4 : ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால கலைஞர்களின் கலையாக்கங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.4.2 : ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால கலைஞர்களின் கலை நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்.**
**- மைக்கல் அஞ்சலோ**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- மைக்கல் அஞ்சலோ அவர்களுடைய ஓவியங்கள், சிற்பங்களைக் குறிப்பிடுவர்.
- மைக்கல் அஞ்சலோவின் தெரிவு செய்யப்பட்ட பிராஸ்கோ ஓவியங்களை நயத்து மதிப்பிடுவார்.
- மைக்கல் அஞ்சலோவினுடைய சிற்பங்களின் கருப்பொருள் கலைப்பாணி ஒருங்கிணைப்பு, அவை கொண்டிருக்கும் கிரேக்க தொல்சீர்வாத கலைச் செல்வாக்கை விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**மைக்கல் ஆஞ்சலோ**

- இத்தாலிய மறுமலர்ச்சிக் கால கலையின் சிறந்த சிற்பக் கலைஞனும் ஓவியனும் ஆவார்.

- சிஸ்ரைன் தேவாலயத்தின் உள்ள மைக்கல் ஆஞ்சலலோவின் நிர்மாணிப்புக்கள் அவரது ஓவியக் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் மைக்கல் அஞ்சலோ தன்னை ஓவியராக அல்லாமல் சிற்பக் கலைஞனாகவே அறிமுகப்படுத்தியுள்ளார். கட்புலக் கலையின் அடிப்படையான மையப் பொருள் சிற்பக் கலையென இவர் கருதினார்.
- மைக்கல் அஞ்சலோ கிரேக்க உரோம கலை இயல்புகளை பெரிதும் தழுவிய ஓவியராவார்.
- மனித உடல் இவரது நிர்மாணிப்புக்களின் முக்கியமான வெளிப்பாடாக இருந்தது. மனித உடலமைப்பின் இயல்புகளை மிகைப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளமை சிறப்புப் பண்பாகும்.

- **சிஸ்ரைன் தேவாலயத்தின் ஓவியங்கள் (Paintings in thw Systine Chapel)**

**i. இறுதித் தீர்ப்பு (Last Judgement):**

- கிறிஸ்தவ சமயத்தின் கருப்பொருள் ஒன்றை மையமாகக் கொண்டு பாரியளவில் பிராஸ்கோ சிக்கோ முறையில் வரையப்பட்டுள்ள ஓவியமாகும்.
- இயேசு நாதரை மையமாகக் கொண்டு 30 பேர் கொண்ட உருவங்கள் அவரைச் சுற்றியுள்ளன. யேசு நாதரின் உயர்த்தப்பட்ட வலக்கையில் சிலுவையில் அறையப்பட்ட காயத்தின் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.
- யேசுநாதருக்கு அருகில் அப்போஸ்தலர்கள், தேவ தூதர்கள், புனிதர்கள், சமயத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள் ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளனர். ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் வேதனையால் துடிக்கும் பாவிகளின் உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ஓவியத்தின் இடப்புறத்தில் மோட்சத்தை நோக்கிச் செல்பவர்களும், வலப்புறத்தில் கீழ் நோக்கி வீழ்பவர்களும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.
- இவ்வோவியம் வரைந்த காலப் பருவத்தில் மேற்கத்தேய சமூகத்திலும் ஆலயத்துக்குள்ளும் பலவிதமான சீர்திருத்தங்களுக்கு அடித்தளம் உருவாகிய நெருக்கடியான சூழ்நிலையொன்று நிலவியது. அது ஓவியத்தின் உள்ளடக்கத்துக்கு தாக்கத்தை விளைவித்தது.
- இவ் ஓவியத்தில் இடம்பெறும் யேசுவின் உருவம் கிரேக்க புராணத்தில் குறிப்பிடப்படும் அப்பலோ எனும் சூரியக் கடவுளின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது என கருதப்படுகின்றது.
- மனித உடற் தசைகள் வெளிப்படுத்தப்படும் இதன் சிறப்பியல்பை இவ்வோவியத்திலும் உபயோகித்துள்ளார்.

**ii. ஆதாமைப் படைத்தல் (Creation of Adam)**

- இது சிஸ்டைன் தேவாலய உட்கூரையில் உலக பிரபஞ்சத் தோற்றம் பற்றிய கோட்பாட்டின் ஓர் பகுதியாக வரையப்பட்டுள்ளது. இது ஆதாமுக்கு கடவுள் உயிர் மூச்சை அளித்ததை சித்தரிக்கும் பிராஸ்கோ நுட்ப முறை ஓவியமாகும்.
- இதில் கடவுளின் முகம் வயோதிப தோற்றத்துடனும் உடல் பலம் பொருந்தியதாகவும் காட்டப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.
- கடவுளின் உருவம் உயிர்த்துடிப்புடனும் அசையும் பண்பையும் கொண்டிருப்பதுடன் ஆதாம் பாறை ஒன்றின் மீது உயிரற்ற நிலையில் காணப்படுகின்றார்.
- கடவுளின் வலக்கை ஆதாமின் உயிரற்ற இடக்கையை நோக்கி நீட்டி உயிர் கொடுப்பதாக அமைந்துள்ளது.
- மனித உடல் கட்டமைப்பைப் பற்றிய நல்லறிவுடன் இவ் ஓவியம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. கருப்பொருளாக ஆதாம் இருந்த போதிலும் இது மானிதலைப் பேற்றின் (Humanisum) இலட்சணங்களை வெளிப்படுத்துகின்றது.

### iii. பியெற்றா சிலை (Pieta)

- மைக்கல் அஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட "பியெற்றா" சிற்பங்களுள் மிகவும் பிரசித்தி பெற்றதான பியெற்றாவாக விளங்குவது "மடோனா டெலா பியெற்றா" எனும் சிற்பமாகும்.
- பியெற்றா என்பதன் பொருள் புலம்புதல் ஆகிறது. அத்துடன் இச்சிற்பம் மரித்த யேசுவின் உடலை மடியில் தாங்கிய மரியாளின் துன்பநிலையினைச் சித்தரிப்பதாக உள்ளது.
- இது சலவைக் கல்லை ஊடகமாகக் கொண்டு முக்கோண வடிவமைப்புக்குள் இரு உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.
- உயிரற்ற யேசுவின் உடல், ஆணிகளால் அறையப்பட்ட காயங்கள், மரியாளின் வலக்கை யேசுவின் உடலைத் தாங்குவதால் யேசுவின் உடற் தசைகளின் புடைப்பு என்பன மனித மெய்நிலைகளின் சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றன.
- துன்பநிலையில் மரித்த யேசுவின் உடலை அமைதியுடன் நோக்குவது போன்று அமைந்துள்ளது.

### iv. டேவிட் சிலை (David)

- கோலியாத் என்னும் அரக்கனை வென்ற தாவீது என்னும் வீர இளைஞனின் சலவைக்கல் சிற்பமாகும்.
- இச்சிலை ஒரு காலில் தனது உடல் பலத்தைத் தாங்கியவண்ணம் காட்டப்பட்டுள்ளமை புராதன கிரேக்க சிற்பங்களில் காணப்படும் பண்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. வலக்காலின் அடிப்பாகம் அடித்தளத்துடன் இணைக்கட்பட்டுள்ள விதம் அவரின் நுட்பத்திறனை வெளிப்படுத்துகின்றது.
- 17 அடி உயரமான இச்சிலை சகல விதமான உடற் கட்டமைப்புக்களும் வெளிப்படும் விதத்தில் நிர்வாண வடிவத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- உடலின் தசைகள், என்புகள், நரம்புகளின் புடைப்புக்கள் போன்ற சகல மென்மையான உடற்பாகங்களும் வெளிப்படும் வகையில் மிக நுட்பமான முறையில் உருவாக்கியுள்ளார்.
- தாவீது தமது இடக்கையில் கற்கவணை ஏந்திய வண்ணம் உள்ளார். ஒரு சவால் மிக்க விடயத்தைத் தூரநோக்குடன் பார்க்கும் விதத்தில் அவரது முகபாவனை அமைந்துள்ளது.

### v. மோசஸ் சிலை (Moses)

- பத்துக் கட்டளைகளுடன் தொடர்புபட்ட மோசஸின் உருவமாகும். பத்து கட்டளைகளைக் குறிக்கும் வகையில் எழுதிய குறிப்பொன்றின் நூலை வலது கையில் வைத்திருப்பதாகக் கருதப்படுகின்றது.
- இச்சிலை ஞானம், பலம் ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகின்றது.
- பாண்டித்தியம் பெற்ற ஒரு முதிர்ந்த முகத் தோற்றத்தைக் கொண்டிருப்பினும் பலம் பொருந்திய உடலமைப்பைக் கொண்டவராக மோசஸ் விளங்குகின்றார்.
- பார்வை இடப்பக்கம் நோக்கியவாறு கம்பீரமான உடல்நிலையுடன் அமர்ந்திருக்கின்றார். 11வது யூலியஸ் பாப்பரசரின் கல்லறைக்காக இது அமைக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- மைக்கல் அஞ்சலோவின் கலை நிர்மாணங்களைப் பட்டியல் படுத்துக.
- மைக்கல் அஞ்சலோவின் சிலைகளை விமர்சித்து அவற்றை மதிப்பிடுக.
- லியனாடோ டாவின்சி, மைக்கல் அஞ்சலோ ஆகியோரின் ஓவியங்களில் காணப்படும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4 : ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால கலைஞர்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.4.3 : ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால கலைஞர்களின் கலை நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்.**
**- ரபாயெல் சென்சியோ (Raphael Sanzio)**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- ரபாயெல் சென்சியோவின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவர்.
- ராபாயெல் சென்சியோவின் நிர்மாணிப்புக்களை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**ரபாயெல் சென்சியோ (Raphael Sanzio - 1483 - 1520)**

- மறுமலர்ச்சிக் கால சிறந்த கலைஞனான ரபாயெல் சென்சியோ 37 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். ஆரம்ப காலத்தில் அவர் பெருஜினோ எனப்படும் கலைஞனின் கீழ் பயிற்சி பெற்றார். பெரு ஜினோ வின் கலைப்பாணியில் ஆரம்ப பருவத்தில் ஓவியங்களை வரைந்த போதிலும், பின்னர் அவருக்கே உரித்தான பாணியில் ஓவியங்களை வரைந்தார்.
- ரபாயெல் அவர்களினால் வரையப்பட்ட மடோனா ஓவியத் தொகுதி பெரு மதிப்பீட்டுக் குள்ளானது. மறுமலர்ச்சிக் கால ஓவியர்களுள் மழலைத் தன்மையான சிறப்புக் குழந்தையுருவங்களை வரைந்தவர் ரபாயெல் சென்சியோ அவர்களே.

- எதென்ஸ் பள்ளி எனும் ஓவியம் ரபாயெல் அவர்களின் ஓவியங்களுள் மிகவும் பிரபல்யமானதாகும்.
- இயேசுநாதர் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழும் காட்சியை வரைந்து கொண்டு இருக்கும் போதே ரபாயெல் அகாலமரணமடைந்தார்.

### i. ஏதென்ஸ் பள்ளி (School of Athens)

- இவ்வோவியமானது பிரஸ்கோ நுட்பமுறையில் வரையப்பட்ட ரபாயெல் அவர்களின் பிரபல்யமான ஓவியங்களில் ஒன்றாகும்.
- பிளாட்டோ, அரிஸ்டோட்டல் எனும் இரு கதாபாத்திரங்களும் ஓவியத்தின் மத்தியில் வரையப்பட்டுள்ளது.
- அரிஸ்டோட்டலின் குரு பிளாட்டோ ஆயினும் அவர்கள் இருவரது முரண்பாடான கருத்துக்கள் அவர்களது கைகள் நோக்கியிருக்கும் திசைகள் அடையாளப்படுத்துவதாக உள்ளன.
- மிக நேர்த்தியாக தூரநோக்குப் பண்பு வெளிப்படுத்தப்படுகின்றது. பின்னணியில் கட்டடக்கலையின் சிறப்பு வெளிப்படுத்தப்படுகின்றன. ஓவியத்தின் நடுப்பகுதியில் காணப்படும் வில் வடிவ கட்டட அமைப்புக்கள் பிளேட்டோவினதும் அரிஸ்டோட்டலினதும் தலையைச் சுற்றி அணியப்பட்ட ஒளி மண்டலம் போல் காட்சியளிக்கிறது.
- பாரிய அளவிளலானதும் உன்னதமானதுமான கட்டடக் கலை அமைப்பு அங்குள்ள அறிவாளிகளின் புலமையும் எடுப்பான தன்மையும் வெளிப்படுத்துவதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.
- இங்கு மனித உருவங்கள் அதிகமாக வரைந்த போதிலும் அவர்கள் ஒவ்வொரு துறை சார்ந்த மேதைகளாகக் குழுக்களாக்கப்பட்டு வரையப்பட்டுள்ளனர்.
- பின்னணியில் உள்ள கட்டடத்தின் இருபக்கத் தூண்களில் அப்பலோ, அதீனா ஆகிய தேவதைகளின் உருவச் சிலைகளும் ரபாயெலின் பிரதிமை ஓவியமும் காணப்படுகின்றன.

### ii. பர்னாஸ்சோ (Parnassus)

- இது ஒரு வகை காவியத்தைப் பிரதிபலிக்கின்றது. வெவ்வேறு காலங்களில் காவியத்துடன் தொடர்புபட்ட பல கதாபாத்திரங்கள் மலையுச்சியில் கூடியிருக்குமாறு இங்கு, ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது.
- பர்னாஸஸ் எனும் கற்பனை மலையுச்சியின் மத்தியில் அப்பலோ தேவதை இசைக் கருவியை இசைப்பதுடன் அவரைச் சூழ உள்ளவர்கள் செவிமடுப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.
- இடப்பக்கத்தில் கடும் நீல நிறத்து ஆடையுடன் காணப்படும் உருவத்தின் முகம் "லஒக்கூன்" சிற்பத்தின் துறவியினுடையது.
- இது கிரேக்க உரோம கலைப் பண்புகளை மறுமலர்ச்சிக் கால ஓவியர் உபயோகித்துள்ளமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

### iii. அல்பா மடோனா (Alba Madona)

- யேசு பாலகன், மரியாள், புனித யோவான் ஆகிய மூவரையும் இது சித்தரிக்கின்றது.
- மிகைப்படுத்தப்பட்ட ஒளிவட்டம், தேவதூதர்கள் ஆகியன இன்றி, இயல்பு ரீதியில் மனித பண்புகள் வெளிப்படும் விதத்தில் இது வரையப்பட்டுள்ளது.

- இயேசு பாலகனும் ஏனையவர்களும் இத்தாலிய கிராமியச் சூழலில் காணப்படுகின்றனர்.
- குளிர்ச்சியான வர்ணங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- குழந்தை உருவங்களை வரையும் திறமை இதிலிருந்து புலப்படுகின்றது.
- யேசுபாலகனும் புனித யோவானும் பிடித்துக் கொண்டிருக்கும் சிலுவையை மூவரும் உற்று நோக்குவதாக ஓவியம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- ரபாயெல் அவர்களுடைய ஓவியங்களைப் பட்டியல் படுத்துக.
- ரபாயெல் அவர்களுடைய ஓவியங்களை மதிப்பிடுக.
- ரபாயெல் அவர்களுடைய ஓவியங்களுக்கு கிரேக்க, உரோம பழமைவாத தொனிப் பொருட்கள் மற்றும் கட்புலக் காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தின என்பதைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 :** **ஐரோப்பிய மனப் பதிவுவாதிகளினதும் பின் மனப் பதிவுவாதிகளினதும் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.1 :** **மனப்பதிவுவாத ஓவியர்களின் ஓவியங்களைக் கற்றறிவார்.**
- க்லோட் மொனோ (Clande Monet)

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- மனப்பதிவுவாதக் கலைக்கு அடிப்படையாக இருந்த பின்னணி யையும் மனப்பதிவுவாதக்கலையின் அடிப்படைப் பண்புகளையும் விளக்குவார்.
- மனப்பதிவுவாதக் கலைஞர்களைக் குறிப்பிடுவார்.
- க்லோட் மொனே யின் ஓவியங்களின் கருப்பொருள், நுட்ப முறைகள், கலைப்பாணியின் பண்புகளை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### i. மனப்பதிவுவாதம் (Impressionism):-

**க்ளோட் மொனே (Claude Monet - 1840 - 1926)**

- கிளோட் மொனே மனப் பதிவுவாதக் கலை அமைப்பின் முன்னோடியான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓவியராவார். இந்த அமைப்பிற்கு இப்பெயர் கிடைத்தமைக்குக் காரணம் இவர் வரைந்த "சூரியோதயத்தின் மனப்பதிவு" என்ற ஓவியமே.
- மொனேயின் முக்கிய ஆய்வுத் துறையாக அமைந்தது இயற்கைச் சூழல் மற்றும் சூழலில் உள்ள பொருட்களுக்கும் ஒளிக்குமான இடைத் தொடர்பாகும். அதனால் இவர் ஒரே விடயத்தை பல்வேறுபட்ட ஒளி நிலைகளின் கீழ் மீண்டும் மீண்டும் வரைந்தார்.

- மனப் பதிவுவாதமானது 19ம் நூற்றாண்டில் பரீஸ் நகரை மையமாகக் கொண்டு சுயாதீனக் கலைஞர்கள் கையாண்டு பார்த்தலின் விளைவாக வளர்ச்சியடைந்த ஒரு கலையாகும்.
- இவர்கள் பிரான்ஸ் நாட்டின் சலோனின் பொதுவான வழக்கத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் ஆவர்.
- தெளிவாகக் காணக்கூடிய தூரிகையின் வேகமான தடங்கள், இயற்கை ஒளியையும் இயற்கை உலகையும் கருப்பொருளாகக் கொண்டிருத்தல், ஒளிக்கு பொருட்கள் காட்டும் துலங்களை அவதானிக்கப்பட்டிருத்தல், ஒரே தொனிப் பொருளை மையமாகக் கொண்டு மீண்டும் மீண்டும் அவற்றை வரைதல், வர்ணங்களை வெவ்வேறு விதத்தில் கையாண்டு பார்த்தல், நிழல்களைப் பல வர்ணங்களைக் கொண்டு காண்பித்தல், அக்கடமிக் தூரநோக்குப் பண்புகளில் இருந்து விடுபட்டிருத்தல், அன்றாட வாழ்கையின் நிகழ்வுகளைக் கருப்பொருட்களாக தேர்ந்தெடுத்தல் என்பன இக் கலைத்துறையின் விசேட பண்புகளில் சிலவாகும்.
- தொலைவில் இருந்து நோக்குதல் மற்றும் இல்லற வாழ்க்கை என்பன இக்கலைஞர்கள் அதிகமாக உபயோகித்த தலைப்புக்களாகின்றன. அத்தோடு இயற்கையை உள்ளவாறே அதே விதத்தில் அல்லது மிகைப்படுத்தி முன்வைப்பதிலிருந்து மனப்பதிவுவாதிகள் விலகினர்.

**சூரிய உதயத்தின் மனப்பதிவு (Impression of Sunrise)**

- இது கிளோட் மொனேயால் வரையப்பட்ட மனப்பதிவுவாதக் கலையின் முன்னோடி ஓவியமாகும்.
- சூரியோதயத்தின் போது சூழலில் ஏற்படும் மாற்றங்களைத் தூரிகையின் வேகமான பூச்சுக்களால் திறம்படக் காண்பித்துள்ளார். நீல நிறம் கலந்த பனி மூடிய சூழலில் உதிக்கும் சூரியன் செந்நிறக் கோளம் போன்று காட்சியளிக்கிறது.
- சூரியன் குவி மையமாக அமைந்துள்ளது. அதன் விம்பம் நீர்ப் பரப்பின் மீது படிந்துள்ளது.
- சித்திரத்தின் முன்னணியில் வேகமான பூச்சுகளால் காட்டப்பட்ட வள்ளங்கள் சில உள்ளன. பெரும்பாலான மனப்பதிவுவாதக் கலைஞர்களுடைய ஓவியங்களில் காணப்படும் பூரணப்படுத்தாத நிலையான கலைப் பாணியை (Unfinished Quality) இவ்வோவியத்திலும் காணலாம்.
- 1972 ஆம் ஆண்டு வரையப்பட்ட இவ்வோவியத்தில் குளிர் வர்ணத்துக்கு எதிராக வெப்ப வர்ணத்தை உபயோகித்து அச் சூழலின் தன்மையை உணர்வு பூர்வமாக திறமையுடன் காண்பித்துள்ளார்.

**நீர் அல்லிகளும் ஜப்பானியப் பாலமும் (Water lilies and the Japanese bridge)**

- 1899 ஆம் ஆண்டில் கன்வசு மீது எண்ணெய் வர்ணங்களை உபயோகித்து நிர்மாணிக்கப்பட்டது. சூரியனுக்கு இயற்கைச் சூழல் காட்டும் துலங்கலை நுணுக்கமாக அவதானித்துக் கன்வசு மீது இதனை நிர்மாணித்துள்ளனர்.
- பச்சை நிறமும் அதன் பேதங்களும் சித்திரத்தில் தெளிவாகத் தெரிகின்றன.
- ஓவியத்தின் மத்தியில் பாலமும் அதற்கு மேலே காணப்படும் பகுதியில் மரங்களம் அவற்றின் நிழல்களும் கீழ்ப்பகுதியில் நீரும் அதில் மலர்ந்துள்ள தாமரை பூக்களும் காணப்படுகின்றன.
- ஓவியன் இவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்பை வர்ண உபயோகத்தின் மூலம் திறம்படக் காண்பித்துள்ளார்.

**றோவுன் தேவாலயம் (சூரியனின் முழுமை ஒளி) (Rouen Cathedral: Full Sunlight)**

- சூரியனின் வெவ்வேறு ஒளிப்பிரகாசத்தைப் பெற்று ஒரு பொருள் காட்சியளிக்கும் விதத்தினைக் கருப்பொருளாகக் கொண்டு இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.
- றோவுன் தேவாலயம் தொடர்பாக அதிகளவு ஓவியங்களாக வரையப்பட்ட போதும், தெரிவு செய்யப்பட்ட இவ்வோவியம் 1894ம் ஆண்டு வரையப்பட்டது. கொதிக் கலை மரபுடைய இப்பிரமாண்டமான ஆலயத்தின் நுழைவாயில் சூரிய ஒளி படும்போது காட்சியளிக்கும் விதத்தினை நன்றாக அவதானித்தே இதனை வரைந்துள்ளனர்.
- நிழல் பல வர்ணங்களைக் கொண்டிருக்கும் எனும் மனப்பதிவுவாதக் கலைஞர்களின் வாதத்தை உறுதிப்படுத்தி இவ்வோவியன் இதனை நிர்மாணித்துள்ளார்.
- கடுஞ் சூரிய ஒளி படுவதால் கட்டடத்தின் பகுதிகளிலும் அதன் நிழல்களிலும் நிழலின் வர்ணங்களிலும் காணப்படும் மாற்றங்களை நுணுக்கமாக அவதானித்து தூரிகையின் வேகமான பூச்சுக்களைக் கொண்டு அது கன்வசு மீது நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

## கணிப்பீடு

- மனப்பதிவுவாதத்தினை விளக்கி, அக்கலை உருவாகக் காரணமான பின்னணியைக் கலந்துரையாடுக.
- மனப்பதிவு வாதத்தின் பொதுப் பண்புகள் உள்ளடங்கிய அட்டவணை ஒன்றை அமைக்க.
- கிளோட் மொனேயின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுக.
- கருப்பொருள்களையும் நுட்ப முறைகளையும் கவனித்து கிளோட் மொனேயின் ஓவியங்கள் பற்றிய மதிப்பீடொன்றைச் செய்க.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 : ஐரோப்பிய மனப் பதிவுவாதிகளினதும் பின் மனப் பதிவுவாதிகளினதும் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.2 : மனப்பதிவு வாதிகளினதும் பின் மனப்பதிவுவாதி களினதும் கலை நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம் - எட்கா டெகாஸின் (Edgar Degas)**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- எட்கா டெகாவின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- கலாநிலைய யதார்த்தவாதக் கலையிலிருந்து மன பதிவுவாதக் கலையமைப்பு வேறுபடும் விதத்தை எட்கா டெகாஸின் ஆக்கங்களுடாக ஆராய்வார்.
- எட்கா டெகாஸின் நிர்மாணிப்புக்களை நயப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**எட்கா டெகா (Edga Degas 1834 - 1917)**

- ஓவியம் மட்டுமின்றி கட்டியெழுப்புவதிலும் திறமையுள்ள பிரான்ஸ் நாட்டு ஓவியராவார்.
- எட்கா டெகாஸின் ஓவியங்களில் விசேட கருப்பொருளாக இருந்தது நடனத்தை அடிப்படையாகக் கொண்ட தலைப்புக்களே. பலே நடன மங்கைகளைப் பிரதிபலிக்கும்

பல ஓவியங்களை எட்கா டெகாஸ் வரைந்துள்ளார். இவர் மனப்பதிவுவாத கலைஞர்களுள் அசைவுடன் கூடிய சந்தர்ப்பங்களை வரைவதில் தேர்ச்சியுடையவரானார்.

- டெகாஸினால் பெண்களின் பிரதிமை உருவங்கள் பல வரையப்பட்டுள்ளதோடு அவற்றில் அதிகமானவை பிரதிபலிப்பது தனிமை மற்றும் பல்வேறு மன அழுத்தங்களுடன் கூடிய முக பாவனைகளே.

**நடன வகுப்பு (The Dance Class):-**

- டெகாஸின் ஓவியங்களுள் பலே நடன மங்கையர்களின் ஓவியம் மிகவும் பிரபல்யம் அடைந்ததொன்றாகும். இதில் பலே நடனப் பயிற்றுவிப்பாளரைச் சுற்றி நடன மங்கையர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் குருவின் பக்கம் திரும்பியிருக்கும் போதிலும் ஒவ்வொருவரும் பிரத்தியேக வேலகளில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.
- வேகமான தூரிகைப் பூச்சுக்கள் வெளிப்படும் பாணியில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வகுப்பறையில் தூரநோக்குப் பண்பைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஓவியங்களில் காணப்படும் கட்டுப்படுத்தப்பட்ட உடல்நிலைகளுக்குப் பதிலாக நடன மங்கையரின் சுயாதீன மெய்நிலைகள் இதில் இடம்பெற்றுள்ளன.
- இது டெகாஸினால் 1873 - 1876 எனும் காலப்பகுதியில் வரையப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- ஓவியத்தில் பிரதான உருவமொன்று இல்லாததோடு மொத்த உருக்களும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன.

**குளியற் தொட்டி (The Tub)**

- குளியற் தொட்டிக்குள் அமர்ந்திருக்கும் ஒரு பெண் இவ்வோவியத்தின் கருப்பொருளாகின்றது. அவள் குந்தியிருக்கும் நிலை காண்பிக்கப்பட்டுள்ளது. அவளுக்குப் பின் புற மேல் கோணத்தில் இருந்து அவள் தோன்றும் விதம் ஓவியமாக்கப்பட்டுள்ளது.
- பெண்ணின் முகம் தெரியாததால் அவளது அடையாளம் மறைந்துள்ளது. ஆகவே பெண்ணின் உடல், ஒளிக்குக் காட்டும் துலங்கல்கள் இவ்வோவியத்தில் பிரதிபலிக்கின்றன.
- மனித உடலின் வெப்ப வர்ணங்களின் கூட்டாக பெண்ணின் உடல் சித்தரிக்கப்பட்டுள்ளது. வெப்ப வர்ணத் தொகுதி ஓவியத்தின் குவிவு மையமாகிறது.
- இவ்வோவியம் புரட்சிகரத் தன்மையைச் சற்று வெளிப்படுத்துகிறது.

  குளியற் தொட்டியும் குனிந்திருக்கும் பெண்ணும் வளைந்த அமைப்பைக் கொண்டுள்ளன. அதற்கு எதிராக சாய்வாக வலப்பக்க ஓரத்தில் ஒரு மேசை காணப்படுகிறது.

**தலைவாரும் பெண் (Women Combing her Hair)**

- பெஸ்டல் ஊடகத்தை உபயோகித்து கடதாசி மீது வரையப்பட்ட ஓர் ஓவியமாகும். மனப்பதிவுவாதக் கலைஞர்களுள் எட்கா டெகாஸ் பெஸ்டல் வர்ணத்தைக் கூடுதலாக உபயோகித்துள்ளார்.

- தலைவாரும் நிர்வாணமான ஒரு பெண்ணைப் பின் புறத்தில் இருந்து நோக்கினால் தோன்றும் காட்சியை இவர் வரைந்துள்ளார். முகம் தெரியாததால் இவளது அடையாளம் மறைந்துள்ளது. அவள் ஈடுபடும் செயலே இங்கு தெளிவாகப் புலப்படுகிறது.
- டெகாஸின் வேகமானதும் சுயாதீனமானதுமான வர்ணம் தீட்டும் பாணியை இதிலும் காணக்கூடியதாக இருக்கிறது.
- ஒளியின் காரணமாக உடற் பாகங்களின் துலங்கல்கள் தோன்றும் விதத்தினை நன்றாக அவதானித்தே இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- எட்கா டெகாஸினால் நிர்மாணிக்கப்பட்ட கட்புலனான ஆக்கங்களைப் பட்டியல் படுத்துக.
- எட்கா டெகாஸின் ஓவியங்களைக் கலை அம்சத்துடன் மதிப்பீடு செய்க.
- அக்கடமிக் யதார்த்தவாதக் கலையிலிருந்து மனப்பதிவுவாதக் கலையமைப்பு வேறுபடும் விதத்தை எட்கா டெகாஸின் ஆக்கங்களினூடாக ஆராய்க.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசனைக்குட்படுத்தி அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 : ஐரோப்பிய மனப்பதிவுவாதிகளினதும் பின் மனப்பதிவுவாதிகளினதும் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.3 : மனப் பதிவுவாத ஓவியர்களின் ஓவியங்களைக் கற்றறிவார்.**
**- மேறி கசற் (Mary Cassat)**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக் கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- மேரி கசற்றின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- ஓவியத்தின் கருப்பொருள் மற்றும் நுட்ப முறைகள் தொர்பாக மேரி கசற் மனப்பதிவுவாதக் கலைக்கு வழங்கிய பங்களிப்பைக் கலந்துரையாடுவார்.
- மேரி கசற்றின் நிர்மாணிப்புக்களை நயப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**மேரி கசற் (Mary Casst - 1844 - 1926)**

- மனப்பதிவுவாதக் கலைத் தொழிலில் ஈடுபட்ட பெண் ஓவியக் கலைஞராவார்.
- ஓவியக் கலைஞனும் அச்சுக் கலைஞனுமான மேரி கசற் அமெரிக்கப் பிரஜையாவார்.
- 1844 இல் பிறந்த இவர் 1877 இல் இருந்து 1886 வரையிலான தசாப்தங்களில் மனப்பதிவுவாதக் கலைத்துறையில் தீவிரமாக செயற்பட்ட பெண் கலைஞரொருவராவார்.

- இவர் எட்கா டெகாஸ் எனும் ஓவியக் கலைஞரின் நண்பியாக இருந்ததுடன் டெகாஸின் ஓவியங்களின் செல்வாக்கையும் பெற்றதாகக் கருதப்படுகிறது.
- தாய்மை, செல்வந்த சமூகச் சூழலில் வாழும் பிள்ளைகள், பெண்கள், பணியாளர்கள் என்பன மேரி கசற்றின் ஓவியத் தலைப்புகளாக அமைந்தன.
- தடிப்பாமாக வர்ணம் பூசுதல், தனக்கே உரித்தான பாணியில் வடிவங்களை வடிவங்களின் பொருத்துதல், ஓவியத்துக்கு கருப்பொருளாக அமையும் பொருள்களின் தெளிவான தன்மையை தெளிவின்றி அமைத்தல், அயல் வர்ணங்களின் உடன்பாட்டை உருவாக்குதல் என்பன மேரி கசற்றின் ஓவியக் கலையில் காணப்படும் இயல்புகள் சிலவாகும்.

**நீல அறை (The Blue room)**

- மேரி கசற்றினால் வரையப்பட்ட சர்ச்சைக்குள்ளான முன்னோடியான ஓவியமாகும்.
- சிறு பெண் பிள்ளையொன்று நீலக் கதிரையன்றின் மீது அமர்ந்திருக்கிறது ஓவியத்தின் தளப் பிரயோகத்தைக் கருதுகையில் ஓவியத்தின் முக்கியமமான சரிதையாகிய பிள்ளையிடமிருந்து கவனம் பறிக்கப்பட்ட நிலை காணப்படுகிறது. விளிம்புகள் வெட்டிச் செல்லுமாறு வரையப்பட்ட இருக்கைகளைக் கொண்ட பின்னணி மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.
- சிறப்பான தன்மையற்ற நிகழ்வொன்றை சிறப்புடன் காண்பித்திருத்தல் இவ்வோவியத்தின் இன்னொரு சிறப்பாகும்.
- ஓவியத்தின் மத்தியில் பிரதான உருவம் காணப்படாததால் ஒட்டு மொத்த ஓவியத்தின்மீது முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.
- ஒன்றுக்கொன்று வேறுபட்ட வர்ணத் தொகுதிகளை ஒன்றுடன்ஒன்று பொருத்தி இருக்கும் தன்மையை இவ்வோவிய்தில் காணலாம்.

**தலையை சீர் செய்யும் பெண் பிள்ளை (Girl Arranging Her Hair)**

- ஓவியத்தின் கருப்பொருளாக தனிநபர் நிகழ்வொன்று காண்பிக்கப்பட்டுள்ளது.
- இரவில் அணியப்படும் ஆடையணிந்த ஒரு பெண் பிள்ளை தலையை சீர் செய்யும் விதம் ஓவியத்தில் வெளிப்படுகிறது.
- ஒன்றுக்கொன்று வேறுபட்ட தூய வர்ணங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- கருப்பொருளுக்கேற்ப ஓவியத்தில் வர்ணங்கள் தொகுத்துள்ள விதம் எட்கா டெகாஸின் செல்வாக்கைப் பெற்றுள்ளதை உணர்த்துகின்றது.
- தொல் சீர் சித்தரிப்பு முறைகளில் இருந்து விலகி நிர்மாணிக்கப்பட்ட இவ்வோவியத்தின் பிரதான உருவமான பெண் பிள்ளை, அண்மித்து தெரியும் உருவமொன்றாக தளப் பரப்பு நிரம்பியிருக்கும் வண்ணம் வரையப்பட்டுள்ளது.
- ஓவியத்தின் பின்னனி அத்தியாவசிய அங்கமொன்றாக காண்பிக்கப்படவில்லை.

**ஸ்நானம் (The Bath)**

- மேரி கசற்றின் பிரபல்யமான தொனிப்பொருளான தாய்மை என்பதை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.
- தாயொருவர் சிறு குழந்தையொன்றை குளிப்பாட்டும் இவ்வோவியம் குழந்தையின் மகிழ்ச்சியையும் தாயின் அன்பையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

- அக்கடமிக் ஓவியக் கலையின் பண்பகளைக் காணலாம். அதாவது தளத்தின் நடுப்பகுதியில் ஓவியம் வரையப்பட்டு ஒட்டுமொத்த ஓவியத்தின் அரைப்பங்கை முக்கிய உருவங்களை வரைய உபயோகித்துள்ளமையாகும்.
- பின்னனிக்கு மிகக் குறைவான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிகழ்வுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.
- மனப்பதிவுவாத ஓவியங்களைப் போல் இது திறந்த வெளி காட்சியைக் கொண்டிருக்கவில்லை இல்லத்தினுள் இடம் பெறும் தனிப்பட்ட நிகழ்வொன்றை வலியுறுத்துவதாக இது உள்ளது.

## கணிப்பீடு

- மேரி கசற்றின் ஓவியங்களைக் குறிப்பிடுக.
- கருப்பொருள் நுட்ப முறைகள் தொடர்பாக மனப்பதிவுவாதக் கலைக்கு மேரி கசற் வழங்கிய பங்களிப்பைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 : ஐரோப்பிய மனப் பதிவுவாதிகளினதும் பின் மனப் பதிவுவாதிகளினதும் கலைநிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.4 : பின் மனப்பதிவுவாத ஓவியக் கலைஞர்களின் ஆக்கங்களைக் கற்றறிவோம்**

- வின்சற் வன்கோ (Vincent VanGogh)

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பின் மனப் பதிவுவாதக் கலை அமைப்பு உருவாகக் காரணமான பின்னணியை விளக்குவார்.
- வின்சற் வன்கோவின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- வின்சற் வன்கோவின் ஓவியங்களின் கருப்பொருள், நுட்ப முறைகள், கலைப்பாணி என்பவற்றை விபரித்துக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**பின் மனப்பதிவுவாதம் (Post - Impressionism)**

- மனப்பதிவுவாத தொனிப் பொருட்கள், நுட்பமுறைகள் என்பன சீராக இருந்த பருவத்தில் எதிர் செயற்பாடொன்றாக பின்மனப்பதிவு வாதம் உருவானது.

- மனப் பதிவுவாதத்தில் இருந்த கட்டுப்பாடுகளை மீறும் நோக்கில் பின் மனப்பதிவு வாதம் உருவானது எனக் கருதலாம்.
- வர்ணங்கள், கட்டமைப்பு, கோல வடிவம், இரேகைகள் புதிய பாணியில் கையாளப்பட்டு ஆழமான முறையில் பாவங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இவற்றுக்கேற்ப கருப்பொருள்களை ஆராய்வதில் இவ்வமைப்பில் இணைந்த கலைஞர்கள் முன்னின்று தொழிற்பட்டனர்.
- நவீன கலைஞர்களின் ஆரம்பத்தைக் குறிக்கும் கலையமைப்பாக இதை அடையாளம் காணலாம்.
- ஒரு கட்புலக் கருப்பொருளின் உண்மையான நிலைமையை திரிவுபடுத்துவதன் மூலம் அதன் கருத்து வெளிப்பாட்டை தீவிரப்படுத்தல் பின் மனப்பதிவுவாதக் கலையின் முக்கிய அம்சமாகும்.

**வின்சற் வன்கோ (Vincent VanGogh 1853 - 1890)**

- ஒல்லாந்து நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட பின் மனப்பதிவுவாத ஓவியராவார்.
- சுய பிரதிமை, பிரதிமை, நிலவுருக் காட்சிகள், நிலைப் பொருட் கூட்டங்கள், வயல்வெளிகள், சைப்பிரஸ் மரங்கள், பூக்கள் போன்றவை வன்கோவின் தலைப்புகளினுள் முக்கியத்துவம் வகித்தன.
- இவருடைய ஆக்கப் பொருட்களின் காட்சி யதார்த்த நிலையில் உருவாகாது, கலைஞருடைய மனக்கிளர்ச்சியின் அசைவுத் தொகுப்பின் காரணமாகவே உருவானது.
- விசித்திரமான வர்ணங்கள், கடுமையான வேகமான தூரிகை பூச்சுக்கள், உணர்ச்சிமிக்க கருப்பொருட்கள் இவரது ஓவியங்களின் பொது அம்சங்களாகும்.

**உருளைக்கிழங்கு உண்போர்**

- இருளான வர்ணத் தொகுதியைக் கொண்டு உருவாக்கப்பட்டது. உழவர்களின் வாழ்க்கையின் துயர நிலையை இவ்வோவியம் பிரதிபலிக்கின்றது.
- தொழினுட்பப் புரட்சியின் காரணமாக வாழ்ந்த விவசாயக் குடும்பம் ஒன்றினை மையப் பொருளாகக் கொண்டுள்ளது. இருள் சூழந்த பின்னணியில் இரவுணவாகக் கிழங்கை உண்ணும் காட்சி இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது. மங்கலான ஒளியுடன் விளக்கு ஒன்று தொங்கிக் கொண்டிருக்கிறது. இருள் சூழந்த சூழல் அவர்களது ஏழ்மை நிலையை அடையாளப்படுத்துகிறது.
- இருண்ட ஆவிகளின் தோற்றத்தைப் போன்று குடும்ப அங்கத்தவர்கள் சாப்பாட்டு மேசையைச் சுற்றி குழுமியிருக்கின்றனர். அலங்கோலமான தோற்றமுடைய இவர்களது முகங்கள் நீண்ட காலமாக வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததன் விளைவை எடுத்துக்காட்டுகின்றன.
- மானுட வாழ்க்கையின் நிலையொன்றைக் கிரக்கத்துடன் நோக்கி நிர்மாணிக்கப்பட்ட ஓர் ஓவியமாகும்.

**நட்சத்திரங்கள் நிறைந்த இரவு (The Starry night)**

- நடன அசைவுகளைக் கொண்ட இரவு வானம் ஒன்றையும் சூழல் ஒன்றையும் இவ்வோவியம் கொண்டுள்ளது. சந்திரன், நட்சத்திரங்கள், முகில்கள் அடங்கிய ஒட்டு

மொத்த வானமும் சுழியைப் போன்று சுழல்கிறது. நீலம், மஞ்சள் ஆகிய எதிர் வர்ணங்களை அடிப்படையாகக் கொண்டு வானம் காண்பிக்கப்பட்டுள்ளது.

- வன்கோவின் ஓவியங்களில் அதிகமாகக் காணக்கூடிய வேகமான, குறுகிய தூரிகை ஓட்டங்கள் இவ்வோவியத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது. இது உண்மை நிலையிலான சூழலைப் பிரதிபலிக்காத போதிலும் ஓவியனின் உணர்சி வெளிப்பாட்டிற்கு ஏற்புடையதாக கன்வசு மீது வென்கோ வரைந்த பிரத்தியேக அனுபவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- 1889 இல் வரையப்பட்ட இவ்வோவியத்தின் பெரும் பகுதி வானத்தைக் குறிக்கின்ற அதேவேளை தொலைவில் அமைதியான நகரமொன்றும் காட்சியளிக்கிறது.

**கதிரை (Vincent's Chair)**

- அக்கடமிக் கலையின் பாரம்பரிய நிலைப் பொருள்களின் ஒழுங்கிணைப்பில் இருந்து விலகி அன்றாட உலகின் கருப்பொருளொன்றைக் கன்வசு மீது ஓவிய வடிவில் காண்பித்துள்ளார்.
- அன்றாட வாழ்க்கையில் பெறுமதியற்ற நிலையில் உள்ள கதிரையொன்றை வன்கோ சிறப்புப் பொருளாக மாற்றியுள்ளார். மஞ்சள் நிறத்தை அடிப்படையாகக் கொண்ட கதிரை மீது கைக்குட்டையொன்றும் சுக்கான் ஒன்றும் காணப்படுகிறது. கதிரையைப் பற்றி மட்டுமல்லாமல் கதிரையை உபயோகிப்பவர் பற்றியும் உணரக் கூடியதாக இருக்கிறது.
- கதிரை சொகுசான விறாந்தையொன்றில் அல்லாமல் கிராமிய கரடுமுரடான சூழலில் காணப்படுகிறது. பின்னணியில் தூர நோக்கு இயல்பை மிகைப்படுத்திக் காண்பித்துள்ளார்.

## கணிப்பீடு

- பின் மனப்பதிவுவாதக் கலைஞர்கள், கையாண்டு பார்த்த விடயங்களும் கவனம் செலுத்திய துறைகளும் எவை?
- வின்சற் வன்கோவின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுக.
- வின்சற் வன்கோவின் நிர்மாணிப்புக்கள் தொடர்பாக கலையுணர்வுடன் மதிப்பீடொன்றை நடத்துக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 :** **ஐரோப்பிய மனப் பதிவுவாதிகளினதும் பின் மனப் பதிவுவாதிகளினதும் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.5 :** **பின் மனப்பதிவுவாதக் கலைஞர்களின் ஆக்கங்களைக் கற்றிவோம்**

- போல் கொகேன் (Paul Ganguin)

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- போல் கொகேனின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- போல் கொகேனின் நிர்மாணிப்புக்களின் குறியீட்டு பாவனையின் தன்மை பற்றியும், அரூபத் தன்மை பற்றியும் கலந்துரையாடுவார்.
- போல் கொகேனின் நிர்மாணிப்புக்களை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### போல் கொகேன் (Paul Ganguin 1848 - 1903)

- ஐரோப்பா கலைக்கூடக் கலையின் அடிப்படை அம்சங்களைக் கைவிட்டு பழங்குடி கலை (Primitive Art), நாட்டார் கலை (Folk Art) மற்றும் மத்திய கால சாயக் கண்ணாடி ஓவியங்கள் போன்ற மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தனது கட்புல மொழியை உருவாக்கிக் கொண்ட பிரான்ஸ் நாட்டு ஓவியராவார்.
- கொகேன் ஐரோப்பா நகர நாகரீகத்தைக் கைவிட்டுவிட்டு தஹிட்டி தீவுக்குச் சென்ற பின் செய்த ஆக்கத்தொடர் அவருடைய ஓவியங்களுள் முக்கியத்துவம் பெறுகின்றது. அத்தோடு கொகேன் குறியீட்டுவாத அமைப்பிற்கு, அடிப்படையாக விளங்கிய ஓவியராவார்.
- கொகேன் தனது ஓவியங்களில் வர்ணங்களை தூய்மையாகவும் தட்டையாகவுமே பயன்படுத்தினார். அவ்வாறு அவர் கையாண்டு பார்த்தமை வளர்ந்து வரும் கலைஞர்களின் ஆக்கச் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்டுத்தி வருகின்றது.

### மஞ்சள் நிற கிறிஸ்து (The Yellow Christ)

- குறியீட்டு வடிவில் பொருளை உணர்த்தும் ஓவியமொன்றாகும். ஓவியத்தின் மைய உருவமாக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துநாதரைக் குறிக்கும் மஞ்சள் நிற உருவம் காணப்படுகிறது. இது கிராமிய நாட்டார் கலைக்கு ஒத்துள்ளது.
- கிறிஸ்து நாதரின் காலடியில் ஜெபம் பண்ணும் பெண்களின் உருவங்கள் உள்ளன. கிறிஸ்து நாதரும் ஒட்டுமொத்தச் சூழலும் மஞ்சள் நிறத்தினால் குறிக்கப்பட்டுள்ளது. அக்கடமிக் கலையின் முப்பரிமாணத் தன்மையின்றி தட்டையான முறையில் வர்ணங்கள் பூசப்பட்டுள்ளன.
- தடித்த கறுப்பு நிறக் கோட்டினால் உருவங்களைச் சுற்றி வரையப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பியல்பாகும். அதனால் ஓவியத்தில் உள்ள உருவங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.
- மெய் உலகின் கட்புல நோக்கங்கள், உருவச்சிதைப்பு செய்து கன்வசு (கித்தான்) மீது இவ்வோவியம் உருவாக்கப்பட்டுள்ளது.

### தெய்வங்களின் தினம் (The Day of the God)

- 1894 இல் தஹிட்டிய சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டு கொகேனினால் கித்தான் (Canvas) மீது வரையப்பட்ட ஓவியமொன்றாகும்.
- மிகவும் கலைத்துவமிக்க இந்த ஓவியம் பெண்களின் உருவங்களைப் பிரதானமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஓவியத்தின் மத்தியில் மூன்று பெண்களின் உருவங்கள் உள்ளதோடு அதில் மத்தியிலுள்ள பெண் ஸ்நானத்திற்குத் தயாராக உள்ளார். ஏனைய பெண்கள் அவளுக்கு இரு பக்கத்தில் சாய்ந்திருப்பது போல் வரையப்பட்டுள்ளது.
- இந்தப் பெண் உருக்களின் உடல் நிலைகளுக்கு அமைய அவர்கள் பிறப்பு, வாழ்க்கை மற்றும் மரணத்தைப் பிரதிபலிப்பவர்களாகத் தெரிகின்றார்கள். அவர்கள் இளஞ் சிவப்பு நிற மணற் தரையின் மேல் இருக்கின்றனர். முன்பக்கமாக நீரில் படிந்துள்ள நிழல் உருக்கள் அரூப வடிவங்களுடையவை.
- பெண்களின் உருவங்களுக்குப் பின்னால் கறுப்பு நிற தேவதையின் சிற்பமொன்று வரையப்பட்டுள்ளது. அதற்கு அருகில் தஹிட்டி நடனமாடும் பெண்கள் இருவரைக் காண முடிகின்றது.

- ஓவியத்தில் பின்னணியில் கடற்கரைக் காட்சியொன்று காணப்படுகின்றது.
- மிகவும் பிரகாசமான வர்ணத் தொகுதியைக் கொண்டு ஓவியம் பூசப்பட்டுள்ளது.
- கருத்து வெளிப்பாட்டு அம்சங்கள், பிரிந்துள்ள தன்மை, கற்பனை இயல்புகள் மட்டுமன்றி அதியதார்த்தவாத அம்சங்களும் கலந்துள்ள ஆக்கமாகும்.

**நாங்கள் எங்கிருந்து வருகிறோம்? நாங்கள் யார்? நாங்கள் எங்கு செல்வோம்?**

- இவ்வோவியம் தத்துவரீதியாகவும் குறியீட்டு வடிவிலும் பொருளை உணர்த்துகிறது. தஹிட்டி தீவுகளில் கொகேன் குடியிருந்த காலப்பகுதியில் அவர் சந்திக்க நேரிட்ட கட்புலனான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- கொகேனின் கருத்துப்படி இவ்வோவியம் வலமிருந்து இடமாகப் பார்க்க வேண்டும். பிறப்பு, மரணம் எனும் நிகழ்வுகளுக்கு அப்பால் வாழ்க்கையின் நிலை ஓவியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது 148 அங்குல நீளமும் 55 அங்குல உயரமும் கொண்டது.
- ஓவியத்தில் ஆங்காங்கே குழுக்களாகக் காணப்படும் மக்களின் உருவங்கள் தஹிட்டி வாசிகளின் உடற் கட்டமைப்பைக் கொண்டுள்ளன.
- வலப்பக்கத்தில் பாலகனும் அவருடன் காணப்படும் மூன்று பெண் உருவங்களும் பிறப்பு எனும் நிகழ்வைக் குறிக்கிறது. இடப்புறத்தில் மரணத்தை அண்மித்திருக்கும் பெண் ஒருத்தி காணப்படுகிறாள்.
- இளமைப் பருவம் மற்றும் வாலிப பருவத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் சில ஓவியத்தின் மத்தியில் உள்ளன.
- தட்டையான முறையில் வர்ணம் பூசப்பட்டிருப்பது, இரேகைகள் மையமாகக் கொண்டிருப்பது இவ்வோவியத்திலும் காணலாம்.
- நீல வர்ணத்தினால் காண்பிக்கப்பட்ட தெய்வ உருவம் வாழ்க்கைக்கு அப்பால் உள்ள நிலையை எடுத்தியம்புகிறதைப் போன்றே வாழ்க்கை ஒரு கேள்விக் குறியாக இருப்பதையும் விளக்குகிறது.

## கணிப்பீடு

- போல் கொகேனின் நிர்மாணிப்புகளைப் பட்டியற்படுத்துக.
- போல் கொகேனின் நிர்மாணிப்புக்களுக்குக் காரணமான மூலாதாரங்களைக் கருத்திற் கொண்டு மதிப்பீடு செய்க.
- போல் கொகேனின் ஆக்கங்களில் குறியீட்டுத்தன்மை மற்றும் பிரிந்துள்ள தன்மையைப் பற்றிக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 : ஐரோப்பிய மனப் பதிவுவாதிகளினதும் பின் மனப் பதிவுவாதிகளினதும் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.6 : பின் மனப்பதிவுவாதக் கலைஞர்கள் ஆக்கங்களைக் கற்றறிவோம்**
- போல் செசான் (Paul Cezaane)

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- போல் செசாபின் மனப்பதிவுவாதக் கலைத் தொழிலுக்கு ஆற்றிய பங்களிப்பை விபரித்துக் கூறுவார்.
- போல் செசானின் கலை நிர்மாணிப்புக்களை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகள் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**போல் செசான் (Paul Cezanne 1839 - 1906)**

- பின் மனப்பதிவுவாத ஓவியர் ஆகிய செசான் 20 ஆம் நூற்றாண்டில் நவீன முன்னெடுப்புகள் பலவற்றுக்கு அடிப்படையாக இருந்த ஓவியராவார்.
- ஓவியக் கலையில் செசான் செய்த மாற்றங்கள் அகடமிக் ஒழுங்கு விதிகளிலிருந்து

ஓவியத்தை மீட்டெடுப்பதற்கு மட்டுமல்லாமல், புதிய முன்னெடுப்புகள் பல ஏற்பட பங்களிப்புச் செய்தன. இதனால் பிக்காசோ மட்டுமன்றி மத்திஸ் கூட எம் அனைவரினதும் தந்தை செசான் என்று கூறி இருந்தார்.

- இவரது படைப்புகள் இயற்கை உலகை அவ்வாறே பிரதி செய்வதைத் தவிர்த்து அதைப் பல்வேறு உணர்வு பூர்வமான மனக் கிளர்ச்சிகளுக்கேற்ப திரிபுபடுத்தி, மாற்றியமைத்து, மிகைப்படுத்தி, எல்லைகளை மங்கலாக்கி கேத்திர கணித உருவங்களை வலியுறுத்தி ஓவியத் தீட்டல் செய்துள்ளார்.

### சீட்டாடுபவர்கள் (The Card Players)

- எதிரும் புதிருமாக இருந்து சீட்டாடும் ஆண்கள் இருவர் ஓவியத்தில் காண்பிக்கப்பட்டுள்ளனர். இருவரும் சீட்டாடுவதில் கவனம் செலுத்துகின்றனர். ஒருவரின் வாயில் சுக்கான் உள்ளது.
- ஓவியத்தின் பின்னணி தட்டையான முறையில் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. செசான் உபயோகித்த தூரிகைப் பூச்சுக்கள் தென்படும் உத்தி முறை இவ்வோவியத்திலும் தென்படுகிறது.
- ஓவியத்தின் சில பகுதிகள் குவியும் வடிவிலும் சில அவ்வாறல்லாமலும் தொகுக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் ஓவியத்தின் சமனிலைத் தன்மை பேணப்பட்டுள்ளது.
- வெப்ப, இருள் வர்ணங்கள் ஒன்றுடன் ஒன்று உரசும் விதத்தில் அருகருகே பூசப்பட்டுள்ளன. கலைக்கூடத்தின் தூரநோக்குப் பண்பின்றி வரையப்பட்டுள்ளது.

### அப்பிள் கூடை (The Basket of Apple)

- செசான் வரைந்த அப்பிள் கூடை ஓவியங்கள் பல இருக்கின்ற போதும் தெரிவு செய்யப்பட்ட இவ்வோவியம் 1895 இல் வரையப்பட்ட ஒன்றாகும்.
- சரிந்த கூடையொன்று, போத்தலொன்று மற்றும் துணி ஒன்றின் மீது சிதறிக் காணப்படும் அப்பிள் என்பன இதன் கருப்பொருளாகும்.
- பொருட்களின் தட்டையான தன்மை, கேத்திர கணித வடிவம் என்பன தெளிவாகத் தெரியும் விதத்தில் தூரிகைப் பூச்சுகள் உள்ளன. துணித்துண்டும் கூட அதன் மூலை மடிப்புகள் தெரியும் வண்ணம் உள்ளது.
- ஓவியத்தில் தூரநோக்கு இயல்பு காணப்படுகிறது. சில பகுதிகள் சாய்வான தன்மையுடன் கட்புல நோக்கத்தை எண்ணி வரையப்பட்டுள்ளன. மேசையின் விளிம்பு இரு மட்டங்களில் தென்படுகின்றன. ஒரு கண்ணால் அல்லாமல் இரு கண்களாலும் பொருள்களை நோக்கும் போது புலப்படும் தூரநோக்குத் தன்மையை அவதானித்து செசான் இதனை வரைந்துள்ளார்.
- ஓவியத்தை இயற்கைவாத தர்க்கத்திலிருந்து மீட்டெடுக்க பங்களிப்பு வழங்கிய ஆக்கமாகும்.

### வெடித்த சுவர்களுடனான வீடு (The house with the cracked walls)

- மலைச்சாரலில் அமைந்த தனித்த பாழடைந்த வீட்டை மையப்பொருளாகக் கொண்டு வரையப்பட்ட ஓவியமாகும். கவனமாகவும் குறிப்பிட்ட நோக்கை இலக்காகவும் கொண்டு தூரிகைப் பூச்சுகளால் இவ்வோவியம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- வீட்டின் பக்கத் தோற்றமே காணப்படுகிறது. அதன் சுவர் பாரியளவில் வெடித்துக் காணப்படுகிறது. குளிர் வர்ணங்களும் வெப்ப வர்ணங்களும் ஒன்றுடன் ஒன்று உரசும் விதம் இதிலும் காணப்படுகின்றது.
- கூரையின் செந்நிற விளிம்பு கண்ணைக் கவரும் விதத்தில் உள்ளது. முப்பரிமாண பண்பு இன்றி இருபரிமாணத்தில் இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.
- உருவங்களின் கட்டமைப்பு, வர்ணம் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வரையப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- போல் செசான் மனப்பதிவுவாதக் கலையில் ஏற்படுத்திய புதிய மாற்றங்களைப் பட்டியற்படுத்துக.
- போல் செசானின் ஓவியங்களை மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.6 : ஐரோப்பியக் கனவடிவுவாதக் கலைஞர்களின் நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.6.1 : கனவடிவுவாத ஓவியர்களின் நிர்மாணிப்புகளைக் கற்றறிவோம்**
**- பப்லோ பிக்காசோ**

**பாடவேளைகள்** : 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கனவடிவுவாதக் கலைப் பண்புகளை விபரித்துக் கூறுவார்.
- கனவடிவுவாதக் கலைஞர்களைக் குறிப்பிடுவார்.
- பப்லோ பிக்காசோவின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- பப்லோ பிக்காசோவின் நிர்மாணிப்புக்களை விமர்சன ரீதியாக நயந்துரைப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### கனவடிவுவாதம் (Cubism)

- இது 20 ஆம் நூற்றாண்டில் உருவான முன்னோடிக் கலையாகும். செசான் கையாண்டு பார்த்த கட்டமைப்புச் சம்பந்தமான விடயங்கள் இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பிராக் என்பவரும் பப்லோ பிக்காசோ என்பவரும் இக்கலை வளர்ச்சிக்குத் துணை புரிந்த முன்னோடிக் கலைஞர்களாவர்.

- இயற்கைப் பொருள்களை கனவடிவத்தில் (Cubes) காண்பிக்க முற்பட்டமையை இதில் காணலாம்.
- ஒரு கோணத்தில் அல்லாமல் பலகோணங்களிலும் பொருள்களை நோக்கிக் கேத்திர கணித பண்புகளுடன் இவை கன்வசு மீது நிர்மாணிக்கப்பட்டன. ஆகையினால் பெரும்பாலான ஓவியங்கள் கட்டமைப்பில் சிக்கலான இயல்பைக் கொண்டுள்ளன.
- அக்கடமிக் யதார்த்தவாதக் கலை கோட்பாடுகளிலிருந்து மாறுபட்டுள்ளது.
- கட்புல நோக்கு இயல்பை அவ்வாறே அனுசரிப்பதற்குப் பதிலாக கேத்திர கணித வடிவங்களின் மாறுபட்ட வெளிப்பாட்டைப் பலப்படுத்தியமை இந்த அமைப்பின் முக்கிய அம்சமாகும்.

**பப்லோ பிக்காசோ (Pablo Picasso - 1881 - 1973)**

- ஓவியர் மட்டுமன்றி சிற்பம், அச்சுக்கலை, செரமிக், மேடை அமைப்பு போன்ற பல் துறைகளிலும் திறமைகாட்டிய கட்புலக் கலைஞராவார். ஸ்பானியா பிறந்து பிற்காலத்தில் பிரான்சில் குடியேறினார். 20 ஆம் நூற்றாண்டில் கட்புலக்கலைக்கு அதிகம் செல்வாக்குச் செலுத்திய ஓவியர்களுள் ஒருவராவார்.
- பிகாசோவின் கலை வாழ்க்கை நீல காலம், இளம் சிவப்பு காலம், ஆபிரிக்கத் தாக்கம் செலுத்திய காலம், பகுப்பாய்வு கனவடிவுவாத காலம் (Analysic Cubism) தொகுப்பு கனவடிவுவாத காலம் (Synthesis Cubism) என்ற ரீதியில் பல பருவங்களைக் கொண்டிருந்தது.

**i) அவிக்னொனின் யுவதிகள் (The Maids of Avignon/ Les Demoisellesd' Avignon)**

- 1907 இல் பிக்காசோவினால் வரையப்பட்ட இவ்வோவியம் ஓவியக் கலை வரலாற்றில் வடிவமைப்புகளை மோடிப்படுத்துவதில் வெற்றி கண்டது.
- இவ்வோவியம் கனவடிவுவாத ஓவியக் கலையின் முதற் படைப்பாகக் கருதப்படுகிறது.
- நிர்வாணமான ஐந்து யுவதிகளைக் கொண்ட ஓவியமாகும். அக்கடமிக் கலையில் காணப்படும் பெண்களின் லலிதமான போக்கை விடுத்து கேத்திர கணித வடிவங்களால் இப்பெண் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- அவிக்னொன் வீதியின் விலை மாதுக்களை கருப்பொருளாகக் கொண்டுள்ள இவ்வோவியத்துப் பெண்களின் வெளிப்புற அழகை விட உள்ளக் குமுறல்களே ஆணித்தரமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- அக்கடமிக் யதார்த்தவாதக் கலையின் தூரநோக்குப் பண்புகள், முப்பரிமாணப் பண்புகள் இன்றி விடயந்தொடர்பான தூரநோக்கு பண்புகளையும் முப்பரிமாண இயல்புகளையும் கொண்டுள்ளது.
- பெண்களின் உடல் நிலைகளும் உணர்வு வெளிப்பாடும் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதம் இவ்வோவியத்தின் முக்கிய பண்புகளாகின்றன.
- ஆபிரிக்க வேட முகங்களில் காணப்படும் ஆழமான வெட்டுக்களுடன் கூடிய இயல்புகள், உள ரீதியான எதிர்நிலையை பெண்களின் முகங்களின் மூலம் வெளிப்படுத்த உபயோகிக்கப்பட்டுள்ளன.

### ii) குவர்ணிக்கா

- வடக்கு ஸ்பேயின் பாஸ்க் எனும் பகுதியில் நிகழ்ந்த குண்டு வீச்சைப் பின்னணியாகக் கொண்ட ஓவியமாகும். யுத்தத்தின் கொடுமையைச் சித்தரிக்கும் ஓவியமாக இது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
- 11 அடி உயரமும் 25 1/2 அடி நீளமும் கொண்டது. ஒருமை வர்ணத்தைக் கொண்டதாக வெளிப்படுகிறது. கறுப்பு, வெள்ளை, சாம்பல் நிறங்களை அடிப்படையாகக் கொண்டது.
- இவ்வோவியத்தில் இறந்த குழந்தையின் உடலை ஏந்தி ஓலமிடும் ஒரு பெண், ஒரு பசு, ஒரு குதிரை, இறந்த படைவீரனொருவன் ஆகியன இவ்வோவியத்தில் உள்ளன.
- குதிரை உருவத்தை மையமாகக் கொண்டு அரூப வடிவத்தையுடைய மண்டையோடு ஒன்று காணப்படுகிறது. படைவீரனின் ஒரு கையில் உடைந்த வாளொன்றும் மற்றைய கையில் மலரும் பூவொன்றும் காணப்படுகிறது.
- ஓவியத்தின் மேற்பகுதியில் தொழில் நுட்பத்தினால் ஏற்பட்ட அழிவின் நிலையை உணர்த்தும் வெறி கொண்ட கண்களுக்குள் ஒளிரும் மின்குமிழ் ஒன்று காணப்படுகிறது.
- கையில் விளக்குடன் யன்னல் ஊடாக எட்டிப்பார்க்கும் ஒரு பெண் ஓவியத்தில் காணப்படுகிறாள். இவ்விளக்கானது எதிர்பார்ப்பை அடையாளப்படுத்துவதாக விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### iii) ஓலமிடும் பெண் (The Weeping Woman)

- பிக்காசோவினால் 1937 இல் வரையப்பட்ட பெண்ணின் இடுப்புக்கு மேல் உள்ள உருவம் ஒன்று இதில் உள்ளது. இது எண்ணெய் வர்ணத்தாலானது. இதன் கருப்பொருள் டோரா-மா எனப்படும் பெண் ஆகும். அவள் கண்ணீர் துடைத்துக் கொண்டு, விக்கி விக்கி அழும் காட்சியை ஓவியன் காண்பித்துள்ளார்.
- அவ்வடிவங்கள் தட்டையாக வர்ணம் பூசப்பட்டுள்ளன. அவளது பாவ வெளிப்பாட்டுக்குப் பொருத்தமாக வெப்ப, குளிர் வர்ணங்கள் ஒன்றுடன் ஒன்று உரசும் விதத்தில் பூசப்பட்டுள்ளன. தடித்த கருமை நிற இரேகைகளால் வெளிப்புறம் வரையப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- கனவடிவுவாதக் கலைப் பண்புகளைப் பட்டியற்படுத்துக.
- பப்லோ பிக்காசோவின் நிர்மாணிப்புக் காலப் பகுதிகளை இனங்கண்டு அக்காலப் பகுதிகளில் வரைந்த ஓவியங்கள் எவை என அட்டவணைப்படுத்துக.
- கலை இரசனையுடன் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களை மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசனைக்குட்படுத்தி அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.6 :** **ஐரோப்பிய கனவடிவுவாதக் கலைஞர்களின் நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.6.2 :** **கனவடிவுவாத ஓவியர்களின் நிர்மாணிப்புக்களைக் கற்றறிவோம்.**
**- ஜோர்ஜ் பிராக் (Georges Braque)**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- ஜோர்ச் பிராக்கின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- ஜோர்ச் பிராக்கின் நிர்மாணிப்புக்களை விமர்சன ரீதியாக நயந்துரைப்பார்.
- கனவடிவுவாதக் கலைஞர்களின் கலை ரீதியான தந்திரங்களை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள துணைபுரிபவை:

**ஜோர்ச் பிராக் (Georges Braque 1882 - 1963)**

- பிரான்ஸ் நாட்டு ஓவியரான இவர் கனவடிவுவாதக் கலையின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றிய ஒருவராவார். 1908 - 1912 காலப்பகுதியில் பிக்காசோவுடன் சேர்ந்து நிர்மாணிப்புக்களில் ஈடுபட்டார்.

- ஆரம்ப கால ஆக்கங்கள் போவிசம் கலை அமைப்பின் (Fauvism) அம்சங்களைப் பிரதிபலிக்கின்றது.
- இயற்கை, அசையாப் பொருள் ஒழுங்கிணைப்பு, கிட்டார் இசைப்பவர் போன்றவை இவர்களின் ஓவியங்களில் அதிகமாக உள்ளன.

### i) வீடுகளும் மரங்களும்

- 1908 இல் வரையப்பட்ட இவ்வோவியத்தில் மரங்களின் ஊடாகக் காணப்படும் பல வீடுகள் தெரிகின்றன. இது எண்ணெய் வர்ணங்களால் கன்வசு மீது வரையப்பட்டுள்ளது. எளிமையான கேத்திர கணித வடிவங்களைக் கொண்டு வீடுகளும் மரங்களும் வரையப்பட்டுள்ளன. வீடுகளின் கூரைகளும் சுவர்களும் கனவடிவத்தில் வரையறுக்கப்பட்ட இளங்கபில வர்ணத் தொகுதியைக் கொண்டுள்ளன.
- கோணம், சாய்வு என்பன மீது கவனஞ் செலுத்தப்பட்டு இயற்கையில் கண்ணுக்குப் புலப்படும் காட்சியில் இருந்து விலகிய நிலை காணப்படுகிறது.
- கனவடிவுவாத ஓவியக் கலைத் தந்திரங்களினால் அக்கடமிக் கலையின் கட்புல நோக்கங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. தூரநோக்கு இயல்புகள், முப்பரிமாணத் தன்மை எனும் பண்புகள் உபயோகிக்கப்படவில்லை.

### ii) கிட்டாருடன் உள்ள மனிதன்

- கிட்டாரை இசைக்கும் மனிதனின் அசைவுத் தொகுதிகளை கருத்திற் கொண்டு அவ்வசைவுகளை ஒன்றின் மீது ஒன்று அமைத்து உருவாக்கப்பட்ட ஓவியமாகும்.
- இது அதிகளவிலான தளவடிவங்களைக் கூட்டாகக் கொண்டு ஒருங்கமைக்கப்பட்டுள்ளது. கபில நிறம், கறுப்பு, வெள்ளை ஆகிய வர்ணங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருமை வர்ணச் சுபாவத்தில் இது உள்ளது. அதன் கட்டமைப்பின் மீதே ஓவியன் கவனம் செலுத்தியுள்ளார்.
- இசைப்பவரினதும் கிட்டாரினதும் இயற்கை வடிவத்தை எளிய கேத்திர கணித தள வடிவங்களாக பிரதிபலித்துக் கன்வசு மீது இதனை நிர்மாணித்துள்ளார்.

### iii) பீட மேசை (Pedestal Table)

- அசையாப் பொருள்களைக் கனவடிவுவாதத்துடன் ஒழுங்கிணைக்கப்பட்ட ஓவியமாகும். கபில வர்ணம், கறுப்பு, வெள்ளை வர்ணங்கள் ஒருமை வர்ணமாகப் பொருத்தப் பட்டுள்ளது.
- இவ்வோவியத்தில் மேசை மீது பொருள்கள் ஒழுங்கின்றி பரம்பிக் கிடக்கின்றன. ஓவியத்தில் கற்பனையுடனான தூரநோக்கு இயல்பைக் காணலாம். இரேகைகள் ஒன்றுடன் ஒன்று இடைவெட்டுகின்றன. கோண வடிவிலான வளைந்த வடிவங்களைக் கொண்ட உருவங்கள் தட்டையான வடிவில் வர்ணம் பூசப்பட்டுள்ளதை ஓவியத்தில் காணக் கூடியதாக இருக்கின்றது.

## கணிப்பீடு

- ஜோர்ஜ் பிராக் இனால் வரையப்பட்ட ஓவியங்களைக் குறிப்பிடுக.
- ஜோர்ஜ் பிராக் அவர்களின் கனவடிவுவாதக் கலைப் பண்பு பற்றி அவரது நிர்மாணிப்புக்களைக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக.

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** **இலங்கையின் வரலாற்றுக்கு முற்கால (Pre-historic Art) ஓவியங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.1.1 :** **இலங்கையின் வரலாற்றுக்கு முற்கால ஓவியங்களைக் கற்றிவோம்.**

- **தந்திரி மலை**
- **பில்லாவ**
- **தொரவக்குகை**
- **வெட்டம்புகல**

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இலங்கையின் வரலாற்றுக்கு முற்கால ஓவியங்கள், உருவப் படங்கள், இறுவெட்டுக்கள், மேன்தலை எறியி, கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையின் வரலாற்றுக்கு முற்கால ஓவியங்கள் காணப்படும் இடங்களும் அவற்றுக்குரிய காலப் பகுதிகளையும் குறிப்பிடுவார்.
- இவ் ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளை விபரித்துக் கூறுவார்.
- இலங்கை வரலாற்றுக்கு முற்கால ஓவியங்களுக்கு ஆதாரமாக அமைந்த கருப்பொருள், வர்ண உபயோகம், குறியீடுகள் என்பனவும் அவற்றினால் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களையும் கலந்துரையாடுவார்.
- ஓவியங்களை நிர்மாணிக்க உபயோகித்த நுட்பமுறைகள், வர்ண உபயோகத்தின் சிறப்புத் தன்மை, வெளிப்படும் சுபாவம் என்பனவற்றைக் கலந்துரையாடுவார்.
- ஓவியங்கள் தொடர்பாக விமர்சகர்களது கருத்துக்களை ஆராய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அமைந்திருக்கும் இயற்கை கற்குகைகளின் சுவர்களிலும் கூரையமைப்புகளிலும் கிறுக்கி விடப்பட்ட உருவங்களை அல்லது ஓவியங்களைக் காணலாம். இவை மலைக்குகை ஓவியங்கள் (Rock Art) எனப்படும். இவ் ஓவியங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட (Pre Historic) கலை மற்றும் பழங்குடிக் கலை (Primitive Art) ஆகிய இரு வகைக்கும் உரியதாகும்.

- ஆராய்ச்சிகளுக்கு ஏற்ப இலங்கையின் பல மாகாணங்களில் குகை ஓவியங்கள் உள்ள 54 இடங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அதிகமான இடங்கள் அம்பாறை, மொனராகலை மாவட்டங்களிலேயே உள்ளன. அனுராதபுரம், பொலன்னறுவை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் இவ்வகைக்குரிய ஓவியங்கள் உள்ள இடங்கள் பரவலாக உள்ளன.
- தந்திரிமலை, பில்லாவ, ஆண்டியாகல, திம்புலாகல, கதுறு பொக்குண, அரண்கொட கல்கே, ரஜகல கந்த, கொனாகொல்ல, தொரவக்க, பிஹில்லேகொட, அலுகல்கே, புதுகல்கே, குடும்பிகல, விகினியாகல, மங்குல் மகா விகாரய, ஹக்பெலிகந்த, வெட்டம்புகல, பியன்கல எனும் இடங்களும் இவற்றுள் சிலவாகும்.

### கட்டமைப்பு

- இயற்கைக் கற்குகைகளில் ஒப்பமாக்கப்படாத உட்சுவரின் மேற்பரப்பு இவ்வோவியங்களையும் கிறுக்கல் உருவங்களையும் நிர்மாணிக்க உபயோகிக்கப் பட்டுள்ளது. விரல்கள், அந்தங்கள் நசிக்கப்பட்ட தடித்த கம்புகள் என்பவற்றை உருவங்கள் வரையப் பயன்படுத்தினர். சில ஓவியங்கள் தடிப்பாக வர்ணம் பூசப்பட்டவையாகக் காணப்படுகின்றன. வெள்ளை, சாம்பல், சிவப்பு, மஞ்சள் எனும் வர்ணங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் வெள்ளை, சாம்பல் ஆகிய வர்ணங்களைக் கொண்ட உருவங்களே அதிகம் காணப்படுகின்றன.
  இரேகைகளை மையமாகக் கொண்டு ஓவியம் வரைந்தமை விசேட அம்சமாகும்.
- குகைச் சித்திரங்களின் உள்ளடக்கத்தை இரு பிரிவுகளாக்கலாம். இயற்கை உருவங்கள் முதலாவது வகையாகும். யானை, பறவைகள், முதலை எனும் உருவங்களை அடையாளம் காண முடிகின்றன. அதனைத் தவிர மனித உருவங்களும் உள்ளன. அரூப வடிவங்களே இரண்டாவது வகையாகும்.
- தொரவக்குகை கற்குகையை அகழ்வாராய்ந்த போது கண்டறிந்த காரணிகளுக்கு இணங்க, அங்கு காணப்பட்ட கிறுக்கல் உருவங்கள் கி.மு. 6000 - 4000 ஆண்டு காலப்பகுதிக்குரியவை எனலாம். அலவ்வ, ஹக்பெலிகந்த கற்குகையில் கிறுக்கல் கோட்டுத் துண்டங்கள் இவற்றையும் விட பழைமை வாய்ந்தவையாக இருக்கலாம்.

### ஓவியங்கள் வரையப் பயன்படுத்திய நுட்ப முறைகள்

- இரேகை வரைதல் (Line drawing)/ வர்ண ஓவியங்கள் (Paintings)
- கற் சுவரைக் கீறி நிர்மாணிக்கும் உருவங்கள் (Engraving)
- கர அச்சுப்பதிப்புகள் (Hand printing)

- இவற்றுள் இரேகை முறையைப் பயன்படுத்தி உருவங்கள் வரையப்பட்டுள்ளமையை அதிகம் காணலாம். இதற்காகக் கறுப்பு, வெள்ளை மற்றும் கபில நிறங்கள் அதிகமாகப் பாவிக்கப்பட்டுள்ளன. ஆண்டியாகல, பியன்கல, ரஜகல, அலுகல்லே எனும் குகைகளில் இவ்வாறான ஓவியங்களைக் காணலாம்.
- சாயங்கள் பூசி நிர்மாணிக்கப்பட்ட பல ஓவியங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விரலால் அல்லது நசிக்கப்பட்ட கம்புகளால் உருவங்களின் வெளிப்புறக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. இரேகைகளால் வரையப்பட்ட ஓவியங்களில் நடுப்பகுதி கம்பால் அல்லது விரலால் சாயம் அப்பப்பட்டுள்ளது. தந்திரிமலை, பில்லாவ, அலுகல்கே எனும் இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஓவியங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.
- கற்பாறையை ஆழமாகச் சுரண்டி அல்லது கீறி உருக்களை வெளிக்கொணரப்பட்ட முறை (Engraving), வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியில் ஓவியங்கள் நிர்மாணிக்கப்பட்ட பிரபல்யமான முறையொன்றாகும். விலங்குகளின் கொம்புகள், என்புகள், இறுக்கமான கற்றுண்டுகள் இவ்வாறான செயற்பாட்டுக்கு உபயோகப்பட்டன. தொரவக்குகை, ஊராகந்த ஆகிய இடங்களில் இவ்வாறான ஓவியங்களைக் காணலாம்.
- அம்பாந்தோட்டை மாவட்டத்துக்குரிய யால, மகுல்மகா விகாரை வளாகத்தில் உள்ள கற்குகையின் உட்சுவரில் மஞ்சள், சிவப்பு வர்ணங்களாலான உள்ளங்கை அடையாளங்கள் சில காணக்கூடியதாக இருக்கின்றன.
- வெள்ளை, சாம்பல், கருஞ்சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய வர்ணங்கள் இவற்றில் உபயோகிக்கப்பட்டுள்ளன. மண், சாம்பல், கரி, சாயக்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு இவ்வர்ணங்களை அவர்கள் உருவாக்கினர்.

**தந்திரிமலை**

- இக்குகை அனுராதபுர மாவட்டத்தில் மகாவிலச்சிய பகுதியில் தந்திரிமலை கிராமத்தில் அமைந்துள்ளது. அருகருகே உள்ள இயற்கைக் கற்குகைகள் இரண்டில் இவ்வோவியங்கள் காணப்படுகின்றன.

**முதலாம் குகை**

- முதலாம் குகையின் உட்சுவரில் விலங்குருவங்கள், 7 மனித உருவங்கள், பல கேத்திர கணித வடிவங்கள் என்பன காணக்கூடியதாக இருக்கின்றன. இதில் ஒரு விலங்குக்குப் பின்னால் நிற்கும் மனித உருவம் அதிக கவனத்தை ஈர்க்கின்றது. கைகளை இருபக்கமாக வைத்திருக்கும் இந்த உருவத்தின் முகம் இடது புறமாகத் திருப்பியுள்ளது.
- மானென அனுமானிக்கக் கூடிய விலங்குடன் இருக்கும் இன்னொரு மனித உருவம் ஒன்றும் இக்குகையில் உள்ளது. இவ்விலங்கின் உருவம் சாம்பல் நிற வெளிப்புறக் கோடுகளால் வரையப்பட்டு உட்புறம் செந்நிறப் புள்ளிகளைக் கொண்டதாக உள்ளது.
- வெள்ளை நிறத்தினால் வரையப்பட்ட ஓடும் நிலையில் உள்ள மனித உருவம் ஒன்றும் முதலாம் குகையில் உள்ளது. அத்தோடு கையில் வில்லுடன் இடப்பக்கமாக திரும்பியுள்ள வெள்ளை நிறத்தில் வரையப்பட்ட மனித உருவம் ஒன்றும் உள்ளது. சாம்பல் நிறத்தினால் வரையப்பட்ட இரு விலங்குகளுக்குப் பின்னால் உள்ள இரு மனித உருவங்களும் உள்ளன.

**இரண்டாம் குகை**

- இரண்டாம் குகையென குறிப்பிடப்பட்டுள்ள குகையின் சுவர் முழுவதும் பல குறியீடுகள் வரையப்பட்டுள்ளன. ஒன்றுக்குப் பின் ஒன்று இருக்கும் விதத்தில் வரையப்பட்ட விலங்குருக்கள் சிலவும் வெவ்வேறாக வரையப்பட்ட விலங்குருக்கள் சிலவும் உள்ளன.

**பில்லாவ (பிலவ)**

- இக்குகை அனுராதபுர மாவட்டத்தில் மகாவிலச்சிய எனும் பகுதியில் பில்லாவ கிராமத்தில் அமைந்துள்ளது.
- உட்சுவரில் இரேகைச் சித்திரங்களும் வெள்ளை நிறத்தினால் வர்ணமிடப்பட்ட சில ஓவியங்களும் உள்ளன.
- மனித உருவங்கள், விலங்குருவங்கள், கேத்திர கணித வடிவங்கள் என்பன இவற்றுள் காணப்படுகின்றன.
- ஜோன் ஸ்டில் என்பவரினால் 1910 இல் இவ்வோவியங்கள் வகைப்படுத்தப்பட்டன. அதற்கேற்ப இக்குகையில், வீட்டுக்குள் இருக்கும் இரு மனிதர்கள், தனித்திருக்கும் இரு மனித உருவங்கள், மரையொன்றின் உருவம், மயில் எனக் கருதக் கூடிய ஓர் உருவம் என்பனவும் அடையாளம் காணப்படாத குறியீடுகளும் உள்ளன.
- இவ்வுருவங்களுள் சில வர்ணமிடப்பட்டுள்ளன. உதாரணமாக மரையின் உருவம் வெள்ளை நிறத்தினால் வர்ணமிடப்பட்டதைக் கூறலாம்.

**தொரவக்குகை (தொரவக)**

- கேகாலை மாவட்டத்தில் பெலிகல் கோரளையின் தொரவக எனும் கிராமத்தில் இக்குகை அமைந்துள்ளது.
- இது கி.பி. 1919 இல் பிரௌனிங் (Browning) இனால் முதல் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டது.
- இக்குகை 150 அடி உயரத்தில் உள்ள குன்றின் மீது அமைந்துள்ளது. இதன் உட்சுவரில் செதுக்கப்பட்ட கேத்திர கணித வடிவங்கள், விலங்குருக்கள் என்பன காணப்படுகின்றன. இவை கீறுதல் அல்லது சுரண்டுவதன் மூலம் (Engraving) நிர்மாணிக்கப்பட்டவையாகும்.
- இதில் 57 கேத்திர கணித வடிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மனித உருவம் என அனுமானிக்கக் கூடிய உருவம் கவனத்தை ஈர்த்துள்ளது. மனித உருவம் மோடுபடுத்தப்பட்டு வரையப்பட்டுள்ளது.
- இங்குள்ள விலங்குருவங்களுள் யானையும் குட்டியும் காண்பிக்கும் உருவம் முக்கியத்துவம் பெறுகின்றது.

**வெட்டம்புகல**

- அம்பாறை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் கிவுலேயாய எனும் கிராமத்தில் இக்குகை அமைந்துள்ளது.
- இது 40 மீற்றர் அளவில் நீளமுடையது. இதன் உட்சுவர் முழுவதும் பல வடிவங்களாலான மனித உருவங்கள், விலக்குருவங்கள், கேத்திர கணித வடிவங்கள் காணப்படுகின்றன. ஏராளமான உருவங்கள் இங்கு வரையப்பட்டுள்ளன. இவற்றுள் யானைகளின் உருவங்கள் அதிகம் உள்ளன.

- யானைகளின் எல்லா உருவங்களும் வெள்ளை, சாம்பல், மஞ்சள், சிவப்பு சார்ந்த மஞ்சள் (Reddish Yellow) எனும் வர்ணங்களைக் கொண்டுள்ளன. இவ்வர்ணங்கள் தடிப்பாகப் பூசப்பட்டுள்ளன. சில வர்ணங்கள் வேறொரு வர்ணத்துடன் கலந்து காணப்படுவது சிறப்பம்சமாகும். இவ்வாறு வர்ணமிடப்பட்ட ஓவியங்களின் வெளிப்புறக் கோடு வரையப்படவில்லை.
- இரு தந்தங்களைக் கொண்ட யானை உருவம் சிறப்பானது. இவ்வுருவம் சிவப்பு சார்ந்த மஞ்சள் (Rieddish Yellow) வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- ஒரு யானையின் கால்களின் பாதம் தெளிவாக வட்டமாக வரையப்பட்டுள்ளது. இது வெண்மை நிறத்தைக் கொண்டது.
- கேத்திர கணித வடிவங்களுள் இயற்கையாக நீர் நிரம்பிய இடங்களை வரைந்துள்ள விதம் தெளிவாக உள்ளது. சாம்பல் நிறப் புள்ளிகள் மூலம் நீர் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. இது காட்டில் இயற்கையாக நீர் நிரம்பியுள்ள இடங்களைக் காட்டில் வாழும் குழுக்களுக்குத் தெரியப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வரையப்பட்டிருப்பதாக இருக்கலாம். இரேகைகளால் வரையப்பட்ட இவ்வுருவங்கள் வெள்ளை, சாம்பல் எனும் வர்ணங்களைக் கொண்டுள்ளன. விரல்களால் அல்லது தடித்த கம்புகளால் இவை வரையப்பட்டிருக்கலாம் என இரேகைகளின் தடிப்பத்தைக் கொண்டு கவனிக்கக் கூடியதாக உள்ளது.
- வெள்ளை நிறத்தினால் வரையப்பட்ட அம்பு, வில் என்ற உருவமும் காணப்படுகிறது.
- மானெனக் கருதப்படும் உருவமொன்று உள்ளது. அதன் கொம்புகள் தெளிவாக உள்ளன. அது சிவப்பு சார்ந்த மஞ்சள் (Rieddish Yellow) வர்ணத்தைக் கொண்டது.

## கணிப்பீடு

- இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்கள் காணக் கூடிய இடங்களைக் குறிப்பிடுக.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்கள் வரையக் காரணமான கருப்பொருள்களைக் கலந்துரையாடுக.
- இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஒவியங்கள் வரைய உபயோகித்த நுட்ப முறைகள், வர்ண உபயோகம் வெளிப்படும் விதம் பற்றி ஆராய்க.
- இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்கள் சம்பந்தமாக உள்ள விமர்சன ரீதியான கருத்துக்களைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 : ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியின் குகை ஓவியங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.2.1 : ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக் குகை ஓவியங்களைக் கற்றறிவோம்.**

- **லஸ்கோ**
- **அல்ராமீரா**
- **ஷுவெட்**
- **பொண்டி கோமி**

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து குகை ஓவியங்களின் உருவப்படங்கள், நிழற்படங்கள், குகை ஓவியங்களின் காணொளிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியின் குகை ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுவார்.
- அவ்வோவியங்களின் கருப்பொருள், எண்ணக்கரு பாவனை என்பனவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதிக் குகை ஓவியங்களின் ஊடகம், தொழில் நுட்பம், நுட்ப முறை என்பனவை விபரித்துக் கூறுவார்.
- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியின் குகை ஓவியங்கள் வெளிப்படும் விதம் கலைப் பண்புகள் என்பன பற்றி விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்கள் கி.மு. 40000 - 10000 காலப்பகுதிகளுக்குரியவை. (மேல் பெலிலியோத்திக்க யுகம்)

- ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களில் பெரும்பாலாக விலங்குருவங்கள், மனித உருவங்கள், பலவிதக் குறியீடுகள் கருப்பொருளாக உள்ளன.
- வேட்டையாடுதலை அதிகரித்தல், ஆவிகளுக்குப் பூஜை செய்தல், பொழுதைக் கழித்தல், வேட்டையாடுதலை இலகுவாக்கிக் கொள்ளல் எனும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன.
- விலங்கு இரத்தம், விலங்குக் கொழுப்பு, சாம்பல், கரி, மண், தாவரப் பகுதிகள் என்பன கொண்டு வர்ணங்களை உருவாக்கிக் கொண்டனர்.
- கீழே தரப்பட்டுள்ள நுட்ப முறைகள் ஓவியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.
  - இரேகைச் சித்திரம் – Line draning
  - வர்ண ஓவியங்கள் – Painting
  - கற் பாறையைக் கீறி சுரண்டி நிர்மாணிக்கப்பட்ட உருவங்கள் – Engraving
  - கர, கால் அச்சுப்பதிப்புகள் – hand and foot printing

**ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்கள் வரையப்பட்டுள்ள இடங்கள்**

**லஸ்கோ (Lascaux - France)**

- பிரான்ஸ் நாட்டின் மென்டினாக் நகரை அண்மித்து இக்குகை அமைந்துள்ளது.
- லஸ்கோ ஓவியங்கள் கி.மு. 17000 காலப்பகுதிக்குரியவை.
- குகைகளின் உட்கூரையிலும் சுவர்களிலும் விலங்குருவங்கள், மனித உருவங்கள், கேத்திர கணித வடிவங்கள், பல குறியீடுகள் என்பன வரையப்பட்டுள்ளன. மனித உருவங்கள் குறைவாகவும் விலங்குருவங்கள் அதிகமாகவும் காணப்படுகின்றன. பைசன் எருது உருவங்கள், பனி மான்கள், காட்டுக்குதிரைகள், வேட்டைக்காரர்கள் இவ்வோவியங்களில் அடங்குகின்றன.
- வர்ண ஓவியங்கள், இரேகைச் சித்திரங்கள், சுவரைக் குடைந்து நிர்மாணிக்கப்பட்ட உருவங்கள், அச்சிடப்பட்ட கை அடையாளங்கள் என்பனவும் அடங்குகின்றன. சுவரைக் குடைந்து அமைத்த 1500 உருவங்களும் 600 ஒவியங்களும் உள்ளதாகக் கருதப்படுகின்றது.
- 17 அடி நீளமான பைசன் எருதின் உருவம், இறந்த மனிதனின் உருவம், பறவை முகமூடி அணிந்த மனித உருவம் லஸ்கோ ஓவியங்களுள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.
- இவ்வோவியங்கள் சிவப்பு, கறுப்பு, கபில நிறம், மஞ்சள், வெள்ளை ஆகிய வர்ணங்களைக் கொண்டுள்ளன. உருவங்களைச் சுற்றிக் கறுப்பு நிறத்தினால் ஆன இரேகைகள் காணப்படுகின்றமை சிறப்பியல்பாகும்.

**அல்ராமீரா (Altamira - Spain)**

- வட ஸ்பெயின்னில் அமைந்த இக் குகை ஓவியங்கள் கி.மு. 15000 காலத்துக்குரியவை.
- குகையின் சுவர்கள் உட்கூரை முழுவதிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. விலங்குருவங்கள், கேத்திர கணித வடிவங்கள், பலவிதக் குறியீடுகள், அச்சிட்ட கையடையாளங்கள் இவைகளுள் அடங்கும்.
- பைசான் எருது பரந்த தொனிப்பொருளாக அமைந்துள்ளன. ஓய்வெடுக்கும், ஓடும், துள்ளும், நடக்கும், நிற்கும் மெய்நிலைகளைக் கொண்ட பைசன் எருதின் உருவங்கள் பல இங்குள்ளன.

**ஷுவெ (Chauvet - France)**

- இக்குகை பிரான்சின் தென் பகுதியில் அமைந்துள்ளது.
- ஷுவெ குகை ஓவியங்கள் கி.மு. 32000 காலப்பகுதிக்கு உரியவை என கருதப்படுகின்றது.
- விலங்குகளே இவ்வோவியங்களின் கருப்பொருள்களாக அமைகின்றன. மெமத், பைசன், குதிரைகள், சிங்கங்கள், பனிமான்கள், றைனோ, கரடிகள், ஹைனா ஆகியவை இவைகளுள் அடங்குகின்றன.
- விலங்குருக்கள் கூட்டமாக வரையப்பட்டிருப்பது இவற்றின் சிறப்பியல்பாகும்.
- வர்ண ஓவியங்கள், இரேகைச் சித்திரங்கள், கற்பாறையைச் சுரண்டிச் செய்த ஆக்கங்கள், அச்சுப் பதித்த கை, கால்களும் இவற்றில் காணலாம்.
- சுரண்டி அமைக்கப்பட்ட கற்பாறை மீது சிவப்பு, கறுப்பு ஆகிய வர்ணங்களால் வெளிப்புற இரேகைகள் வரைந்து வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. மஞ்சள், கபில நிறம், சாம்பல், கறுப்பு, வெள்ளை ஆகிய வர்ணங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. உருவங்களைச் சுற்றிவரக் காணப்படும் இரேகைகள் சிறப்பைத் தருகின்றன.

**ஷுவெ குகைச் சித்திரங்களுள் அதிகம் கவனத்தை ஈர்த்துள்ளவை:**

- குதிரைக் கூட்டம் - கழுத்து வரையுள்ள பகுதியை மட்டும் காட்டும் விதத்தில் ஒன்றின் பின் ஒன்று இருக்குமாறு வரையப்பட்டுள்ள குதிரைக் கூட்டமாகும்.
- சிங்க உருவங்கள் - 8 சிங்கங்கள் பலவித மெய்நிலைகளில் இருக்கும் ஓவியமாகும்.
- சிறு பிள்ளையின் அச்சுப் பதித்த கால் அடையாளங்கள் காணப்படுவதோடு அவை உலகில் மிகவும் புராதன காலடையாளங்களாகக் கருதப்படுகின்றன.
- ரைனோ கூட்டம் - இடத்துக்கிடம் புறப்படத் தயார் நிலையில், பல மெய் நிலைகளில் உள்ள ரைனோ உருவங்கள் இதில் உள்ளன.

**பொன்டி கொமீ (Font de Gaume - France)**

- பிரான்ஸ் நாட்டில் அமைந்த இக்குகை கி.மு. 17000 காலப்பகுதிக்கு உரியது எனக் கருதப்படுகின்றது.
- பைசன், மெமத், குதிரை, ரைனோ, மான், சிங்கம், ஆடு ஆகிய விலங்குருக்களைப் போன்றே கேத்திர கணித வடிவங்களையும் இவ்வோவியங்களில் காணலாம்.
- சிவப்பு, மஞ்சள், வெள்ளை, கறுப்பு, சாம்பல் ஆகிய வர்ணங்கள் உபயோகிக்கப் பட்டிருப்பதுடன் உருவங்களைச் சுற்றிக் கறுப்பு நிறத்தில் இரேகைகளும் காணப் படுகின்றன. ஓவியங்கள் இரு வர்ணங்களின் கலவையைக் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.
- பொன்டி கொமி குகை ஓவியங்களுள்,
    - பைசன் கூட்டம்
    - பனி மான் ஜோடி
    - பைசனும் மானும் போன்றவை அதிகம் கவனத்தை ஈர்த்தவையாகும்.

## கணிப்பீடு

- ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குகை ஓவியங்கள் காணக் கூடிய இடங்களையும் அவற்றிலுள்ள ஓவியங்களையும் குறிப்பிடுக.
- ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குகை ஓவியங்கள் வரைய உபயோகித்த வர்ணங்கள், நுட்ப முறைகள், ஒருங்கிணைப்பு முறைகள் என்பவற்றை விளக்குக.
- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்களில் வெளிப்படும் கருப்பொருள்களையும் கலைப் பண்புகளையும் கலந்துரையாடுக.
- ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்கள் மற்றும் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்களினதும் சிறப்பியல்புகளைப் பற்றி ஒப்பிட்டு மதிப்பிடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.3 : இலங்கையின் தூபிகளும் அதனுடன் தொடர்புடைய கட்டடக் கலையையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.3.1 : இலங்கையின் தூபிகளைக் கற்றறிவோம்.**

- தூபாராமய
- ருவன்வெலிசாய
- அபயகிரிய
- ஜேதவனராமய
- ரன்கொத் விகாரை
- கிரி விகாரை
- ஹங்குரன்கெத்த பொத்குல் விகாரை ஸ்தூபி

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- ஸ்தூபிகளின் கட்டமைப்புகள், அதன் பிரதான அங்கங்கள் காட்டும் உருவப்படங்கள், காணொளிகள் நிகழ்ச்சிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- தூபிகளின் ஆரம்பம், அதன் வளர்ச்சி என்பவற்றை ஆராய்ந்தறிவார்.
- தூபியின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- தூபியின் வடிவங்களுக்கு ஏற்ப உதாரணங்களுடன் அட்டவணைப் படுத்துவார்.
- இலங்கையின் பழைமை வாய்ந்த தூபிகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிவன:

## தூபியின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியும்

வெகெர, ஸ்தூபி, தூபி, சைத்திய என பல பெயர்களால் இது அழைக்கப்படுகிறது. புத்த பெருமானினதும், (றஹதன் வஹன்சே) முக்தி நிலையடைந்த குருமாரினதும் உடற் கூறுகள், அவர்களது பாவனைப் பொருள்கள் என்பன வைத்து அமைக்கப்பட்ட புனிதமான நினைவுக் கட்டடம் என இதனை விளக்கலாம்.

- இலங்கையில் தூபிகளை நிர்மாணிக்க இந்தியாவின் சாஞ்சி தூபியின் செல்வாக்குப் பெறப்பட்டு உள்ளது.
- மகிந்தனின் வருகைக்குப் பின் இலங்கையில் கட்டப்பட்ட முதற் தூபி தூபாராமய எனக் கருதப்படுகிறது.

### ஸ்தூபிகளின் கட்டமைப்பு

மணிவடிவம், நீர் குமிழ் வடிவம், தானியக் குவியல், பத்மாகர (தாமரை வடிவம்), கடம் (குடம் வடிவம்), ஆமலகாகர, பாத்திராகார, பலண்டவாகார, மந்திராகார எனும் பெயர்களை இவை கொண்டுள்ளன.

### ஸ்தூபியின் அங்கங்கள்

1. கஜன் மலுவ (யானைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட சுற்றுப்பிரகாரம்)
2. வெலி மலுவ (மணல் பரவப்பட்ட சுற்றுப்பிரகாரம்)
3. எத் பவுர (புடைப்பு முறையில் யானை உருவங்கள் நிர்மாணிக்கப்பட்ட மதில்கள்)
4. சலபதல மலுவ - (சுற்றுப்பிரகாரம்)
5. பாதம (அடித்தளம் - பாதம்)
6. வாகல்கட (வாகல்கடம்)
7. பேசா வலலு (புஸ்பபீடம்)
8. கர்பய (அண்டம்)
9. ஹத்தரெஸ் கொட்டுவ (சதுரக்கோட்டம்)
10. தேவதா கொட்டுவ (தேவகோட்டம்)
11. கொத் கரல்ல (சத்திராவலி)
12. கொத்த (சிகரம்)

### இலங்கையின் பழைமை வாய்ந்த தூபிகள்

- தூபாராமய
- ருவன்வெலிசாய
- அபயகிரிய
- ஜேதவனாராமய
- ரன்கொத்விகாரை
- கிரி விகாரை
- ஹங்குரன் கெத்த ரஜமகா விகாரைத் தூபி

**தூபாராமய**

மகிந்தனின் வருகைக்குப் பின் அமைக்கப்பட்ட முதல் தூபி இதுவாகும். இது தேவநம்பியதீசனால் கட்டப்பட்டது. இது ஆரம்பத்தில் தானியக் குவியல் வடிவமாக இருந்தது. இது தற்போது மணி வடிவத்தைக் கொண்டுள்ளது. இது 63 அடி உயரமுடையது. இது வட்டதாகேயுடனான தூபி ஆகும்.

**ருவன்வெலிசாய**

துட்டகைமுனு மன்னனால் அநுராதபுரத்தில் கட்டப்பட்டது. இது நீர்குமிழ் வடிவமுடையது. இது மகாதூபி, ஸ்வர்ணமாளி தூபி என்றும் அழைக்கப்படுகிறது. தற்போது இது 350 அடி உயரமுடையது. இதன் விட்டம் 300 அடியாகும். நான்கு திசைகளையும் நோக்கிய நான்கு வாகல்கடங்கள் இங்குண்டு.

**அபயகிரிய** :-

அபயகிரி, பயாகிரி, வடக்கு சைத்திய என்ற பெயர்களாலும் இது அழைக்கப்படும். கி.மு. முதலாம் நூற்றாண்டில் வட்டகாமினி அபய (வலகம் பா) மன்னனால் அநூராதபுரத்தில் இது கட்டப்பட்டது. தற்போது இது 235 அடி உயரமுடையது. 310 அடி விட்டமுடையது. கிரி எனப்படும் சமண சமயத்தவரின் ஆச்சிரமம் இருந்த இடத்தில் இத் தூபியை அமைத்து திஸ்ஸ எனப்படும் பிக்கு (துறவி) ஒருவருக்கு காணிக்கையாக வடிங்கருப்பட்டிகள் கூறப்படுகிறது.

**ஜேதவனராமய** :-

இது மகாசேன மன்னனால் அநுராதபுரத்தில் கட்டப்பட்டது. தற்போது இது 232 அடி ஆவதோடு, தூபியின் நாற்றிசைகளிலும் 4 வகல்கடங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

**ரன்கொத் விகாரை** :-

நிசங்கமல்ல மன்னனால் பொலநறுவையில் இது கட்டப்பட்டது. தூபியின் ஹதரெஸ் கொட்டுவயின் (சதுரக் கோட்டத்தின்) எல்லா முகத்திலும் சூரியனை அடையாளப்படுத்திச் சக்கரங்கள் காணப்படுகின்றன. இது 200 அடி உயரமுடையது. அடித்தளம் 186 அடி சுற்றளவுடையது. இது நீர்க் குமிழ் வடிவமுடையது.

**கிரி விகாரை** :-

பராக்கிரமபாகு மன்னனுடைய மகாராணியான சுபத்திராவதி அவர்களால் பொலநறுவையில் கட்டப்பட்டது. இது நீர்க் குமிழ் வடிவமுடையது. 264 அடி சுற்றளவைக் கொண்டது. 88 அடி விட்டமுடையது. தற்போது இது 80 அடி உயரமுடையது. நான்கு திசைகளையும் நோக்கி நான்கு சிலை மனைகள் உள்ளன.

**ஹங்குரன்கெத பொத்குல் விகாரையின் தூபி** :-

- கண்டி காலத்திற்குரிய இத்தூபி ஹங்குரன்கெத விகாரையின் சிலை மனையினுள் கட்டப்பட்டுள்ளது.
- சிறிய தூபியான இது 14 அடி 10 அங்குலம் உயரத்தையும் 24 அடி 5 அங்குலம் விட்டத்தையும் கொண்டுள்ளது.

- விகாரையினுள் உயரமாக அமைக்கப்பட்ட சதுர வடிவமான மேடையில் வட்டவடிவமான மலுவையின் (தரையின்) மேல் தூபி கட்டப்பட்டுள்ளது.
- இத்தூபியின் விசேட அம்சமாவது தூபியின் மேற்பரப்பில் அழகான அலங்கார வேலைப்பாடுகள் வரைந்துள்ளமையாகும்.
- சிவப்பு, செம்மஞ்சள் மற்றும் மஞ்சள் நிறங்கள் அதிகமாக உபயோகித்து இரேகைகளைக் கொண்டு தூபியின் பேசாவலலு மீது பலாபெத்தி அலங்காரங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.
- தூபியின் கர்பய (அண்டம்) மேகங்கள் மற்றும் அரச இலைகளாலும் சதுரக்கோட்டம், தேவ கோட்டம் மற்றும் சிகரம் கொடி வலை, மலர் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

## கணிப்பீடு

- இலங்கையில் தூபிகள் உருவான விதத்தையும் வளர்ச்சியடைந்த விதத்தையும் கலந்துரையாடுக.
- இலங்கைத் தூபிகளின் கட்டமைப்பையும் அதன் பகுதிகளையும் விபரிக்க.
- இலங்கையின் வரலாற்று ரீதியான தூபிகளைக் குறிப்பிடுக.
- தூபிகளின் கட்டட நிர்மாண இயல்புகளைப் பற்றிக் கலந்துரையாடுக.
- இத் தூபிகளைக் கட்டப் பெறப்பட்ட அரச அனுசரணைகளும், கட்டப்பட்ட காலப் பகுதிகளும் அடங்கிய அட்டவணை ஒன்றைத் தயாரிக்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.4 : இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.4.1 :** வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்களை கற்றறிவோம்.
- ஆசன கர
- போதி கர
- பதான கர
- உபோசத கர
- ஜந்தா கர

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இலங்கையின் மலைக் குகை ஓவியங்கள், உருவப்படங்கள், இறுவெட்டுக்கள், மேன்தலை எறியி, கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணிப்புகளுக்குக் காரணமான காரணிகளைக் கலந்துரையாடுவார்.
- அந் நிர்மாணிப்புகளில் காணப்படும் கட்டட நிர்மாண அங்கங்களையும் கலைப் பண்புகளையும் விவரித்துக் கூறுவார்.
- அந் நிர்மாணிப்புகளில் உபயோகிக்கப்பட்டுள்ள ஊடகங்களைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- அந் நிர்மாணிப்புகளுக்குச் செல்வாக்குச் செலுத்திய வெளிநாட்டுக் கட்டட நிர்மாணிப்புக் கலை பற்றி ஆராய்வார்.
- நிர்மாணிப்புகளை மதிப்பிடுவார், நயந்துரைப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல் , கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல், கலந்துரையாடல் முறை

**பாட விடயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

**ஆசனகர :- (ஆசனத்தை சுற்றியுள்ள மண்டபம்)**

போதிசத்துவர் புத்த நிலையை அடையும் போது வீற்றிருந்த வஜிராசனத்தை அடையாளப் படுத்துவதற்காக கல்லால் அதனை அமைத்தனர். அதனைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதி ஆசனகர எனப்படும்.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் 'புலுகுனாவ' எனும் இடத்திலும் அநுராதபுர மாவட்டத்தில் கெபிதிகொல்லேவ ஹல்மில்லவெட்டிய எனும் கிராமத்திலும் அநுராதபுர காலத்துக்குரிய பழைமையான 'ஆசனகர' கண்டெடுக்கப் பட்டுள்ளது.

**போதிகர :- (அரசமரத்தைச் சுற்றியுள்ள மண்டபம்)**

- அரச மரத்தைச் சுற்றி அதன் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கூரையுடன் கூடிய சக்மன் மலுவவையும் (வலம் வரும் பகுதி) சுவர்களையும் கொண்ட கட்டடம் ஒன்றாகும்.
- சதுரம், வட்டம் எனும் வடிவங்களைப் போலவே வேறு வடிவங்களிலும் போதிகர அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.
- அரச மரத்தின் பாதுகாப்புக்கும், மரத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பக்தர்களுக்கு நிழலைக் கொடுக்கவும் இது அமைக்கப்பட்டுள்ளது.
- அரச மரத்தைச் சுற்றியுள்ள சுவர், வலம் வரும் பகுதி, அதனைச் சுற்றி நீர் வடிந்தோட அமைக்கப்பட்ட வடிகால் அமைப்புத் தொகுதி, வலம் வரும் பகுதியின் மேற் பகுதியில் கற்றூண்கள் மீது அமைக்கப்பட்ட கூரை என்பன போதிகரவின் பொதுவான கட்டட நிர்மாணிப்புத் தொகுதிகள் ஆகின்றன.
- குருணாகல் நில்லகம போதிகரய, பண்டுவஸ்நுவர போதிகர, அம்பாந்தோட்டை படிகெம்கல போதிகர, லாகுகல மங்குல் மகா விகாரை போதிகர என்பன முக்கியமான போதிகர சிலவாகும்.

**பதானகர :- (பிக்குமார் தியானம் செய்யும் மண்டபம்)**

- தியானம் செய்யும் பிக்குமாருக்காகக் கட்டப்பட்ட கட்டட நிர்மாணிப்புத் தொகுதியாகும்.
- கல்லேடுகளில் இது 'பியன் கல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை 'தபோ வன' என்றும் அழைப்பர்.
- பதானகர அமைந்த நிலப்பரப்பில் சக்மன் மலு (உலாவும் பகுதி) 'குட்டி' (சிற்றறைகள்), கல்லால் கட்டப்பட்ட குளங்கள் என்பன உள்ளன.
- பதானகரவைச் சுற்றி அதன் பாதுகாப்பைக் கருதி அமைக்கப்பட்ட அகழியும் கானப்படுகிறது. ஒப்பமாக்கப்பட்ட கற்றகடுகள் பதித்து இது நிர்மாணிக்கப்பட்டது.
- காட்டில் வாழும் பிக்குமார் தியானம் செய்வதற்காகவே இது கட்டப் பட்டது.
- கற் பாலம் ஒன்றினால் இணைக்கப்பட்டுள்ள தங்கும் அறையும் முன் பக்கத்தில் திறந்த மண்டபமும் இதன் அங்கங்களாக அமைகின்றன. 'பஸ்சீமாராமய' இதற்கு உதாரணமாகும்.

**உபோசத்த கர :- (போயா தின கருமங்கள் செய்யக் கூடும் மண்டபம்)**

- பிக்குமார் போயா தினக் கருமங்கள் நிறைவேற்றுவதற்காக ஒன்று கூடிய கட்டடமாகும்.

**லோவாமகாபாய :-**

- துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்டது. இது அநுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மேன்மையான கட்டடமாகும்.

- ஒன்பது அடுக்குகளைக் கொண்ட இது நீளம், அகலம், உயரம் என்பன சமனான விதத்தில் கட்டப்பட்ட கட்டடமாகும்.
- இதன் கூரை உலோக (செப்பு) ஓடுகளால் வேயப்பட்டு இருந்ததால் லோவாமகாபாய எனப்படுகிறது.
- தற்போது இதன் தரை மீள அமைத்த 1600 தூண்கள் காணக் கூடியதாக இருக்கின்றன.

**ஐந்தாகர :- (ஸ்நானம் செய்ய அமைக்கப்பட்ட கட்டடம்)**

- (பிக்குமார் தங்குமிடம்) ஆராமயில் வசித்த பிக்குமார் ஸ்நானம் செய்வதற்காக உபயோகப்படுத்திய கட்டட அமைப்பாகும்.
- நோயற்று ஆரோக்கியமாக வாழ மூலிகைகளிலிட்டு சூடான நீராவியை உறிஞ்சவும், சுடுநீரால் ஸ்நானம் செய்யவும் வசதிகளுடன் கூடியவாறு இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- சதுர அமைப்புடன் காணப்படும் இக்கட்டடத்தின் மத்தியில் சதுர அறை ஒன்றும் அதன் மத்தியில் நீர் நிரப்ப ஒரு தடாகமும் காணப்படுகிறது.
- தடாகத்துடனான இவ்வறை கற்றகடுகளால் நிர்மாணிக்கப்படட்டுள்ளது.
- அபயகிரிய, மகாவிகாரை, மிகிந்தலை, அரங்கலே போன்ற இடங்களில் ஐந்தாகார காணப்படுகின்றது.

## கணிப்பீடு :-

- வரலாற்று ரீதியான கட்டடங்கள் கட்டட ஏதுவான காரணங்களைக் கலந்துரையாடுக.
- இந் நிர்மாணிப்புகளுக்கு உபயோகித்த ஊடகங்கள், அவற்றில் காணப்படும் கட்டட நிர்மாணப் பண்புகளையும் கலைப் பண்புகளையும் விபரிக்க.
- இக் கட்டட நிர்மாணிப்புகளுக்கு செல்வாக்குச் செலுத்திய வெளிநாட்டுக் கட்டட நிர்மாணிப்பு பண்புகளைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.5 : தூபிகளையும் ஏனைய வரலாற்று ரீதியான கட்டடங்களுடன் தொடர்புடைய நிர்மாணிப்புகளையும் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.5.1 : தூபிகளையும் ஏனைய வரலாற்று ரீதியான கட்டடங்களுடன் தொடர்புடைய நிர்மாணிப்புகளையும் மதிப்பிடுவோம்.**

- வாகல்கடம்
- சந்திரவட்டக்கல்
- முறகல (காவற்கல்)
- கொரவக்கல (கைப்பிடி)
- படிவரிசை
- புன்கலச (நிறைகுடம்)

**பாடவேளைகள்** : 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :** புராதன கட்டங்கள் சார்ந்த செதுக்கல்கள் அடங்கிய நிழற்படங்கள், காணொளிகள் உள்ளடங்கிய இறுவட்டுக்கள், கணனிகள்

**கற்றற் பேறுகள்** :

- பழைமையான சமயம் சார்ந்த மற்றும் வரலாற்று ரீதியான கட்டடங்களுடன் தொடர்புடைய நிர்மாணிப்புகளின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியும் பற்றிக் கலந்துரையாடுவார்.
- கலைப் பண்புகள், ஊடகப் பயன்பாடு, நுட்ப முறைகள் என்பவற்றை விளக்குவார்.
- இக் கலை நிர்மாணிப்புகள் தொடர்பாக எழுந்திருக்கும் கருத்துகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணை புரிபவை:**

- சந்திரவட்டக்கல், காவற்கல், கைப்பிடி, படிவரிசை என்பன பழைமையான சமய, வரலாற்று ரீதியான கட்டடங்களின் நுழைவாயில்களில் காணக்கூடியதாக உள்ளன.
- ஆரம்ப காலத்தில் இந் நிர்மாணிப்புகள் அனைத்தும் செதுக்கல் வேலைப்பாடுகள் அற்றதாகக் காணப்பட்டன.

- காலங்களைக் கருதும் போது வெளித்தோற்றம், அலங்கரிப்பு முறை என்பவற்றுக்கிடையில் வேறுபாடுகள் காணக்கூடியதாக இருந்தன.
- இவை பொழியப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## வாகல் கடம்

- தாதுகோபத்துடன் தொடர்புடைய கலை நிர்மாணிப்பாகும். தற்போது வாகல் கடம் என்று அழைக்கப்படும் இது முன்னர் 'ஆதிமுக்க, ஆயக்க, ஆயிக்க' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.
- தூபிக்கு அழகு, பாதுகாப்பு என்பன தரும் விதத்தில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- பெரியளவிலான தாதுகோபங்களில் கர்பயவுடன் (அண்டத்துடன்) அதன் அடிப்பகுதியில் நாற்றிசையையும் நோக்கியிருக்கும் விதத்தில் இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இது 5 தரைப் பகுதிகள் ஒன்றிணைந்தவையாகக் காணப்படுகின்றது.
- வாகல்கடத்தின் கீழ் பகுதி கல்லினாலும், மேற் பகுதி செங்கல்லினாலும் நிர்மாணிக்கப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன.
- வாகல்கடத்தின் இரு புறத்திலும் விசித்திர வேலைப்பாடுகள் கொண்ட உயரமான இரு கற்றூண்கள் உள்ளன. அத் தூண்களில் நாற்றிசைகளையும் குறிக்கும் விதத்திலான யானை (கிழக்கு), குதிரை (மேற்கு), எருது (தெற்கு), சிங்கம் (வடக்கு) என்று உருவங்கள் பொழியப்பட்டுள்ளன.
- வாகல்கடத்தின் கிடைப்பக்கமாக உள்ள மணியுருக்கட்டு (பொரதம்) உருவங்களைக் கொண்டதாக உள்ளன. அவை வாமன (குள்ளர் உருவம்) அன்னம், யானை உருக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

- மிகிந்தலை கண்டக சைத்தியத்தில் உள்ள கிழக்குப்புற வாகல்கடயே தற்போது எஞ்சியிருக்கும் மிகப்பழைமை வாய்ந்ததும், கலை வேலைப்பாடுகளைக் கொண்டதுமான வாகல்கடம் ஆகும்.
  - கண்டக சைத்தியத்தின் மணியுருக்கட்டு (பொரதம்) அமைப்புகளுக்கு இடையில் கலை அம்சத்துடனான (குள்ளர்) முயலகர்கள் காணப்படுகின்றனர். கிழக்கு வாகல்கடத்தின் வலப்புறத்தில், முயலகன் மத்தியில் பிள்ளையார் உருவம் பொழியப்பட்டுள்ளது. அவ்வுருவின் இரு புறத்தில் இருக்கும் முயலகன் பிள்ளையாரை நமஸ்காரம் செய்யும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன
  - முயலகன் உருவங்களுக்கு கீழே அன்னங்களின் உருவங்கள் ஒரு வரிசையும் கீழ் புறத்தில் தலை முன்னங்கால்கள் கொண்ட யானை உருவங்களும், மணியுருக்கட்டு களுக்கிடையில் (பொரதம்) வரிசையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- மிரிஸ்ஸவெட்டிய, அபயகிரி, ஜேதவனராம தாதுகோபங்களை அண்மித்தும் வாகல்கடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

### சந்திர வட்டக்கல்.

- சூரிய சந்திரக் கல், ஆரோக சந்திர, பத்ம சீலா, சந்திரகாந்த கல் எனும் பெயர்களால் ஆரம்பகாலத்தில் சந்திரவட்டக்கல் அழைக்கப்பட்டது.
- பழைமையான கட்டடங்களுக்கு பிரவேசிக்கையில் படிவரிசை ஆரம்பிக்கும் இடத்தில் முதல் படியாக இடப்பட்டிருக்கும். இது கற்றகட்டில் பொழியப்பட்ட ஒரு நிர்மாணிப்பாகும்.

- அநுராதபுர காலப் பகுதியில் இருந்து கண்டிக் காலம் வரை காணப்பட்ட சந்திர வட்டக் கல்லின் அமைப்பும் அலங்கரிப்பு முறைகளும் காலத்துக்கு ஏற்ப பல மாற்றங்களுக்கு உள்ளாகின.
- ஆரம்ப காலத்தில் காணப்பட்ட சந்திர வட்டக் கல் சதுர வடிவத்தைக் கொண்டிருந்ததோடு செதுக்கல்களின்றிக் காணப்பட்டது. பின்னர் அரைவட்ட வடிவத்தைப் பெற்றதோடு செதுக்கல்களின்றி இருந்தது.
- அநுராதபுர இராணி மாளிகை, ரத்ன பிராசாதய, சிறி மகாபோதி (புனித வெள்ளரசு மரம்) ருவன்வெலிசாய, போன்ற இடங்களில் கலைப் பண்புகள் கொண்ட சந்திர வட்டக்கல் காணப்படுகிறது. இவை அரை புடைப்பு முறையில் பொழியப்பட்டவையாகும்.
- அநுராதபுர காலத்துச் சந்திரவட்டக்கற்களில் மிகவும் கலை அம்சத்துடன் கூடியது இராணி மாளிகையில் இருப்பதாகும். இதன் கலைப் பண்பையும் கருத்து வெளிப்பாடும் பற்றி அறிஞர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

**பொலநறுவை காலத்துச் சந்திரவட்டக் கல்.**

- இக் காலத்தில் சந்திர வட்டக்கல் பல மாற்றங்களுக்குள்ளானது.
- வெளித்தோற்றம் அரை வட்டத்தை விடச் சற்று அதிகரித்துக் காணப்பட்டது.
- அநுராதபுரக் காலத்து சந்திரவட்டக் கல்லில் காணப்பட்ட விலங்குகளின் வரிசையில் இருந்த எருது இந்து மத செல்வாக்கின் பயனாகப் பொலநறுவைச் சந்திரவட்டக் கல்லில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.
- வலஞ் சுழியாக ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் விலங்குகள் வெவ்வேறான நிரைகளில் செல்லும் விதத்தில் பொழியப்பட்டுள்ளன.
- அநுராதபுர காலத்துச் சந்திரவட்டக் கற்களில் காணப்பட்ட யானை, குதிரை, எருது, சிங்கம் என்பவற்றின் உருவங்கள் பொலநறுவை காலத்தில் மாற்றத்துக்குள்ளானது.
- இக் காலத்தில் காணப்பட்ட கலைப் பண்புகளுடன் கூடிய சந்திரவட்டக்கல் பொலநறுவை வட்டதாகே, கிரிவெஹெர, பத்த சீமா மாலக்கய எனும் இடங்களில் காணப்படுகின்றன.

**கண்டிக் காலத்துச் சந்திர வட்டக் கல்** :-

- இக் காலத்தில் சந்திர வட்டக் கல்லின் அமைப்பும் செதுக்கல்களும் முழுமையாக மாற்றமடைந்தது.
- அரை வட்ட அமைப்பு முக்கோண அமைப்பை நெருங்கியிருந்தது.
- சந்திர வட்டக் கல்லின் நிரைகள் நீக்கப்பட்டு, மத்திய பகுதியில் தாமரை மலர் முழுமையாக பொழியப்பட்டது. விலங்குருவங்களுக்குப் பதிலாக கொடிபின்னல் அலங்காரங்கள் அதிகம் காணப்பட்டன.
- சந்திர வட்டக்கல் படிவரிசையுடன் தொடுக்கும் இடத்தில் ஒன்றரை அடி அகலமான நிரையொன்று சேர்க்கப்பட்டது. இப்பகுதியில் ஆரம்பிக்கும் கொடிபின்னல் அலங்காரம் மத்தியில் உள்ள தாமரை மலரைச் சுற்றிச் செல்லும் விதத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.
- அதன் அர்த்தம் குறைவாகக் காணப்படினும், கண்டி தலதா மாளிகையிலும், ஹங்குரன் கெத்த பொத்குல் விகாரையிலும் உள்ள சந்திர வட்டக் கற்கள் உயர்வான பண்புகளைக் கொண்டுள்ளன.

**காவற்கற்கள் (முறகல)**

- இது நாக சிலா, அரக்கல, ஆரக்சா கல என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.
- காவற்கற்கள் படிவரிசையில் இரு புறத்தில் கைப்பிடிக்கு முன்னால் செங்குத்தாக அமைக்கப்பட்டுள்ளன.
- மிகவும் ஆரம்பகாலத்தில் காணப்பட்ட காவற்கற்கள் செதுக்கல்கள் இன்றி செவ்வக வடிவில் நீளமாக அமைந்தன.
- பின்னர் நீளமான செவ்வக வடிவான கற்றகட்டின் உச்சியின் இரு புறமும் வளைந்து காணப்பட்டது. அதன் மத்தியில் மேல் தள்ளிய (குடுமி) ஒரு பகுதியுடன் காவற்கற்கள் நிர்மாணிக்கப்பட்டன.
- புன்கலச (நிறைகுடம்), முயலகங்கள், நாக உருவங்கள், (ஐந்து தலை, ஏழு தலையுடைய) நாக ராஜ உருவங்கள் (குடித்தலைவர்கள்), குடித்தலைவரும் அவரது மனைவியும் என்று பல செதுக்கல்கள் பொழியப்பட்டு காவற்கள் வளர்ச்சியடைந்தது.
- நிறைகுடத்துடனான காவற்கற்கள் - குட்டம் பொக்குண, இசுருமுனிய விகாரை.
- நாக வடிவத்துடனான காவற்கற்கள் - அவுக்கன விகாரை, மெதிரிகிரிய வட்டதாகே.
- முயலகங்களைக் கொண்ட காவற்கற்கள் - இசுருமுனிய, அபயகிரி விகாரை, முதலாம் விஜயபா மன்னனுடைய அரண்மனைவாசல் (சங்கநிதி, பத்மநிதி காவற்கற்கள்)
- நாக வடிவத்தைக் கொண்ட காவற்கற்கள் ரத்ன பிராசாதய, கபராராமய (குடித்தலைவனின் வடிவம்)
- சோடி உருவங்களைக் கொண்ட காவற் கற்கள் - மகாசென் அரண்மனையின் கிழக்குத் திசையின் காவற்கற்கள் (குடித் தலைவனும் அவரது மனைவியும்) ருகுனவின் தெமட்டமல் விகாரை.

**செட்டைக்கல் கைப்பிடி (கொரவக் கல)**

- இது கரவக்கல, கரஅத்கல, கையொரு கல, கையோரு கல எனும் பல பெயர்களால் அழைக்கப்பட்டது.
- கொரவக்கல முன்னர் செதுக்கல்கள் இன்றிய வளைந்த ஒரு கைப்பிடியாக நிர்மாணிக்கப்பட்டது.
- படிவரிசையின் உறுதிக்காகவும், படிவரிசையில் ஏறிச் செல்ல உதவும் ஒரு கைப்பிடியாகவும் இது நிர்மாணிக்கப்பட்டது.
- கைப்பிடியின் வெளித்தோற்றமும் அதன் செதுக்கல் வேலைப்பாடுகளும் காலத்துக்கு ஏற்ப மாற்றங்கள் அடைந்தன.
- அநுராதபுரம் பொலநறுவைக் காலத்து கைப்பிடிகளில் மகரத்தின் வாயில் இருந்து வெளியேறும் கொடியிலை அலங்காரங்களைக் காணலாம்.
- அநுராதபுர காலத்தில் கல்லினாலும், பொலநறுவை காலத்தில் கல்லைத் தவிர்ந்து சுண்ணாம்புச் சாந்தினாலும் செங்கல்லினாலும் கைப்பிடிகள் நிர்மாணிக்கப்பட்டன.
- ஆரம்ப காலத்தில் கைப்பிடிக்கு கீழே உள்ள கற்றகட்டுப் பகுதியில் உட்புறமும் வெளிப்புறமும் எந்த வித செதுக்கல் வேலைப்பாடுகளும் இன்றிக் காணப்பட்டது. ஆனால் பிற் காலப்பகுதிகளில் அவை செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டது.
- அபயகிரிய கைப்பிடியில் 'புன்கலச' (நிறைகுடமும்), இசுருமுனிய கைப்பிடியில் யானை உருவங்களும், பொலநறுவை வட்டதாகேயில் சிங்க உருவமும் இடப்பட்டிருக்கின்றன.

- பொலநறுவை இலங்காதிலக்க சிலை மனையின் வாயில் அருகே உள்ள கைப்பிடியில் கொடியிலைக்கு கீழே உட்பகுதியில் குடித்தலைவனின் மனைவியும் பெண் குள்ளர்கள் இருவரும் செதுக்கப்பட்டுள்ளன.
- அநுராதபுர இராணி மாளிகையின் கைப்பிடி சிறப்பான கலை வேலைப்பாடுகள் அதிகம் கொண்டதாகக் காணப்படுகிறது.
- வேலுவனராமய, கிரிவிகாரை, இலங்காதிலக்க, வட்டதாகே, பத்த சீமா பிராசாதய, ராஜவேஷீபுஜங்க மண்டபம் ஆகியவற்றில் பொலநறுவை காலத்து கைப்பிடிகள் காணப்படுகின்றன.
- தம்பதெனிய ரஜமகாவிகாரையின் தூபகர வாயிலில் உள்ள கைப்பிடியில் மகர உருவுக்குப் பதிலாக யானை உருவம் இடப்பட்டுள்ளது.
- கம்பளைக் காலத்தில் இருந்து *'கஜசிங்க'* உருவம் இடப்பட்டு வந்தது. இலங்காதிலக்க விகாரையிலும் கடலாதெனிய விகாரையிலும் உள்ள கைப்பிடிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.
- கண்டிக் காலத்தில் மகர வாயிலில் இருந்து வெளியேறும் விதத்திலான கொடியிலைக்குப் பதிலாக யானை தும்பிக்கை கொண்ட கைப்பிடிகள் நிர்மாணிக்கப்பட்டன.

**படிவரிசை (சோபான பந்திய)**

- கல்லால் நிர்மாணிக்கப்பட்ட படிகள் செதுக்கல்கள் உள்ளவை, அற்றவை என இரு வகைப்படும்.
- செதுக்கல் வேலைப்பாடு அற்றபடிகள், மலைகள், பாறைகள், குன்றுகள் ஏறுவதற்குப் பயன்பட்டன.
- வணக்கத் தலங்களிலும் வரலாற்று ரீதியான கட்டடங்களிலும் உள்ள படிகள் செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டிருந்தன.
- படியின் கால் மிதிக்கும் கிடைப் பகுதியில் செதுக்கல் வேலைப்பாடுகள் குறிப்பிட்டளவே காணப்பட்டன.
- படியின் செங்குத்துப் பரப்பில் செதுக்கல் வேலைப் பாடுகள் அதிகம் காணப்படுகின்றன.
- வணக்கத் தலம் ஒன்றில் எட்டுப் படிகள் காணப்படின் அது பௌத்த மதத்தின் எட்டுவிதமான பௌத்த கொள்கைகளை (ஆர்ய அஷ்டாங்கிக்க மார்கய) நினைவு படுத்துவதாக செனரத் பரணவித்தான கருத்து தெரிவித்திருக்கிறார்.
- அநுராதபுரத்தின் மகாசென, இராணி மாளிகை என்பவற்றின் படிகளில் வஜ்ஜிர, முயலக வடிவங்கள் மோடிப்படுத்தப்பட்டு காணப்படுகின்றன.
- கண்டி விஷ்ணு ஆலயத்தின் படிகளில் உள்ள செங்குத்துப் பரப்புகளில் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட அழகிய கொடியிலை செதுக்கல்கள், எல்லாப் படிகளிலும் மத்தியில் இருந்து இரு புறமும் பரவிச் செல்லும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

**நிறை குடம் (புன்கலச)**

- நிறைகுடம், பூரண கலசம் என்பன புன்கலசவை குறிக்கின்றன.
- சௌபாக்கியம், நிறைவு, அதிஷ்டம் புன்கலசத்தை அடையாளப்படுத்துகின்றன.
- வணக்கத்தலங்களிலும், மங்குல் பொக்குன அண்மித்த பகுதிகளிலும் புன்கலசத்தைக் (நிறை குடத்தை) காணலாம்.

- அநுராதபுரத்தின் காவற்கற்களிலும் வாகல்கட தூண் செதுக்கல்களிலும் புன்கலசம் அரைப் புடைப்பு முறையிலும் சிறு புடைப்பு முறையிலும் செதுக்கப்பட்டுள்ளன.
- அபயகிரிய கைப்பிடியில் இது அலங்கார வேலைப்பாட்டுக்காக உபயோகப்படுத்தப் பட்டுள்ளன.
- அநுராதபுரம் குட்டம் பொக்குணவில் பாரிய அளவிலான முழுப் புடைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்ட புன்கலசவைக் காணக்கூடியதாக இருக்கிறது.

## கணிப்பீடு

- சந்திரவட்டக் கல்லின் ஆரம்பம், வளர்ச்சி என்பன பற்றிக் கலந்துரையாடுக.
- காவற்கல்லின் ஆரம்பம், வளர்ச்சி பற்றிக் கலந்துரையாடுக.
- வாகல்கடம், சந்திர வட்டக்கல், காவற்கல், கைப்பிடி, படி வரிசை, புன்கலச ஆகியவற்றை நிர்மாணிக்க உபயோகித்த ஊடகம், நுட்பமுறைகள், உபயோகப்படும் விதம், கலைப்பண்புகள் என்பவை பற்றி ஆராய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6 : அநுராதபுரம் பொலநறுவை காலத்துக் கட்டட நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.6.1 : சிலை மனை (படிமாகர) நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.**

- திவங்க சிலை மனை
- தூபாராம சிலை மனை
- இலங்காதிலக்க சிலை மனை

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிலைமனையின் கட்டட நிர்மாணிப்பு அடங்கிய நிழற்படங்கள், காணொளிகள், இறுவெட்டுகள், கணினி இயந்திரங்கள், நிழற்படப் பிரதிகள், உருவப்படங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பொலநறுவை காலத்துச் சிலைமனைகளைக் குறிப்பிடுவார்.
- அந்நிர்மாணிப்புகளில் ஈடுபட்ட நோக்கமும் அவற்றில் செல்வாக்குச் செலுத்திய விடயங்களும் தொடர்பாகக் கலந்துரையாடுவார்.
- அந்நிர்மாணிப்புகளில் காணப்படும் கட்டட நிர்மாணிப்புப் பண்புகளை விளக்குவார்.
- சிலைமனைகள் நிர்மாணிக்க உபயோகித்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விளக்கிக் கூறுவார்
- அந் நிர்மாணிப்புகளில் உள்ள கலைப் பண்புகளை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- செயற்றிட்ட முறை / கலந்துரையாடல் முறை / ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பாவித்துக் கற்றல் கற்பித்தல் செயற் பாட்டைக் கட்டியெழுப்புக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

## பொலநறுவை காலத்துச் சிலைமனைகள் (படிமாகர)

- அநுராதபுர காலத்து படிமாகரவை விட பொலநறுவை காலத்து சிலைமனைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவை செங்கல்லை ஊடகமாகக் கொண்ட கெடிகே மரபைத் தழுவியுள்ளமை இதன் சிறப்பாகும். பொலநறுவைத் தூபாராம சிலைமனை, இலங்காதிலக்க சிலைமனை, திவங்க சிலைமனை என்பன இதற்கு உதாரணங்களாகின்றன.
- இக் கட்டடங்கள் செங்கல்லாலும் சுண்ணாம்புச் சாந்தினாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன
- அதன் கூரை செங்கல்லால் வில் வளைவு வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.
- தூபாராமயவின் கூரை பாதுகாப்பாக இருப்பதுடன் இலங்காதிலக்க, திவங்க ஆகியவற்றின் சிலை மனைக் கூரைகள் அழிந்துள்ளன.
- தூபாராமய சிலை மனைக் கூரை மிகவும் பாதுகாப்பாக இன்னமும் காணப்படுகிறது. இது பொலநறுவையிலுள்ள ஏனைய சிலை மனைகளை விடச் சிறியதாகும்.
- இக்கட்டடத்தின் சுவர் ஏழு அடி தடிப்பமுடையது. கூரை தாங்கி நிற்பதற்காகவே இது இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.
- மூன்று சிலை மனைகளினதும் உட்புற வெளிப்புறத் தோற்றம் ஒரே கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது.
- வெளிப்புறச் சுவரில் விமானங்களும் செதுக்கல்களும் காணப்படுகின்றன. இவை சுண்ணாம்புச் சாந்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவை வர்ணம் தீட்டப்பட்டும் இருந்திருக்கின்றன.
- இவை சிவ ஆலயங்களின் அமைப்பைத் தழுவியுள்ளன. அத்துடன் தென் இந்திய கட்டட நிர்மாணிப்புப் பண்புகளும் இவற்றில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

**திவங்க சிலை மனை**

- பொலநறுவையில் அமைந்த திவங்க சிலை மனை பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டது.
- திவங்க (மூவளைவு கொண்ட) புத்தர்சிலையொன்று கர்ப்பக் கிரகத்தினுள் அமைந்திருப்பதால் இது இப்பெயரால் அழைக்கப்படுகிறது.
- சிலை மனையின் வெளிப்புறச் சுவரில் சுண்ணாம்புச் சாந்தினால் நிர்மாணிக்கப்பட்ட சிம்ம உருவங்கள், அதற்குக் கீழே வரிசையாக முயலகங்கள், விமானங்களுள் அதிகளவிலான உருவங்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- புத்தர் சிலை, விமானங்கள், செதுக்கல்கள் அடங்கிய உட்சுவர்கள் அனைத்தும் சுண்ணாம்பு சாந்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணமும் இடப்பட்டு இருந்தன.
- சிலை மனைக்குள் நுழையும் போதே இடைமண்டபத்தினுள் இரு புறத்திலும் அசங்க, சச, விதுர, சுல்ல பதும, மைத்திரிப்பல, தேமிய, மகா சுதஸ்ஸன எனும் ஜாதகக் கதைகளும், கர்ப்பக் கிரகத்தினுள் புத்த பெருமான் சங்கச புரியை அடையும் காட்சியும் இடைமண்டபத்தில் தேவ ஆராதனையும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

**தூபாராம சிலை மனை :-**

- பொலநறுவையில் அமைந்த தூபாராம சிலை மனை செங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. இது வில் வளைவு வடிவில் அமைந்த கூரையினால் பாதுகாக்கப்படுகிறது.
- பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இது கட்டப்பட்டது.
- திவங்கசிலை மனையிலும் இலங்காதிலக்க சிலை மனையிலும் நின்ற நிலையில் உள்ள சிலைகள் இருக்கிற போதிலும் இச்சிலைமனையின் கர்ப்பக் கிரகத்தினுள் அமர்ந்த நிலை புத்தர் சிலை காணப்படுவதால் இதன் சிலை மனை சிறியளவில் காணப்படுகிறது.
- சிலை மனையைச் சுற்றியுள்ள சிம்ம உருவங்கள், அழகிய விமானங்கள், அதனுள் இருக்கும் தெய்வ உருவங்கள் என்பன செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும் அமைக்கப்பட்டுள்ளன.

**இலங்காதிலக்க சிலை மனை**

- பாரிய அளவிலான நின்ற நிலையில் உள்ள புத்தர் சிலையுடன் காணப்படும் சிலை மனை பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டதாகும். புத்தர் சிலையின் தலைக்குக் கீழ்ப்பட்ட பகுதி மட்டும் இப்போது காணக் கூடியதாக இருக்கிறது.
- இதன் சுவர்கள் 55 அடி உயரமுடையவை, மேல் மாடிக்கு ஏறிச் செல்ல சிறிய படிகள் உள்ளன.
- குறுக்கு வெட்டு முகம் சதுர வடிவத்தைக் கொண்ட கற்றூண்கள் சிலை மனையின் மத்தியில் எஞ்சியுள்ளன. (ஒரு புறத்தில் 17 தூண்கள் உள்ளன.) அதன் மீது பலகையால் நிர்மாணிக்கப்பட்டமேல் மாடியொன்று இருந்ததாகக் கருதப்படுகிறது.
- தலை வாயிலுக்கு இரு புறத்திலும் உள்ள பல்கோண வடிவமுடைய இரு தூண்களும் சிலை மனையின் கம்பீரமான தோற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன.
- வெளிப்புறச் சுவர் “ஸ்டெகோ” எனப்படும் சாந்தினால் செய்யப்பட்ட செதுக்கல்களைக் கொண்டுள்ளது.

## கணிப்பீடு

- பொலநறுவை இலங்காதிலக்க சிலைமனை, திவங்க சிலை மனை, தூபாராம சிலை மனை, ஆகியவற்றின் கட்டட நிர்மாணிப்புப் பண்புகளைக் கலந்துரையாடுக.
- அக் கட்டட நிர்மாணிப்பில் செல்வாக்கு செலுத்திய வெளிநாட்டுக் கலைப்பண்புகளைக் கலந்துரையாடுக.
- இக்கட்டடங்களில் காணப்படும் ஒத்த எதிர்ப் பண்புகளை ஆராய்க.
- சிலை மனைகள் நிர்மாணிப்பில் காணப்படும் கலைப் பண்புகளை மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6 : அநுராதபுரம் மற்றும் பொலநறுவைக் காலத்து கட்டடக் கலை நிர்மாணிப்புகள் பற்றிக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.6.2 : பொலநறுவைக்கால சிவாலயங்களைப் பற்றிக் கற்றறிவோம்**
- **சிவாலயம் இல. 1**
- **சிவாலயம் இல. 2**

**பாடவேளைகள் : 01**

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- பொலநறுவை சிவாலயத்தின் மாதிரிப்படங்கள், நிழற்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**
- சிவாலய நிர்மாணிப்புக்குச் செல்வாக்கு செலுத்திய தென் இந்திய பண்புகளை விளக்குவார்.
- பொலநறுவை சிவாலயத்தின் கட்டட நிர்மாணிப்புக்களின் பண்புகளை விளக்குவார்.
- சிவாலயத்தைக் கட்ட உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பவற்றைக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**
- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**
- பொலநறுவைக்கால சிவாலயத்துக்கு தென் இந்திய கட்டடக் கலையின் பண்புகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.
- வெட்டப்பட்ட கருங்கல்லினால் இது கெடிகே மரபுடன் நிரமாணிக்கப்பட்டுள்ளது.

**சிவாலயம் இல. 1**
- பாண்டிய கட்டடக் கலைப் பாணியில் 13ம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டது.
- வெட்டப்பட்ட கற்கள் பொருத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மண்டபம், இடை மண்டபம், கர்ப்பக்கிரகம் ஆகிய பகுதிகளைக் கொண்ட இந்து ஆலயமொன்றாகும்.

- தட்டையான கற்றகடுகளால் அமைக்கப்பட்ட கூரை மீது செங்கல்லால் உருவாக்கப்பட்ட சிகரம் சிதைவடைந்துள்ளது.
- இடை மண்டபமும் கர்ப்பக் கிரகமும் இணைக்கப்படும் கூரைப்பகுதியின் யன்னல்கள் புலிகளின் உருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- இதன் சதுர வடிவான கர்ப்பக் கிரகத்தின் மத்தியில் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
- கட்டடக் கலையின் சிறப்பம்சங்கள்
  - வெளிச் சுவர்களில் வெளித் தள்ளிய நிலையில் காணப்படும் தூண்கள்
  - விமானங்கள்
  - தாமரை வடிவிலான போதிகை அலங்காரங்கள்
  - விலங்குருக்களையும் சிங்க வாய்களையும் கொண்ட வெளித்தள்ளிய பகுதிகளைக் கொண்ட கல்லால் ஆன அடித்தளம்

**சிவனாலயம் இல. 2**

- பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த மிகப் பழைமை வாய்ந்த இந்து மதக் கட்டட நிர்மாணிப்பாகும்.
- இராஜ இராஜ சோழனால் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக கி.பி. 11 இல் இது கட்டப்பட்டது.
- சிதைவடையாமல் இன்று வரை இது காணப்படுகிறது. இக்கட்டடம் முற்று முழுதாக வெட்டப்பட்ட கருங்கல்லால் உருவாக்கப்பட்ட சிறிய ஆலயமாகும்.
- தென் இந்திய சோழ கட்டட நிர்மாணிப்புப் பாணியைக் கொண்டது.
- கட்டடக் கலையின் சிறப்பியல்புகள்
  - கூரான முகப்பைக் கொண்ட யன்னல்கள்
  - வெளித்தள்ளியவாறு அமைக்கப்பட்ட தூண்கள் தெய்வ உருவங்களுடனான விமானங்கள்
  - போதிகை அலங்காரங்களைக் கொண்ட மணியுருக்கட்டுக்கள்
  - எண்கோண வடிவிலான சிகரம்
  - முன் வாயிலில் செதுக்கல்களைக் கொண்ட எண்கோண வடிவிலான கற்றூண்கள்
- முன் வாசலில் உள்ள கல்லால் ஆன கதவு நிலை கட்டையாக அமைக்கப்பட்டுள்ளது.
- கர்ப்பக்கிரகத்தினுள் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- பொலநறுவைக் காலத்து சிவனாலயங்களின் அமைப்பை விபரிக்க.
- சிவாலயங்களில் காணப்படும் கட்டட நிர்மாணப் பண்புகள் மற்றும் அவற்றுக்குச் செல்வாக்குச் செலுத்திய கலைப்பண்புகள் என்பவற்றை விளக்குக.
- சிவாலயங்களை நிர்மாணிக்க உபயோகித்த மூலப்பொருட்கள், நுட்ப முறைகள் என்பவற்றைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6 : பொலநறுவைக் காலத்து கட்டட நிர்மாணிப்புக் கலையை ஆராய்ந்தறிவார்.**

**செயற்பாடு 7.6.3 : விஜயோத்பாய மற்றும் நிசங்கலதா மண்டபம் பற்றிக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- விஜயோத்பாய மற்றும் நிசங்கலதா மண்டபங்களின் நிழற்படங்கள், குகை ஓவியங்களின் காணொளிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- விஜயோத்பாய மற்றும் நிசங்கலதா மண்டபத்தின் நிர்மாணிப் புக்களுக்காக அடிப்படையாக இருந்த நோக்கங்கள் மத மற்றும் வெளிநாட்டுச் செல்வாக்குகளைப் பற்றிக் கலந்துரை யாடுவார்.
- அந்நிர்மாணிப்புக்களின் கட்டடக் கலை அம்சங்களை விபரிப்பார்.
- அந்த நிர்மாணிப்புக்களைக் கட்டியெழுப்புவதற்காக உபயோகித்த ஊடகம், நுட்ப முறைகள் மற்றும் கலை அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### விஜயோத்பாய (வைஜந்தி மண்டபம்)

- மகா பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டது. இது அவரது அரண்மனையும் எனப்படுகிறது.
- இக்கட்டட நிர்மாண அமைப்பு 7 மாடிகளையும் ஆயிரம் அறைகளையும் கொண்டது எனச் சூழ வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- எல்லாச் சுவர்களும் செங்கல்லால் அமைக்கப்பட்டள்ளது. இடைக்கிடையில் அதன் உறுதிக்காகக் கற்றூண்கள் இடப்பட்டுள்ளன.
- மேல்மாடி மரத்தால் அமைக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

- அரண்மனையின் பிரதான மண்டபத்தைத் தவிர ஏனைய அறைகளைச் சுற்றி சிறிய அறைகள் இரண்டு அல்லது மூன்று வீதம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.
- அரண்மனையின் மேல் மாடிக்குச் செல்லக் கருங்கல்லாலான அகலமான படிக்கல் வரிசை இருந்தது.
- அரண்மனையின் சுவர்கள் வெள்ளைச் சுண்ணாம்புச் சாந்தைக் கொண்டதென சான்றுகள் பெறப்பட்டுள்ளன.
- யானை, சிங்கம், நிறைகுடம் ஆகிய உருவங்களைக் கொண்ட செதுக்கல்கள் இங்குள்ளன.

**நிசங்கலதா மண்டபம்:**

- இது நிசங்கமல்ல மன்னனால் கட்டப்பட்டது. இது தலதா மலுவ கட்டடத் தொகுதிக்குரியது.
- தர்ம போதனையை செவிமடுக்கவும் புனித தந்தத்தை வழிபடவும் நிசங்கமல்லன் எனும் அரசன் இதனைக் கட்டுவித்தார் என்று கல்பொத்த எனும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- செவ்வக வடிவமுடைய மேடையைக் கொண்ட மண்டபத்தைச் சுற்றிக் கல்லால் நிர்மாணிக்கப்பட்ட கல்வேலியொன்று உள்ளது.
- மண்டபத்தின் மத்தியில் குமிழ் வடிவத்திலான சிறிய தாதுகோபம் உள்ளது. மண்டபத்துக்குள் நுழைய ஒரு நுழைவாயில் மட்டும் உள்ளது.
- தூபியின் அடிப்பகுதியில் அஞ்சலி முத்திரையுடன் மனித உருவங்களாலான வளையம் ஒன்றுள்ளது.
- தாமரைத் தண்டின் வடிவில் அமைந்த, வரிசையில் நான்கு வீதம் சந்தத்துடன் நிர்மாணிக்கப்பட்ட எட்டுக் கற்றூண்கள் இங்கு உள்ளன. ஒரு தூண் ஏழு அடி உயரமுடையது. இத்தூண்கள் மீது இடைக்கிடையில் போதிகை அலங்காரங்களுடன் தாமரை இலைகள் இருப்பதுடன் சகல தூண் உச்சிகளும் அரைவாசிக்கு மலர்ந்த தாமரை மலர்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

## கணிப்பீடு

- பொலநறுவை விஜயோத்பாய கட்டட நிரமாணிப்பின் பண்புகளை விளக்குக.
- நிசங்கலதா மண்டபத்தின் அமைப்பை விளக்குக.
- நிசங்கலதா மண்டபத் தூண்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6 : அனுராதபுர மற்றும் பொலநறுவை காலத்துக் கட்டட நிர்மாணிப்புக் கலையை ஆராய்ந்தறிவார்.**

**செயற்பாடு 7.6.4 : வட்டதாகே (தூபகர) நிர்மாணிப்பை மதிப்பிடுவோம்.**
- **பொலநறுவை வட்டதாகே**
- **திரியாய வட்டதாகே**
- **மெதிரிகிரிய வட்டதாகே**

**பாடவேளைகள் :** 1

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வட்டதாகேயின் தகவல்கள் உள்ள படங்கள், காணொளிகள் நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- வட்டதாகே கட்டடக்கலை நிர்மாணிப்பின் திட்டமைப்பு, தொழில் நுட்ப முறைகள் என்பவற்றைக் கலந்துரையாடுவார்.
- அக்கலை நிர்மாணிப்புக்களின் ஊடகப் பாவனை, நுட்ப முறைகளை ஆராய்வார்.
- பொலநறுவ, திரியாய, மெதிரிகிரிய வட்டதாகே நிர்மாணிப்புக்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- வட்டதாகே எனப்படுவது தாதுகோபத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட நிர்மாணிப்பொன்றாகும்.
- மழை வெயில் எனும் இயற்கை நிகழ்வுகளில் இருந்து தூபியைப் பாதுகாக்கும் நோக்குடன் இது கட்டப்பட்டுள்ளது.
- வட்டதாகே, தூபகர, சைத்தியகர, சேதியகர என்ற பல பெயர்களால் அழைக்கப் படுகிறது.

### பொலநறுவை வட்டதாகே

- மகா பராக்கிரமபாகு மன்னனால் இது கட்டப்பட்டதாக சூள வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பின்னர் நிசங்கமல்லலினால் புனரமைக்கப்பட்டதாக கல்பொத்த எனும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இதில் மேல் மண்டபம் கல்லால் அமைக்கப்பட்ட மணியுருக்கட்டுடனான சுவரைக் கொண்டது.
- வட்டதாகையில் மேல் மண்டபத்தின் மத்தியில் குமிழ் வடிவிலான தாதுகோபமொன்று உள்ளது. அதைச் சுற்றி நான்கு திசைகளை நோக்கி தியான முத்திரையில் இருக்கும் புத்த சிலைகள் நான்கு உள்ளன.
- வட்டதாகேயின் மாடிகள் மாலக்க என்று அழைக்கப்படுகிறது. இரு மாலக்கவினதும் நிலத்தில் கல் பரவப்பட்டுள்ளது.
- கீழ் மண்டபத்துக்குள் நுழைய ஒரு வாயிலும் மேல் மண்டபத்துக்குள் நுழைய நான்கு வாயில்களும் உள்ளன. சகல வாயில்களும் கைப்பிடிகள், சந்திரவட்டக்கற்கள், காவற்கற்கள், படிவரிசை என்பவற்றைக் கொண்டதாக உள்ளன.
- வட்டதாகேயின் முகப்பு தாங்கி நிற்பதற்காக ஒரு மையத்தையுடைய ஐந்து வரிசைகளில் கற்றூண்கள் அமைக்கப்பட்டு உள்ளதுடன் அதில் மூன்று வரிசைகள் வட்டவடிவிலான மேல் மாடியைச் சுற்றியுள்ளன. இதன் மூன்றாவது தூண் வரிசை, நான்கு இதழ்களைக் கொண்ட அழகிய பூ வேலைப்பாடுகளுடனான கற்றகடுகளைக் கொண்டது. அத்துடன் அவை சிறு மண்டபத்துக்கிடையில் அமைந்துள்ளன. இத்தூண் வரிசைக்கு உட்புறத்தில் வட்டதாகேயின் முகப்பைத் தாங்கி நிற்கும் செங்கல் சுவர் உள்ளது.
- ஏனைய இரு தூண் வரிசைகளும் வட்டவடிவிலான கீழ் மண்டபத்தை சுற்றிக் காணப்படுகின்றன.
- பொலநறுவைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரவட்டக்கல், காவற்கல் என்பன மேல் மண்டபத்துக்குள் நுழையவிருக்கும் வடக்குப் புற வாயிலில் காணப்படுகின்றன.

### திரியாய வட்டதாகே

- இது இரு மண்டபங்களைக் கொண்டது. முதலாவது மண்டபத்தை அடுத்துள்ள இரண்டாவது மண்டபத்தின் மத்தியில் தூபி காணப்படுகிறது. இது செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.
- முதலாவது மண்டபத்துக்குள் நுழைய நாற்றிசைகளிலும் நான்கு வாயில்கள் உள்ளன. அவ்வாயில்கள் அனைத்தும் கல்லாலான கதவு நிலை, கைப்பிடி, காவற்கல், சந்திரவட்டக்கல், படிவரிசை என்பவற்றைக் கொண்டுள்ளது.
- இதன் முகப்புத் தாங்கி நிற்பதற்காக ஒரு மையம் கொண்ட இரு வரிசைகளில் தூண்கள் உள்ளன. இத்தூண்கள் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளன. அவை செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.
- பிரதான நுழைவாயிலை நோக்கி நாற்றிசைகளிலும் மலர் ஆசனங்களைக் காணலாம்.
- கற்றகடுகளால் அமைக்கப்பட்ட வெளிச் சுவரின் ஒரு பகுதி சிதைவடைந்த நிலையில் உள்ளது. இம் மண்டபத்தின் அடிப்பகுதி கருங்கல்லால் ஆனது. இம் மண்டபத்தின் கூரையுடன் பொருந்தும் மரத்தூண்களை நடுவதற்கு அமைக்கப்பட்ட துளைகள் எஞ்சிய நிலையில் உள்ளது.

### மெதிரிகிரிய வட்டதாகே

- இது இரண்டு மண்டபங்களைக் கொண்டது. முதல் மண்டபத்தை அடுத்துள்ள இரண்டாவது மண்டபத்தில் செங்கல்லால் ஆன சைத்தியத்தின் சிதைவுகள் உள்ளன.
- இவ் வட்டதாகேயின் முகப்பைத் தாங்கி நிற்பதற்காக ஒரு மையத்துடனாக அமைந்த இரு கற்றூண் வரிசைகள் உள்ளன. வெளிப்புறத் தூண் வரிசை உயரம் குறைந்த சுவரை இணைத்துக் கட்டப்பட்டுள்ளது.
- இதன் தூண்களும் தூண் உச்சிகளும் செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. அச் செதுக்கல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாக உள்ளன.
- படிக்கல் வரிசை ஆரம்பிக்கும் இடத்திலுள்ள பிரதான நுழைவாயில் நுழை மண்டபத்தைக் கொண்டுள்ளது.

## கணிப்பீடு

- பௌத்த கட்டடக் கலை நிர்மாணிப்புகளில் ஒன்றான வட்டதாகேயின் அமைப்பு இயல்புகளை விபரிக்க.
- நிர்மாணிப்புக்கு உபயோகித்த ஊடகம், தொழில் நுட்பமுறைகள், நுட்ப முறைகள் என்பவற்றைக் கலந்தரையாடுக.
- கட்டடக் கலை நிரமாணிப்புகளில் ஒன்றான வட்டதாகேயின் கலைப்பண்புகளை மதிப்பிடுக.

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6 :** **அநுராதபுரம் பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணக் கலையை கற்றறிவார்.**

**செயற்பாடு 7.6.5 :** **குள நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.**

i) அநுராதபுரத்து குட்டம் பொக்குண (இரட்டைக்குளம்)
ii) இசுருமுனியவின் ரன்மசு உயன பொக்குண.
iii) பொலநறுவையின் குமார பொக்குண
iv) பொலநறுவையின் நெலும் பொக்குண (தாமரைக்குளம்)

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

குள நிர்மாணிப்புகளை சித்தரிக்கும் படங்கள், காணொளிகள், நிகழ்ச்சிகள் அடங்கிய இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- குளங்களைத் திட்டமிடல், அவற்றின் தொழில்நுட்ப முறைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- அக்கலை நிர்மாணிப்புகளில் உபயோகிக்கப்பட்டுள்ள ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பவற்றை ஆராய்வார்.
- அநுராதபுர, பொலநறுவை காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட குளங்களை ஒப்பிட்டு மதிப்பீடு செய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படைமுறை/ செயற்றிட்ட முறை/ குழுச்செயற்பாடு மூலம் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்தல்/ கலை நிர்மாணிப்புப் பிரதிகளை மதிப்பிடல்/ கலந்துரையாடல் முறை.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

## குளங்கள்:-

### i) அநுராதபுர குட்டம் பொக்குண

- அபயகிரி விகாரை நிலப்பரப்பில் அமைந்த மேன்மை வாய்ந்த கட்டட நிர்மாணிப்பொன்றாகும்.
- பிக்குமாரின் பாவனைக்காக இது கட்டப்பட்டது.
- இரு குளங்களைக் கொண்டது. அவை இரு காலப்பகுதிகளுக்குரியவை.
- செவ்வக வடிவமுடைய இக் குளம் ஒப்புரவாக்கப்பட்ட கற்களால் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

- வடக்குத் திசையில் உள்ள குளமே பழைமையானது. அது தென் திசையில் உள்ள குளத்தை விடச் சிறியது.
- வடதிசையில் உள்ள குளத்தில் இறங்க இரு படிவரிசைகள் உள்ளன. மகரவாய் அமைப்பைக் கொண்ட வாயில் மூலம் இதற்கு நீர் சேகரிக்கப்படுகிறது. இதில் நிரம்பும் நீர் நிலத்துக்கு அடியில் உள்ள வாய்க்கால் அமைப்பு மூலம் தென் திசையில் உள்ள பெரிய குளத்துக்கு வடிந்தோடும்.
- தென் திசையில் உள்ள குளத்தில் இறங்க மூன்று படிவரிசைகள் உள்ளன.
- ஒவ்வொரு படிவரிசைகளின் இரு புறத்திலும் முழுப் புடைப்பு முறையில் கல்லால் அமைக்கப்பட்ட கலை வடிவமுடன் கூடிய "புன்கலசங்கள்" உள்ளன.
- சிறிய குளத்தின் வடக்குப் புறமாக நாக வடிவமுடைய காவற்கல்லொன்று உள்ளது.

### ii) இசுருமுணிய ரன்மசு உயன (பூங்காக்) குளம்

- நாற்பது ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட "ரன்மசு உயன" இந்தியாவின் தொன்மையான அரச பூங்காப் பண்புகளைக் கொண்டிருக்கிறது.
- குளிக்கும் போது வெளியேறும் மேலதிக நீர் கீழே அமைக்கப்பட்ட அல்லி மலர் வடிவில் அமைக்கப்பட்ட குளங்களை நோக்கிச் செல்லும் விதத்தில் திட்டமிடப்பட்டு கட்டப்பட்டுள்ளது.
- அரச குலத்தவர் ஸ்நானம் செய்வதற்காக இது அமைக்கப்பட்டது.
- தொழில் நுட்பமும் கலை அம்சமும் இணைந்து அமைக்கப்பட்டுள்ளது.
- குளத்துக்கு அருகில் உள்ள பாறை மீது நீராடும் யானைகளின் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன.
- இயற்கை சூழலுக்குப் பொருந்தும் விதத்தில் அதற்கு இணைந்ததாக குளம் கட்டப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

### iii) பொலநறுவை குமார பொக்குண :-

- பராக்கிரமபாகு மன்னனுடைய அரண்மனையில் "மகுல் உயனவில்" அமைந்த (சிலா) கல்லாலான இக்குளம் வம்சக் கதைகளில் "சிலா பொக்கரணி" என அழைக்கப்பட்டது.
- உள் நகர பெருஞ்சுவரில் இருந்து குளத்துக்குச் செல்ல மேலிருந்து கீழ் நோக்கி படிப்படியாக சிறுத்து வரும் விதத்தில் கல்லாலான படிக்கல் வரிசை காணப்படுகிறது.
- மேற்குத் திசையில் இருந்தும் குளத்தில் இறங்க படிவரிசைகள் உள்ளன.
- வாயிலின் இரு புறத்திலும் இரு சிம்ம உருவங்கள் உள்ளன.
- மேற்கு திசையில் மகர வடிவத்தைக் கொண்ட பீலிகள் இரண்டு உள்ளன.
- பூமிக்கு அடியில் அமைக்கப்பட்ட குழாய்கள் மூலம் உள்நகர சுவரின் அடியில் இருக்கும் பெரு வாய்க்காலில் இருந்து இக் குளத்துக்கு நீர் நிரம்பும் கிழக்குத் திசைப் பக்கமாக உள்ள குளத்தினுள் அமைக்கப்பட்ட வாய்க்கால் ஒன்று மூலம் குளத்தில் இருந்து நீர் வெளியேற்றப்படும்.
- குளத்துக்கு அருகில் ஆடைகள் மாற்றுவதற்கான ஓர் அறை அமைக்கப்பட்டுள்ளது.

**iv) பொலநறுவை நெலும் பொக்குண (தாமரைக் குளம்)**

- தாமரை மலர் வடிவில் கல்லால் அமைக்கப்பட்ட ஒரு சிறு குளமாகும்.
- மகா பராக்கிரமபாகு மன்னனால், அருகில் அமைந்த ஜேதவன விகாரையில் இருந்த பிக்குமாரின் தேவைக்காக இது கட்டப்பட்டது என நம்பப்படுகிறது. (பராக்கிரமபாகு மன்னன் கட்டுவித்ததாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன)

## கணிப்பீடு

- அநுராதபுர, பொலநறுவை காலத்துக் குளங்களைக் கட்டக் காரணமாக அமைந்த விடயங்களை ஆராய்க.
- அக் காலத்துக் குளங்களை நிர்மாணிக்க உபயோகித்த ஊடகம், நுட்ப முறைகள், தொழில் நுட்பம் என்பன பற்றிக் கலந்துரையாடுக.
- அநுராதபுர, பொலநறுவைக் காலத்துக் குளங்களின் நிர்மாணிப்புப் பற்றியும் அவற்றுடன் தொடர்புடைய கலை அம்சங்கள் பற்றியும் கலை உணர்வுடன் மதிப்பீடு ஒன்றைச் செய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.7 : இசுருமுனிய விகாரையுடன் தொடர்புடைய கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.7.1 : இசுருமுனிய செதுக்கல்களைக் கற்றறிவோம்**

- இசுருமுனிய காதலர் சிலை
- மனிதனும் குதிரைத் தலையும்
- அரச குடும்பம்
- நீராடும் யானைகள்

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

இசுருமுனிய செதுக்கல்கள் அடங்கிய உருவப்படங்கள், காணொளிகள், நிகழ்ச்சிகள் அடங்கிய இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- இசுருமுனிய விகாரையின் வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.
- இசுருமுனிய செதுக்கல்களைக் குறிப்பிடுவார்.
- இச் செதுக்கல்கள் நிர்மாணிக்கச் செல்வாக்கு செலுத்திய வெளிநாட்டுக் கலைப் பண்புகளை விளக்குவார்.
- இசுருமுனிய செதுக்கல்களில் உபயோகித்துள்ள ஊடகம் நுட்ப முறைகள், கலைப் பண்புகள் என்பன பற்றி ஆராய்வார்.
- இசுருமுனிய செதுக்கல்கள் தொடர்பாக நிலவும் பல கருத்துகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- இசுருமுனிய விகாரை அநுராதபுர காலத்தைச் சேர்ந்த பழைமை வாய்ந்த ஐவகை துறவி மடங்களில் ஒன்றாகும்.
- இது தென் தூபிக்கும் ரன்மசு பூங்காவின் கிழக்கு வாயிலுக்கும் இடையில் திசாவாவிக்கு அண்மித்து அமைந்துள்ளது.

- அநுராதபுர காலத்துக்குரிய இவ்விகாரை தேவனம்பியதீச மன்னனால் கட்டப்பட்டதெனக் கருதப்படுகிறது.
- காதலர் சிலை, மனிதனும் குதிரைத் தலையும், அரச குடும்பம், யானைகள் செதுக்கல்கள் என்பன இசுருமுனிய செதுக்கல்களில் முக்கியமானவை என கருதப்படுகிறது.
- இந்திய குப்த கலை, பல்லவ கலைமரபுகள் இச் செதுக்கல்களில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

## இசுருமுனிய காதலர் சிலை

- கி.பி 4ம் 5ம் நூற்றாண்டுகளுக்கு உரியது எனக் கருதப்படுகிறது.
- சதுர வடிவான கற்றகட்டில் அரை புடைப்பு முறையில் செதுக்கப்பட்டு நிர்மாணிக்கப் பட்டுள்ளன. நங்கை ஒருவரும் ஆண் ஒருவரும் ஆசனத்தில் அருகருகே அமர்ந்திருப்பதை இது குறிக்கும்.
- ஆண் உருவின் இடுப்புக்கு கீழே மட்டும் ஆடை ஒன்று காணப்படுகிறது. பெண் உருவின் ஆடை குதிகால்கள் வரை காணப்படுகிறது. இரு உருவங்களிலும் கழுத்து, கைகள், கால்கள் என்பன ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. தலை அணிகளும் இவற்றில்காணப்படுகின்றன.
- இச் செதுக்கல்களில் உள்ள பெண்ணின் தலை “நிஹஞ்சித முத்திரை''யும், கண்கள் “நிமிதித முத்திரையும், வலக்கை “திரிபாதக முத்திரையும்” குறிக்கின்றன. ஆண் உருவின் தலை ‘‘ஆவேத முத்திரை”யும், இரு கைகள் ‘‘மயூர முத்திரையையும்” குறிக்கின்றன.
- அழகிய வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் கொண்டிருத்தல், உயிரோட்டமான உடற் கட்டமைப்பு, காதலை உணர்த்தும் உணர்ச்சி வெளிப்பாடு, தளத்துக்குப் பொருத்தமாக உருவங்களை வடிவமைத்திருத்தல், லயம் பொருந்திய உடலின் நிலைகள், நேர்த்தியாக பூரணப்பாடு என்னும் பண்புகளை இச் செதுக்கல்கள் கொண்டுள்ளது.
- இச் செதுக்கல் தொடர்பாகப் பல கருத்துகள் நிலவுகின்றன. சிவபார்வதி என்றும், மஞ்சு ஸ்ரீ போதிசத்வரின் வேடம் என்றும், படைவீரனும் அவரது காதலியும் என்றும் கருத்துகள் நிலவுகின்றன.
- இது குப்த கலை மரபைத் தழுவியுள்ளது.
- இசுருமுனிய ‘‘ரன்மசு” பூங்காவில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இச்செதுக்கல் தற்போது இசுருமுனிய தொல் பொருள் நூதன சாலையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

### மனிதனும் குதிரைத் தலையும்

- இசுருமுனிய விகாரைக்கு அருகில் அமைந்த குளத்துக்கு அருகில் இயற்கைக் கற் பாறைச் சுவரில் இது அரைபுடைப்பு முறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- ஆணின் உருவம் முன்னோக்கிய பார்வையில் உள்ளது. இவரது மெய்நிலை ‘‘மகா ராஜ லீலாசனம்” எனப்படுகிறது.
- அவரது வலக் கைக்கு மேற் புறத்தில் குதிரைத் தலை காணப்படுகிறது.
- செதுக்கல் எளிமையான சுபாவத்தைக் கொண்டது. குறுகிய ஆடை அணிந்து காணப்படும் ஆணின் தலையில் தலையணியொன்று காணப்படுகிறது. காதுகளும் கைகளும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவரது வலக் கையில் காணப்படும் சுற்றி விடப்பட்ட கயிறு குதிரையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

- லயத்துடனான உடல் நிலைகள், நேர்த்தியான பூரணப்பாடு, உணர்ச்சி வெளிப்பாடு, திறமையாக உருவத்தை வடிவமைத்திருத்தல் என்பன இச் செதுக்களின் விசேட பண்புகளாகும்.
- எடுப்பான தோற்றம், எளிமையான தோற்றம், நீளமான உடலமைப்பு எனும் பண்புகளைக் கொண்டிருப்பதால் இது இந்திய பல்லவ கலை மரபைத் தழுவியிருப்பதாகக் கருதப்படுகிறது.
- மனிதனும் குதிரைத் தலையும் எனும் செதுக்கல் தொடர்பாகப் பல கருத்துகள் நிலவுகின்றன. மனித உருவம் மழைக்கு அதிபதியையும், குதிரைத் தலை அக்கினியையும் குறிப்பதாகப் பேராசிரியர் பரணவிதான அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.
- மனித உருவம் படைவீரன், படைத்தளபதி, கபில ரிஷி, என்பது வேறு சில விமர்சகர்களின் கருத்தாகும். எனவே இதன் தணித்துவம் இன்னும் விவாதத்துக்கு உட்பட்டுள்ளது.

**அரச குடும்பம் :-**

- அரச குடும்பம் எனப்படும் இந் நிர்மாணிப்பு அரை வட்டக் கற்றகட்டில் அரை புடைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- செதுக்கல்களின் மத்தியில் மகா ராஜ லீலையுடன் அமர்ந்திருக்கும் ஆணின் உருவம் ஒன்று காணப்படுகிறது. இவ்வுருவம் ஏனைய உருவங்களைவிட சற்றுப் பெரிதாக காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவுக்கு வலப்புறத்தில் ஆணின் உருவமொன்றும், இடப்புறத்தில் இரு பெண்களின் உருவங்களும் காணப்படுகின்றன. மத்தியில் காணப்படும் பிரதான உருவத்துக்குப் பின்னால் சாமரை வீசும் உருவம் ஒன்று காணப்படுகிறது.
- தெரிவு செய்யப்பட்ட கற்பாறைக்குப் பொருத்தமாக உருவங்களை ஒருங்கிணைத் திருப்பது சிறப்பம்சமாகிறது.
- சந்தத்துடனான உடல் நிலைகள், நேர்த்தியான பூரணப்பாடு, திறமையான ஒருங்கிணைப்பு, உணர்வு வெளிப்பாடு என்பன இச் செதுக்கல்களில் காணப்படும் சிறப்பியல்பு களாகின்றன.
- இச் செதுக்கல் தொடர்பாகப் பல கருத்துகள் நிலவுகின்றன. உருவங்களில் காணப்படும் குடித்தலைவனது தோற்றம், ஆடை அணிகள் என்பனவற்றின் காரணமாக இது அரச குடும்பம் எனக் கருதப்படுகிறது.
- செதுக்கலின் மத்தியில் உள்ள உருவம் துட்டகைமுனு அரசனுடையது என்றும் இவ்வுருவுக்கு வலப் பக்கத்தில் முன்னோக்கி அமர்ந்து கைகளை மார்புடன் கட்டியிருக்கும் உருவம் சாலிய இளவரசனுடையது என்றும், இடப்புறத்தில் உள்ள பெண்ணின் உருவம் அரசியையும் குறிக்கிறதென்று செனரத் பரவணவித்தான அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். அரசன் தனது இடக்கையை அரசியின் மடியின் மீது வைத்திருக்கிறார். அரசி என அனுமானிக்கும் உருவத்துக்கு இடப்புறத்தில் காணப்படும் சிறிய பெண்ணின் உருவம் அசோகமாலாவுடையது என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.
- இச் செதுக்கல் இசுருமுனிய நூதனசாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**நீராடும் யானைகள்**

- இசுருமுனிய விகாரையின் குளத்தை அண்மித்த பகுதியில் அமைந்த பாறைச் சுவரில் சிறு புடைப்பு முறையில் பல மெய் நிலைகளுடன் இவ் யானை உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- குளத்தில் நீராட வரும் யானைகள், நீரில் இறங்கி நீராடும் யானைகள், நீரில் விளையாடும் யானைகள், தும்பிக்கையால் நீரை விசிறும் யானைகள் என்பன இவற்றில் பொழியப்பட்டுள்ளன.
- திரும்பியிருக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட யானை உருவங்களும், முன்னோக்கியிருக்கும் யானை உருவங்களும் இவற்றிடையே உள்ளன.
- யானைகளின் இயல்பான தன்மை, செயற்பாட்டு இயல்பு, இயற்கை அசைவுகள், லயம், என்பன மிகவும் நுணுக்கமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- இது இந்தியாவின் பல்லவ கலை மரபைத் தழுவியுள்ளது. மகாபலிபுரத்தின் "கங்கையின் இறக்கம்" எனும் செதுக்கலில் காணப்படும் யானை உருவங்களுடன் இவை ஒத்திருப்பதாக சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.
- இவ்வாறான சுறுசுறுப்பு மிக்க யானைகள் அடங்கிய புடைப்புச் செதுக்கல் ஒன்று இசுருமுனிய ரன்மசு பூங்காவின் குளத்தை அண்மித்த பகுதிகளிலும் காணலாம்.

## கணிப்பீடு

- இசுருமுனிய விகாரையின் கலை நிர்மாணிப்புகளின் வரலாற்றுப் பின்னணி, அதற்கு செல்வாக்குச் செலுத்திய பல்வேறுபட்ட கலை மரபுகளை ஆராய்க.
- இசுருமுனிய கலை நிர்மாணங்களும், அவற்றில் பயன்படுத்திய ஊடகங்கள், நுட்ப முறைகளும் பற்றிக் கலந்துரையாடுக.
- இசுருமுனிய செதுக்கல் வேலைப்பாடு செய்த சிற்பி, தனது நிர்மாணத்துக்கு ஆதாரமாகக் கொண்ட நிகழ்வுகளையும் எண்ணக் கருக்களையும் அறிமுகப்படுத்தி, அவர் அவற்றைத் தனது நிர்மாணிப்புகளில் வெளிப்படுத்தியுள்ள விதத்தை கலையுணர்வுடன் மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.8 :** **அனுராதபுர காலத்து புத்தர் சிலைகளை கற்றறிவார்.**

**செயற்பாடு 7.8.1 :** **அனுராதபுர காலத்து புத்தர் சிலைகளை கற்றறிவோம்.**

- **மகா இலும்பல்லம நின்ற நிலை சிலை**
- **சமாதி புத்தர் சிலை**
- **தொலுவில புத்தர் சிலை**
- **பங்குலிய புத்தர் சிலை**
- **அவுக்கண நின்ற நிலை சிலை**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- அனுராதபுரக் காலத்துப் புத்தர் சிலைகளின் நிழற்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- அனுராதபுர காலத்தின் புத்தர் சிலைகளைக் குறிப்பிடுவார்.
- இலங்கையின் புத்தர் சிலை நிர்மாணிப்பில் செல்வாக்கு செலுத்திய வெளிநாட்டு கலைப் பண்புகளைக் கலந்துரையாடுவார்.
- அனுராதபுர காலத்துப் புத்தர் சிலைகளை நிர்மாணிக்க உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள், கலைப்பண்புகள் என்பவற்றை மதிப்பிடுவார்.
- இக்காலத்துப் புத்தர் சிலைகள் தொடர்பாக நிலவும் பல்வேறு கருத்துக்களைக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**மகா இலுப்பல்லம நின்ற நிலை சிலை**

- அனுராதபுரம் மகயிலுப்பல்லம விவசாய நிலத்தில் இருந்து இது கண்டெடுக்கப்பட்டது.
- இச்சிலை சுண்ணாம்புக்கலை ஊடகமாகக் கொண்டு இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வலக்கை முறிந்துள்ள போதும் இடக்கை இருக்கும் விதத்தைக் கொண்டு இச்சிலை அபய முத்திரையைக் கொண்டிருக்கலாம் என அனுமானிக்க முடிகின்றது.

- இந்திய அமராவதி புத்தர் சிலை மரபுக்குரிய கலைப்பண்புகள் இச்சிலை வெளிப்படுத்துகின்றதென பரணவிதான அவர்களும் நந்ததேவ விஜேசேகர அவரக்ளும் கருத்து வெளியிட்டுள்ளனர். இப்பாணியில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பழமையான நின்ற நிலை சிலை இதுவெனக் கருதப்படுகின்றது.
- அமராவதி கலை மரபுக்குரிய முக்கிய பண்புகளான ஒரு பக்கமாகக் காவியுடை காணப்படல், இடப் பக்கத் தோள் மீதுள்ள காவியுடை இடக்கையினூடாகப் பாதம் வரை காண்பித்திருத்தல், உள்ளங்கால்களை அண்மித்து 10 அங்குல அகலத்தில் இடப் பக்கமாக இடப்பட்ட காவியுடை எனும் பண்புகளைக் கொண்டதாக இது அமைக்கப்பட்டுள்ளது.
- அரைவாசிக்கு திறந்திருக்கும் கண்களும் நீள்வட்ட வடிவமுடைய முகமும் தியான நிலையும், கருணை, இரக்கம் போன்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றன.
- மிகவும் மென்மையான மடிப்புகளைக் கொண்டதாகக் காவியுடை காட்டப்பட்டிருப்பினும் அதனூடாக உடல் ஊடுருவித் தெரியாதவாறு இதனை நிர்மாணித்துள்ளார்.
- இச்சிலை 6 அடி உயரமுடையது.
- இது கி.பி. 2 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரியதென பரணவித்தான அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்.

**மகாமெவுனா பூங்காவின் சமாதி புத்தர் சிலை**

- அனுராதபுரம் அபயகிரி விகாரைத் தொகுதிக்குரிய மகாமெவுனா பூங்காவில் குட்டம் பொக்குணவுக்கு அண்மித்த பகுதியில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்தச் சிலை எளிமைத் தோற்றத்துடன் காணப்படுகிறது. இதில் ஆழ்ந்த ஆன்மீகப் பண்பு வெளிப்படுகிறது. இது இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலைகளில் மிகச் சிறந்ததொன்றெனக் கருதப்படுகிறது.
- முகத்தில் காணப்படும் அழ்ந்த ஆண்மீக வெளிப்பாடு, கட்டையான குடுமி, வலப்பக்கமாக வளைந்துள்ள சுருள் வடிவமான கேசம், உடல் கட்டமைப்பை வெளிப்படுத்தும் மிகவும் மென்மையான மடிப்புகளற்ற காவியுடை, உயரமற்ற கழுத்து போன்றவை குப்த மரபுக்குரிய பண்புகளுடன் நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- இரு கைகளும் சமாதி முத்திரையைக் கொண்டுள்ளது. கால்கள் வீராசன முறையைக் கொண்டுள்ளது. இச்சிலை 9 அடி 6 அங்குலம் உயரமுடையது.
- கருங்கல் ஊடகத்தினால் முழுப் படைப்பு முறையில் இது பொழியப்பட்டுள்ளது. இதன்மீது மென்மையான சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டு வர்ணம் தீட்டியிருந்ததாகச் சான்றுகள் பெறப்பட்டு உள்ளன.
- மூக்கு பகுதி உடைந்து காணப்பட்டதால் அது மறுசீர் அமைக்கப்பட்டது.

**தொழுவில சமாதி புத்தர் சிலை**

- அனுராதபுரம் தொழுவில பிரதேசத்தில் இது கண்டெடுக்கப்பட்டது. ஆகையால் இது தொழுவில புத்தர்சிலை எனப்படுகிறது.
- செனரத் பரணவிதான அவர்கள் இச்சிலை இரண்டாம் காசியப்பன் (கி.பி. 650 - 659) காலத்துக்குரியதென அதாவது கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்குரியதெனக் கூறியுள்ளார். (இச்சிலை முதலில் வைக்கப்பட்டிருந்த தொழுவில படிகர வில் இவ்விடயம் குறிக்கப்பட்டிருந்ததென அவர் காரணம் காட்டியுள்ளார்.)

- தியான நிலை, கருணை, இரக்கம், சாந்தம் ஆகிய பண்புகள் முகத்தில் வெளிப்படுகின்றன.
- கைகள் தியான முத்திரையைக் கொண்டதுடன் கால்கள் வீராசன முறையைக் குறிக்கின்றன.
- சுருள் வடிவமுடைய கேசமும் மெல்லிய குடுமியும் இதில் காணப்படுகின்றது.
- மடிப்பின்றி ஒரு பக்கமாக இடப்பட்ட காவியுடை உடல் ஊடுருவித் தெரியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.
- மஞ்சள் வர்ணமுடைய கருங்கல் வகையைக் கொண்டு (Dolamite Marble) செதுக்கப்பட்டுள்ள இச்சிலை 6 அடி உயரமுடையது. இது தற்போது கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
- இச்சிலையின் கலைப் பண்புகளை அவதானிக்கும்போது இது இந்திய குப்த கலை மரபுக்குரியதெனக் கருதப்படுகின்றது.

**பங்குளிய சிலை**

- அனுராதபுரம் பங்குளிய பிரதேசத்தில் அசோகாராமயவில் இச்சிலை கண்டெடுக்கப்பட்டதால் அது பங்குளிய அமர்ந்த நிலை சிலை எனப்படுகிறது.
- இச்சிலை நிர்மாணித்த காலப்பகுதி தொடர்பாகப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. சிலை மனைக்கு பிரவேசிக்க இருக்கும் படி வரிசையில் உள்ள பல்லவ எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டின் படி இது கி.பி. 7ம் நூற்றாண்டுக்குரிய தெனக் கருதப்படுகிறது.
- உடைந்து காணப்படும் வலக்கை விதர்க்க முத்திரையும் இடக்கை கடகஸ்த முத்திரையைக் கொண்டிருக்கலாம் என அனுமாணிக்கப்படுகின்றது. கால்கள் வீராசன முறையைக் குறிக்கின்றன.
- குடுமி மீது தீச்சுடர் அமைந்திருந்ததற்கான சான்றுகள் பெறப்பட்டுள்ளன.
- சுண்ணாம்புக் கல் கலந்த சிறப்புக் கல் வகை ஒன்றினால் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சிலையின் பெரும்பாலான பண்புகளைக் காண முடியாதுள்ளது. எஞ்சியிருக்கும் பண்புகளைக் கருதும்போது, இரக்கம், ஞானம் கலந்த ஆன்மிகப் பண்புகள் வெளிப்படுவதாக உள்ளன. கண்களுக்கு மாணிக்கக் கற்கள் பதித்திருந்ததற்கான சான்றுகளையும் காணக்கூடியதாக உள்ளன.
- சிலையின் முன் பக்கக் காவியுடையின் மடிப்புகள் தேய்ந்து போயிருக்கின்றன. சிலையின் பின்புறத்தில் சீரான ஆழமின்றிய காவியுடை மடிப்புகளைக் காணலாம். இது ஆறு அடி ஒன்பது அங்குல உயரமுடையது.

**அவுக்கண நின்ற நிலைச் சிலை**

- அனுராதபுர மாவட்டத்தின் கலாவாவிக்கு அண்மித்த பகுதியில் இச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இச்சிலையை உருவாக்கிய காலப்பகுதி பற்றிய முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. சூள வம்சத்துக்கு அமைய தாதுசேனனுடைய காலத்துக்கு (கி.பி. 455 - 473) கி.பி. 5ம் நூற்றாண்டுக்குரியதென்று பரணவிதான அவர்கள் கருத்து தெரிவித்திருந்தார். ஷோர்ட்டர் மற்றும் சந்திரா விக்கிரமகே என்பவர்கள் இது கி.பி. 9ம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரியது எனக் குறிப்பிடுகின்றனர்.

- சிலை 39 அடி 10 அங்குலம் உயரமுடையது. இதில் புத்த பெருமானின் ஆண்மையின் பண்புகளையும் அவரது பத்துவகை குண இயல்புகளையும் காண்பிக்கக் கலைஞன் எத்தனித்துள்ளான்.
- புத்தபெருமானின் 32 வகையான ஆண்மைப் பண்புகளுள் எடுப்பான உடற்தோற்றம் தசைப்பிடிப்பான கைகள், கொழுத்த தொடைகள், நிரம்பிய உள்ளங்கை, தோள்கள், வலஞ்சுழியாகச் சுருண்ட கேசம், நீண்ட செவிகள், நெற்றிப்பொட்டு, மென்மையான குடுமி, தீச்சுடர் ஆகியன இச்சிலையில் காணக்கூடியதாக உள்ளன.
- மென்மையான குடுமி மீதுள்ள தீச்சுடர் பின்னர் சேர்க்கப்பட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது.
- நிலைத்த ஒரு கருங்கல் பாறையில் உயர் படைப்பு முறையில் பொழியப்பட்ட இச்சிலை பத்மாசனம் மீது சமபங்க மெய்நிலையில் காணப்படுகிறது.
- வலக்கை அபய முத்திரையைக் குறிக்கிறது. உயர்த்தப்பட்ட இடக்கை இடத்தோள் மீதுள்ள காவியுடைய பிடித்திருக்கும் விதத்தில் உள்ளது. அது கடகஸ்த முத்திரையை குறிக்கின்றதென சந்திரா விக்கிரமகே கூறியிருக்கிறார்.
- ஆழம் குறைந்த மடிப்புகளைக் கொண்ட காவியுடையின் மடிப்புகளின் ஊடாக உடலின் வடிவம் ஊடுருவித் தெரிகிறது.
- இந்திய அமராவதி சிலைகளின் பாணியுடன் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- அனுராதபுர காலத்துக்குரிய புத்தர் சிலைகளைக் குறிப்பிடுக.
- இலங்கையின் புத்தர் சிலை நிர்மாணிப்புக்கு செல்வாக்கு செலுத்தப்பட்ட இந்தியக் கலை மரபுகள் பற்றிக் கலந்துரையாடுக.
- அனுராதபுர காலத்துப் புத்தர் சிலைகளை நிர்மாணகிக் உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள், கலைப்பண்புகள் என்பவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்துக.
- அனுராதாபுர காலத்துப் புத்தர் சிலைகள் தொடர்பாக இருந்த விமர்சனத்துக்குட்பட்ட விடயங்களைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.9 : பொலநறுவை, கம்பளை மற்றும் கண்டி காலத்துச் சிலைகளை கற்றறிவார்.**

**செயற்பாடு 7.9.1 : பொலநறுவைக் கல் விகாரையின் புத்தர்ச் சிலைகளும் வட்டதாகேயின் புத்தர் சிலைகளும் பற்றிக் கற்றறிவோம்**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பொலநறுவைக் கல் விகாரையின் புத்தர் சிலைகளும் வட்டதாகேயின் புத்தர் சிலைகளும் உள்ள நிழற்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பொலநறுவைக் காலத்தின் புத்தர் சிலைகளைக் குறிப்பிட்டு அவற்றில் காணப்படும் முத்திரைகள், ஆசன முறை, உடல் நிலைகள், செல்வாக்குச் செலுத்திய மத எண்ணக்கருக்களை விபரிப்பார்.
- பொலநறுவைக் காலத்துப் புத்தர் சிலைகளை நிர்மாணிக்க உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள், கலைப்பண்புகள் என்பவற்றை மதிப்பிடுவார்.
- இக்காலத்துப் புத்தர் சிலைகள் தொடர்பாக நிலவும் விமர்சன ரீதியான கருத்துக்களைத் தர்க்க ரீதியாகக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**I. பொலநறுவை கல் விகாரையின் பாரிய புத்தர் சிலை (தோரணத்துடன்):**

- இச்சிலைக்குப் பின்னால் தோரண அமைப்பொன்று காணப்படுவதால் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட சிலைகளுள் சிறப்புப் பெறுகின்றது. ஆனால் சந்த்ரா விக்கிரம கமகே அவர்கள் அது தோரணமல்ல ஆசனத்தின் கைப்பிடியாக இருக்கக் கூடும் என கூறுகிறார்.

- 15 அடி உயரமுடைய இச்சிலை வீராசன முறையில் உள்ளதுடன் கைகள் தியான முத்தரையைக் குறிக்கின்றன.
- இச்சிலையின் முகம் வட்டவடிவமுடையது. நெற்றி ஒடுங்கியுள்ளது. அரைவாசி திறந்துள்ள விழிகளைக் கொண்ட இம்முகம் புத்த பெருமானின் கருணை, சாந்தம் எனும் குணங்களைப் புலப்படுத்துகின்றன. வலஞ்சுழியாக சுருண்ட கேசம் காணப்படுகின்றன. உச்சந்தலையில் சிறிய குடுமியுள்ளது.
- அழகிய இரட்டை மடிப்புடைய காவியுடை உடலுடன் ஒட்டிக் காணப்படுகின்றது.
- இச்சிலை உள்ள ஆசனத்தின் இரு புறத்தில் வஜிராசனத்துக்குரிய வஜிரக் குறியீடும் சிம்மாசனத்துக்குரிய சிம்ம உருவமும் சிறு புடைப்பு வடிவில் பொழியப்பட்டுள்ளன. இவ் வாசனத்தின் மீது மலர்ந்த தாமரை வடிவமுடையது.
- இச்சிலைக்குப் பின்னால் ஒரு தோரணம் உள்ளது. இத்தோரணத்தில் குறுக்காக உள்ள மூன்று கற் பாளங்களின் ஓரத்தில் மகர வாய்கள் சிறு புடைப்பு முறையில் பொழியப்பட்டுள்ளன. சிலைக்குப் பின்னால் அரைவட்ட வடிவமான வில் வளைவில் மலர்ந்த தாமரை மலர்கள் பத்து உள்ளன. வில்வடிவமுடைய பகுதியின் இரு புறத்தில் இரு விமானங்கள் வீதம் உள்ளன. அவற்றில் புத்தர் சிலைகள் இரண்டு வீதம் பொழியப்பட்டுள்ளன.
- இது மகாயான பௌத்த எண்ணக்கருவின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதென சந்திரா விக்கிரம கமகே கருத்துத் தெரிவித்துள்ளார் சிறிய விமானங்களினுள் உள்ள சிலையுடன் பிரதான சிலையும் சேர்த்து மொத்தமாக ஐந்து சிலைகள் இங்கே உள்ளன. மகாயான பௌத்த மதத்தின் எண்ணக்கருவுக்கு இணங்க, ஐந்து சிலைகளும் மகாயாணத்தின் பஞ்ச தியான நிலை புத்தர்களை அடையாளப் படுத்துவதாக அவர் கருதுகிறார்.

## II. பொலநறுவைக் கல்விகாரையின் வித்தியாதர குகையில் உள்ள அமர்ந்த புத்தர் சிலை (குடையுடன் கூடிய):

- பொலன்னறுவை கல் விகாரையில் உள்ள புத்தர் சிலைகளுள் இது சிறப்புடையது. அதற்கான காரணம் அது குடைந்து எடுக்கப்பட்ட குகை ஒன்றுக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் ஆகும். இவ்வாறான புத்தர் சிலைகள் இலங்கையில் அரிதாகவே காணப்படுகின்றன.
- 4 அடி 7 அங்குலம் உயரமுடையது. வீராசன முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கைகள் தியான முத்திரையைக் குறிக்கின்றன.
- சிலை அமைக்கப்டப்ட ஆசனத்தில் சிம்ம உருவங்கள் இரண்டும் வஜிர உருவங்கள் இரண்டும் சிறு புடைப்பு முறையில் பொழியப்பட்டுள்ளன. சிலைக்குப் பின்னால் சிறிய தோரணம் உள்ளது. அதன் கிடைப் பாளத்தின் ஓரத்தில் மகர வாய் உள்ளது. சிலையின் இரு புறத்திலும் இரு தெய்வ உருவங்கள் உள்ளன. சிலைக்கு மேலால் (வடக்கு) உள்ள தெய்வ உருவங்கள் பிரம்மனும் விஷ்ணுவும் என இனங்காணப் பட்டுள்ளது. அத்துடன் சிலைக்குப் பின்னால் பெரிய குடை வடிவமொன்று கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.
- இச்சிலையின் முகம் சற்று வட்ட வடிவத்தைக் கொண்டுள்ளது. நெற்றி ஒடுங்கியுள்ளது. அரைவாசிக்கு திறந்துள்ள விழிகளைக் கொண்ட முகத்தில் புத்தர் பெருமானின் கருணை, சாந்தம் எனும் குணங்கள் வெளிப்படுகின்றன. கேசம் வலஞ்சுழியாக சுருண்டு காணப்படுகிறது உச்சந்தலையில் சிறிய குடுமி காணப்படுகிறது. இரட்டை

மடிப்புடன் அழகிய காவியுடை காணப்படுகிறது. அது உடலுடன் ஒட்டிக் காணப்படுகிறது.

- புத்தர் சிலை உள்ள குகை சிறிய சிலை மனை வடிவத்தைக் கொண்டுள்ளதுடன் சுவரில் பொலநறுவைக் காலத்துக்குரிய ஓவியங்களும் காணப்படுகின்றன.

### III. கல் விகாரையின் நின்ற நிலை சிலை

- கல் விகாரையின் புத்தர் சிலைகள் 1ம் பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்துக்குரியவை (கி.பி. 1153 - 1186) என சூள வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சூள வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிலைகளுள் இச்சிலை பற்றி குறிப்பிடப் படவில்லை.
- நிலைத்த கற்பாறை மீது உயர் புடைப்பு முறையில் பொழியப்பட்ட இச்சிலை மூவளைவு (திரிபங்க) கொண்ட உடல் நிலையில் பத்மாசனம் மீது அமைக்கப் பட்டுள்ளது. சிலையின் உயரம் 22 அடியும் 9 அங்குலமாகும்.
- பரதுக்க துக்கித்த முத்திரையைக் கொ்ணடது. இச்சிலை பற்றி முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. இது ஆனந்த தேரருடையது என சிலரும் புத்த பெருமானுடையது என இன்னும் சிலரும் கருத்து தெரிவிக்கின்றனர். பத்மாசனத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளதாலும் ஆண்மையின் பண்புகள் வெளிப்படுவதாலும் இது புத்த பெருமானுடையது என செனரத் பரணவித்தான கருத்துத் தெரிவிக்கின்றார்.
- இச்சிலையின் முகம் வட்ட வடிவம் கொண்டது. நெற்றி ஒடுங்கியுள்ளது. அரைவாசி திறந்த விழிகளுடனான முகத்தில் புத்த பெருமானின் கருணை, சாந்தம் எனும் குண இயல்புகளுடன் தெய்வீகத் தன்மையும் புலப்படுகிறது.
- வலஞ்சுழியாக சுருண்ட கேசம் உடையது. உச்சந்தலையில் சிறிய குடுமி காணப்படுகிறது.
- இரட்டை மடிப்புடைய காவியுடை உடலுடன் ஒட்டிக் காணப்படுகிறது.

### IV. பொலநறுவைக் கல்விகாரையின் உறங்கும் நிலை சிலை

- உறங்கும் நிலையில் உள்ள சிலை பற்றி பல முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. இது புத்தரின் உறங்கும் நிலையென்றும் புத்தரின் பரிநிர்வாண நிலை என்றும் இரு கருத்துக்கள உள்ளன.
- கல்விகாரையில் உள்ள ஏனைய சிலைகளில் உள்ள சகல பண்புகளும் இதிலும் உள்ளன. இது 46 அடி 4 அங்குலம் நீளமுடையது.
- சிலையின் தலை வைத்துள்ள தலையணை தலையின் பாரம் காரணமாக பதிந்திருப்பது போல் காணப்படுகின்றது.
- புத்தரின் பாதங்களில் தாமரை பூக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

### V. பொலநறுவை வட்டதாகேயின் புத்தர் சிலை

- பொலநறுவை வட்டதாகேயின் தூபியின் நாற்றிசையிலும் நான்கு சிலைகள் உள்ள்ன.
- இச்சிலைகள் பின்வரும் பொதுப்பண்புகளை கொண்டதாகக் காணப்படுகின்றன. கல் ஊடகப் பாவனை, தியான முத்திரையைக் கொண்ட கைகள், வீராசன முறையில் அமர்நதிருத்தல், மடிப்புடனானா காவியுடை, சுருண்ட கேசம், குடுமியோ தீச்சுடரோ காணப்படாமலிருத்தல் போன்றவை.

- முகபாவம் வேறுபட்டு காணப்படினும் ஒத்த இயல்புகளைக் கொண்டுள்ளன. பொலநறுவைக் காலத்து ஏனைய சிலைகளை விட முகத்தில் ஆன்மீகத் தன்மை வெளிப்படுகின்றமை மடிப்புகளற்ற காவியுடை, மழிக்கப்பட்ட தலை என்பன காணப்படுவதால் இச்சிலைகள் நான்கும் பொலநறுவைக் காலத்துக்கு முதல் நிர்மாணிக்கப்பட்டதாக செனரத் பரணவித்தான அவர்களும் கம்புருப்பிட்டியே வனரத்தன தேரரும் கருதுகின்றனர்.

## கணிப்பீடு

- பொலநறுவைக் காலத்தின் புத்தர் சிலைகளைக் குறிப்பிட்டு அவற்றில் காணப்படும் முத்திரைகள், ஆசன முறை, மெய் நிலைகள், செல்வாக்குச் செலுத்திய மத எண்ணக்கருக்களை பற்றி விபரிக்குக.
- பொலநறுவைக் காலத்துப் புத்தர் சிலைகளை நிர்மாணிக்க உபயோகித்துள்ள ஊடகம் நுட்பமுறைகள், கலைப்பண்புகள் என்பவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்துக.
- இக்காலத்துப் புத்தர் சிலைகள் தொடர்பாக இருந்த விமர்சனத்துக்குட்பட்ட விடயங்களைத் தர்க்க ரீதியாகக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.9 : பொலநறுவை, கம்பளை மற்றும் கண்டி காலத்து சிலைகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.9.2 : பொலநறுவை பொத்குல் விகாரைச் சிலைகளை கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 1

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பொலநறுவை பொத்குல் விகாரைச்சிலையை காண்பிக்கும் உருவப்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பொலநறுவை பொத்குல் விகாரைச் சிலை நிர்மாணிப்புக்கு உபயோகப்படுத்தியிருக்கும் ஊடகம், நட்பமுறை, கலைப்பண்புகளை மதிப்பீடு செய்வார்.
- இச்சிலை பற்றிய விமர்சனங்களை தர்க்க ரீதியாகக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**பொலநறுவை பொத்குல் விகாரைச் சிலை**

- இச்சிலை பராக்கிரம சமுத்திரத்துக்கருகில் உள்ள பொத்குல் விகாரைக்கு முன்னால் அமைந்திருக்கும கருங்கல்லில் உயர் புடைப்பு முறையில் பொழியப்பட்டுள்ளது.
- (திரிபங்க) மூவளைவு நிலையில் காணப்படுவதுடன் இது இடக்கால் ஊன்றியிருப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலை எடுப்பான உடற்தோற்றமுடையது.
- சிந்தனையில் ஆழ்ந்துள்ள நிலையில் இது காணப்படுகிறது. கைகள் ஏந்தியிருப்பதை கண்கள் நோக்கியுள்ளன.
- மார்பு வரைக்கும் தாடி நீண்டிருக்கிறது. கீழ்ப் புறமாக வளைந்த மீசையும் காணப்படுகிறது.
- இரட்டை மடிப்புடன் கூடிய இடுப்புக்குக் கீழ் உள்ள ஆடை, இடுப்புப்பட்டியுடன் காணப்படுகிறது. தலை ஜடாமுடி அமைப்புடன் உள்ளது.

- இச்சிலையின் தனித்துவப் பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. அரசர்களுக்குரிய உடை, எடுப்பான உடற் தோற்றம் கையில் ஒரு பொருளை ஏந்தியிருத்தல் எனும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இச்சிலையானது, பராக்கிரமபாகு மன்னன், கபில ரிஷி, புலஸ்தி ரிஷி, அகஸ்திய ரிஷி என்று பல கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பொலநறுவை பொத்குல் விகாரை சிலை நிர்மாணிக்க உபயோகித்துள்ள ஊடகம் நுட்பமுறைகள், கலைப்பண்புகள் என்பவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்துக.
- இச்சிலை தொடர்பாக விமர்சனத்துக்குரிய கருத்துகளை விபரிக்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.9 : பொலநறுவை, கம்பளை, கண்டி காலங்களுக்குரிய பல்வேறு சிலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.9.3 : கம்பளை, கண்டிக்காலத்து புத்தர் சிலைகளை கற்றறிவோம்.**

- கடலாதெனிய அமர்ந்த நிலை புத்தர் சிலை
- இலங்காதிலக்க அமர்ந்த நிலை புத்தர் சிலை
- தம்புள்ள புத்தர் சிலைகள்

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

தம்புள்ளையிலுள்ள புத்தர் சிலைகள் அடங்கிய உருவப்படங்கள், நிகழ்ச்சிகள் நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள், மேல் தலை எறியி.

**கற்றற் பேறுகள் :**

- கம்பளை, கண்டிக் காலத்து புத்தர் நிலைகளை நிர்மாணிக்க உபயோகித்துள்ள ஊடகங்கள் நுட்பமுறைகள் என்பனவற்றையும் அவற்றில் காணப்படும் விசேட பண்புகளையும் உதாரணங்களுடன் விளக்குவார்.
- கம்பளை கண்டிக் காலத்துச் சிலைகளில் காணக்கூடிய கலைப் பண்புகளை உதாரணங்களுடன் தெளிவாகக் கலந்துரையாடுவார்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

## கம்பளை, கண்டி காலங்களுக்குரிய புத்தர் சிலைகள்.

- கி.பி 1600 - 1800 வரையுள்ள காலப்பகுதியில் புத்தர் சிலை வெளிப்பாடுகள்/ தென்னிந்திய கலை மரபுகளின் செல்வாக்கைப் பெற்றது.
- பொலநறுவைக் காலத்தில் ஏற்பட்ட சோழர்களின் ஆதிக்கம் கம்பளை காலத்தில் இருந்து கண்டிக் காலம் வரை உள்ள புத்தர் சிலைகளில் தாக்கம் செலுத்தியது.
- அநுராதபுரம் பொலநறுவைக் காலத்து, புத்தர் சிலைகளில் காணப்பட்ட சாந்தம், கருனை, எனும் இயல்புகளுக்குப் பதிலாக கேதுமாலா எனப்படும் தீச்சுடர், மகர தோரணம் போன்ற வெளியடையாளங்கள் கம்பளை காலத்துப் புத்தர் சிலைகளில் சேர்க்கப்பட்டது.

- தீச் சுடர், அலை வடிவமான காவியுடை மடிப்புகள், நீளம் குறைந்த வட்ட வடிவமுடைய அகன்ற முகம், ஒடுங்கிய நெற்றி போன்ற இயல்புகளுடன் கம்பளை கண்டி கால புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முழுமையாகத் திறந்த விழிகள் கம்பளை காலத்துக்குரிய சிலைகளில் அவற்றுக்கே உரிய பாணியில் நிர்மாணிக்கப்பட்டன.

**கடலாதெனிய அமர்ந்த நிலை புத்தர் சிலை.**

- கம்பளை காலத்துக்குரிய கடலாதெனிய விகாரையின் கர்ப்பக் கிரகத்தினுள் அமர்ந்த நிலைப் புத்தர் சிலையைத் தவிர, நின்ற நிலைப் புத்தர் சிலைகள் நான்கும் காணப்படுகின்றன. இச் சிலைகள் கண்டிக் காலத்து சிலைகளின் இயல்புகளைக் கொண்டுள்ளன.
- இவ் அமர்ந்தநிலைப் புத்தர் சிலை நீளம் குறைந்த வட்ட வடிவ முகத்தையும், ஒடுங்கிய நெற்றியையும், பெரும் உதடுகளையும், திறந்த கண்களையும், குறுகிய நாடியையும் கொண்டுள்ளது.
- புத்தரின் முகத்தில் இருந்து வெளிப்பட வேண்டிய கருணை, இரக்கம் போன்ற ஆன்மீகப் பண்புகள் இச் சிலையில் அதிகம் தென்படவில்லை.
- இச் சிலையின் தலையில் உயரமான தீச்சுடர் இடப்பட்டிருப்பதுடன், ஆழமான வலஞ்சுழியாக சுருண்ட கேசம் காணப்படுகிறது.
- இக் காலத்துப் புத்தர் சிலைகளில் காணப்படும் அகன்ற ஒளிவட்டம் இச் சிலையிலும் காணக்கூடியதாக இருக்கிறது.
- வீராசன முறையில் காணப்படும் இச்சிலையில் ஒரு தோள் மட்டும் மூடிய காவியுடை காணப்படுகிறது. அது அலை வடிவமுடையது.
- புத்தர் சிலைக்குப் பின் புறத்தில் வர்ணம் தீட்டப்பட்ட அழகிய மகர தோரணம் உள்ளது.
- இச் சிலை செங்கல்லாலும் சாந்துகளாலும் அமைக்கப்பட்டு வர்ணமிடப்பட்டுள்ளன.

**இலங்காதிலக்க அமர்ந்த நிலைப் புத்தர் சிலை**

- கம்பளை காலத்துக்குரிய இவ் அமர்ந்த நிலை புத்தர் சிலை இலங்காதிலக்க விகாரையின் சிலை மனையில் உள்ளது.
- வீராசன முறையில் உள்ள இச்சிலை தியான முத்திரையைக் கொண்டது. குடுமி மீது தீச்சுடர் (சிரஸ்பத்த) காணப்படுகிறது.
- புத்தரின் ஆன்மீகப்பண்புகள் வெளிப்படுவதை விட வெளிப்புற இயல்புகளைக் காட்ட சிற்பி முனைந்துள்ளார். திறந்த விழிகள், நேரான உடலமைப்பு, அலைவடிவமான காவியுடை எனும் பண்புகளையே சிற்பி வெளிப்படுத்தியுள்ளார்.
- சிலைக்குப் பின் புறத்தில் கொடியலை அலங்கார வேலைப்பாடுகளுடன் மகர தோரணம் காணப்படுகிறது.

**தம்புளை ரஜ மகா விகாரையின் புத்தர் சிலைகள்.**

- விகாரை ஒன்றுக்குள் காணப்படும் மிகப் பெரிய சிலைகள் அதிக எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. அத்துடன் கண்டி காலத்திற்குரிய அதிக எண்ணிக்கையுடைய சிலைகளும் இங்கேயே காணப்படுகின்றன.

- தம்புள்ள விகாரைச் சிலை முகங்கள் பாவ வெளிப்பாடு கம்பளை காலத்தை விட சாந்தமான இயல்புகளைக் கொண்டுள்ளன.
- திறந்த பெரிய கண்களுக்குப் பதிலாக ஓரளவு பெரிய கண்களை கொண்டிருப்பதும், சிலைகளுக்கான அளவுத் திட்டத்தைப் பின்பற்றி இருப்பதாலும் சிலைகளில் இயற்கை இயல்பு வெளிப்படுகிறது.
- எல்லாச் சிலைகளும் ஆழமான வலஞ்சுழியாக சுருண்ட கேசத்தைக் கொண்டுள்ளது. தலையில் தீச்சுடர் காணப்படுகிறது.
- பெரும்பாலான சிலைகள் மரத்தால் ஆனவை. பின்பு அவற்றின் மீது சுண்ணாம்பு சாந்து பூசி வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. ஏனைய சிலைகள் செங்கல், சுண்ணாம்புச் சாந்து என்பன உபயோகித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளன
- இச் சிலைகளும் ஒரு தோள் மட்டும் மூடிய அலை வடிவ தடிப்பமான காவியுடையைக் கொண்டுள்ளன.

## கணிப்பீடு

- கம்பளை, கண்டி காலத்துப் புத்தர் சிலைகள் நிர்மாணிக்க உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள், விசேட பண்புகள் என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக.
- கம்பளை, கண்டி காலத்துப் புத்தர் சிலைகளில் காணப்படும் கலை இயல்புகளைத் தெரிவு செய்யப்பட்ட நிர்மாணிப்புகளில் இருந்து விமர்சனத்திற்கு உட்படுத்துக.
- அநுராதபுரம் பொலநறுவைக் காலத்துப் புத்தர் சிலைகளுடன் ஒப்பிடுகையில் கம்பளை கண்டி காலத்துப் புத்தர் சிலை நிர்மாணிப்புகளில் காணப்படும் வேறுபாடுகளை ஒப்பிட்டு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.10 : இலங்கையின் உலோக வார்ப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.10.1 : உலோகக் கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவோம்.**

- அர்த்த நாரீஸ்வரர் (அர்த்த நாரி நடேஸ்வர)
- புத்தரின் தேவலோக நிலை (அவலோகிதேஷ்வர போதிசத்வ)
- தாராதேவி (மாலா தாரா)
- தெதிகம கொட்டவெஹெர (யானை விளக்கு) (எத் பகன)
- நடராஜர்
- சிவ சோமஸ்கந்த மூர்த்தி

**பாடவேளைகள் :** 3

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

உலோகச் சிலைகளின் உருவப்படங்கள் உள்ளடக்கிய இறுவெட்டுகள், படவில்லை (Slides) எறிவை, கணணி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட உலோக நிர்மாணிப்புகளின் சமயப் பின்னணியையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார்.
- அந்நிர்மாணிப்புகளின் ஊடகங்கள், நிர்மாணிக்க உபயோகித்த தொழில் நுட்ப முறைகள், அவற்றின் கலைப் பண்புகள் என்பவற்றைக் கலந்துரையாடுவார்.
- வெண்கலத்தினால் கலை நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றற் பேறுகள் :**

செயற்றிட்ட முறை/ உரையாடல் முறை/ ஒப்படை முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**அர்த்த நாரீஸ்வரர் (அர்த்த நாரி நடேஸ்வர)**

- அனுராதபுர காலத்து இறுதிக் காலப்பகுதிக்குரிய (7-8ம் நூற்றாண்டுகளுக்கு) இச்சிலை அபயகிரி விகாரைப் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.
- சிலையின் வலப்பக்கம் ஆடை அணிகளைக் கொண்ட பெண் உருவைப் போன்றும், இடப் பக்கம் ஆண் உருவைப் போன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- இச்சிலை இடப்பக்கத்திற்குச் சாய்ந்த சந்தத்துடன் கூடிய உடல் நிலையில் நிற்பது போல் உள்ளது.
- இது நான்கு கைகள் உடையது. பெண்ணைக் குறிக்கும் ஒரு கை சந்தத்துடன் தொங்கவிடப்பட்டுள்ளது. மற்றைய கையில் சங்கு காணப்படுகிறது.
- ஆணைக் குறிக்கும் கைகளில் நாகம் ஒன்று சுற்றியிருக்கிறது.
- வெண்கலத்தினால் பொல்லான வார்ப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தற்போது இச்சிலை அனுராதபுர தொல்பொருள் நூதனசாலையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**புத்தரின் தேவலோக நிலை (அவலோகிதேஷ்வர போதிசத்வ)**

- அனுராதபுர காலத்தின் இறுதிக் காலப் பகுதிக்குரிய (கி.பி. 8-9ம் நூற்றாண்டு) இவ்வெண்கலச் சிலை 1968ம் ஆண்டு வெஹெரகல சிரிசங்கபோ விகாரையில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.
- வெண்கலத்தினால் திண்ம வார்ப்பு முறையில் முழு புடைப்பு வடிவமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மகாராஜ லலிதாசனம், ராஜலீலாசனம் ஆகிய இரு மெய் நிலைகளையும் ஒண்றிணைத்து இச்சிலை வார்க்கப்பட்டுள்ளது.
- மாணிக்கக் கல் பதிக்கப்பட்ட அழகிய கிரீடத்துடன் காணப்படும் இச்சிலையின் வலக்கை கடக ஹஸ்த முத்திரையைக் கொண்டுள்ளது. இக்கையில் தாமரை மலரொன்று இருந்திருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது.
- இச் சிலையின் மெய் நிலைகளுக்கேற்ப இதன் வயிற்றுப் பகுதியின் தசைகள் காண்பிக்கப்பட்டிருக்கும் விதத்தைக் கொண்டு இச் சிற்பிக்கு மனித உடலின் அமைப்புப் பற்றிய நல்லறிவு இருந்ததாகத் தெரிகிறது.
- வெண்கலத்தினால் வார்க்கப்பட்ட இச் சிலையின் மேற்பரப்பில் தங்க முலாம் இடப்பட்டிருந்துள்ளது.

**தாராதேவி (மாலா தாரா)**

- மன்னார் மாவட்டத்தில் மன்னார் துறைக்கு அருகில் இது கண்டெடுக்கப்பட்டது. இப் பெண் தெய்வ உருவம் 5.4 சென்றிமீற்றர் உயரமுடையது.
- வெள்ளி கலந்த கலப்பு உலோகத்தினால் திண்ம வார்ப்பு முறையில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வீராசன முறையில் இருக்கும் இவ்வுருவின் தலை இடப்புறமாகவும் கண்கள் வலப்புறமாகவும் நோக்கியிருக்கின்றன.
- இனங்காணப்படாத பொருளொன்று கையில் உள்ளது.
- முக்கோன வடிவில் ஒரு மகுடம் காணப்படுகிறது. நெற்றியில் நெற்றிப்பட்டம் அணிந்தவராகவும் காணப்படுகிறார்.
- இடுப்புக்குக் கீழ் பகுதியில் ஊடுருவித் தெரியும் விதத்திலான ஆடை அணியப்பட்டுள்ளது. மேற்பகுதி ஆடையின்றியது. தோடு, கழுத்தில் ஆபரணங்கள், சலங்கை, வளையங்கள் அணிந்திருப்பவராக இச்சிலை தோற்றமளிக்கிறது.

**தெதிகம கொட்டவெஹர "எத் பகன" (யானை விளக்கு)**

- கி.பி. 1951ம் ஆண்டு தெதிகம கொட்டவெஹர சைத்தியம் அமைந்த பகுதியில் இவ்விளக்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது கி.பி. 11 – 12ம் நூற்றாண்டுக்குரியது.
- 28.5 சென்ரிமீற்றர் உயரமுடைய இவ்விளக்கு பித்தளையூடகத்தினால் பொல்லான வார்ப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- யானை மீது செல்லும் ஓர் அரசனும் அவருக்குப் பின்னால் மகாராணியும் விளக்கில் குறிக்கப்பட்டுள்ளனர்.
- விளக்கைத் தொங்க விடப்பட்டிருக்கும் சங்கிலி, நடன மாதுக்கள் இருவரால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- தொழில் நுட்பத்தின் மிகவும் விசேட முறையொன்றினால் விளக்கு ஒளிருகிறது.

**நடராஜர்**

- இந்து சமயத்தவரின் நிர்மாணிப்பான நடராஜர் சிலை, சிவன் அல்லது ஈசுவரனின் தாண்டவ நடன அமைப்பை வெளிப்படுத்தி நிற்கிறது.
- கி.பி. 12ம் நூற்றாண்டுக்குறிய இச் சிலை பொலநறுவை சிவனாலயம் 01 இல் கண்டெடுக்கப்பட்டது.
- வெண்கலத்தினால் திண்ம வார்ப்பு முறையில் முழுப்புடைப்பு வடிவமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- நடன அமைப்பின், சமநிலைத் தன்மை, உயிர்ப்புடனான இளமைத் தோற்றம் என்பன இச் சிலையில் வெளிப்படுகின்றன.
- இது நான்கு கைகளைக் கொண்டுள்ளது. அவை வெவ்வேறு முத்திரைகளைக் குறிப்பதுடன் வெவ்வேறு விடயங்களை அடையாளப்படுத்துகின்றன.

  மேலுள்ள வலக்கை - உடுக்கு / மேளம்

  கீழுள்ள வலக்கை - அபய முத்திரை

  மேலுள்ள இடக்கை - ஜோதிப் பிளம்பு

  கீழுள்ள இடக்கை - கஜ ஹஸ்த முத்திரை

- பிரபஞ்சத்தின் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனப்படும் பஞ்ச கிருத்தியங்கள் இதில் வெளிப்படுகின்றன. இந்து மதத்தின் எண்ணக் கருக்கள் குறியீட்டு வடிவில் காண்பிக்கப் பட்டுள்ளமை இதன் சிறப்பியல்பாகும்
- வலப்பாதத்தை கீழே ஊன்றியிருப்பதால், இடக்கையை உயர்த்தி நடனமாடும் சிவனின் உடலின் சமனிலை பேணப்பட்டுள்ளது. அத்துடன் வலப்பாதத்தினால் முயல்களை மிதித்து நிற்றல் மறைத்தலை அடையாளப்படுத்துகிறது.
- சுற்றி தீச் சுடராலான வில் வளைவு கொண்ட அமைப்புக்குள் மகர வாய்களினால் இணைக்கப்பட்ட பத்மாசனத்தின் மீது இச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- இச் சிலை தற்போது தேசிய நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

**சிவபார்வதி (சோமஸ்கந்த)**

- இது பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த சிவனாலயம் 05 இல் கண்டெடுக்கப்பட்டது.
- முழுப் புடைப்பு முறையில் வெண்கலத்தினால் வார்க்கப்பட்டுள்ளது. தாமரைப் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் இருக்கும் சிவபார்வதியை இது குறிக்கிறது.
- அளவுப் பரிமாணத்துக்கு ஏற்ப பார்வதியின் சிலை சிவனை விடச் சிறிதாக உள்ளது. அவர்களுக்கிடையிலுள்ள இடைத் தொடர்பை இச் சிலை நன்கு எடுத்துக் காட்டுகிறது.
- சிவனின் முன்புற வலக்கை அபய முத்திரையையும் இடக்கை வரத முத்திரையையும் குறிக்கிறது. அவரது பின்புற வலக்கை கோடரியொன்றையும் இடக்கை மானின் உருவத்தையும் ஏந்தி நிற்கிறது. பார்வதி வலக்கையில் நீல அல்லி மலரை ஏந்தியிருக்கிறார். அது அவர் நீல அல்லியில் இருந்து பிறந்ததை அடையாளப் படுத்துகிறது.
- இவர்கள் இருவரது பாதங்களும் லலிதாசன முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- சிவபார்வதி சிலைகளுடன் துவாரங்கள் காணப்படுவதால் அவர்களது மகனான ஸ்கந்தா இருந்ததாகக் கருதப்பட்டுள்ளது. இருந்த போதும் தற்போது இச் சிலைகளுடன் அவ்வுருவம் காணப்படவில்லை
- ஆண், பெண் இருவரின் கூட்டுப் பலம் இச் சிலை வெளிப்படுத்துகிறது. அல்லது பொருளினதும் ஆன்மாவினதும் கூட்டமைப்பை இது குறிக்கின்றது.
- இச் சிலை தற்போது தேசிய நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- இலங்கையில் காணப்பட்ட உலோக கலை நிர்மாணிப்புகளுள் மிகச் சிறப்பான சிலைகளைக் குறிப்பிட்டு, அவை நிர்மாணிக்கக் காரணமாக அமைந்த கருப் பொருள்களைக் கலந்துரையாடுக.
- அந் நிர்மாணிப்புகளுக்கு உபயோகித்த ஊடகங்கள், நுட்பமுறைகள் என்பவற்றை விளக்குக.
- இந்து மதத்தின் எண்ணக் கருக்களை, அடையாள வடிவில் காட்டப் பட்டுள்ள விதத்தினை இந்து மதச் சிலைகளினூடாக விளக்குக.
- உலோகச் சிலை வார்ப்பின் போது வெளிப்பட்ட நுட்பத் திறன்களையும் கலைப் பண்புகளையும் உதாரணங்களுடன் ஆராய்க.

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.11 :** **இலங்கையின் வரலாற்று ரீதியான சித்திரக் கலையைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.11.1 :** **அநுராதபுர காலத்து ஓவியங்களைக் கற்றறிவோம்.**

- சிகிரியா ஓவியங்கள்
- ஹிந்தகல ஓவியங்கள்
- கொனாகொல்ல ஓவியங்கள்
- மகியங்கனை சாய தாது கர்ப்பத்தின் ஓவியங்கள்.

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

சிகிரியா, ஹிந்தகல, கொனாகொல்ல, மகியங்கனை தாதுவின் அண்டத்திலுள்ள ஓவியங்கள் என்பன குறிக்கும் உருவப்படங்கள் உள்ளடக்கிய இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- அநுராதபுர காலத்து ஓவியங்கள் வரையப்பட்டுள்ள இடங்களைக் குறிப்பிடுவார்.
- அநுராதபுர காலத்து சித்திரக் கலைக்கு, செல்வாக்கு செலுத்திய சமயப் பின்னணியையும் உலகியலுடன் தொடர்பான பின்னணியையும் விளக்குவார்.
- அநுராதபுர காலத்து ஓவியங்களின் கருப்பொருட்களை விபரித்துக் கூறுவார்.
- அநுராதபுர காலத்து ஓவியங்களின் கலைப்பாணி, சித்தரிப்பு முறை, நுட்பமுறை, தொழில் நுட்பம், உபயோகிக்கப்பட்ட ஊடகங்கள் என்பவற்றை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள் :**

உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச்செயற்பாடுகள் மூலம் ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தல்/ கலை நிர்மாணப் பிரதிகளை மதிப்பீடு செய்தல்/ செயற்றிட்ட முறை/ என்பவற்றில் ஒன்றை அல்லது பலவற்றைத் தெரிவு செய்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**சிகிரியா**

- அநுராதபுர காலத்து ஓவியங்களுள் மிகவும் பாதுகாப்பாக உள்ளவை சிகிரியா ஓவியங்கள் ஆகும்.
- சிகிரியாக் குன்றின் மேற்குப்புற சாய்வுப் பகுதியில் சித்தரிக்கப்பட்டுள்ள பெண்களின் உருவங்கள் மிக முக்கியமானவையாகும். தற்போது 22 உருவங்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளன. இருந்த போதும் இதை விட அதிகமான உருவங்கள் இருந்ததாக சிகிரியாவைப் பற்றி எழுதப்பட்ட கவிதை வரிகளிலிருந்து தெரியவந்துள்ளது. சிகிரியாவின் கீழ்ப்புற குகைகளிலும் சிதைவடைந்த ஓவியப் பகுதிகள் சிலவற்றைக் காணக் கூடியதாக இருக்கின்றது.
- பெண்களின் இடுப்புக்கு மேற்பகுதியைக் கொண்ட உருவங்களே சிகிரியாக் குன்றின் ஓவியங்களாக அமைந்தன. இவை மஞ்சள், நீலம் ஆகிய வர்ணங்களைக் கொண்டு வரையப்பட்டுள்ளன.
- கீழைத்தேய கலை மரபுக்கு ஏற்ப இவ்வுருவங்கள் வரையப்பட்டுள்ளன. இந்தியாவின் அஜந்தா, பாக் ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்களுக்கு ஒத்ததாக இவை காணப்படுகின்றன.
- பெண் உருவங்கள் மிகவும் வசீகரமான தோற்றத்தைக் கொண்டுள்ளன. அகண்ட இடை, நிறைந்த மார்ப்பகம், நீண்ட கழுத்து, மெல்லிய விரல்கள், நீண்ட கண்கள் போன்ற கீழைத்தேய கவிதைகளில் வரும் பெண்களின் இயல்புகளை நினைவூட்டும் வண்ணம் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- பெண்களின் உருவங்கள் தனியாகவோ கூட்டாகவோ உள்ளன. சிலர் பூக்களை அல்லது பூத்தட்டுகளை ஏந்திய வண்ணம் உள்ளனர். அதிகமான உருவங்கள் இளம் பெண்களைக் குறிப்பதாக இருப்பினும் நடுத்தர வயதுடைய பெண்களும், வயது முதிர்ந்த பெண்களும் அவ்வுருக்களிடையே காணப்படுகின்றன.
- மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திலுள்ள இனாமலு கோரளைப் பகுதியில் சிகிரியாக் குன்று அமைந்துள்ளது. கி.பி.5ம் நூற்றாண்டில் காசியப்ப மன்னனால் இக் கோட்டை நிர்மாணிக்கப்பட்டது.
- சிகிரியா ஓவியங்கள் கி.பி. 5-7ம் நூற்றாண்டுகளுக்குரியதெனக் கலை வரலாற்றறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- ஓவியங்கள் மஞ்சள், சிவப்பு, நீலம், கருஞ்சிவப்பு, கறுப்பு ஆகிய வர்ணங்களைக் கொண்டுள்ளன. இவ்வர்ண பேதங்களைக் கொண்டு முப்பரிமாணத் தன்மையுடன், உயிர்த்துடிப்புள்ள இரேகைகள் ஓவியங்களில் காணப்படுபவர்கள் யார் என்பது சிறப்பானவை பற்றி முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. இவை விஜ்ஜிலதா மேகலதா என்றும், பூ மழையை பொழிய வைக்கும் தெய்வ கன்னிகள் என்றும், (அப்சரா) காசியப்ப மன்னனுடைய அந்தப்புர பெண்கள் என்றும், போதியும் உத்பலவன்னாவும் என்றும் (காசியப்ப மன்னனுடைய மகள்மார்) தாரா தேவதை என்றும் பல கருத்துகள் உள்ளன.

**ஹிந்தகல**

- மிகவும் பழைமையான புத்தரின் உருவம் கொண்ட ஓவியங்கள் ஹிந்தகல விகாரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 6- 7 நூற்றாண்டுகளுக்குரியவை. இருந்தபோதும் மிகச் சொற்பளவிலான ஓவியங்களே இங்கு எஞ்சியுள்ளன.
- இவ்வோவியத்தொகுதியில் புத்தரின் உருவங்கள் இரண்டே மீதியாக உள்ளன. வலப்பக்கத்தில் உள்ள உருவம் தர்ம போதனைசெய்யும் நிலையையும் விதர்க்க முத்திரையையும் கொண்டுள்ளன. இடப்பக்க புத்தரின் உருவம் பொருள் ஒன்றை ஏற்றுக் கொள்ளும் நிலையில் (பிரதிக்கிரகன முத்திரை) காட்டப்பட்டுள்ளது.
- கலைப்பாணி அடிப்படையில் இவை சீகிரியா ஓவியங்களில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. சீகிரிய ஓவியங்களைப் போல் இரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் வர்ணங்களினால் முப்பரிமாணத் தன்மையையும் இயற்கைப் பண்புகளையும் வெளிப்படுத்தி இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன.
- புத்தரின் உருவம் ஏனைய உருவங்களைவிடப் பெரிதாக வரையப்பட்டுள்ளது. எனவே இவ்வுருவிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. காவி உடை புத்தருடைய தோளின் ஒரு பகுதியில் மட்டும் மறைக்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது.
- இவ்வோவியம் பல நிகழ்வுகளைக் குறிப்பதாக அனுமானிக்கப்பட்டுள்ளது. தபஸ்சூ, பல்லூக எனும் இரு வியாபாரிகள் பொரியும் தேனும் பூஜிப்பதையும் சம்பதி பிராமனன் தர்ம போதனைக்காக புத்தரை அழைப்பதையும் இவ்வோவியங்கள் குறிக்கின்றன.
- ஹிந்தகல கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**கொனாகொல்ல**

- பாரிய ஓவிய தொகுதியிலிருந்து சில ஓவியங்கள் இன்னும் எஞ்சிக் காணப்படுகின்றன. இவற்றில் ஆணின் உருவம் ஒன்றும் பெண்ணின் உருவம் ஒன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. இவை கி.பி. 5 - 7 ஆம் நூற்றாண்டுகளுக்குரியவை எனக் கணிக்கப்படுகின்றது.
- நேராகப்பார்த்துக் கொண்டிருக்கும் ஆண் உருவத்தின் இடக்கையில் நீளமான காம்பு உடைய பூ ஒன்று உள்ளது. பெண்ணின் உருவம் ஆணின் உருவத்தை வணங்கி நிற்பதைப் போல் வரையப்பட்டள்ளது. எனவே ஆணின் உருவம் புனிதமான ஒருவரைக் குறிப்பதாக உள்ளது. பெரும்பாலும் இவ்வுருவம் போதி சத்துவரைக் குறிக்கின்றதென அனுமானிக்கப்படுகிறது.
- ஆணின் உருவம் சற்றுப் பெரிதாக வரையப்பட்டுள்ளதால் அது முக்கியத்துவம் பெறுகிறது. அதில் நீள்வட்ட வடிவமுடைய ஒளிவட்டம் ஒன்று காணப்படுவதுடன் அவ்வுருவில் ஒருகண் மட்டும் எஞ்சிய நிலையில் உள்ளது.
- பெண்ணின் உருவம் பக்தர் ஒருவரைக் குறிக்கின்றது. அவள் அஞ்சலி முத்திரையுடன் ஆணின் உருவத்தை நமஸ்காரம் செய்யும் நிலையில் காணப்படுகிறாள். அவளுடைய தலையில் நாகக் குறியீட்டைக் கொண்ட கிரீடம் ஒன்று காணப்படுகிறது.
- வெப்ப வர்ணங்களான சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் ஆகியவை கறுப்பை மையமாகக் கொண்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.
- கொனாக்கொல்ல கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**மஹியங்கனைத் தாது கர்ப்பத்தின் (அண்டத்தின்) ஓவியங்கள்**

- அண்டம் ஒன்றின் உட்பகுதியில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ள விடயம் மகாவம்சத்தில் குறிப்பிடப்படிருப்பதை உறுதிப்படுத்தி மகியங்கனை தாதுவின் அண்டத்தினுள் ஓவியங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.
- இவை கி.பி. 9 – 11ம் நூற்றாண்டுக்குறியவை என அனுமானிக்கப்படுகின்றன.
- முழு ஓவியத் தொகுதியையும் தற்போது காணமுடியாமலிருப்பினும் எஞ்சிய பகுதிகள் தற்போது பாதுகாக்கப்பட்டுள்ளன. எஞ்சியவைக்கேற்ப இவ்வோவியம் புத்தர் ஞானம்பெறும் நிகழ்வைக் குறிப்பிதாக உள்ளது.
- இதன் ஒரு பகுதியில் அரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் புத்த பெருமான் காணப்படுகிறார். புன்னகையுடன் காணப்படும் புத்தரின் உருவம் ஒரு தோள் மட்டும் மூடிய காவியுடையைக் கொண்டுள்ளது. பின்புறத்தில் மகர அமைப்பைக் கொண்ட அழகிய ஆசனமொன்று உள்ளது. புத்த பெருமானுக்கு ஒளி வட்டம் ஒன்று இடப்பட்டுள்ளது.
- கையில் மலர் தட்டுடன் காணப்படும் விஷ்ணுவும் இவ்வோவியத்தில் காணப்படும் முக்கிய ஓவியமாகும். இது நான்கு கரங்களைக் கொண்டது. மிகவும் வசிகரமான தோற்றத்தைக் கொண்டுள்ளது.
- வெப்ப வர்ணங்களான சிவப்பு, மஞ்சள், கருங்சிவப்பு, நீலம் ஆகியவை கறுப்பை மையமாகக் கொண்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இங்கே இரேகைகள் தீவிரமாக இடப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அவை உருவங்களின் அங்கப்பகுதிகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

## கணிப்பீடு

- அனுராதபுரக் காலத்திற்குரிய ஓவியங்களைப் பார்வையிடக் கூடிய இடங்கள் அடங்கிய பட்டியலொன்றைத் தயாரிக்க.
- சீகிரியா ஓவியம் பற்றிய வேறுபட்ட கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடுக.
- அனுராதபுரக் காலத்துச் சமய ஓவியக்கலையின் தொனிப்பொருள்கள் பற்றி ஆராய்க.
- அனுராதபுரக்காலத்து ஓவியங்களின் கலைப்பாணி அவை சித்தரித்த முறைகள் அவற்றின் கலைப்பண்புகள் பற்றிய மதிப்பீடொன்றைச் செய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.11 : இலங்கையின் வரலாற்று ரீதியான சித்திரக் கலையைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.11.2 : பொலநறுவை காலத்து ஓவியங்களைக் கற்றறிவோம்.**

- திவங்க சிலைமனை ஓவியங்கள்
- கல்விகாரையின் வித்தியாதரக்குகை ஓவியங்கள்
- திம்புலாகல மாறாவீதிய ஓவியங்கள்

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

திவங்க சிலைமனை, வித்தியாதரக்குகை, திபுலாகலை மாறாவீதிய ஆகிய நிழற்படங்களுடனான இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- பொலநறுவை காலத்து ஓவியங்கள் காணக்கூடிய இடங்களைக் குறிப்பிடுவார்.
- திவங்கசிலைமனை ஓவியங்களின் கருப்பொருளை விபரிப்பார்.
- பொலநறுவைக் காலத்து ஓவியங்களின் கலைப்பண்புகள் அவற்றின் சித்தரிப்பு முறைகள், ஓவியங்கள் வரையப்பட்ட இடங்கள் பற்றி விளக்குவார்.
- பொலநறுவைக்காலத்து ஓவியங்களுக்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கருக்களையும் கலை நீதியையும் திட்டமிடலையும் பற்றி விளக்கிக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள் :**

உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச்செயற்பாடுகள் மூலம் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்தல்/ கலை நிர்மாணப் பிரதிகளை மதிப்பீடு செய்தல்/ செயற்றிட்ட முறை/ என்பவற்றில் ஒன்றை அல்லது பலவற்றைத் தெரிவு செய்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### திவங்க சிலைமனையின் ஓவியங்கள்

- பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த அதிகளவு ஓவியங்கள் திவங்க சிலைமனையிலையே எஞ்சியிருக்கின்றன. ஆதிகாலத்து விகாரைச் சிலை மனைகளின் பௌத்த ஓவியங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற இவை மிகவும் உதவுகின்றன.
- சிலைமனையில் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பது ஒரு விசேட முறைக்கமையவே. வெளிப்புற புத்தரின் போதிசத்வ பருவத்தையும் மத்திய பகுதி தெய்வ பருவத்தையும் கர்பக் கிரகப்பகுதி அல்லது உட்பகுதி ஞானம் பெற்றதன் பின் பருவத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- இச் சிலைமனை 12ம் நூற்றாண்டில் பராக்கிரமபாகு மன்னனால் கட்டுவித்ததாகக் கருதப்படுகிறது. இருந்த போதும் இச் சிலைமனையில் தற்போது காணப்படும் ஓவியங்கள் 12ம் நூற்றாண்டிலும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் புனரமைப்புகளின் போதும் சேர்க்கப்பட்டவையாக இருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது. கர்ப்பக்கிரகத்திலும் இடைமண்டபத்திலும் உள்ள ஓவியங்கள் மிகவும் பழைமை யானவையாகும். அவை பழைமையான கலைப் பண்புகளைப் பிரதிபலிக்கின்றன.
- கர்ப்பக்கிரகத்தில் உள்ள ஓவியங்களுள் புத்தபெருமான் சங்கஸ்ஸ புரியை அடையும் காட்சி முக்கியமானது. தொல்சீர் மரபுக்கு ஏற்றவாறு சித்தரிக்கப்பட்டுள்ள இதில் மூன்று ஏணிகள் காணப்படுகின்றன. புத்தபெருமானுக்கு இரு புறத்திலும் தேவர்கள் குடை ஏந்தியுள்ளனர். புத்தரின்உருவம் மூவளைவு (திரிபங்க) நிலையில் காணபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இடக்கை கீழே தொங்கவிடப்பட்டும் வலக்கை விதர்க்க முத்திரையைக் கொண்டதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- இடைமண்டபத்தில் உள்ள தேவாராதனையும் முக்கியமான ஓவியமாகும். வணங்கும் நிலையுடன் தெய்வ உருவங்கள் வரிசையாக சித்தரிக்கப்பட்டுள்ளன. தெய்வ உருவங்கள் அழகிய மகுடத்தையும் ஆடையணிகலன்களையும் கொண்டதாகக் காணப்படுகிறது.
- திவங்க சிலைமனையின் மண்டபத்தைக் கொண்ட பகுதிகளில் ஜாதகக் கதைகள் வரையப்பட்டுள்ளன. இவை பல கலைப் பாணிகளைக் கொண்டுள்ளன. இதனால் இவை ஒரே காலப்பகுதியில் வரைந்ததாகக் கருத முடியாது. சுவர் பாகங்களாக வகுக்கப்பட்டு தொடர்ச்சியாகக் கதை உருவாகும் விதத்தில் ஜாதகக்கதைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. தேமியஜாதகக் கதை, சுள்ள பதும ஜாதகக் கதை , அசங்கவதி ஜாதகக் கதை, மைத்திரி பல ஜாதகக் கதை, உம்மக்க ஜாதகக் கதை (காலகோல கதை) பந்தன மொக்க ஜாதகக் கதை எனும் ஜாதகக் கதைளை இவற்றுள் இனங்காணக் கூடியதாக இருக்கின்றன.
- இரேகைகளின் வடிவமைப்பை மையமாகக் கொண்டு இவை வரையப்பட்டுள்ளன. சிவப்பு, மஞ்சல், கருஞ்சிவப்பு, கறுப்பு கலந்த வெப்ப வர்ணத் தொகுதி உபயோகிக்கப்பட்டுள்ளன.ஆபரணங்கள், ஆடையணிகள், உடலமைப்பு ஆகியவற்றின் பண்புகளும் விளக்கமும் இரேகைகள் மூலமே வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

### கல் விகாரையின் வித்தியாதரக் குகை ஓவியங்கள்

- கல் விகாரையின் குகைக்குள் அமைந்த குடையுடன் கூடிய புத்தர் சிலையின் இரு புறத்தில் பாரியளவிலான சித்திரத்தின் 2 நிரல்களில் உள்ள ஓவியங்கள் மட்டுமே இப்போது காணக் கூடியதாக உள்ளன. ஒரு நிரல் 6x1 அடி அளவுடையது.

- கையில் மலருடனும் நீண்ட தாடியுடனும் காணப்படும் பிராமண உருவம் இவற்றில் இனங்காணக் கூடிய முக்கியமான உருவமாகும். இதனைத் தவிர மகுடத்தையும் ஒளி வட்டத்தையும் கொண்ட தெய்வமெனக் கருதக் கூடிய உருவமொன்றும் உள்ளது.
- புத்தரின் உருவைச் சுற்றிக் காணப்படும் தெய்வங்கள், பிராமணர்கள் என்பன பாரிய ஓவியத்தின் பகுதிகள் என அனுமானிக்கலாம்.
- செந்நெறி கலை மரபுக்கு ஒத்த இயல்புகளைப் பொலநறுவை திவங்க சிலைமனை ஓவியங்கள் கொண்டுள்ளன. இரேகைகளை மையமாகக் கொண்டு இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

**திம்புலாகல மாறா வீதிய ஓவியங்கள்**

- பொலநறுவைக் காலத்துக்கு உரியதென இவை கணிக்கப்படுகிறது. இரு குகைகளில் எஞ்சியுள்ள ஓவியப் பகுதிகளைக் காணலாம்.
- இரேகைகள் வரையப்பட்ட விதம், வர்ண உபயோகம், கலைப்பாணி என்பன பொலநறுவைக் காலத்து ஓவியங்களுக்கு ஒத்துள்ளன. தற்போது இவற்றுள் அதிகமானவை அழிந்துள்ளன.
- முதலாம் இலக்கக்குகையில் புத்தரின் உருவப் பகுதிகள் எஞ்சியுள்ளன.
- இரண்டாம் இலக்கக் குகையில் சச ஜாதகக்கதையும், யானையின் தும்பிக்கையால் ஏந்தி நிற்கும் மனித உருவம் தீட்டப்பட்ட ஓவியத்தின் பகுதியும் உள்ளது. இது வெஸ்ஸந்தர ஜாதகையின் ஒரு பகுதியாக இருக்கலாம். யானையின் உருவம் விளையாட்டுத் தன்மை கொண்டதாக வரையப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- பொலநறுவை காலத்திற்குரிய ஓவியங்களைக் காணக் கூடிய இடங்கள் பற்றிய குறிப்பொன்றை எழுதுக.
- திவங்க சிலை மனையின் புத்தரின் பண்பியல் புகளையும், அவரது வாழ்க்கைக் காலப் பகுதியையும் பிரதிபலிக்கும் விதத்தில் வரையப்பட்ட சித்திரங்களின் கருப்பொருளைக் கலந்துரையாடுக.
- பொலநறுவைக் காலத்து ஓவியங்களின் கலைப் பாணி, சித்திர வடிவமைப்பு, ஓவியங்கள் வரையப்பட்டுள்ள இடங்கள் பற்றி ஆராய்க.
- பழைமையான விகார மண்டபமொன்றின் ஓவியத் திட்டமிடல் முறையை விளங்கிக் கொள்ள திவங்க சிலை மனை எவ்வளவு தூரம் உபயோகப்படும் என்பது பற்றிக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.11 : இலங்கையின் வரலாற்று ரீதியான சித்திரக் கலையை கற்றறிவார்.**

**செயற்பாடு 7.11.3 : கண்டிக் காலத்துப் பாரம்பரிய ஓவியங்களைக் கற்றறிவோம்.**

- மலை நாட்டுக் கலைப் பாணி
  - தெகல் தொருவ
  - மெதவல டெம்பிட்ட விகாரை
  - தம்புள்ள குகை விகாரை

**பாடவேளைகள் :** 3

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

தெகல் தொருவ, மெதவல டெம்பிட்ட விகாரை, தம்புள்ள குகை விகாரை ஆகியவற்றின் ஓவியங்களை சித்தரிக்கும் நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- கண்டிக் காலத்துப் பாரம்பரிய ஓவியங்களுள் மலை நாட்டு கலைப்பாணிக்குரிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ள இடங்களைக் குறிப்பிடுவார்.
- கண்டிக்கால மரபின் மலை நாட்டுக் கலைப் பாணிக்குரிய ஓவியங்களின் கலைப் பண்புகள், சித்தரிப்புமுறை, நுட்ப முறை என்பனவற்றை விளக்குவார்.
- கண்டிக்கால மரபின் மலை நாட்டு கலைப்பாணிக்குரிய ஓவியங்களின் கருப் பொருட்களும், அவை விகாரையின் உட் புறத்தில் திட்டமிட்டு வரையப்பட்டுள்ள விதமும் பற்றி விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்**

உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச்செயற்பாடுகள் மூலம் ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தல்/ கலை நிர்மாணப் பிரதிகளை மதிப்பீடு செய்தல்/ செயற்றிட்ட முறை/ என்பவற்றில் ஒன்றை அல்லது பலவற்றைத் தெரிவு செய்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**மலைநாட்டுக் கலைப் பாணியின் ஓவியங்களின் பொதுப்பண்புகள்:-**

- மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளை அதிகமாகக் கொண்டுள்ளன.
- மலைநாட்டு அரசர்களின் அனுசரணையின் கீழ் இவை வளர்ச்சியடைந்தன.
- தெகல்தொருவ ரஜமகா விகாரை, மெதவல டெம்பிட்ட விகாரை, தம்புள்ள ரஜமகா விகாரை, சூரிய கொட ரஜமகா விகாரை, லேவல்ல கங்காராமய, ரிதீ விகாரை போன்ற இடங்களில் இப்பாணியிலான ஓவியங்களைக் காணலாம்.
- இவை இரேகைகளை அடிப்படையாகக் கொண்ட ஓவியப் பாணியாகும். உருவங்களின் விபரங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. தட்டையான முறையில் உருவங்கள் வர்ணம் தீட்டப்பட்டுள்ளன.
- உருவங்கள் பெரும்பாலும் குறியீட்டு வடிவைக் கொண்டன. அத்துடன் மிக முக்கியமான அத்தியாவசிய விடயங்கள் மட்டுமே ஓவியங்களின் கருப் பொருட்களாக அமைந்தன.
- பின்னணி சிவப்பு நிறத்தைக் கொண்டது. அத்துடன் வெற்று இடப்பரப்புகள் கலைப் மோடிப்படுத்தப்பட்ட தாமரை, சப்பு (சண்பக மலர்), தாழம் பூ, கடுப்புள் மலர் போன்றவற்றால் நிரப்பப்பட்டன.
- முப்பரிமாணத் தன்மை, ஒளி நிழல் காண்பித்தல், இயற்கைப் பரிமாணம் (அளவீடு) ஆகியவை இவ்வோவியங்களில் காணப்படவில்லை.
- சுவர் நிரல்களாக பிரிக்கப்பட்டு அவற்றில் தொடர்ச்சியான கதை உருவாகும் விதத்தில் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.
- அதிகமான ஓவியங்களுடன் அவற்றை விளக்கச் சிறு குறிப்புகள் உள்ளதை அவதானிக்கலாம்.
- மனித உருவங்களும் விலங்கு உருவங்களும் ஒரு பக்கம் திரும்பியிருப்பது போல் பக்கத் தோற்றம் தென்படும் விதத்தில் உள்ளன. புத்தரின் உருவங்கள், தெய்வ உருவங்கள் என்பன நேராக உள்ள விதத்தில் காணப்படுகின்றன.
- இக் காலத்துக்குரிய ஓவியங்கள் 18ம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ம் நூண்றாண்டின் தொடக்கத்தையும் கொண்ட காலப் பகுதியில் மலை நாட்டு ராஜதானி பரவிய பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்டன.

**தெகல்தொறுவ ரஜமகா விகாரை. (இரு பாறைகளுக்கிடையிலமைந்த விகாரை)**

- கண்டி நகரை அண்மித்த லேவெல்ல இறங்கு துறைக்கருகில் இரு பாறைகள் இணைவதால் அமைக்கப்பட்ட விகாரையாகும்.
- இவ்வோவியங்களை 4 ஓவியர்கள் வரைந்ததாகக் கருதப்படுகின்றன. தேவேந்திர மூலாச்சாரி, ஹிரியாலே நயிதே, தெவரகம்பல சில்வத்தென, நீலகம பட்டபெந்தி என்பவர்களே இவர்களாவர்.
- வெஸ்ஸந்தர ஜாதகக் கதை, சூதசோம ஜாதகக் கதை, மகாசீலவ, சத்துபத்த என்ற ஜாதகக் கதைகளே இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இவற்றுள் தெவரகம்பள சில்வத்தென எனும் ஓவியன் வரைந்த வெஸ்ஸந்தர ஜாதகக் கதையே மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதில் யானைகள் தானம் கொடுக்கும் காட்சியே ஓவியத்தின் பிரபல்யம் அடைந்த காட்சியாகிறது.
- உட் கூரையில் வரையப்பட்ட யமனை தோற்கடித்தல் (மார யுத்தம்) எனும் காட்சி மிக முக்கியமானதாகும் இங்கு புத்த பெருமான் பூமி ஸ்பரிச முத்திரையில்

காணப்படுகிறார். ஒரு பக்கத்தில் பூமித்தாய் தென்படுகிறாள். புத்த பெருமானுக்குப் பிடித்திருக்கும் குடை போன்று பின் புறத்தில் மோடிப்படுத்தப்பட்ட வகையில் அரச மரம் வரையப்பட்டுள்ளது.

- இயமன்களின் ஒருவனின் கையில் ஆயுதம் காணப்படுவதுடன் துப்பாக்கியும் வரையப்பட்டிருப்பது முக்கியமானதாகும்.
- சிலைமனையின் உட் பகுதியில் கண்டிக்கால மரபைத் தழுவிய துயிலும் நிலையிலான பாரிய சிலை ஒன்று காணப்படுகிறது.

## மெதவல டெம்பிட்ட விகாரை

- இது கண்டி மாவட்டத்தின் ஹறிஸ்பத்துவ மெதவல கிராமத்தில் அமைந்துள்ளது.
- இது தூண் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. கற்றூண்கள் எட்டு நடப்பட்டு அதன் மீது பலகையினாலும் வரிச்சி வடிவில் அமைக்கப்பட்ட சுவரினாலும் இச்சிலைமனை அமைக்கப்பட்டுள்ளது. அதற்குள் நுழையும் வாயில் வலப் புறமாக உள்ளது.
- சிலைமனையின் உட் பகுதியில் பெரிய ஓவியங்கள் காணக் கூடியதாக இருக்கின்றன. வெஸ்ஸந்தர ஜாதகக் கதை, உரக ஜாதகக் கதை என்பன இவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. வெஸ்ஸந்தர ஜாதகக் கதையை 9 கட்டங்களாகவும் உரக ஜாதகக் கதையை 6 கட்டங்களாகவும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இவை மலை நாட்டுக்கலைப் பாணியை எடுத்துக் காட்டும் ஓவியங்களாக இனங்காணக் கூடியதாக இருக்கின்றன.
- இவற்றைத் தவிர ஏழு வாரங்கள், றகத்பெரகர, பன்னிரு புனித ஸ்தலங்கள் எனும் ஓவியங்களும் விகாரைச் சுவர்களில் உள்ளன. உட்கூரையமைப்பில் கருணை வடிவான போதிசத்துவர் ஏழு தேவர்களுக்குத் தர்ம போதனை செய்யும் காட்சியும் உள்ளது.
- இவ் வோவியங்கள் 18ம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதிக்குரியவை எனக் கணிக்கப்படுகின்றன.
- விகாரை வரலாற்று ரீதியாக மிகவும் பழைமை வாய்ந்தது. இருந்தபோதும் தற்போதுள்ள சிலைமனையும் அதன் ஓவிய நிர்மாணிப்புகளும் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனது காலத்துக்கும் அதற்குப் பிற்பட்ட காலத்துக்கும் உரியவை. இவற்றுக்கு அனுசரணை வழங்கிய துனுவில நிலமேயின் உருவமும் ஓவியங்களுக்கிடையில் காணக் கூடியதாக இருக்கிறது.

## தம்புள்ள ரஜ மகா விகாரை

- தம்புள்ள ரஜ மகா விகாரையின் வரலாறு வலகம்பா மன்னனுடைய காலத்துக்குரியது. தற்போது காணப்படும் ஓவிய நிர்மாணிப்புகள் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனுடைய ஆட்சிக் காலத்துக்குரியவை எனக் கருதப்படுகிறது.
- தம்புள்ள மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- வரிசையாக உள்ள இக் குகைகளில் ஐந்து சிலைமனைகள் உள்ளன. இவை தேவ ராஜ விகாரை, ரஜமகா விகாரை, அலுத் விகாரை, இரண்டாவது அலுத் விகாரை பஸ்சீம அலுத் விகாரை எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.
- நீலகம சந்ததிக்குரிய ஓவியர்களால் இவ் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. "நீலகம துடபத்த" எனும் அறிக்கை விகாரை நிர்மாணிப்புப் பற்றிய விடயங்களை உள்ளடக்கியுள்ள முக்கியமான ஆவணமாகும்.
- இங்கு 2ம் குகையில் உட் கூரையில் வரையப்பட்ட இயமனை தோற்கடித்தல் எனும்

ஓவியம் மிகவும் முக்கியமானதொன்றாகும் இது பாரிய அளவிலான ஓவியமாகும். இதிலுள்ள புத்தரின் உருவம் பூமி ஸ்பரிச முத்திரையைக் கொண்டது. அழகு மிக்க ஒளிக்கீற்றுகளால் இவை விசித்திரமாகக் காட்டப்பட்டுள்ளன. புத்தரின் உருவைச் சுற்றி இயமன்கள் கூட்டமாகக் காட்டப்பட்டடுள்ளன. புத்தரின் காலடியில் யானை மீதிருந்து விழும் இயமனின் மகனும் இதில் காண்பிக்கப்பட்டுள்ளான். ஒரு புறத்தில் பூமித்தாய் காண்பிக்கப்பட்டுள்ளார்.

- இலங்கை வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் பல இங்கு ஓவியங்களாக உள்ளன. விஜயனின் வருகை, மகிந்தனின் வருகை, புனித வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வருதல், புனித தந்தத்தைக் கொண்டு வருதல் ஆகியன இவற்றுள் சிலவாகும்.
- ‘அநோதத்த வில’ எனப்படும் ஓவியமும் இவ்வோவியங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.
- புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகள், எட்டுப் புனிதத் தலங்கள், தேவர்கள் பலரின் உருவங்கள் என்பவற்றையும் காணக்கூடியதாக இருக்கின்றன.
- தம்புள்ள ரஜமகா விகாரையில் அமர்ந்த நிலைப் புத்தர் சிலைகள் நின்ற நிலை புத்தர் சிலைகள், துயிலும் நிலைப் புத்தர் சிலைகள் என்பனவும் பாரியளவில் காணக்கூடியதாக இருக்கின்றன.
- இவற்றுக்கு அனுசரனை வழங்கிய கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனுடைய சிலையும் இங்கே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- கண்டிக்கால மரபுக்குரிய மலை நாட்டுக் கலைப் பாணியின் ஓவியங்கள் காணப்படும் இடங்களை உள்ளடக்கி அட்டவணை ஒன்றைத் தயாரிக்க.
- மலை நாட்டுக் கலைப் பாணிக்குரிய ஓவியங்களின் பண்புகளைக் கலந்துரையாடுக.
- மலை நாட்டுக் கலைப் பாணிக்குரிய ஓவியங்களின் கருப்பொருளாக அமைந்த விடயங்களை ஆராய்க.
- மலை நாட்டுக் கலைப்பாணிக்குரிய ஓவியங்களை வரைந்த ஓவியர்கள் சுவர்களை அதற்காக தயார் படுத்திய விதம், உபயோகிக்கப்பட்ட வர்ணங்கள், உபகரணங்கள், ஓவிய நிர்மாணிப்புகள் என்பன பற்றி ஆராய்க.

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.11 :** **இலங்கையில் வரலாற்றுச் சித்திரக் கலையைக் கற்பார்.**

**செயற்பாடு 7.11.4 :** **கண்டிக் காலத்துப் பாரம்பரிய ஓவியங்களைக் கற்றறிவோம்.**

- தாழ் பிரதேசக் கலைப் பாணி
  - கத்தலுவ பூர்வாராமய
  - முள்கிரிகல விகாரை
  - கரகம்பிட்டிய சுபோதாராமய
  - தெல்வத்த விகாரை

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

கத்தலுவ பூர்வாராமய, முள்கிரிகல விகாரை, கரகம்பிட்டிய சுபோதாராமய, தெல்வத்த விகாரை என்பவற்றின் ஓவியங்கள் உள்ளடக்கிய நிழற்படங்களுள்ள இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- கண்டிக்கால மரபின் தாழ் பிரதேச கலைப்பாணிக்குரிய ஓவியங்கள் காணப்படும் இடங்களைப் பட்டியற்படுத்துவார்
- கண்டிக்கால மரபின் தாழ்பிரதேசக் கலைப் பாணிக்குரிய ஓவியங்களின் பொதுப் பண்புகளைக் கலந்துரையாடுவார்.
- மலை நாட்டுக் கலைப்பாணியினதும் தாழ்பிரதேசக் கலைப்பாணியினதும் ஒத்த எதிர்ப் பண்புகளை ஆராய்வார்.
- தாழ் பிரதேசத்து ஓவியங்களின் கருப்பொருட்களைக் கலந்துரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்**

உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச்செயற்பாடுகள் மூலம் ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தல்/ கலை நிர்மாணப் பிரதிகளை மதிப்பீடு செய்தல்/ செயற்றிட்ட முறை/ என்பவற்றில் ஒன்றை அல்லது பலவற்றைத் தெரிவு செய்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### தாழ்பிரதேசக் கலைப் பாணிக்குரிய ஓவியங்களின் பொதுப்பண்புகள்:-

- மலைநாட்டுக் கலைப் பாணிக்கும், தாழ் பிரதேசக் கலைப் பாணிக்கும் இடையில் பொதுவாக அமைந்த இயல்புகள் உள்ளன. அத்துடன் தாழ் பிரதேசக் கலைப் பாணிக்கே உரித்தான சில பண்புகளையும் இவை கொண்டுள்ளன.
- தாழ் பிரதேச கலைப் பாணிக்குரிய ஓவியங்கள் அவற்றை விளக்கும் வகையில் அமைந்துள்ளன. விசேடமாக இவை மனித உருவங்களையும் பொருட்களையும் பின்னணியாகக் கொண்டுள்ளன.
- மலைநாட்டு ஓவியர்கள் பின்னணியைச் சித்தரிக்க தாவரங்களை உபயோகிக்கவில்லை. தாழ் பிரதேசக் கலைஞர்கள் தாவரங்களின் தனித்துவம் வெளிப்படும் விதத்தில் ஓவியங்கள் வரைந்தனர். மரமுந்திரிகை, பனை, கமுகு, பலா ஆகிய தாவரங்கள் இனங்காணக் கூடிய விதத்தில் வரைந்தனர்.
- மனித உடல் நிலைகளைக் கருதும் போது மலைநாட்டு ஓவியர்களை விட அதிகளவு உடல்நிலைகளைக் கொண்ட மனித உருவங்களை வரைந்துள்ளனர். அத்துடன் உணர்ச்சி வெளிப்பாடும் உயர்வாகக் காட்டப்படுகிறது.
- ஐரோப்பிய தளபாடங்கள், ஆடையணிகள், ஆபரணங்கள், கட்டடங்கள் என்பன தாழ் பிரதேசக் கலைப்பாணிக்குரிய ஓவியங்களில் அதிகளவு காணப்படுகின்றன.
- மலை நாட்டுக் கலைப் பாணியில் காணப்படும் எளிமையான இரேகைகளான அலங்கார வடிவங்களைக் கொண்ட ஆடையணிகளுக்குப் பதிலாக கவர்ச்சி மிக்க அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்ட ஆடையணிகள் காணப்பட்டன.
- சிவப்புப் பின்னணியைத் தவிர கறுப்பு, நீலம் ஆகிய வர்ணங்களையும் பின்னணியில் சேர்த்துக் கொண்டனர்.
- ஐரோப்பிய கலையின் செல்வாக்குக் காரணமாகப் பின்னணிக்கு ரோசா, திராட்சை போன்ற அலங்கார வடிவங்கள் சேர்க்கப்பட்டன.
- உருவங்கள் சிறிதளவு முப்பரிமாணத் தன்மையுடையதாகக் காண்பிக்க எத்தனிக்கப் பட்டுள்ளது.
- இது 19ம் நூற்றாண்டை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த ஓவியக் கலைப்பாணியாகும். இப்பருவம் நவீன கலையின் ஆரம்பம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

### கத்தலுவ பூர்வாராமய

- இலங்கையின் தென் கரையோர வலையத்தில் அமைந்த 19ம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட முக்கியமான விகாரையாகும். இதிலுள்ள மிகப் பழைமையான ஓவியங்கள் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரியவை எனக் கருதப்படுகிறது.
- இதனைத் தவிரப் பல சந்தர்ப்பங்களில் இது புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. பிரதான நுழைவாயிலுக்கு மேல் பக்கமாக அதில் பிற்காலப் பகுதியில் சித்திரங்கள் வரையப்பட்டு அவற்றில் 1886ம் ஆண்டு எனவும் குறிக்கப்பட்டுள்ளன.
- இதிலுள்ள அநேகமான ஓவியங்கள் கடொல்கல்ல சந்ததியின் ஓவியர்களால் வரையப்பட்டதாக கருதப்படுகிறது.
- பெருஞ் செல்வந்தனின் கதை, (மகா தன சிட்டுவரயா) வெஸ்ஸந்தர ஜாதகக் கதை, கட்டஹாரீ ஜாதகக் கதை, பட்டாசாரா கதை என்பன இங்குள்ள ஓவியங்களின் தொனிப் பொருட்களாக அமைகின்றன.

- இதன் கர்ப்பக் கிரகத்தின் பிரதான நுழை வாயில்கள் இரண்டுக்கு மேலாக விக்டோரியா மகாராணியாரின் உருவமும் பிரித்தானிய இலச்சினையும் வரையப்பட்டுள்ளன.
- ஓவியங்கள் அலங்கார வேலைப்பாடுகள் அதிகம் கொண்டதாகவும், தெளிவாக ஓவியத்தை விளக்குவனவாகவும் காணப்படுகின்றன. மேற்கத்தேய பாணியுடன் ஆடையணிகள், கட்டட நிர்மாணிப்புகளின் பகுதிகள், பழக்க வழக்கங்கள் அதிகளவில் இவ்வோவியங்களில் காணப்படுகின்றன. பெருஞ் செல்வந்தனின் கதை இதற்குப் பெருமளவில் சான்று பகிர்கின்றன.

**முல்கிரிகல விகாரை**

- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்த மிகவும் முக்கியமான விகாரையாகும். இதன் தோற்றம் அநுராதபுர காலத்துக்குரியது.
- கற்பாறை மீது பல மட்டங்களில் அமைக்கப்பட்ட சிலைமனைகள் பல இங்குள்ளன. இவற்றின் கலை நிர்மாணிப்புகளைக் கருதும் போது பதுமரகத் விகாரை, மெத மலுவ விகாரை, ரஜமகா விகாரை என்பன அமைந்த குகைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.
- இங்குள்ள ஓவியங்களிலும் பல கலைப் பாணிகளுக்குரிய இயல்புகள் புலப்படுகின்றன. இவற்றுள் மிகவும் பழைமையான ஓவியங்கள் ரஜமகா விகாரைச் சிலைமனையில் உள்ளன. ஏனைய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஓவியங்கள் பல 19ம் நூற்றாண்டில் வரைந்தவையாக உள்ளன.
- தேலபத்த ஜாதகக் கதை, சிவி ஜாதகக் கதை, வெஸ்ஸந்தர ஜாதகக் கதை என்பன இதில் காணப்படும் பிரபல்யமான ஜாதகக் கதைகளாகின்றன. இதனைத் தவிரப் புத்தரின் சரிதையும் பல தெய்வ உருவங்களையும் காணக் கூடியதாக இருக்கின்றன.
- தேலபத்த ஜாதகக் கதையில் வரும் “பெரஹெர” காட்சி முல்கிரிகல ஓவியங்களுள் மிகவும் பிரபல்யமானது.
- இங்கு 19ம் நூற்றாண்டுக்குரிய ஓவியங்களுள் ஐரோப்பிய ஆடையணிகள், மேற்கத்தேய வீட்டு அலங்காரங்கள் ஆகியன கொண்ட பின்னணியும், ஐரோப்பியபாணியில் அமைந்த வீட்டுத் தளபாடங்களும் காணக்கூடியதாக இருக்கின்றன.

**கரகம்பிட்டிய சுபோதாராமய**

- கொழும்பு மாவட்டத்தில் தெகிவளையில் கரகம்பிட்டிய அமைந்துள்ளது. தற்போதுள்ள விகாரை 19ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.
- இங்குள்ள சிலைமனையிலும் தர்மபோதன மண்டபத்தினும் ஓவியங்களைக் காணலாம். தர்ம போதனை மண்டப உட்கூரையில் உள்ள அலங்கார வேலைப்பாடும் பெரஹெர காட்சியும் முக்கியமானவையாகின்றன.
- இங்குள்ள ஓவியங்களின் தொனிப் பொருட்களுள் புத்தரின் சரிதை, மகா ஜனக்க ஜாதக் கதை, நிமி ஜாதகக் கதை, கட்டஹாரி ஜாதகக்கதை, கதிரங்கார ஜாதகக் கதை, மணிசோர ஜாதகக் கதை, உம்மக்க ஜாதகக் கதை, என்பன காணக் கூடியதாக இருக்கின்றன.
- ஒவ்வொரு வகையான பாவங்களுக்குரிய தண்டனை ஓவியங்களாகவும், கவிதை வடிவிலும் நிமி ஜாதகக் கதையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
- இங்குள்ள உம்மக்க ஜாதகக் கதை 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதிக்குரியதென நம்பப்படுகிறது. அது மேற்கத்தேய கலைப்பாணியின் இயல்புகளையும் நோக்கங்களையும் கொண்டுள்ளது.

- இங்குள்ள அலங்கார வேலைப்பாடுகளுள் பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளும் மேற்கத்தேய கலைப் பாணிக்குரிய வேலைப்பாடுகளும் உள்ளன. ரோசா, திராட்சை போன்றவை அலங்கார அலகுகளாக உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றன.
- புத்தரின் சரிதைக்குரிய நிகழ்வுகளுள், மகாமாயா தேவியின் கனவு, சித்தார்தரின் பிறப்பு, ஏர் பூட்டும் விழா (வப் மகுல), மார யுத்தம், யசோதரா தேவியும் ராகுல இளவரசனும், தபஸ்சு பல்லுக என்பவர் பொரியும் தேனும் வழங்குதல் ஆகிய ஓவியங்களையும் காணலாம்.

**தெல்வத்த விகாரை**

- காலி மாவட்டத்தில் அமைந்த மிகவும் முக்கியமான விகாரையொன்றாகும். இது "தொட்டகமு றன்பத் ரஜ மகா விகாரை" எனவும் அழைக்கப்படுகிறது.
- நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இங்கு தற்போதுள்ள சிலைமனைகள் 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 19ம் நூற்றாண்டின் முதற் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. 1799, 1805 என ஆண்டுகள் குறிக்கப்பட்ட சிலைமனைகள் 2 உள்ளன.
- இங்குள்ள பழைமையான மனையின் ஓவியங்களின் கலைப் பாணியின் இயல்புகள் மலை நாட்டுக் கலைப் பாணிக்குரிய ஓவியங்களை ஒத்துள்ளன.
- புத்தரின் சரிதை, தேவ தர்ம ஜாதகக் கதை, சுள்ள தம்மபால ஜாதகக்கதை என்பன புதிய விகாரையில் வரையப்பட்டுள்ளன.
- புதிய விகாரையின் வலது பக்கச் சுவரில் உள்ள "காமதேவ" சிலை (மன்மத) சிறப்பான இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் இவ்வாறான சிலைகள் விகாரை மனைகளுள் அரிதாகக் காணப்படுவதால் ஆகும். ஒரு கையில் கரும்பாலான வில்லும், மற்றைய கையில் ஈட்டிகளும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- இவ்வோவியங்களிலும் ஐரோப்பிய அலங்கார வடிவங்கள், வீட்டுத் தளபாடங்கள், கட்டட அமைப்புகளைக் கொண்ட பின்னணி என்பன காணக்கூடியதாக இருக்கின்றன.

## கணிப்பீடு

- மலைநாட்டுப் பாரம்பரிய ஓவியங்களினதும் தாழ்பிரதேச கலைப்பாணிக்குரிய ஓவியங்களினதும் பொதுப் பண்புகள் எவை எனக் கலந்துரையாடுக.
- மலைநாட்டு, தாழ்பிரதேசக் கலைப் பாணிகளின் ஒத்த எதிர்ப் பண்புகளை ஒப்பிடுக.
- தாழ் பிரதேச கலைப் பாணிக்குரிய ஓவியங்கள் காணப்படும் இடங்கள் எவை எனப் பட்டியல் ஒன்றை அமைக்க.
- தாழ் பிரதேச கலைப் பாணிக்குரிய ஓவியங்களின் கருப்பொருட்களைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.12 : இந்து நதிக்கரை நாகரிகத்திற்கு உரித்தான கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.12.1 : இந்து நதிக்கரை கட்டடக்கலை ஆக்கங்களைக் கற்போம்.**

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இந்து நதிக்கரை நாகரிகக் கட்டடக்கலை நிர்மாணங்கள் அடங்கிய படங்கள், திட்டக் குறிப்புகள், இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள் மற்றும் எறிவை (Projector)

**கற்றற் பேறுகள் :**

- இந்து நதிக்கரை நாகரிகம் சார்ந்த கட்டடக்கலை ஆக்கங்களைக் கூறுவார்.
- இந்து நதிக்கரை நாகரிகத்தின் கட்டட நிர்மாணக்கலை அம்சங்களின் சிறப்புக்களை விபரித்துக் கூறுவார்.
- கட்டடக் கலை ஆக்கங்களின் திட்டமிட்ட தன்மை மற்றும் ஒழுங்கமைப்பின் சிறப்புப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- இந்து நதிக்கரை நாகரிகக் கட்டடக் கலை ஆக்கங்களின் ஊடகப் பாவனை, தொழினுட்பம் மற்றும் கலை நுட்பங்களை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடுகள், கலந்துரையாடல் முறை, வினா விடை முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**இந்து நதிக்கரை நாகரிகத்தின் நகர நிர்மாணம்**

- இந்து நதிக்கரை நாகரிகத்தில் பல்வேறு விடயங்களுக்காக விசேட நகரங்கள் இருந்துள்ளன.
- மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நிர்வாக மத்திய நிலையம் மற்றும் குடியேற்றங்களாகவும் காலிபங்கன் கைத்தொழில் நகரமாகவும், லோத்தால் வணிக நகரமாகவும் இனங்காணப்பட்டுள்ளன.
- இந்த நாகரிகம் நகர ஆட்சி முறையைக் கொண்டுள்ளது எனக் கருதப்படுகின்றது.

- பிரதான நகரங்களான மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா உள்நகரம், வெளிநகரமென சுவர்கள் கட்டிப் பிரிக்கப்பட்டிருந்தன.
- மொஹஞ்சதாரோவின் பிரதான நுழைவாயில் மேற்குத் திசையில் அமைந்திருந்ததோடு பாதுகாப்புத் தூணொன்றும் இருந்துள்ளது.
- இது பாதுகாப்பு ஒழுங்குகளில் பலமிக்க நகரமாகக் குறிப்பிடலாம்.
- மொஹஞ்சதாரோவில் உட்புற நகரத்தினுள் ஆட்சியின் முக்கிய பொதுக் கட்டடங்கள் மற்றும் பிரபுக்களின் வீடுகள் அமைந்திருந்தன. வெளிப்புற நகரத்தில் பொதுமக்களின் வீடுகள் இருந்துள்ளன.
- முக்கிய கட்டடங்கள் மற்றும் மதில்கள் சுட்ட செங்கல்லினால் அமைக்கப்பட்டிருந்தன.

**விசேட கட்டடக்கலை ஆக்கங்கள் மற்றும் அவற்றின் விசேட அம்சங்களை இனங்காணல்**

- பிரபு இல்லங்கள் ஆடம்பரமாகத் தெரிகின்றன.
- பொதுமக்களின் வீடுகளை விடப் பெரியதாகவும் பொது மக்களின் வீடுகளுக்கு அப்பாலும் இவை அமைந்திருந்தன.
- அவர்களின் வீடுகளினுள் குளியலறை, மலசல கூடம் போன்றவை இருந்துள்ளதோடு மாடிவீடுகளாக இருந்தமைக்கும் அத்தாட்சிகள் உள்ளன.
- பொதுமக்களின் வீடுகள் ஒரே அமைப்பைக் கொண்ட கட்டடங்களாகும்.
- ஒரே வடிவத்திற்கமைய கட்டப்பட்ட வீட்டுத் தொடர்களாக இருந்துள்ளதுடன் இவை வீதியின் இரு பக்கத்திலும் அமைந்திருந்தன.
- வீடுகளின் நுழைவாயில் பிரதான வீதியை நோக்கியிருக்கவில்லை.
- ஒரு வீட்டுத் தொடரில் 10 முதல் 12 வீடுகள் அமைந்திருந்தன.
- ஒவ்வொரு வீட்டிலும் விறாந்தை, ஓர் அறை மற்றும் சமையலறை ஆகியன இருந்துள்ளன.
- ஒரு வீட்டுத் தொடருக்குப் பொது மலசல கூடமும் பொதுக்கிணறும் இருந்துள்ளன.
- உள்ளகச் சுவர்கள் களிமண் கலவையினால் பூசப்பட்டிருந்துள்ளதோடு மிகவும் எளிமையாகவும் இருந்துள்ளன. கூரை பற்றிய அத்தாட்சிகள் காணப்படவில்லை.
- வீதிகளில் நடைபாதையின் கீழ் நீர் வடிந்தோடும் வடிகால் கட்டமைப்பு ஒன்று இருந்துள்ளது.
- வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மண் குழாய்களினூடாக உப வீதிகளின் வடிகால்களுடனும், பிரதான வீதி வடிகாலுடனும் இணைக்கப்பட்டிருந்தன.
- உப வீதி வடிகால்கள் பிரதான வீதியுடன் இணையும் இடத்தில் வடிகட்டல் அமைப்பொன்று இருந்துள்ளதோடு, இந்த வடிகால் கட்டமைப்பு மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் இருந்துள்ளதாகக் கருதப்படுகின்றது.
- உட்புற நகர மத்தியிலுள்ள நீர்த்தடாகம் 39' நீளமாகவம் 03' அகலமாகவும் 8' ஆழமாகவும் இருந்துள்ளது.
- இதைச்சுற்றி மூன்று பக்கத்தில் அறைத்தொடர் இருந்துள்ளதோடு சமய அனுஷ்டானங்கள் நடத்தும்போது மதகுருமாரின் பாவனைக்காக இவை பாவிக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

- மேட்டு நிலமொன்றிலிருந்த செவ்வக வடிவமான கிணற்றிலிருந்து "அக்விடக்ட்" எனும் நீர்ப்பாசன முறையூடாகத் தடாகத்திற்கு நீர் பெறப்பட்டுள்ளது.
- சுரங்க வடிவிலான இந்த நீர்ப்பாசனக் கட்டமைப்பில் நீர் வெளியேற்றும் விசேட வில்வடிவிலான மதகு போன்ற கட்டடக்கலை அமைப்பொன்று காணப்படுகின்றது.
- தானியங்களைக் களஞ்சியப்படுத்தப் பாரிய கட்டடமொன்று இருந்துள்ளதோடு, அது நீர்த்தடாகத்திற்கருகில் நில மட்டத்தை விட உயர்ந்த மேடையின் மேல் அமைக்கப்பட்டிருந்தது.
- 150′x 75′ அளவில் அமைந்துள்ளது.
- அதன் மத்தியில் உள்ள வட்டவடிவமான பகுதி தானியங்களை இடிப்பதற்காகப் பாவிக்கப்பட்டிருக்கக் கூடும்.
- இதையொத்த 6 கட்டிடங்களின் சிதைவுகளை ஹரப்பாவில் காண முடிகின்றது.
- நகரத்தில் முறையான வீதிக் கட்டமைப்பொன்று உள்ளதோடு, அது நிர்வாக மத்திய நிலையத்திலிருந்து வெளியே செல்லும் நேர் விதிக் கட்டமைப்பாக அமைந்துள்ளது.
- வீதிகள் பிரதான வீதியுடன் தொடர்பு படுவதோடு வலைப்பின்னல் வடிவத்தில் அமைந்துள்ளன.
- பிரதான வீதி 30‘ அகலமானது. வீதிகளுக்கிடையில் கட்டடங்கள் அமைந்துள்ளன.
- பொதுக்கட்டட அமைப்புகளுள் மயானங்களும் காணப்படுகின்றன.
- இந்து நதிக்கரை நாகரிகத்தில் நகரத் திட்டமிடல் முறை மற்றும் அமைப்பிற்கேற்ப அந்நரக மக்கள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விசேட கவனம் செலுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

## கணிப்பீடு

- இந்து நதிக்கரை நாகரிகம் சார்ந்த கட்டடக்கலை அம்சங்களைக் குறிப்பிடுக.
- இந்து நதிக்கரை மக்கள் மிக முன்னேற்றகரமான, முறையான நகரத் திட்டமிடலுக்கமைய செயற்பட்டமை அவர்களின் கட்டட நிர்மாணக்கலையூடாக உதாரணங்களுடன் கலந்துரையாடுக.
- இந்து நதிக்கரை மக்கள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சம்பந்தமாகக் கவனம் செலுத்தியுள்ளமையைக் கட்டட நிர்மாணக் கலையூடாகக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.12 : இந்து நதிக்கரை நாகரிகத்திற்கு உரித்தான கலை ஆக்கங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.12.2 : இந்து நதிக்கரைச் சிலைகள் மற்றும் முத்திரைகளைக் கற்போம்.**

சிலைகள் - முண்டப்படிமம் (கவந்த உருவம்), நடன வடிவத்தைக் கொண்ட முண்டப்படிமம், நடன மாது, பூசகர் உருவம், தாய் தெய்வ உருவம்

முத்திரைகள் - யோகாசன தெய்வ உருவம் (கொம்புகளுடனான கடவுள்/ பசுபதி) விருச்ச தேவதை (கடவுள், அடியார்கள்/ ஆடு)
இரண்டு புலிகளுடன் போராடும் மனிதன்

**பாடவேளைகள் :** 3

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- இந்து நதிக்கரை நாகரிகச் சிலைகள் மற்றும் முத்திரைகள் நிர்மாணங்கள் அடங்கிய படங்கள், திட்டக் குறிப்புகள், இறுவெட்டுக்கள், கணனி இயந்திரங்கள் மற்றும் எறிவை (Projector)

## கற்றற் பேறுகள் :

- இந்து நதிக்கரை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான பின்னணியை விபரிப்பார்.
- இந்து நதிக்கரையில் கிடைத்த சிற்பங்கள் மற்றும் முத்திரைகளைக் குறிப்பிடுவார்.
- இந்து நதிக்கரைச் சிற்பங்கள் மற்றும் முத்திரைகளின் விசேட அம்சங்களை விபரித்துக் கூறுவார்.
- இந்து நதிக்கரைக் கலையாக்கங்களின் கருப்பொருள், ஊடகப் பாவனை, கலை நுட்பங்கள் மற்றும் கலை அம்சங்களைக் கலந்துரையாடுவார்.
- இந்து நதிக்கரைக் கலையாக்கங்களை மதிப்பிடுவார்.

## கற்றல் கற்பித்தல் முறை:

- ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடுகள், கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**இந்து நதிக்கரை நாகரிகத்தில் வரலாற்று ரீதியிலான பின்னணி மற்றும் அமைவிடத்தை இனங்காணுதல்**

- மொஹஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகம் எனப்படும் இந்த நாகரிகம் இந்து நதியைச் சார்ந்து ஆரம்பித்துள்ளதோடு, அது கி.மு. 3000 - 1500 இற்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரியதாகக் கருதப்படுகின்றது.
- இதன் பொற்காலம் கி.மு. 2500 - 1500 இற்குமிடைப்பட்ட காலமென இந்தியத் தொல்பொருளாய்வாளர்களின் கருத்தாகும்.
- இந் நகரங்கள் இரண்டையும் மையமாகக் கொண்ட 60 இற்கும் அதிகமான நகரங்கள் இங்கு இருந்ததாக இனங்காணப்பட்டுள்ளன.
- மொஹன்ஜதாரோ இந்து நதியின் களிமுகத்திலிருந்து 250 மைல்கள் மேற்புறமாகவும், ஹரப்பா 400 மைல்கள் மேற்புறமாக இந்து நதியின் கிளையாறாகிய ரவீ நதிக்கு அருகிலும் அமைந்திருந்தன.
- இந்த நாகரிகத்தில் பல்வேறு மனித இனங்கள் இருந்தமை, கிடைக்கப்பெற்றுள்ள மானிட சான்றுகள் மற்றும் ஆக்கங்களினூடாக இனங்காணப்பட்டுள்ளன.

**இந்து நதிக்கரை நாகரிகத்தில் கண்டெடுத்த சிற்பங்கள் மற்றும் முத்திரைகள்**

- இந்து நதிக்கரை நாகரிகத்தில் கண்டெடுத்த சிற்பங்களுள் முண்டப்படிவம், நடனமாது, தவசி உருவம், தாய் தெய்வ உருவம் முக்கிய கலையாக்கங்களாகும்.
- அநேகமான சிற்பக் கலையாக்கங்களில் அவர்களுடைய மத வழிபாடு, நம்பிக்கைகள் பற்றிய கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன.
- இச்சிற்பங்களை நிர்மாணிப்பதற்காகப் பல்வேறு ஊடகங்கள் மற்றும் கலை நுட்பங்களைப் பாவித்திருப்பதோடு அவற்றின் தன்மை மற்றும் கலையம்சங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.
- இந்து நதிக்கரைச் சிற்பங்கள் சுடுமண், வெண்கலம் மற்றும் பல்வேறு கற்களை உபயோகித்துப் பல்வேறு கலை நுட்பங்களுக்கமையச் செய்யப்பட்டுள்ளன.

**முண்டப்படிவம் (கவந்த உருவம்)**

- ஹரப்பாவில் கண்டெடுத்த முழுப் புடைப்பு முறையிலான சிற்பமாகும்.
- சிவப்பு மணற் கல்லினால் பொழியப்பட்டுள்ள இது 10 செ.மீற்றர் அளவில் உயரமான நிர்வாண ஆண் உருவமாகும்.
- தலை மற்றும் கை, காலற்ற சிற்பமாகும். இதன் தலை மற்றும் கை, கால்கள் வெவ்வேறாகப் பொழிந்து பொருத்தி இருந்தமைக்குச் சான்று கிடைத்துள்ளது.
- உடல் கட்டமைப்பு சரியான அளவீட்டில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு கீழைத்தேய மானிட அம்சங்களைப் பிரதிபலிக்கின்றது.
- மனித உடலின் அழகை மிகவும் நுண்ணியதாகவும் மிருதுவாகவும் காணக்கூடியமை சிறப்பம்சமாகும்.

**நடனமாடும் வடிவத்தைக் கொண்ட முண்டப்படிமம்**

- சாம்பல் மணற் கல்லினால் பொழியப்பட்டுள்ள உயரம் 10 செ.மீற்றர் அளவிலான நிர்வாண ஆண் உருவமாகும்.
- சந்தத்துடன் கூடிய நிலையைக் காட்டும் இதிலும் கை, கால்கள் கிடையாது.
- முண்ட உருவத்தில் சிவதாண்டவ நடனம் பிரதிபலிப்பதாக பிகொட் கூறுகிறார்.

**நடனமாது உருவம்**

- ஹரப்பாவில் கண்டெடுத்த வெண்கலத்தினால் செயய்ப்பட்ட இது இந்து நதிக்கரை மக்களின் உலோக தொழிநுட்ப ஆற்றலை எடுத்துக்காட்டுகின்றது.
- திண்ம வார்ப்பு முறையில் முழு புடைப்பாக நிர்மாணிக்கப்பட்ட இந்தச் சிலை 4 1/2″ அளவில் உயரமானது.
- மெல்லிய நிர்வாணப் பெண் உருவமாகும். கால், கைகள் நீளமானவையாகும். இடது கை வளையல்களால் நிரம்பியுள்ளது. கழுத்தில் எளிமையான மாலையொன்று காணப்படுகின்றது.
- ஒரு காலை முன்னால் வைத்து, வலது கையை இடுப்பில் வைத்திருக்கும் நிலை காரணமாக இது ஒரு ஆலயத்தில் நடனமாடும் பெண் என்று ஒரு கருத்துள்ளது.

**பூசகர் உருவம்**

- மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளைச் சுண்ணாம்புக் கல்லினால் பொழியப்பட்ட இடுப்பிற்கு மேற்பகுதியுடனான ஆண் உருவமாகும். 17 1/2 செ.மீற்றர் அளவில் உயரமானது.
- தட்டையான மூக்கு, தடித்த உதடுகள், ஒடுங்கிய நெற்றி, கனமான இரேகைகளால் காட்டப்படும் தாடி மற்றும் நீண்ட அரைவாசி திறந்த கண்களைக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது. கலைப்பாணிக்குரிய இயல்புகளை வெளிப்படுத்துகின்றது.
- தலையைச் சுற்றிக் கொழுவியுடன் கூடிய பட்டியும், இடது தோளை மூடியபடி மூவிதழ் பூ வடிவத்தைக் கொண்ட ஆடையும் உள்ளது.
- ஒரு தோள் மூடிய ஆடை மற்றும் அரைவாசி திறந்த கண்கள், ஓரளவு மொட்டையுடன் கூடிய தலை போன்றவை காரணமாக இது ஒரு பூசகர் உருவமாகக் கருதப்படுகின்றது.
- இதில் மொங்கோலிய மனித அம்சங்கள் காணப்படுகின்றன என்பது ஒரு கருத்தாகும்.

**தாய்த் தெய்வ உருவம்**

- தாய்த் தெய்வத்தைப் பிரதிபலிக்கும் பல சுடுமண் உருவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- இவை மிகவும் சிறியனவாகவும் அடிப்படை அம்சங்களையும் கொண்டுள்ளன.
- அகன்ற இடை, மார்பகம் ஆகியன ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

**முத்திரைகள்**

- இந்து நதிக்கரைக் கலை ஆக்கங்களுள் 2000 இற்கும் அதிகமான பல்வேறு முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த முத்திரை ஆக்கங்களினூடாக இந்து நதிக்கரை மக்களின் வளர்ச்சி பெற்ற

கலை ஆக்கத்திறன், எழுத்தாற்றல், கலை போன்றே சமய, பொருளாதார மற்றும் சமூகமயத் தகவல்கள் வெளிக்காட்டப்படுகின்றன.

- இந்த ஆக்கங்களுள் பல்வேறு விலங்கு உருவங்கள், குறியீடுகள் மற்றும் மனித உருவங்களைக் காணமுடிகின்றன.
- விலங்கு உருவங்களுள் பல்வேறு எருது உருவங்களைக் காணமுடிகின்றன. பிராம எருது, கட்டையான கொம்புகளைக் கொண்ட எருது, ஒற்றைக் கொம்புள்ள எருது (யுனிகோன்) போன்ற எருது உருவங்கள் அவற்றில் சிலவாகும்.
- வேறு விலங்கு உருவங்களுள் யானை, ரைனோசிரஸ், முதலை, புலி மற்றும் மான் போன்ற விலங்குகளின் முத்திரைகள் உள்ளன.
- அதிகமானவை ஸ்டீடையில் எனும் கற்களினாலும் களிமண், வெள்ளி, செம்பு, யானைத்தந்தம் போன்றவற்றைப் பாவித்து சதுர வடிவம், நீள் சதுர வடிவம், நீள் வட்ட வடிவம், அரிய வடிவங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- குவிவான மற்றும் குழிவான விதத்திலும் செதுக்கப்பட்டுள்ளன.
- படைவீரர்களுக்கு, வம்சத் தலைவர்களுக்கு, பூசகர்களுக்கு மற்றும் சில விடயங்கள் சம்பந்தமாகப் பொது மக்களுக்கும் ஒரு அனுமதிப்பத்திரமாக (Pass) பாவிக்கப்பட்டுள்ளது.
- நோய்களைக் குணப்படுத்துவதற்கான தாயத்து வகையாகவும் பாவிக்கப்பட்டுள்ளன.

**யோகாசன தெய்வ உருவம் (கொம்புடன் கூடிய கடவுள்/ பசுபதி)**

- செதுக்கல் பலகையின் மத்தியில் யோகாசன நிலையிலுள்ள மனித உருவத்தின் தலையின் மேல் கொம்புடன் கூடிய தலையணி உள்ளது.
- முன்பக்க முகத்தைத் தவிர இரு பக்கங்களிலும் இரு முகங்கள் காணப்படுகின்றன.
- இந்தப்படத்திற்குப் பின்னணியில் ரைனோசிரஸ், எருமை மாடு, யானை மற்றும் புலி போன்ற மிருகங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. அவ்றறினுள் இந்து நதிக்கரைக்குரிய எழுத்துக்களும் உள்ளன.
- இந்த யோகாசன உருவம் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் கீழ் இரண்டு ஆடுகளின் உருவங்களைக் காண முடிகின்றது.

**விருட்ச தேவதை (கடவுள், அடியார்கள் மற்றும் ஆடு)**

- இந்த முத்திரையின் ஒரு முனையில் வில் வடிவத்தில் வளைந்த மரத்தின் மேல் நிற்கும் ஒரு உருவம் உள்ளது. அந்த உருவத்திற்கு மறுபுறத்தில் ஒரு ஆட்டின் உருவம் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது.
- முத்திரையின் கீழ்ப்பகுதியில் மனித உருவ வரிசை உள்ளது.
- இந்த முத்திரை விருட்ச தேவதைக்காகச் செய்யப்பட்ட பூசையொன்று பற்றிய ஒரு அடையாளம் எனக் கருதப்படுகின்றது.
- இவ்வாறான பல முத்திரைகள் இந்து நதிக்கரையில் கிடைத்துள்ளன.

**இரு புலிகளுடன் போராடும் மனிதன்**

- ஒரு மனிதன் புலியெனக் கருதத்கூடிய இரு மிருகங்களுடன் போராடும் சந்தர்ப்பம் இதில் பிரதிபலிக்கின்றது.

- முத்திரையின் மத்தியில் மனித உருவம் காணப்படுவதோடு இரு பக்கமும் பின்னங் கால்களால் நிற்கும் புலிகள் இரண்டினையும் காண முடிகின்றது.
- மனிதன் கைகளை இரு பக்கத்திற்கும் விரித்து மிருக்கங்களைத் தடுப்பது போல் உள்ளது.
- முத்திரையில் மேற்புறமாக எழுத்துக்கள் உள்ளன.

## கணிப்பீடு

- இந்து நதிக்கரைச் சிற்பங்கள் மற்றும் முத்திரைகளைப் பெயரிடுக.
- இந்து நதிக்கரைக் கலையாக்கங்களுக்காகப் பாவிக்கப்பட்ட ஊடகங்களைக் குறிப்பிடுக.
- அந்தக் கலையாக்கங்களின் கலை நுட்பங்களையும் தொழில் நுட்பங்களையும் விபரிக்குக.
- இந்து நதிக்கரை கலையாக்கங்களின் விசேட அம்சங்கள், கலையம்சங்கள் மற்றும் மத எண்ணக்கருக்கள் பற்றிக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.13 : இந்திய மௌரிய கலை ஆக்கங்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.13.1 : சாஞ்சித் தூபியையும் அசோகத் தூண்களையும் கற்றறிவோம்.**

- சாஞ்சித் தூபியின் கலை அம்சங்கள்
- அசோகத்தூண்கள்
    - லௌரியா நந்தன்கர் தூணின் உச்சி
    - சாரநாத் தூணின் உச்சி
    - ராம்பூர்வாத் தூணின் உச்சி

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

சாஞ்சித் தூண்கள், ஆசோக தூண்கள் உள்ள நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :-**

- மௌரிய கால வரலாற்று ரீதியான பின்னணியை விளக்குவார்.
- மௌரிய கால கலை நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- சாஞ்சித் தூபியின் கட்டடக் கலையின் நிர்மாணிப்புக் களையும் அதன் கலைப் பண்புகளையும் விளக்குவார்
- அசோகத் தூண்களின் கட்டமைப்புப் பண்புகள், கருப்பொருள், பயன்பட்ட ஊடகங்கள், நுட்ப முறைகள் கலைப்பண்புகள் என்பவற்றைக் கற்றறிவார்.
- மௌரிய கலைப் படைப்புக்களை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

உரையாடல்முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

**மௌரிய காலத்து வரலாற்றுப்பின்னணியை அறிந்து கொள்வார் :-**

- கி.மு. 4 ஆம் நூற்றாண்டு இறுதிப்பகுதியில் வட இந்தியாவை ஆண்ட அலெக்ஸாண்டரைத் தோற்கடித்துச் சந்திர குப்தர் என்ற அரசர் ஆட்சியைக் கைப்பற்றினார்.

- மௌரிய வம்சம் இவ்வாறு ஆரம்பிப்பதுடன் பாட்டலி புத்திரம் அதன் தலைநகரமானது.
- சந்திர குப்தவுக்குப் பின்னர் அவரது மகன் பிந்துசாரவும் அதன் பின் அவரது மகன் அசோகனும் ஆட்சியை அமைத்தனர்.
- யுத்த பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றிய அசோக மன்னன் கலிங்கப்போரினால் ஏற்பட்ட பேரழிவு காரணமாக மனம் சலித்துப் போர் புரியும் கொள்கையைக் கைவிட்டார்.
- புத்த மதத்தைத் தழுவி, பௌத்தராகி, பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கும் அதனை உலகெங்கும் பரப்பச் செயற்பட்டதாலும் பௌத்த கலை தோன்றியது.
- பௌத்த மதத்துக்காக அசோக மன்னன் பெரும் பணியாற்றினார். அத்துடன் இந்தியாவைப்போன்று பௌத்த மதம் பரவிய ஏனைய நாடுகளிலும் பௌத்த கலை பரவியது.

**சாஞ்சித்தூபி கட்டடக்கலை நிர்மாணிப்புக்களையும் அதன் கலைப் பண்புகளையும் இனங்காணல் :-**

- சாஞ்சித்தூபி கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் அசோக மன்னனால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- இந்தியாவில் முதன்முதலாக நிர்மாணிக்கப்பட்ட தூபி சாஞ்சித் தூபியாகும்.
- சாஞ்சித் தூபியின் அடிப்படையான அங்கமாக மேதிய எனப்படும் அடித்தளம் மீது செங்கல்லால் அரைக்கோல வடிவில் நிர்மாணிக்கப்பட்ட (கர்பய) அண்டமும் அதற்கு மேலால் சதுரக்கல்வேலியைக் கொண்டதாகவும் (ஹர்னிகா) உள்ளது. ஹர்னிகாவுக்கு மத்தியில் நடப்பட்ட 'யூப' அல்லது "யஷ்திய" எனப்படும் கற்றூண் உள்ளது. அதன் உச்சியிலிருந்து படிப்படியாகக் கீழ்ப்பக்கமாக அகன்று வரும் விதத்தில் (சத்திரைய) குடை வடிவமும் உள்ளது. இது கற்றகடுகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தூபி 120 அடி விட்டமும் 56 அடி உயரமும் உடையது.
- தூபியைச் சுற்றி வலம் வரும்பகுதி உள்ளது. அத்துடன் மேதி எனப்படும் அடித் தளத்திலிருந்து 16 அடிக்கு மேலால் இன்னொரு வலம்வரும் பகுதியும் உண்டு.
- இரு வலம் வரும் பகுதிகளையும் சுற்றிக் கல்வேலி காணப்படுகிறது. இது மேடை என்றும்கூறப்படுகிறது.
- தூபியின் நாற் திசைகளிலும் கல்லால் ஆன நான்கு தோரணங்கள் உள்ளன.

**அசோக தூண்கள் பற்றிக் கற்றறிதல் :-**

- அசோக மன்னனால் தனது ஆட்சிக்கு உட்பட்ட நகரங்களில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் தூண்கள் அசோக தூண்கள் எனப்படும்.
- இனங்காணப்பட்ட 30 தூண்களுள் 10 தூண்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. 20 தூண்கள் கல்வெட்டுகள் இன்றிக் காணப்படுகின்றன.
- இத்தூண்கள் பல புத்த பெருமானின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடைய முக்கிய நகரங்கள் சார்ந்ததாக அமைந்திருப்பதும் சிறப்பான விடயமாகிறது.
- கபில நிற மணற் கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட இத்தூண்கள் தலை, தண்டு என இரு பகுதிகளைக் கொண்டவை. அடித்தளமின்றிப் பூமியில் ஆழமாக நடப்பட்டுள்ளது.
- உச்சிப் பகுதி மணிவடிவம், வட்ட வடிவம் அல்லது சதுரத்தளம், அதன் மீது உள்ள விலங்குருவம் எனும் பகுதிகளைக் கொண்டுள்ளன.

- உருளை வடிவத் தூண்களின் மேல்பகுதி சிறிதாகக் காணப்படுகின்றது. இவை நன்றாக மினுக்கப்பட்டுள்ளன.
- உச்சிப் பகுதியில் விலங்குருக்களும் தர்மசக்கரங்களும் பொழியப்பட்டுள்ளன.
- அசோகத்தூண்கள், பாரசீகத்தூண்களின் அமைப்பைத் தழுவியுள்ளதாகவும் கருதப்படுகின்றது.
- இருந்தபோதும் இந்தியத் தனித்துவத்தைப் பேணும் விதத்தில் இவற்றை நிர்மாணிக்க இந்திய கலைஞர்களால் முடிந்துள்ளது.
- அசோகத்தூண்கள், பாரசீகத்தூண்களிலிருந்து வேறுபடும் பண்புகளைக் கொண்டிருக்கின்றன. அவையாவன:
    - பாரசீகத்தூண்கள் கட்டடங்களின் ஒரு பகுதியாக அமைகின்றன.
    - உச்சிப்பகுதி, தண்டுப் பகுதி, அடித்தளம் என 3 பகுதிகளைக் கொண்டுள்ளன.
    - தண்டுப்பகுதியில் காணப்படும் விளிம்புகள் அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
    - தனித் தூணாக அல்லாமல் பகுதிகள் சேர்க்கப்பட்டுத் தூண்கள் அமைக்கப்ட்டுள்ளன.
- அசோகத் தூண் ஒன்று 30 - 50 அடி வரை உயரமுடையது. அது 40 - 50 தொன் எடையுடையது
- இத்தூண்களின் நிர்மாணிப்புக்கள் போன்றே அவை நிலை நாட்டப்பட்ட விதமும் கலைப் பண்புகளை விடத் தொழில் நுட்ப அறிவைப் பற்றிய கவனத்தை ஈர்க்கின்றது.
- சாவஸ்தி, பாட்டலி புத்திர, ரஜகஹ, கயா, குசிநாரா, வைசாலா, சங்கஸ்ஸ ஆகிய நகரங்களிலும் தூண்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

**விசேட அமைப்புக்களைக் கொண்ட அசோக தூண்களையும் அவற்றின் உச்சிப் பகுதிகளின் பண்புகளையும் இனங்காணல் :-**

- பதீரா தூண்
    - அழியாமல் பாதுகாப்பாக இருக்கும் இரு தூண்களில் ஒன்றாகும்.
    - தூணின் உச்சியில் முன்னங்கால்களை நேராக வைத்து அமர்ந்த நிலையிலுள்ள சிம்ம உருவம் ஒன்று காணப்படுகின்றது.
    - இதில் கலைப்பண்புகள் குறைவாகக் காணப்படுகின்றன.
    - அசோக மன்னனால் அமைக்கப்பட்ட முதலாவது தூணாகக் கருதப்படுகின்றது.
- சாரநாத் தூணின் உச்சி
    - இந்திய அரச இலச்சனையாகவும் இது இன்று உபயோகிக்கப்படுகிறது.
    - மணிவடிவம் மீது அமைந்த வட்ட வடிவ தட்டையான பரப்பினைச் சுற்றி யானைகள், குதிரைகள், எருதுகள், சிம்ம உருவங்கள் என்பன வலப்பக்கமாக வலம் வரும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
    - விலங்குருவங்களுக்குள் மத்தியில் தர்ம சக்கரங்கள் காணப்படுகின்றன.
    - உச்சிப் பகுதியிலிருந்து நாற்திசை நோக்கி கர்ச்சிக்கும் வடிவத்தில் அமைக்கப்பட்ட நான்கு சிம்ம உருவங்கள் உள்ளன.
    - இவ்வுருவங்கள் மௌரிய காலத்தில் அமைக்கப்பட்ட சிறந்த ஆக்கங்களாகக் கருதப்படுகிறது.
    - இவற்றின் சிலைகள் சிற்பங்கள் பற்றி பலவித கருத்துக்கள் நிலவுகின்றன.

- சாமபூர்வா தூணின் உச்சி
- உச்சியின் தளம்மீது கலையம்சங்கள் உடனான ரிஷப உருவமொன்று காணப் படுகின்றது.
- சிந்துவெளி நாகரிகத்தின் ரிஷப உருவத்தை இது நினைவுபடுத்துகின்றது.
- ரிஷப உருவம் யதார்த்தமான வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- தூபியின் அங்கங்களைக் குறிப்பிடுக.
- அசோக தூண் வகைகளைக் குறிப்பிட்டு அவை பற்றி விளக்குக.
- அசோகத் தூண்களின் கட்டமைப்பின் பண்புகள், தொழில் நுட்பத்திறன், உபயோகித்த ஊடகங்கள் என்பவற்றை விளக்குக.
- அசோகத்தூண் உச்சிகளின் கலைப்பண்புகளின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.14 : இந்திய சாதவாகனர் காலத்துக்குரிய கலை நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.14.1 : சாஞ்சித் தோரணத்தின் செதுக்கல்கள், பாருத் கல்வேலியின் செதுக்கல்கள் என்பன பற்றிக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள்** : 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

சாஞ்சித் தோரண செதுக்கல்களும், பாருத் கல்வேலிச் செதுக்கல்களும் உள்ள நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :-**

- சாஞ்சித் தோரணத்தினதும் பாருத் கல்வேலியினதும் அமைப்பை விளக்குவார்.
- சாஞ்சித் தோரணத்தினதும் பாருத் கல்வேலியினதும் செதுக்கல்களைக் குறிப்பிடுவார்.
- செதுக்கல்களில் அடங்கியுள்ள கருப்பொருளை விளக்குவார்.
- செதுக்கல்களுக்குச் செல்வாக்குச் செலுத்திய உள்நாட்டு சமய எண்ணக்கருக்களைக் கலந்துரையாடுவார்.
- செதுக்கல்களில் காணப்படும் நுட்ப முறைகளின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

**சாஞ்சித் தோரணத்தின் கட்டமைப்பை இனங்காணல் :-**

- சாஞ்சித் தோரணம் அசோக மன்னனுடைய காலத்தில் மரத்தால் அமைக்கப்பட்டு பின்னர் சாத்தவாகன காலத்தில், அது கல்லால் நிர்மாணிக்கப்பட்டது. தோரணத்தின் உயரம் 34 அடியாகும்.
- பாரிய சதுர வடிவிலான இரு தூண்களும், அதற்குக் குறுக்காக உள்ள மூன்று கற் பாலங்களினால் இணைக்கப்பட்டுள்ளன. அக்கற்பாலங்கள் 3 சிறிய கற்றூண்களால் செங்குத்தாக இணைக்கப்பட்டுள்ளன.
- குறுக்காக (கிடையாக) அமைக்கப்பட்ட கற்பாலங்கள் "உடலிபத்" எனப்படுகிறது. அவற்றின் மத்திய பகுதி சற்று வளைந்து காணப்படுகின்றன.

- அவற்றின் இரு அந்தங்களிலும் ஓலைச் சுருள் வடிவமுடைய செதுக்கல்கள் காணப்படுகின்றன.
- அடிப்பகுதியிலுள்ள பாலம் கற்றூணுடன்பொருந்தும் இடத்தில் அதனைத் தாங்கும் விதமாக யானைகள், குள்ளர்கள், சிம்ம உருவங்கள் காணப்படுகின்றன.
- கற்றூண்களும் அடியிலுள்ள கற்பாலமும் இணையும் பகுதிகளில் அடைப்புக்குறி வடிவில் அமைக்கப்பட்ட "சால பஞ்சிக்கா" எனப்படும் கிளைகளைக் கையில் ஏந்திய நிர்வாணமான யக்ஷி பெண்ணுருவங்கள் காணப்படுகின்றன.
- "உடலிபத்" எனப்படும் கற்பாலங்களின் மீது சிங்கம், யானை, குதிரை, பசு, ரிஷபம் போன்ற உருவங்களும், மனித உருவங்களும் பொழியப்பட்டுள்ளன.
- உச்சிப்பகுதியின் மத்தியில் தர்ம சக்கரமும் இரு அந்தங்களில் மும்மணிகளை அடையாளப்படுத்தும் திரி சூலமும் காணப்படுகின்றன.

**செதுக்கல்களின் கருப்பொருட்களும் சிறப்பியல்புகளையும் கற்றறிதல் :-**

- இரு செங்குத்தாக அமைந்த தூண்கள், கிடைப்பாலங்கள், கிடைப்பாலங்களுக்கு இடையில் காணப்படும் ஒடுக்கமான செங்குத்து சிறு தூண்கள் யாவற்றிலும் செதுக்கல்கள் காணப்படுகின்றன.
- புத்தரின் வாழ்க்கையின் நிகழ்வுகள், ஜாதகக் கதைகள், வரலாற்று நிகழ்வுகள் என்பன இவற்றின் கருப்பொருட்களாக அமைந்துள்ளன.
- தோரணத்தின் செதுக்கல்கள் யாவும் சிற்பக் கலைஞர்களைக்கொண்ட குழுவொன்றினால் ஒரே சமயத்தில் நிர்மாணிக்கப்படவில்லை.
- கிழக்கு மற்றும் வடக்குத் தோரணம் கலை இயல்புகளில் சிறந்ததாகும்.
- சில ஜாதகக்கதைகள் தொடர்ச்சியான கதை செல்லும் விதத்தில் விபரங்களுடன் கற் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன.
- உருவங்கள் பாதி இயற்கைத் தன்மையுடையவை
- புத்தபெருமானுக்குப் பதிலாக அரச மரம், வஜிராசனம், தர்மசக்கரம் (சத்திரக் குடை) தாமரை, புனிதப்பாதம், ... எனும் குறியீடுகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- ஜாதகக்கதைகளில் உள்ள பிரதான கதா பாத்திரம் பெரிய அளவில் காடடப்பட்டுள்ளது.
- செதுக்கல்கள் மிகவும் நுணுக்கமான முறையிலும் விளக்கமளிக்கும் விதத்திலும் பொழியப்பட்டுள்ளன.
- இடைவெளைகளின்றி செதுக்கல்கள் இதில் காணப்படுகின்றன.
- பழைமையான யானைத் தந்தங்களின் செதுக்கல் பாணியைத் தழுவி இச்செதுக்கல்கள் நிர்மாணிக்கப்பட்டதாகக் கருத்து நிழவுகிறது.
- மரக்கிளைகளைக் கைகளில் ஏந்திய வண்ணம் காணப்படும் பெண் (பேய்) உருவங்கள் வளக்கை நோக்காகக் கொண்ட இந்திய அடிப்படை வழிபாட்டு முறைகளுடன் தொடர்புபடுகின்றன.
- வெஸ்சந்தர ஜாதகக் கதை, சத்தந்த ஜாதகக்கதை, மகாகபி ஜாதகக்கதை, மகா மாயாதேவியின் கனவு, இல்லற வாழ்க்கையைத் துறத்தல் (அபினிஸ்கிரமணய) புத்த பெருமான் கிம்புல்வத்புரிக்கு வருகை தருதல், புத்த பெருமான் சங்கஸ்ஸபுரியை அடைதல், ஜட்டில தமனய ஜாதக கதை, மார யுத்தம், தாதுக்கலகம், தாதுக்கலை கொண்டுவருதல், அசோக மன்னன் அரச மரத்தை வணங்குதல் போன்றவை செதுக்கல்களில் காணப்படுகின்றன.

**பாருத் கல்வேலியின் கட்டமைப்பை அறிந்து கொள்ளல் :-**

- பாருத் தூபியை சுற்றி 7 அடி வீதம் உயரமுடைய 80 கற்றூண்களைக் கொண்ட வேலியொன்று இருந்துள்ளது. இது 300 அடி சுற்றளவைக் கொண்டது. இதன் ஒரு பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது.
- வேலித்தூண்கள் கிடையாகவும் செங்குத்தாகவும் அமைந்துள்ளன.
- உச்சியிலுள்ள கற்றகடு உச்சித்தூண் எனப்படும்.
- தூண்களில் யக்ஷா ஆண் உருவங்களும் யக்ஷி பெண் உருவங்களும் வேலியின் வட்ட வடிவமான சட்டகங்களுக்குள் ஜாதகக் கதைகளும், புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகளும் பொழியப்பட்டுள்ளன.
- கல்வெட்டுகளுடனான கதைகள் 10 அளவிலும் கல்வெட்டுகளின்றிய கதைகள் 20 அளவிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**செதுக்கல்களின் கருப்பொருட்களையும் சிறப்பியல்புகளையும் கற்றறிதல்**

- பாருத் செதுக்கல்கள் தாழ்ப்புடைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் இவை முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.
- இயற்கைத்தன்மையை விட கற்பனைத் திறனைக் கொண்டவையாக உள்ளன.
- பல மெய் நிலைகளைக் கொண்ட மனித உருவங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் சிற்பியின் திறமை இவற்றிலிருந்து புலப்படுகிறது.
- பிரதான கதாபாத்திரமாக விலங்குகளைக் கொண்ட ஜாதகக் கதைகளை இவற்றுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.
- வட்ட வடிவ சட்டகத்தினுள் பிரதான நிகழ்வுகள் சில சுருக்கமாகக் கதைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- பிரதான கதாபாத்திரம் பெரிதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.
- புத்தபெருமானுக்குப்பதிலாக குறியீடுகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- பாருத் செதுக்கல்களுள் பௌத்த மதத்தைச் சாராத, நம்பிக்கை வழிபாட்டு முறைகளுடன் தொடர்புடைய யக்ஷி ஆண்,பெண் உருவங்களும் நாகம் எனும் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.
- யக்ஷி உருவங்கள் ஆபரணங்களை அதிகம் கொண்டுள்ளன.
- அத்துடன் நிர்வாணமான நிலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- செழிப்பு எனும் விடயத்துடன் தொடர்புடைய மரத்துடன் ஒட்டிக்காணப்படும் யக்ஷி பெண் உருவத்தைக் கொண்ட செதுக்கல்கள் அதிகளவிலுள்ளன. (பெண்ணொருத்தி மரமொன்றைக் கட்டித்தழுவினால் அம்மரம் பூத்துக்காய்க்கும் என்பது பழைமையான இந்தியர்களின் நம்பிக்கையாக இருந்தது.)
- பாருத் செதுக்கல்கள் சாஞ்சிச் செதுக்கல்களை விட உயிர்ப்புத் தன்மை, நுணுக்கமான தன்மை, கலைப்போக்குடனான தன்மை என்பன குறைவாக காணப்படுகின்றன.
- குறுங்க மிக ஜாதகக் கதை, ரூரு மிக ஜாதகக்கதை, மகா கபி ஜாதகக் கதை, சத்தந்த ஜாதகக் கதை, குக்குற ஜாதகக் கதை, மகாமாயா தேவியின் கனவு, அனேபிண்டு சிட்டானோ ஜேதவனத்தை பூஜித்தல், இந்திர சால குகை, கொசல் எனும் அரசன் புத்தரைத் தரிசித்தல் என்பன இச்செதுக்கல்களின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன.

## கணிப்பீடு

- சாஞ்சித் தோரணத்திலும் பாருத் கல்வேலியிலும் உள்ள செதுக்கல்களைக் குறிப்பிடுக.
- சாஞ்சி, பாருத் செதுக்கல்களுக்கு உபயோகித்துள்ள ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விளக்குக.
- சாஞ்சி, பாருத் செதுக்கல்களில் காணப்படும் ஒத்த எதிர் பண்புகள் பற்றி கலந்துரையாடுக.
- சாஞ்சி, பாருத் செதுக்கல்களில் கலைப்பண்புகளை ஒப்பிட்டு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.15 :** இந்திய காந்தார, மதுரா, கலை மரபுக் கலை நிர்மாணிப்புக்களைக் கற்பார்.

**செயற்பாடு 7.15.1 : காந்தார மரபுக்குரிய கலை நிர்மாணிப்புக்களைக் கற்றறிவோம்.**

- கனிஷ்க மன்னனுடைய நாணயம்
- ஹோர்ட் மந்தார் புத்தர் சிலை
- பிரெகம் சிலை
- தக்திபகீர் சிலை
- சஹரி ப.்.லொல் சிலை
- துஷ்கர கிரியாவ சிலை

**பாடவேளைகள் :** 2

## தரவிருத்தி உள்ளீடுகள்:

கனிஷ்க மன்னனுடைய தங்க நாணயமும், காந்தார புத்தர் சிலையும் உள்ள நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்.

## கற்றற் பேறுகள் :-

- காந்தார புத்தர் சிலைகளைக் குறிப்பிடுவார்.
- புத்தர் சிலைக் கலையின் ஆரம்பத்தை விளக்குவார்.
- காந்தார புத்தர் நிலைகளின் பண்புகளை விளக்குவார்.
- காந்தார புத்தர் சிலை நிர்மாணிப்புக்குக் காரணமான உள்நாட்டு, வெளிநாட்டு பண்பாடுகளின் ஆதிக்கம் பற்றிக் கலந்துரையாடுவார்.

## கற்றல் கற்பித்தல் முறைகள்:-

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**காந்தாரின் வரலாற்றுப் பின்னணி :-**

- காந்தார தேசம் தற்போதைய வடமேல் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது.
- மத்திய ஆசியாவில் இருந்து குடியகன்ற கிரேக்க வம்சாவழியைக் கொண்ட குஷான வம்சத்தவர்கள் கி.பி. 1 - 5 ஆம் காலப்பகுதியில் காந்தாரை ஆட்சி செய்தனர்.
- குஷானர்கள் பௌத்த மதத்தைத் தழுவியதாலும் அவர்களிடம் இருந்த கிரேக்க

ரோம தொடர்புகள் காரணமாகவும் கிரேக்க உரோம பண்புகளும், இந்து மதப் பண்புகளும் கலந்த கலப்புக் கலாசாரமொன்று காந்தாரத்துக்குள் உருவானது.

- அரச அனுசரணையுடன் கலை வளர்ச்சியடைந்ததாலும் மகாயான பௌத்ததின் ஆதிக்கமிருந்ததாலும் காந்தாரில் பௌத்த கலை உருவானது.

**புத்தர் சிலைகளின் உருவாக்கம் :-**

- குஷான மன்னனுடைய ஆட்சிக்காலம் வரை இந்திய பௌத்த கலையில் புத்தரின் உடலின் முழு உருவம் காண்பிக்கப்படவில்லை.
- புத்தரின் மீதிருந்த பக்தி, கௌரவம் என்பவற்றின் காரணமாக குறியீட்டு வடிவில் அவரை வெளிப்படுத்தினர்.
- உருவ வழிபாட்டுக்குப் பழக்கப்பட்ட குஷானர்கள் மத எண்ணங்களுக்கு மாறாக மகாயான மதத்தின் செல்வாக்கின் துணையுடன் புத்த பெருமானின் உடலை உருவ வடிவில் காண்பிக்க முற்பட்டனர்.
- குஷானர்கள் இந்திய சமூகத்தின் ஆட்சிப் பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அக்கலாசாரத்திற்கு இணங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.
- கனிஷ்க எனப்படும் குஷான மன்னன் பௌத்த மதத்தைத் தழுவி அதனை அரச மதம் எனப் பிரகடனப்படுத்தினார்.
- இதற்குச் சாட்சியாக மன்னனின் உருவமும் புத்தரின் உருவமும் அடங்கிய தங்க நாணயம் ஒன்றையும் வெளியிட்டார்.

**கனிஷ்க மன்னனின் தங்க நாணயம்**

- கனிஷ்க மன்னனின் தங்க நாணயத்திலேயே புத்தரின் உருவம் முதற் தடவையாக வெளியிடப்பட்டதெனக் கருதப்படுகின்றது.
- ஒரு பக்கம் மன்னனுடைய நின்ற நிலை உருவமும் மறுபக்கம் நின்ற நிலையிலிருக்கும் புத்தரின் உருவமும் செதுக்கப்பட்டுளளன.
- காவியுடை, குடுமி,ஒளிவட்டம் என்பனவும் வலப்பக்கத்தில் கிரேக்க எழுத்துக்கள் மூலம் "பொட்டோ" (BODDO) எனக் குறிக்கப்பட்டுள்ள குறிப்பும் இது புத்தரின் உருவம் எனத் தெளிவுபடுத்துகிறது.

**காந்தார சிற்பத்தின் பண்புகள்**

- முகம் கிரேக்க அப்பலோ அல்லது சூரிய கடவுளின் தோற்றத்துக்கு ஒத்த தன்மையைக் கொண்டது.
- அரைவாசி திறந்த நிலையிலுள்ள நீண்ட விழிகள்
- நீண்ட செவிகள்
- நேரான மூக்கு
- மெல்லிய உதடுகள்
- கேசம் இயற்கையான சுருள் வடிவத்தைக் கொண்டிருத்தல்
- பெரிய குடுமி

- காவியுடை கிரேக்க பிரபுக்களின் உடைக்கும் உரோம வம்சாதிபதியின் "டோகா" (Toga) எனப்படும் நீண்ட அங்கிக்கும் ஒத்திருத்தல்
- தடித்த மடிப்புடைய காவியுடை யதார்த்த பண்பைக் கொண்டிருத்தல்

**காந்தார சிலைகள் :-**

**ஹோர்ட் மந்தார் புத்தர் சிலை**

- பெஷவோரில் ஹொர்ட் மந்தார் பிரதேசத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட நின்ற நிலை புத்தர் சிலையாகும்
- இது கிரேக்க, உரோம செல்வாக்கைக் கொண்டுள்ளது.
- கிரேக்க அப்பலோ தெய்வத்தின் முகத்திற்கு ஒத்ததாக சுருண்ட கேசம், பெரிய குடுமி எனும் இயல்புகளைக் கொண்டுள்ளது. டோகா எனும் அங்கிக்கு ஒத்ததாக மடிப்புகளுடனான காவியுடை உள்ளது.
- பாவ வெளிப்பாடு மந்தமாக உள்ளது. உடலுருவம் கட்டையாக உள்ளது.
- நீண்ட செவிகள், நெற்றிப்பொட்டு போன்ற அமைப்பு, முத்திரை ஆகியன உள்நாட்டு கலை இயல்புகளைக் கொண்டுள்ளன.

**பிரெகம் சிலை**

- ஆப்கானிஸ்தானின் பிரெகம் என்ற பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.
- வெளிநாட்டுக் கலை இயல்புகள் குறைவாகவும் உள்நாட்டு கலை இயல்புகள் அதிகமாகவும் கொண்டுள்ளது.
- அமைதியான சுபாவத்தைக் கொண்டுள்ளது. முகம் வட்ட வடிவத்தைக் கொண்டுள்ளது.
- கரடுமுரடான தன்மை குன்றிய மடிப்புகளுடனான காவியுடை, உடலுடன் ஒட்டிய நிலையில் காணப்படுகிறது.
- இரு தோள் பகுதிகளில் இருந்தும் தீப்பிழம்புகள் வெளியேறும் விதத்தில் காட்டப்பட்டுள்ளதால் அவர் அற்புதங்கள் செய்யும் வல்லமையுடையவர் என்பதைக் குறிக்கிறது.
- பரிமான அளவீடுகள் மந்தமாக உள்ளன.

**தக்தி பஹீ சிலை**

- மன ஒருமைப்பாட்டு நிலை காண்பிக்கப்பட்ட போதிலும் தியான நிலை கொண்டிருக்கவில்லை என உடைந்துள்ள கைகளிலிருந்து தெளிவாகியுள்ளது.
- தர்ம போதனையில் ஈடுபட்டிருக்கும் நிலையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.
- காவியுடையும் குடுமியும் கிரேக்க - உரோம செல்வாக்கைக் கொண்டுள்ளன.
- இது அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிலையாகும். காவியுடை, பாதங்களை மறைத்திருப்பதால் ஆசன முறையைத் தெளிவாக அறியமுடியாதுள்ளது.
- நெற்றிப்பொட்டுப் போன்ற அமைப்பு நீண்ட செவிகள், தலையைச் சுற்றியுள்ள ஒளி வட்டம் என்பன காணப்படுகின்றன.
- பிரமாண அளவீடுகள் மந்தமாக உள்ளன.

**சஹறி ப.்.லுல் சிலை**

- முத்திரை குறிப்பிட்டுள்ள விதம் முக்கியமானது. இது தர்மசக்கர முத்திரையையும் பத்மாசன முறையையும் கொண்டுள்ளது.
- கிரேக்க உரோம சிற்கங்களின் பண்புகளும் ஆரம்பகால காந்தார சிற்பப் பண்புகளும் மெல்லக் குறைந்து புத்த பெருமானின் ஆண்மையின் பண்புகள் நன்றாக வெளிப்படுத்த எத்தனித:துள்ளமையை இச்சிற்பத்தின் மூலம் காணலாம்.
- காவியுடை உடலுடன் ஒட்டிக் காணப்படுகிறது. இடத்தோல் மட்டும் மூடியவாறு காவியுடை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மேல் நோக்கிய கேசங்களால் குடுமி அமைக்கப்பட்டுள்ளது.
- எளிமையான ஒளி வட்டத்தைக் கொண்டது.
- ஆசனத்தின் அடியில் துறவி உருக்கள் 5உம் முதல் தர்ம போதனையை அடையாளப் படுத்துகிறது. அதன் இரு புறத்திலும் சிம்ம உருவங்கள் இரண்டு உள்ளன.

**துஷ்கர கிரியாவ சிற்பம்**

- போதி சத்துவரின் மிகவும் இயல்பான நிலையை வெளிப்படுத்தும் சிலையாகும்.
- நலிவான உடலின் விலா எலும்புகள், நரம்புகள், உள்ளே தாண்டுவிட்ட விழிகள், ஒட்டிய உதரம் என்பன வெளிப்படுகின்றன.
- தோளிலிருந்து நழுவிய காவியுடை கீழ்நோக்கித் தொங்குகிறது.
- தியான நிலையில் காணப்படுகின்றது. எளிமையான ஒளி வட்டத்தையும் கொண்டுள்ளது.

## கணிப்பீடு

- காந்தார கலை நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுக.
- புத்தர் சிலை நிர்மாணிப்புக்கள் தோன்றிய விதத்தினைக் கலந்துரையாடுக.
- காந்தார சிலைகளின் பண்புகளை விபரிக்குக.
- காந்தார சிலை நிர்மாணிப்புக்களுக்கு ஆதிக்கம் செலுத்திய கிழக்கு, மேற்கு, கலாசார செல்வாக்குகளையும் சிலைகளின் தரத்தின் தன்மையையும் விளக்குக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.15 :** இந்திய காந்தார, மதுரா, கலை நிர்மாணிப்புக்களைக் கற்பார்.

**செயற்பாடு 7.15.2 : மதுரா மரபுக்குரிய கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவோம்.**

- கத்ரா புத்தர் சிலை
- கனிஷ்க அரசனின் உருவம்

**பாடவேளைகள் :** 1

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

மதுரா மரபுக் கலையின் சிலைகள் உள்ள நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :-**

- மதுரா புத்தர் சிலைகளின் பண்புகளை விளக்குவார்.
- மதுரா புத்தர் சிலை நிர்மாணிப்புக்கு உபயோகித்த மூலப்பொருட்களை விளக்குவார்.
- மதுரா சிற்பங்கள் நிர்மாணித்த நுட்ப முறைகள், நுட்பத் திறன்கள் என்பவற்றைக் கலந்துரையாடுவார்.
- மதுரா சிற்பங்களின் உணர்ச்சி வெளிப்பாடு, கலைப் பண்புகள் என்பவற்றை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

**மதுராக் கலை :-**

- இந்தியாவின் யமுனை நதிக்கருகில் அமைந்த மதுரா நகரத்தை மையமாகக் கொண்டு கி.பி. 1ம் நூற்றாண்டில் மதுரா கலை மரபு தோன்றியது.
- கனிஷ்க அரசனின் ஆட்சிக்குட்பட்ட மதுரா, முக்கிய கலாசார சமய மத்திய நிலையமாக இருந்து வந்தது.
- மதுராக் கலையும், கனிஷ்க மன்னனுடைய காந்தார கலையும் சமகாலத்தைக் கொண்டிருந்தன.
- குப்த காலப் பகுதியில் மதுரா கலை உயர்வு நிலையை அடைந்தது.

- மதுரா கலைஞன் காந்தாரக் கலைஞனைப் போலல்லாது மேற்கத்தேய பாணியில் இருந்து விலகி, உண்ணாட்டு பண்புகளுடன் நிர்மாணிப்புகளைச் செய்ய முன்னோடியாக நின்று தொழிற்பட்டார்.
- பண்டைய இந்திய சிற்பக் கலையில் காணப்பட்ட யக்ஷ/ யக்ஷி உருவங்களின் செல்வாக்கைக் கொண்டு உண்ணாட்டுப் பண்புகளுடனான மனித உருவங்களையும் ஆன்மீகப் பண்புகள் வெளிப்படும் புத்தர் சிலைகளையும் நிர்மாணிப்பதில் வெற்றி கண்டனர்.
- மதுரா சிலை நிர்மாணிப்புக்கு சிக்ரீ எனும் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட செந்நிற ஒரு வகைக் கல்லை உபயோகித்தனர்.
- வெள்ளை - மஞ்சள் இழையமைப்புடனான இருண்ட புள்ளி விழுந்த இக்கல்லால் நிர்மாணிக்கப்பட்ட நிர்மாணிப்புகளின் குன்றியுள்ள அழகைப் போக்க சாந்து பூசப்பட்டது அல்லது தங்க முலாமிடப்பட்டது.

**மதுரா புத்தர் சிலைகளின் பண்புகள் :-**

- எளிமையானதும் உயிர்ப்புள்ளதுமான தன்மை.
- அரைவாசி திறந்த விழிகள்.
- புன்னகை, கவர்ச்சியான தோற்றம் கொண்டிருத்தல்.
- நீண்ட செவிகள், நெற்றிப் பொட்டு போன்ற அமைப்பு.
- சுருண்ட கேசமும் (குண்டல வடிவம்) குடுமியும்.
- ஒரு தோள் மட்டும் மூடப்பட்ட உடலுடன் ஒட்டிய காவியுடை.
- ஒழுங்கு முறையில் மடிப்புகள் கொண்ட காவியுடை.
- நிறைந்த ஒப்பமான உடல்.
- அழகிய ஒளிவட்டம்.
- ஆசன முறை, முத்திரை என்பன தெளிவாக உள்ளமை.

**கத்ரா புத்தர் சிலை :-**

- கத்ராவில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இது மூன்று சிம்ம உருவங்களுடனான ஆசனத்தின் மீது அமர்ந்திருக்கும் விதத்திலான சிலையாகும்.
- வலக்கை அபய முத்திரையைக் கொண்டது. பத்மாசன முறையில் பாதங்கள் உள்ளன.
- இடக்கை இடப்பாதத்தின் மீது நேராக வைக்கப்பட்டுள்ளது.
- உடலுடன் ஒட்டிக் காணப்படும் காவியுடை மடிப்புகளைக் கொண்டது.
- முகம் கருணை வடிவான இன் முகத்தைக் கொண்டது.
- தலையை சுற்றி ஒளி வட்டம் காணப்படுகிறது. புத்தரின் உருவத்தின் இரு புறத்தில் இந்திரன், பிரம்மா என்பவர்களைக் குறிக்கும் இரு உருவங்கள் காணப்படுகின்றன.
- பின்புறத்தில் அரச மரமும் மேற் புறத்தில் தெய்வ உருவங்கள் இரண்டும் செதுக்கப்பட்டுள்ளன.

**கனிஷ்க அரசனின் உருவம் :-**

- முண்டப் பகுதியை மட்டும் கொண்ட இவ்வுருவச் சிலை நிற்கும் நிலையை குறிக்கிறது.
- ஆடைகள் கேத்திர கணித வடிவங்களைக் கொண்டுள்ளன.
- அகலமான பாதணிகளை அணிந்துள்ளார்.
- இடக்கையால் இடுப்பில் செருகிய வாளையும், வலக்கையால் செங்கோலையும் பிடித்திருக்கிறார்.
- ஆடையின் கரைப் பகுதியில் கிரேக்க எழுத்துகளில் "ராஜாதி ராஜ கனிஷ்க" என குறிக்கப்பட்டுள்ளது.
- இதற்கு ஒத்த உருவமொன்று கனிஷ்க மன்னனுடைய நாணயங்களிலும் உள்ளன.

## கணிப்பீடு

- மதுரா புத்தர் சிலைகளின் இயல்புகளைக் காட்டுக.
- மதுரா சிலை நிர்மாணிப்புகளில் உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பவற்றை விளக்குக.
- மதுரா நிர்மாணிப்புகளின் உணர்ச்சி வெளிப்பாடுகளும் கலைத்துவப் பண்புகளும் பற்றி விளக்குக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.16 : இந்திய அமராவதி மரபுக் கலை ஆக்கங் களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.16.1 : அமராவதி மரபுக் கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவோம்.**

- மகாமாயா தேவியின் கனவு.
- ராகுல இளவரசன் வரம் கேட்டல்.
- ('நாலாகிரி தமனய') நளகிரி யானையை அடக்குதல்.
- இல்லற வாழ்க்கையைத் துறத்தல் ("அபிநிஷ்கிரமணய")
- அமராவதி செதுக்கல்களில் காணப்படும் புத்தர் சிலைகள்.

**பாடவேளைகள் :** 2

## தரவிருத்தி உள்ளீடுகள்:

அமராவதி மரபுக் கலையின் செதுக்கல்கள் உள்ள நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள் எறிவை இயந்திரங்கள்.

## கற்றற் பேறுகள் :

- அமராவதி செதுக்கல்களைக் குறிப்பிடுவார்.
- அமராவதி செதுக்கல்களில் உள்ள பண்புகளைக் குறிப்பிடுவார்.
- அமராவதி செதுக்கல்களை நிர்மாணிக்க உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பவற்றை விளக்குவார்.
- அமராவதி தெுக்கல்களில் உள்ள கலைப் பாணியும் கலைப் பண்புகளையும் விளக்குவார்.

## கற்றல் கற்பித்தல் முறைகள்:-

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**அமராவதி கலை :-**

- அமராவதி, ஆந்திரா பிரதேசத்தில் அமைந்த முக்கியமான பௌத்த கலாசார மத்திய நிலையாகும்.
- மௌரிய ஆட்சியின், வீழ்ச்சிக்குப் பின் ஆந்திராவின் ஆட்சி பலம் தென் இந்தியாவில் பரவியது. தெலுங்கு மொழி பேசும் திராவிட இனத்தவரான ஆந்திரா மக்கள் பௌத்த மதத்தை தழுவியதால் ஆந்திரா பௌத்த ராஜ்ஜியமாக மாறியது.

- உரோம், சீனா, இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்புகள் ஏற்பட்டதன் விளைவாக இங்கே பௌத்த நிலையங்கள் அதிகம் தோன்றின.
- கி.மு. 25 இல் இருந்து கி.பி. 320 வரை உள்ள காலப்பகுதியில் அமராவதியை மையமாகக் கொண்டு உருவாகிய கலை அமராவதிக் கலையாகும்.
- அமராவதிக் கலை கட்டட நிர்மாணிப்பு, செதுக்கல்கள், சிற்பக் கலை என்பவற்றில் முக்கியத்துவம் கொண்டது.

**அமராவதிச் செதுக்கல்கள் :-**

- அமராவதிச் சைத்திய சுவர்களுடன் இணைக்கப்பட்ட கற்றகடுகளிலும் சைத்தியத்தைச் சுற்றிக் காணப்படும் கல்வேலிகளிலும் செதுக்கல்களின் சிதைவுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- இளம் பச்சை நிறத்தை ஒத்த வெள்ளைச் சுண்ணாம்புக் கல் வகையொன்று மூலப் பொருளாக உபயோகிக்கப்பட்டது.
- ஜாதகக் கதைகளும், புத்தரின் சரிதையின் நிகழ்வுகளும் இவற்றில் கருப் பொருட்களாக அமைந்தன.
- ஆரம்ப காலத்தில் புத்த பெருமானுக்குப் பதிலாகக் குறியீடுகள் உபயோகிக்கப்பட்டன. பின்னர் காணப்பட்ட செதுக்கல்களில் புத்தரின் உருவம் காணப்பட்டது.
- ஆரம்ப காலத்தில் ஹீனயான, மத்திய நிலையமாக இருந்த அமராவதி கி.பி. 2க்குப் பின்பு மகாயானத்திற்கு மாறியது.
- வட்ட வடிவமான, சதுர வடிவமான, செவ்வக வடிவமான கற்றகடுகளிலும் வேலித் தூண்களிலும் செதுக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.
- இச் செதுக்கல்களில் தளம், இடப்பரப்பு என்பன உபயோகித்த விதம் திறமையை வெளிப்படுத்துகிறது.
- நிகழ்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள் மட்டும் குறிக்கப்பட்டுள்ளன.
- உயர்வான முறையில் பாவ உணர்வு வெளிப்பாடு காட்டப்பட்டுள்ளது.
- சாஞ்சி செதுக்கல்களை விட நுட்பமானதாகவும், ஒப்புரவான கவர்ச்சியான, சந்தத்துடனான தன்மைகளை கொண்டதாகவும் உள்ளன.
- தாழ் புடைப்பு முறையில் அதிகளவு செதுக்கல்கள் காணப்படுகின்றன.
- மனித உருவங்கள் அதிகமாக இயற்கைத் தன்மையைக் கொண்டதாக உள்ளன.
- உருவங்கள் நீளமாகவும், ஆடைகள் எளிமையாகவும், ஆபரணங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன.
- தூர நோக்கு பண்புகளுக்கு ஏற்ப உருவங்கள் சுருக்கிக் காண்பிக்கப்பட்டுள்ளன. ஒன்றுடன் ஒன்று மறைந்திருக்கும் விதத்தில் உருவங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. இப்பண்புகள் உரோம செல்வாக்கைக் கொண்டுள்ளன என்று பெஞ்சமின் ரோலன்ட் கூறியிருக்கிறார்.

**மகாமாயா தேவியின் கனவு :-**

- மகாமாயா தேவியின் கனவைக் காண்பிக்கும் செதுக்கல்களுள் நால் வகைத் தேவர்களுடைய பட்டத்து இராணிகள் மகாமாயா தேவியை அனோதப்த குளத்துக்கு அழைத்துச் சென்று குளிப்பாட்டும் விதம் அதிகக் கலைப் பண்புகளைக் கொண்ட நிர்மாணிப்பாகும்.

- மகாமாயா தேவி செதுக்கலின் மத்தியில் காணப்படுவதுடன் அவளைச் சுற்றி பட்டத்து இராணிகள் குடங்களைக் கைகளில் ஏந்தியிருக்கின்றனர்.
- உருவங்கள் நீளமான எளிமையான சந்தத்துடனானவையாக உள்ளன.

**ராகுல இளவரசன் வரம் கேட்டல் :-**

- வட்டவடிவமான கற்றகட்டில் இது செதுக்கப்பட்டுள்ளது.
- தளத்தின் மத்தியில் புத்த பெருமான் காண்பிக்கப்பட்டுள்ளார். அவரது இரு தோள்களும் மூடியிருக்கும் விதத்தில் சந்தத்துடன் மடிப்புகளைக் கொண்ட காவியுடை காணப்படுகிறது. ஒளி வட்டமும் தென்படுகிறது.
- புத்தரின் உருவத்துக்கு வலப்பக்கமாக ராகுல இளவரசன் காணப்படுகிறார்.
- சுற்றியிருப்பவர் அவரை வணங்கும் உடல்நிலைகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.
- சட்டத்தினுள் அதிக எண்ணிக்கையான உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**நளகிரி யானையை அடக்குதல். (நாலாகிரி தமனய) :-**

- வட்ட வடிவமான கற்றகட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- கள் அருந்தி போதையில் இருக்கும் யானை ஒன்று தும்பிக்கையினால் மனிதனொருவனை இழுத்துச் செல்வதையும், மக்களின் பதற்றமான நடத்தையும் மேல்மாடியில் இருந்து மக்கள் அதனை பார்ப்பதையும், இன்னொரு புறத்தில் மக்கள் புடைசூழ புத்த பெருமான் வரும் காட்சியும், அவருக்குமுன்னால் மதம் கொண்ட யானை அடங்கி வணங்குவதையும் இதில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இரு யானைகளின் உருவங்கள் நேர்த்தியான முறையில் ஒழுங்கிணைக்கப் பட்டுள்ளன.
- செயற்றிறன் மிக்கதாகக் காணப்படுவதுடன், வெளிப்பாடுத் திறன், கலைப்பண்புகள் என்பனவும் உயர்வாகக் காணப்படுகின்றன.

**இல்லற வாழ்க்கையைத் துறத்தல் :-**

- தூண் ஒன்றில் இல்லற வாழ்க்கையைத் துறத்தல், ஞானம் பெறுதல், முதல் தர்ம போதனை, பரிநிர்வாணம் எனும் நான்கு நிகழ்வுகளும் மேலிருந்து கீழாக காண்பிக்கப்பட்டுள்ளது.
- இல்லற வாழ்க்கையைத் துறத்தல் எனும் செதுக்கலில் குதிரை மீது செல்லும் சித்தார்தருக்குப் பின்னால் குடை பிடித்திருக்கும் தேவர் ஒருவர் காணப்படுகிறார்.
- குதிரையின் செயற்றிறன் தன்மையும் அவை அலங்கரிக்கப்பட்டுள்ள விதமும் கவர்ச்சி கரமானது.
- அலங்காரமான, ஆடையணிகளைக் கொண்ட தெய்வ உருவங்கள் சூழ கண்டக எனப்படும் குதிரை மீது சித்தார்தர் செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றன.
- தெய்வ உருவங்களின் கைகள் மீது குதிரை பயணிக்கின்றது.

**அமராவதி செதுக்கல்களிலுள்ள புத்தர் சிலைகள் :-**

- அமராவதி செதுக்கல்களுள் புத்தரின் உருவம் காண்பிக்கப்படும் செதுக்கல்கள் அதிகம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- மேற் குறிப்பிட்ட தூணில் ஞானம் பெறுதல், முதல் தர்ம போதனை என்பன சித்தரிக்கும் புத்தரின் உருவங்கள் இரண்டு உள்ளன.

- அதிகமான புத்தரின் உருவங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன.
- தோளின் ஒரு பகுதி மட்டும் மூடிய காவியுடை காணப்படுகிறது இது சந்தத்துடனான மடிப்புகளைக் கொண்டது.
- முழங்கை மேல் நோக்கி மடிக்கப்பட்ட இடக்கையில் இருந்து காவியுடை கீழே தொங்க விடப்பட்டிருக்கிறது. வலக்கை அபய முத்திரையைக் குறிக்கிறது. முகம் நீள் வட்டமுடையது. கேசம் சுருள் வடிவமுடையது. தலையில் குடுமி காணப்படுகிறது.

## கணிப்பீடு

- அமராவதி செதுக்கல்களைக் குறிப்பிடுக.
- அமராவதி செதுக்கல்களில் உபயோகித்த ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பவற்றை விளக்குக.
- அமராவதி சிலைகளில் காணக்கூடிய சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
- அமராவதி கலை நிர்மாணிப்புகளில் காணப்படும் ஆக்கத்திறன், உணர்வு வெளிப்பாடு என்பனவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்துக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.17 : இந்திய குப்த கலை மரபின் புத்தர் சிலைகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.17.1 : குப்த கலை மரபின் புத்தர் சிலைகளைக் கற்றறிவோம்.**

- மதுரா நின்ற நிலை புத்தர் சிலை (ஜமல்பூர் நின்றநிலை சிலை)
- சாரனாத் புத்தர் சிலை

**பாடவேளைகள் :** 2

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

குப்த கலை மரபின் புத்தர் சிலைகளின் நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணினி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- குப்த கலை மரபின் புத்தர் சிலைகளின் பண்புகளைக் குறிப்பிடுவார்.
- குப்த கலை மரபின் புத்தர் சிலை நிர்மாணிப்புக்குச் செல்வாக்குச் செலுத்திய கலை மரபினை விளக்குவார்.
- குப்த கலை மரபின் புத்தர் சிலை நிர்மாணிப்புகளுக்கு உபயோகித்த மூலப் பொருட்களையும் நுட்ப முறைகளையும் விளக்குவார்.
- குப்த கலை மரபின் புத்தர் சிலைகளின் உணர்ச்சி வெளிப்பாடு, கலை இயல்புகள் என்பவற்றை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**குப்த கலை மரபு :-**

- கி.பி. 320களில் சந்திர குப்த எனும் அரசன், தற்போது பெட்னா அல்லது பாட்டலீ புத்திர என்பதைத் தலை நகராகக் கொண்டு ஆட்சியமைத்ததுடன் குப்த ஆட்சிக் காலம் ஆரம்பமானது.
- குப்த பரம்பரையின் கி.பி. 4 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட பகுதியின் ஆட்சி காலத்தில் விருத்தியடைந்த கலை மரபு குப்த கலை மரபானது.
- கலாசார புத்துணர்ச்சி ஏற்பட்ட குப்த காலத்தில் சமயம், இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகிய பலதுறைகள் வளர்ச்சியடைந்தன.

- குப்த காலத்துக் கலையின் கலாசார புத்துணர்ச்சிக்கு பல விடயங்கள் காரணமாக அமைந்ததுடன் உயர் நிலையடைந்த கலை மத்திய நிலையங்கள் அதிகளவில் இக்காலப்பகுதியில் உருவாகின.
- குப்த கலை மரபின் புத்தர் சிலை நிர்மாணிப்புக்கு மதுரா, சாரநாத் எனும் பிரதான மத்திய நிலையங்கள் உதவின.
- குப்த கலை மரபு என்பது புத்தம் புதிய கலை மரபின் ஆரம்பமாக அல்லாமல் நடைமுறையில் இருந்த பாரம்பரியக் கலையின் வளர்ச்சியடைந்த நிலையாகும்.
- இது மதுரக் கலையின் வளர்ச்சியடைந்த ஒரு நிலையாகும்.

**குப்த கலை நிர்ர்மாணிப்புகளின் விசேட பண்புகள் :-**

- சாந்தம், எளிமை, மென்மையான தன்மை.
- உடலுடன் ஒட்டிக் காணப்படும் காவியுடையின் ஊடாக உடலின் அங்கங்களை தோற்றுவித்தல்.
- ஆழமான உணர்ச்சி வெளிப்பாடு.
- வெளிநாட்டுப் பண்புகளில் இருந்து விலகி உண்ணாட்டுப் பண்புகள் வெளிப்படுதல்.
- இளமைத் தோற்றம்.
- நிறைந்த, ஒப்பமுடன் காணப்படும் உடலுறுப்புகள்.
- புத்தர் சிலைகள் குடுமியைக் கொண்ட சுருண்ட கேசத்தையும் அழகான ஒளிவட்டத்தையும் கொண்டுள்ளமை.

**மதுரா நின்ற நிலை புத்தர் சிலை (ஜமல்பூர் நின்றநிலை சிலை) :-**

- மதுரா பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட இச்சிலை குப்த காலத்தின் நிர்மாணிப்பாகும்.
- அழகான, கவர்ச்சியான கட்டழகான தேக லட்சணங்களைப் பிரதிபலிக்கின்றன.
- குடுமியுடனான சுருண்ட கேசம் நுணுக்கமாகக் காட்டப்பட்டுள்ளன.
- அரைவாசி திறந்த விழிகள், புன்சிரிப்பு, நீண்ட காதுகள், எனும் பண்புகளைக் கொண்டிருப்பதால் புத்தரின் ஆன்மீகப் பண்புகள் வெளிப்படுகின்றன.
- இரு தோள்களும் மூடியிருக்கும் விதத்தில் உடலுடன் ஒட்டிக் காணப்படும் காவியுடையின் மடிப்புகள் சந்தத்துடன் காட்டப்பட்டுள்ளன.
- முழுமை கொண்ட உடலின் வடிவம் வெளிப்படுகிறது.
- இடக்கை கீழே தொங்கவிடப்பட்டுள்ளது. வலக்கை முன்னோக்கி முழங்கை வரை மடிக்கப்பட்டுள்ளது.
- தாமரை இதழ்கள், கொடிவலை ஆகியவை கொண்ட மிகவும் அழகிய நுட்பமான செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டதாக ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது.

**சாரனாத் புத்தர் சிலை :-**

- சாரனாத் மரபின் சாரனாத் கலைக் கூடத்தில் இருந்து உருவான இந்திய புத்தர் சிலைகளுள் மேன்மையான நிர்மாணிப்பொன்றாகும்.
- சூனார் எனப்படும் கல் வகை ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- பத்மாசன முறையில் அமர்ந்திருப்பதுடன் தம்ம சக்க முத்திரையைக் கொண்டிருக்கிறது.

- மான்களின் பூங்காவில் (இசிபத்தன மிகதாயில்) புத்தர் துறவிகள் ஐவருக்கு (பஸ்வக மஹனுன்) (தம்சக் பெவதும் சூத்திரய) அவரது முதல் தர்ம போதனையை போதிக்கும் நிலையைக் குறிக்கிறது என நம்பப்படுகிறது.
- வில் வடிவைக் கொண்ட இருவிழிகள், வில் வடிவான புருவங்கள், தடித்த உதடுகள், நீண்ட செவிகள், நீள்வட்டமுடைய முகம், எடுப்பான இளமைத் தோற்றம் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ளது.
- புத்தரின் சாந்தி, கருணை, ஆழுமை எனும் இயல்புகளையும் கொண்டுள்ளது.
- இரு தோள்களும் மூடி உடலுடன் ஒட்டியிருக்கும் விதத்தில் மடிப்பின்றிய காவியுடை காண்பிக்கப்பட்டுள்ளது.
- காவியுடையின் ஊடாக உடலமைப்பு ஊடுருவித் தெரியும் போதிலும் தசைகளின் அமைப்புத் தோன்றாத விதத்தில் கட்டழகுடன் எளிமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களின் படி இச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மிக நுட்பமான கொடிவலை அலங்காரமுடைய செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்ட ஒளிவட்டம் காணப்படுகிறது.
- இரு புறத்தில் தெய்வ உருவங்கள் இரண்டும், சிலையின் கீழ்ப் பகுதிப் பின்னணியில் அழகிய செதுக்கல் ஒன்றும் காணப்படுகிறது.
- அமர்ந்திருக்கும் ஆசனத்தின் முன்பக்க நடுப்பகுதியில் தர்ம சக்கரம் உள்ளது.
- இரு புறத்திலும் வணங்கும் நிலையிலுள்ள துறவிகளின் உருவங்கள் (ஷ்ரமன உருவங்கள்) உள்ளன.
- மான்களின் தோட்டம் என்பதைக் குறிக்க அமர்ந்த நிலையிலான இரு மான்கள் இடப்பட்டுள்ளன.

## கணிப்பீடு

- குப்த கலை மரபினதும் அதன் நிர்மாணிப்புகளினதும் விசேட பண்புகளை விளக்குக.
- குப்த கலைக்குள் திறமையான நிர்மாணிப்புகள் உருவாகச் செல்வாக்கு செலுத்திய காரணங்களை விளக்குக.
- குப்த கலை மரபின் புத்தர் சிலை நிர்மாணிப்புக்கு உபயோகித்த மூலப்பொருள்கள், நுட்பமுறைகள் பற்றிக் கலந்துரையாடுக.
- குப்த கலை புத்தர் சிலைகளில் காணப்படும் உணர்ச்சி வெளிப்பாட்டையும் கலை இயல்புகளையும் பற்றி மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.18 : இந்தியக் குகை ஓவியங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.18.1 : அஜந்தா ஓவியங்கள் பற்றிக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

அஜந்தா ஓவியங்கள், எல்லோரா செதுக்கல்கள் உள்ள நிழற்படங்கள், இறுவெட்டுகள், கணனி இயந்திரங்கள் எறிவை இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- அஜந்தா ஓவியங்களைக் குறிப்பிடுவார்.
- அஜந்தா ஓவியங்களின் கலைப்பாணி, ஒருங்கிணைத்துள்ள விதம், உணர்ச்சி வெளிப்பாடு என்பவற்றை விளக்குவார்
- அஜந்தா ஓவியங்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழு ஆய்வுச் செயற்பாடு

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

**அஜந்தா குகை ஓவியங்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல். :-**

- இந்தியாவின் மகராஷ்ர மாநிலத்தில் (ஔரங்கபாத்) அஜந்தா கிராமத்தில் இக் குகை வரிசைகள் அமைந்துள்ளன.
- வகோரா கங்கைக்கு எதிரேயுள்ள ஏறக்குறைய 300 அடி உயரமான கற்பாறையை உட்புறமாக குடைந்து நிர்மாணிக்கப்பட்ட 29 குகைகள் உள்ளன.
- மௌரிய காலத்தில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிற்கு உரியதெனக் கல்வெட்டுகள் இதற்கு சான்று பகிர்கின்றன.
- அஜந்தாவை தர்மாசோக மன்னன் கட்டுவித்ததாகக் கருதப்படுகிறது.
- அஜந்தா ஓவியங்கள் கி.மு. 1 ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 08 ஆம் நூற்றாண்டு காலம் வரை நிர்மாணப் பணிகள் நடைபெற்று இருக்கின்றன.
- கட்டட நிர்மாண அமைப்புக்கு ஏற்ப அஜந்தா குகைகள் சைத்திய மண்டபங்கள், விகாரை மண்டபங்கள் என இரு வகைப்படுகின்றன.

**அஜந்தா ஓவியங்கள் :-**

- அஜந்தாவில் அமைந்த குகைகளுள் பெரும்பாலான குகைகள் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

- 9ம் 10ம் இலக்க குகை ஓவியங்கள் மிகப் பழைமை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இவை கி.மு. 01 ம் நூற்றாண்டுக்குரியவை.
- 16ம், 17ம் இலக்கக் குகை ஓவியங்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு உரியவை. இவை அஜந்தாவின் உன்னத நிர்மாணிப்புகளாகின்றன.
- 1ம் 2ம் இலக்க குகை ஓவியங்கள் அஜந்தாவின் இறுதிக் காலப் பகுதியான கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு உரியவை.
- ஆரம்ப காலத்தில் குகைகள் ஹீனயான பௌத்தம் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. கி.பி. 450 களுக்குப் பின் இவை மகாயான பௌத்த குகைகளாக கருதப்பட்டன.
- அஜந்தா ஓவியங்கள் டெம்பரா முறையில் வரையப்பட்டுள்ளன.
- களி மண், விலங்கு உரோமங்கள், பிசின், சாணம் என்பவற்றை ஒன்றாக அரைத்துப் பெறப்பட்ட சாந்தைக் கற்சுவரில் பூசினர். இவ்வாறு அமைக்கப்பட்ட தளத்தில் சுண்ணாம்புக் கரைசலைப் பூசி, உலர்ந்ததும் ஓவியங்கள் வரைந்துள்ளனர்.
- இயற்கை மூலப் பொருட்களால் தயாரித்த வர்ணங்களால் வர்ணம் தீட்டினர்.
- சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, கறுப்பு, வெள்ளை ஆகிய வர்ணங்களையும் அவற்றின் வர்ண பேதங்களையும் உபயோகித்தனர்.
- பரும்படிப் படத்தைக் கபில வர்ணத்தினால் வரைந்து, வர்ணங்கள் பூசி பின்னர் கறுப்பு வர்ணத்தினால் வெளிப்புறக் கோடுகள் வரையப்பட்டன.
- புத்தரின் சரிதை நிகழ்வுகள், ஜாதகக் கதைகள், வரலாற்று நிகழ்வுகள் என்பன ஓவியங்களின் கருப்பொருட்களாகின.
- அதிகளவு ஓவியங்கள் மறுமை நிலையைக் கருவாகக் கொண்டும், உலகியலுடன் தொடர்புடைய ஓவியங்கள் சொற்ப அளவிலும் வரையப்பட்டன.
- குகைச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்ற போதிலும், உட் கூரைகளும் தூண்களும் தாவர, விலங்கு உருவங்களுடனான அலங்கார வேலைப்பாடுகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
- அஜந்தா ஓவியங்கள் ஆசிய பௌத்த கலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**விசேடமான ஓவியங்கள் :-**

- பத்மபானி போதிசத்துவரின் உருவம்
- தூணில் சாய்ந்திருக்கும் பெண்
- ஐத்தந்த ஜாதகக் கதை
- நினைவிழந்த அரசிளங்குமரி
- புத்த பெருமான் கிம்புல்வத் புரிக்கு வருகை தரல்
- தேவ கன்னியர்கள்
- விஜயனின் வருகை (சிஹலாவதானய)

**இவ்வோவியங்களின் பண்புகள் :-**

- சந்தர்ப்பதற்கு ஏற்ற உணர்ச்சி வெளிப்பாடு.
- நிகழ்ச்சிக்கு ஒத்ததாக நாடக வடிவில் நிகழ்வுகளை வெளிப்படுத்துதல்.
- மனித உருவங்கள் நிர்மாணித்த விதத்தின் சிறப்பு.
- குண இயல்புகள், அசைவு, பரிமாணம், விலங்குருவங்களை உயிர்ப்புடன் தத்துரூபமாக காண்பித்தல்.
- ஆரம்ப, மத்திய, இறுதி எனும் வகையில் கதைக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாதவாறு தொடர்ச்சியாக கதை காணப்படல்
- நீர் வீழ்ச்சிகள், மரஞ்செடிகொடிகள், மிருகங்கள் என்பன வியக்கத்தக்க வகையில் மன ஒருமைப்பாட்டுடனும் நல்ல தேர்ச்சியுடனும் இயற்கையான சூழலில் காண்பித்தல்.
- இருள் வர்ணங்களுக்குள் பிரகாசமான வர்ணங்களை உபயோகித்துத் தொனிப்பொருளின் விளக்கத்தை மேலும் தீவிரப் படுத்துதல்.
- பிரதான கதாபாத்திரத்தைப் பெரிதாக்கிக் காட்டுதல்.
- மலர்க் கொடி அலங்காரம், யானை, மனித, பட்சி ஆகிய உருவங்கள் கலந்த ஆக்கபூர்வமான கோல அலங்காரங்களுடன் உட் கூரையை அலங்கரித்திருத்தல்.
- உணர்ச்சி மிக்க உயிர்த்துடிப்புள்ள இரேகைகள்.

## கணிப்பீடு

- அஜந்தாவின் சிறப்புப் பெற்ற ஓவியங்களைக் குறிப்பிடுக.
- அஜந்தா ஓவியங்களின் நுட்பமுறை, வர்ண உபயோகம் பற்றி விபரிக்க.
- அஜந்தா ஓவியங்களின் கலைப் பாணியைக் கலந்துரையாடுக.
- அஜந்தா ஓவியங்களின் சித்திர ஒருங்கிணைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு, கலைத்துவப் பண்புகள் மீது அவதானம் செலுத்தி அவற்றை மதிப்பீடு செய்க.
- இராவணன் கைலாச மலையைப் பெயர்க்கும் காட்சி எனும் செதுக்கலில் உள்ள சிறப்புப்பண்புகள் பற்றி விளக்குக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.19 : எகிப்தியக் கட்டடக் கலை நிர்மாணிப்புகளை கற்றறிவார்.**

**செயற்பாடு 7.19.1 : குபு, காப்ரே பிரமிட்டுகளை கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள் :** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- எகிப்திய கட்டடக் கலை நிர்மாணிப்புக்கு தூண்டுதலாக அமைந்த நம்பிக்கைகள், எண்ணக்கருக்கள் என்பவற்றை விளக்குவார்.
- பிரமிட்டுகள் வளர்ச்சியடைந்த சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- பிரமிட்டுகளின் திட்டமைப்பு, உபயோகம், மூலப்பொருட்கள், தொழில் நுட்ப முறைகள் என்பவற்றை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்க சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களைக் கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **எகிப்தியக் கட்டடக் கலைக்கு ஆதாரமாக அமைந்த பின்னணி :-**
  - பாராவோ மக்களின் வாழ்க்கை முறையுடன் (மரணத்தின் பின்னான வாழ்வு) ஒன்றித்திருந்த வழிபாட்டு நம்பிக்கை முறைகளே எகிப்தியக் கட்டடக் கலை உருவாக அடிப்படையாக அமைந்தன.
  - பாராவோ மக்கள் ‘கா’ என்றழைக்கப்பட்ட அவரவரது ஆன்மா இறப்புக்குப் பின்பும் தொடர்ச்சியாக வாழும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே இவர்கள் உலகியலுடன் தொடர்பான கட்டடங்களை விட, மரணத்துக்குப் பின்புள்ள வாழ்க்கை முறைக்கு உகந்த பிரமிட்டுகள், மலைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட கல்லறைகள், ஆலயங்கள் என்பன அமைப்பதற்கே முன்னுரிமை வழங்கினர்.

- இவற்றுள் பிரமிட்டுகள் கட்டட நிர்மாணிப்புக் கலையின் உயர்வான நிர்மாணிப்புகள் ஆகின்றன. இவை மஸ்டபா, மாடி பிரமிட் (படி பிரமிட்), பிரமிட் என்ற மூன்று 3 சந்தர்ப்பங்களில் வளர்ச்சியடைந்தது. பிரபல்யமான பிரமிட்டுகள் பழைமையான ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டன.
- புதிய ஆட்சிக் காலத்தின்போது பிரமிட் நிர்மாணிப்பதை விட ஆலயங்களும் மலைகளைக் குடைந்து கல்லறை கறைகளும் நிர்மாணிக்க முன்னுரிமை வழங்கப்பட்டது.

- **குபு (சியொப்ஸ்) பிரமிட் :-**
  - மிகப் பெரிய பிரமிட்டான “குபு” பிரமிட் கி.மு. 2580 - 2560 காலப்பகுதியில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. இதன் ஆரம்ப கால உயரம் 481 அடி ஆனதுடன் தற்போது இது 455 அடி உயரமுடையது.
  - இப் பிரமிட்டுகள் “குபு” எனப்படும் பாராவோவினால் கட்டப்பட்டது.
  - ஆதி காலத்தில் பிரமிட்டுகளின் முகங்களுக்கு மென்மையான பரப்புடைய கற்றகடுகள் பதித்திருந்த போதிலும் தற்போது அவற்றைக் காண முடியாதுள்ளது.
  - பிரமிட் பாரிய அளவைக் கொண்ட போதிலும் உட் பகுதியில் மிகக் குறுகிய பரப்பளவே உபயோகப்படுத்தப்பட்டது. குபு பிரமிட்டுகளின் உட்பகுதி 3 பிரதான பிரிவுகளைக் கொண்டது.

- **காப்ரே பிரமிட் :-**
  - ஏறக்குறைய கி.மு. 2570 இல் கட்டப்பட்டது. இது எகிப்திலுள்ள இரண்டாவது பாரிய அளவுடைய பிரமிட் ஆகும். 448 அடி உயரமுடையது. ஆரம்பத்தில் இது 471 அடி உயரமாக இருந்தது என கருதப்படுகிறது.
  - இது அரச பரம்பரையின் நான்காம் தலைமுறையில் இருந்த ‘காபரே’ மன்னனால் கட்டுவிக்கப்பட்டது.
  - இப்பிரமிட்டுகளும் பாராவோ மக்களின் மரணத்தக்க பின்வரும் ஆன்மாக்களுக்காகக் கட்டப்பட்டதுடன் அவர்களது பூதவுடல்கள் ‘மமி’களாக இங்கே அடக்கம் செய்யப்பட்டன.

## கணிப்பீடு

- எகிப்தியக் கட்டடக் கலை நிர்மாணிப்புக்குத் தூண்டுதலாக அமைந்த நம்பிக்கைகள், எண்ணக் கருக்கள் என்பவற்றை விளக்குக.
- பிரமிட்டுகளின் கட்டமைப்புகள் வளர்ச்சியடைந்த சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
- பிரமிட்டுகளின் திட்டமைப்பு, உபயோகம், உபயோகித்த மூலப்பொருட்கள், தொழில் நுட்பத் திறன் என்பவற்றைக் குபு, காப்ரே பிரமிட்டுகளைக் கொண்டு விளக்குக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.19 : எகிப்திய கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.19.2 : அபுசிம்பல், லக்சோர் தேவாலயங்களைக் கற்றறிவோம். (Temple of Abu simbel and Temple of Luxor)**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- எகிப்திய தேவாலயங்களைக் குறிப்பிடுவார்.
- எகிப்திய தேவாலயங்களின் கட்டட நிர்மாணிப்புப் பண்புகளை விபரித்துக் கூறுவார்.
- எகிப்திய தேவாலயங்களின் கலைத்துவப் பண்புகளை மதிப்பீடு செய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்க சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களை கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **அபுசிம்பல் தேவாலயம் :-**
  - இரண்டாம் ரெம்சஸ் அரசனால் கல்லால் கட்டப்பட்ட பிரமாண்டமான தேவாலயம் இதுவாகும். இது கி.மு. 13ம் நூற்றாண்டுக் காலத்துக்குரியது.
  - கேத்திர கணித வடிவங்களுடன் கூடிய இவ்வாலயத்தின் வாயிலின் இரு புறத்திலும் பாரிய அளவிலான 4 கற்சிற்பங்கள் உள்ளன. அமர்ந்த நிலையில் எடுப்பான தோற்றத்துடன் காணப்படும் இச்சிலைகள் 2வது ரெம்சஸ் அரசனுடையது என நம்பப்படுகிறது.
  - ஒரு சிற்பம் ஏறக்குறைய 20 அடி உயரமுடையது. சிற்பத்தின் காலடியில் மனைவி, இளவரசி, இளவரசன் ஆகியோரின் சிற்பங்களும் உள்ளன.
  - சூரிய கடவுள் என்ற எண்ணக்கருவுடன் அமைக்கப்பட்ட இவ்வாலயம் அஸ்வான் அனைக்கட்டின் அமைப்புப் பணிகள் நடைபெறும் போது முதலில் ஆலயம் அமைக்கப் பட்ட இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி, வேறொரு இடத்தில் அமைக்கப்பட்டது.

- **லக்சோர் தேவாலயம் :-**
  - லக்சோர் பாரிய அளவிலான மதம் சார்ந்த கட்டடத் தொகுதியாகும். இது நைல் நதியின் கிழக்குப் புறமாக உள்ள சம வெளியில் அமைந்துள்ளது.
  - இது முக்கியமாக 6 ஆலயங்களைக் கொண்டுள்ளன. கி.மு. 1400 இல் இது கட்டப்பட்டது. மணல் கற்களால் கட்டப்பட்ட இவ்வாலயத்தின் சிலைகளும் முழுப் புடைப்பு முறை செதுக்கல்களும் அதிகளவில் காணப்படுகின்றன.
  - நாற்பக்க வடிவங்களாலான அமைப்புகளை அதிகளவில் உபயோகிக்கப்பட்டு இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இரு மண்டபங்கள் உள்ளன.
  - இவ்வாலயம் பல அரசர்களின் துணையுடன் கட்டப்பட்ட நிர்மாணிப்புத் தொகுதியாகும்.

## கணிப்பீடு

- எகிப்திய ஆலயங்களைக் குறிப்பிடுக.
- அபுசிம்பல் ஆலயத்தின் கட்டட நிர்மாணிப்புப் பண்பு மற்றும் கலைப் பண்புகளை விளக்குக.
- லக்சோர் ஆலயத்தின் கட்டட நிர்மாணிப்பு மற்றும் கலைத்துவப் பண்புகளை விளக்குக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.20 : எகிப்திய சிற்ப நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.20.1 : நாமர் மன்னரின் பலகை (Pallet of King Narmer) மென்குறேயும் அவரின் மனைவியும் (King Menkure and his wife) ஸ்கிறைப் சிலை (The seated scribe) மற்றும் நேபர்ரிரி (The Bust of Nefertiti) ஆகியவற்றைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணனிகள்

**கற்றற் பேறுகள் :**

- எகிப்திய சிற்பங்களைக் குறிப்பிடுவார்.
- எகிப்திய சிற்பங்களின் பண்பு, கருப்பொருள் என்பவற்றை விளக்குவார்.
- எகிப்திய சிற்பங்கள் மனித வாழ்க்கைக்கு உபயோகப்பட்ட விதம், மதம் சார்ந்த நோக்கங்கள், அவற்றை நிர்மாணிக்கத் தூண்டுதலாக அமைந்த காரணிகளை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்கச் சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களைக் கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- **எகிப்திய சிற்பங்கள் :-**
  - மதம் சார்ந்த நம்பிக்கைகளே எகிப்திய சிற்பங்களுக்கு அடிப்படை காரணியாக அமைந்தது.
  - பாராவோ மன்னர்கள், அவர்களது நானாந்த வாழ்க்கை, அவர்களது வழிபாட்டுத் தெய்வங்கள், பாராவோ மக்களுக்கு பணியாற்றியவர்கள் என்பன சிங்பங்கள் நிர்மாணிக்க தொனிப் பொருட்களாக அமைந்தன.

- பூதவுடல் உக்கலடைந்த பின், ஆன்மாவானது உடலை அடையாளங் காண வேண்டும் என்ற நோக்குடன் பிரமிட்டுகளுக்குள் அரசர்களுடைய உருவ சிற்பங்களை பதித்தனர்.
- அனேகமான சிற்பங்கள் அவரவரது உடலின் மெய்யான தோற்றத்தைப் பிரதிபலிப்பதை விட மதக் கொள்கைகளுடனான மேன்மையான அமைப்புடன் அவை நிர்மாணிக்கப் பட்டன. முகமே அவர்களது தனித்துவப் பண்பை வெளிப்படுத்தியது.
- தொன்மையான ஆட்சி காலத்தில் உடல்களுக்காக பொதுவான கட்டமைப்பை உபயோகித்த போதும் மத்திய ஆட்சிக் காலத்தில் உடலமைப்பின் தனித்துவம் பேணும் விதத்தில் கலைஞர்கள் சிற்பங்களை அமைக்க முற்பட்டனர்.

- **நாமர் மன்னரின் பலகை :-**
  - இது எகிப்திய கலைகளின் மிகவும் பழமை வாய்ந்த கலையாக்கங்களுள் ஒன்றாகும். கி.மு. 3000 காலப்பகுதிக்கு உரியதென கருதப்படுகின்றது. (பழமையான ஆட்சிகாலம்)
  - 25 அங்குலம் அளவில் உயரமான இப்பலகையின் இரு பக்கமும் சிறு புடைப்புச் செதுக்கல்கள் காணப்படுகின்றன.
  - நாமர் அரசனின் போர் வெற்றியைக் குறிக்கும் இதில் நிகழ்வுகள் குறியீட்டு வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
  - பலகையின் ஒரு பக்கம் கீழே விழுந்த எதிரியின் தலையைப் பிடித்துக் கொண்டிருக்கும் நாமர் மன்னரைக் காண முடிகின்றது. கீழே தோல்வியடையச் செய்த மேலும் இரண்டு எதிரிகள் காணப்படுகின்றனர். மேற்பகுதியில் ஹோரஸ் கடவுளைக் குறிக்கும் பருந்தொன்று காணப்படுகின்றது.
  - பலகையின் மற்றப் பக்கத்தில் இருப்பது நாமர் மன்னர் ஆவார். அவர் குடை பிடித்தவர்களுடன் ஊர்வலத்தில் செல்லும் விதம் காட்டப்பட்டுள்ளது.
  - ஏனைய உருவங்களை விட நாமர் மன்னரின் உருவைப் பெரிதாகக் காண்பித்திருப்பது விசேட அம்சமாகும்.
  - இந்தப் பலகையில் நீண்ட கழுத்துடன் கூடிய புதுமையான விலங்குருவங்கள் இரண்டு உள்ளன. அவை யாதென்பது தெளிவில்லாததோடு வெற்றியின் குறியீடென நம்பப்படுகின்றது.

- **மென்குறேயும் அவரின் மனைவியும் :-**
  - ஏறக்குறைய கி.மு. 2470 காலப்பகுதிக்குரிய ஜோடிச் சிலையாகும். இருவரும் நிற்கும் உடல் நிலையில் இருப்பதோடு இடது காலை முன்னால் வைத்துள்ளனர்.
  - ஆண் உருவில் உடலின் கீழ்ப் பகுதிக்கு குறுகிய ஆடை அணிவித்திருக்கும் போதிலும் உடலின் மேற் பகுதி நிர்வாணமாக உள்ளது. ஆபரணங்கள் அணியவில்லை. ஆனால் பாரம்பரிய தலையணி காணப்படுகின்றது. ஆண் உரு கைகளைக் கீழே தொங்க விட்டு உள்ளங்கையைப் பொத்தியவாறு காணப்படுகின்றது.
  - அவரின் மனைவி அவருக்கு அருகில் இருப்பதோடு அதில் கழுத்திலிருந்து கால் வரையிலான நீண்ட ஆடை காணப்படுகிறது. அந்த மெல்லிய ஆடையூடாக அவரின் உடலமைப்பு ஊடுருவித் தெரிகின்றது.
  - மனைவி மென்குறே மன்னரின் இடது தோளையும் இடுப்பின் வலது பக்கத்தையும் பிடித்தவண்ணம் உள்ளார்.

- ஆண் உரு மிகவும் பலம்மிக்கதாகவும் அதனுடன் ஒப்பிடுகையில் பெண் உரு மென்மையான உடல் நிலையிலும் காணப்படுகின்றது.
- இது வட்ட சிற்பமாக அமைக்கப்படவில்லை

- **ஸ்கிறைப் சிற்பம் :-**
  - வட்ட சிற்பமாக சுண்ணாம்புக் கல்லினால் பொளியப்பட்டுள்ளது. வர்ணம் தீட்டப்பட்டும் உள்ளது.
  - (கி.மு. 2620 - 2500) தொன்மைக் காலப்பகுதிக்குரியதென கருதப்படும் இச்சிற்பம் எழுதுவினைஞன் ஒருவரைக் குறிக்கின்றது. இடக்கையில் பப்பிரஸ் ஏட்டையும் வலக்கையில் எழுதும் கருவியொன்றையும் ஏந்தியிருக்கிறார். (வலக்கையில் உள்ள பொருள் தற்போது சிதைவடைந்துள்ளது) காதுகள் சற்றுப் பெரியதாகக் காணப்படுகின்றன.
  - நேரே நோக்கியிருக்கும் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பமொன்றாகும்.
  - இயற்கைவாதப் பண்புகளுடன் யதார்த்தவாத பண்புகளும் கொண்டுள்ளன. (தளர்வான வயிறு, ஆழமின்றிய கண்களின் கீழ்ப்பகுதி, குழிந்த கீட்தாடை)
  - இவ்வுருவம் செல்வாக்கைப் பெற்ற எழுது வினைஞர் ஒருவருடையது என வரலாற்று அறிஞர்கள் இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளனர்.

- **நெபர்ரிரி மார்பளவுச் சிலை :-**
  - கி.மு. 1345 இல் இது அமைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இது 19 அங்குல உயரமுடைய மார்பளவுச் சிலையாகும்.
  - கருமை நிறத்திலான தலையணியொன்று அணிந்து நேராகப் பார்த்துக் கொண்டிருக்கும் இளவரசி நெபர்ரிரியின் மார்பளவு குறிக்கப்படுகிறது.
  - சுண்ணாம்புக் கல்லினாலும் ஸ்டெக்கோ சாந்தினாலும் இது அமைக்கப்பட்டு அதன் மீது வர்ணம் பூசப்பட்டும் உள்ளது.
  - பெண்ணின் செம்மையான அழகைக் கொண்ட இச்சிலையின் முகம் தெய்வீகத் தன்மையுடன் காணப்படுகிறது. தலைப்பகுதியின் அமைப்புப் பற்றிய நல்லறிவுடன் இச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தொன்மையான ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட கேத்திர கணித இயல்புகள் இதில் காணப்படவில்லை.
  - சிலையின் இடக் கண் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கழுத்தில் அணிந்திருக்கும் மாலையும் தலையில் அணிந்திருக்கும் நீண்ட தலையணியும் இந்நிர்மாணிப்புக்கு சிறப்பான அழகைத் தருகிறது.

## கணிப்பீடு

- எகிப்திய சிலைகளைக் குறிப்பிடுக.
- நாமர் மன்னரின் பலகை தொடர்பாக மதிப்பீடு செய்க.
- நெபர்ரிரி மார்பளவு சிலை, மென்குறேயும் அவரின் மனைவியை பிரதிபலிக்கும் சிலையையும் கொண்டு எகிப்திய அரச சிலைகள் தொடர்பாகக் கட்டுரை ஒன்றை எழுதுக.
- ஸ்கிறைப் சிலை தொடர்பான மதிப்பீடு ஒன்றை செய்க.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.21 : எகிப்திய ஓவியங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.21.1 : எகிப்திய ஓவியங்களைக் கற்றறிவோம்.**

- **பறவை வேட்டை (Hunting Birds)**
- **மீடம் வாத்துக்கள் (Geese of Meidam)**
- **நடனமங்கைகளும் இசைக்கலைஞர்களும் (Musicians and Dancers**

**பாடவேளைகள் :** 01

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- எகிப்திய ஓவியங்களைக் குறிப்பிடுவார்.
- எகிப்திய ஓவியங்களின் பொதுப் பண்புகளை அட்டவணைப் படுத்துவார்.
- குறிக்கப்பட்டுள்ள சித்திரங்களின் கலைப்பண்புகளை மதிப்பீடு செய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்க சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களைக் கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றை பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **எகிப்திய சித்திரக் கலை :-**
  - எகிப்திய சித்திரக் கலையின் நோக்ககம் மரணத்துக்குப் பின் உள்ள வாழ்க்கை முறையுடன் தொடர்புபட்டதாக இருந்தது. பாராவோ மக்களின் வாழ்க்கை முறைகளை கோவைப் படுத்தும் நோக்குடன் ஓவியங்கள் வரையப்பட்டன.
  - பாராவோ மக்களின் வேட்டைக் காட்சிகள், போர் வெற்றிகள், விருந்துபசாரங்கள், வயல் வெளிகள், திராட்சைத் தோட்டங்கள் என்பன ஓவியங்களின் கருப்பொருட்களாகின.

- இரேகைகளை மையமாகக் கொண்டுள்ளமை, தட்டையாக வர்ணம் பூசப்பட்டிருந்தமை, சுவர் நிரைகளாக பிரிக்கப்பட்டு ஓவியம் வரைந்துள்ளமை, பாராவோ தலைவனின் உருவத்தை பெரிதாக வரைந்துள்ளமை, சித்திரத்தை எழுத்துகளால் விளக்கியிருந்தமை, வயல் வெளிகள், குளங்கள் என்பன வானத்தில் இருந்து தோன்றும் விதத்தில் வரைந்துள்ளமை, விலங்குருவங்களை இயற்கைப் பாணியுடன் வரைந்துள்ளமை, குறிப்பிட்ட வர்ணங்களை மட்டும் உபயோகித்திருந்தமை எனும் பண்புகளை இவ்வோவியங்கள் கொண்டுள்ளன.

- **பறவை வேட்டை :-**
  - தீபஸ் நெபாமுன் கல்லறையில் இருந்து பெறப்பட்ட இவ்வோவியத்தில் பாராவோ இனத்தவர் ஒருவர் தனது மனைவி மகள் ஆகியோருடன் சதுப்பு நிலமொன்றில் பறவை வேட்டையில் ஈடுபட்டு இருக்கும் காட்சி காணப்படுகிறது.
  - இது கி.மு. 1400 காலத்துக்குரியது. இவ்வோவியத்தில் பாராவோவின் உருவம் ஏனைய உருவங்களை விடப் பெரிதாக வரையப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் வள்ளமொன்றுக்கருகில் இருக்கின்றனர்.
  - பாராவோவின் ஒரு கையில் பிடித்த பறவைகளும் மறுகையில் "பூமராங்" ஒன்றும் காணப்படுகின்றன. சகல மனித உருவங்களும் பக்கத் தோற்றத்துடன் காணப்படுகின்றன. அவை தட்டையாக வர்ணம் பூசப்பட்டுள்ளன.
  - அழகான உடை அணிந்த பாராவோ வின் மனைவி கையில் மலர் கொத்துடன் வள்ளத்துக்கு அருகே நிற்பதுடன் மகள் அவர்களின் பாதங்களைத் தழுவியவாறு தாமரைப் பூ பறிக்கும் காட்சி சித்திரமாக்கப்பட்டுள்ளது.
  - பாராவோவின் பூனையும் பறவை வேட்டையில் ஈடுபட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. விலங்குருவங்கள் இயற்கை இயல்புகளுடன் சித்தரிக்கப்பட்டுள்ளன.
  - குறிப்பிட்ட வர்ணங்கள் மட்டும் உபயோகிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

- **மீடம் வாத்துகள் :-**
  - இது கி.மு. 2575 - 2551 காலப் பகுதியில் தொன்மையான ஆட்சிகாலத்தில் வரையப்பட்டதாகக் கருதப்படுகிறது.
  - இது கல்லறைத் தேவாலயமொன்றின் வடக்குச் சுவரில் வரையப்பட்ட பாரியளவிலான ஓவியமாகும்.
  - விலங்குருவங்களையும் விலங்கு நடத்தைக் கோலங்களையும் வரையப்பட்டுள்ள விதம் எகிப்திய கலைஞனின் திறமைக்குச் சான்று பகிர்கின்றது.
  - உணவு தேடி மூன்று வீதம் இரு புறத்திலும் நடந்து செல்லும் வாத்துக்களின் வரிசையைக் காணக் கூடியதாக இருப்பதுடன் கபில, கறுப்பு வர்ணங்கள் அதிகளவில் உபயோகித்து இவை சித்தரிக்கப்பட்டுள்ளன.
  - இரேகைகளினால் உடலின் பகுதிகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இறகுகளும் கழுத்தும் நிழலான பின்னணியில் வெள்ளைநிற இரேகைகளால் காட்டப்பட்டுள்ளன.
  - மனித உருவங்களை விட விலங்குருவங்களை உயிர்ப்புடன் வரையக் கூடிய திறமை எகிப்திய கலைஞனுக்கு உண்டு என்பதை சான்று பகிர்வதாக இவ்வோவியம் காணப்படுகிறது.

- **நடன மங்கையர்களும் இசைக் கலைஞர்களும் :-**
  - திப்ஸ் இன் நெபாமுன் எனும் கல்லறையில் இருந்து பெறப்பட்ட இவ்வோவியம் நடன மங்கையர்களும் இசைக் கலைஞர்களும் விருந்தினர்கள் முன்னிலையில் கலை நிகழ்ச்சியொன்றில் ஈடுபடும் காட்சியைக் குறிக்கிறது.
  - இது கி.மு. 1350 எனும் புதிய ஆட்சிக் காலத்துக்குரியது. இக்காலத்து சித்திரக் கலையின் உத்தி முறைகளினதும் எண்ணக்கருக்களினதும் வேறுபாடுகளைக் குறிக்கும் ஒரு படைப்பு எனக் கருதப்படுகிறது.
  - எகிப்திய சித்திரக் கலையின் வழமையான நடைமுறைக்கு வேறுபட்ட சந்தர்ப்பம் என இந் நிர்மாணிப்புக் கருதப்படுகிறது. பக்கப் பார்வையில் வரையப்பட்ட உருவங்களுக்குப் பதிலாக இவ்வோவியத்தின் உருவங்கள் மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் வரையப்பட்டுள்ளது.
  - புல்லாங்குழல் இசைக்கும் உருவம் முழுவதுமாக நேரே பார்த்துக் கொண்டிருக்கும் விதத்திலும், அதனுடன் இருக்கும் மறு உருவம் சற்றுத் திரும்பி இருக்கும் விதத்திலும் காட்டப்பட்டுள்ளது. ஆபரணங்களை மட்டும் அணிந்து நிர்வாணமான நிலையில் நடனத்தில் ஈடுபட்டிருக்கும் மங்கையர்களது உருவங்கள் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கின்றன.
  - இவ்வோவியம் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## கணிப்பீடு

- எகிப்திய ஓவியக் கலையின் பொதுப் பண்புகளை உள்ளடக்கி அட்டவணை ஒன்றமைக்க.
- எகிப்திய ஓவியக் கலைக்குத் தொனிப்பொருளாக அமைந்த விடயங்களைக் குறிப்பிடுக.
- பறவை வேட்டை, மீடமின் வாத்துகள் நடன மங்கையர்களும் இசைக்கலைஞர்களும் எனும் ஓவியங்களை மதிப்பீட்டுக்குட்படுத்துக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.22 : கிரேக்க கட்டடக் கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.22.1 : பாதினன் தேவாலயமும் (The Parthenon Temple), கிரேக்கத் தூண்களையும் (Greck Columns) கற்றறிவோம்.**

- **கிரேக்க தூண்கள் - டொரிக் தூண்கள் (Doric) அயொனிக் தூண்கள் (Ionic), கொரிந்தியன் தூண்கள் (Corinthian)**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- கிரேக்க தேவாலயங்களின் கட்டட அமைப்பை விபரிப்பார்.
- பாதினன் தேவாலயத்தின் திட்டமைப்பு, அலங்கரிப்பு, சமயச்சூழல் என்பவற்றை விளக்குவார்.
- கிரேக்க தூண் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் உபயோகம் மற்றும் கலை அம்சங்களை விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்க சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களை கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **பாதினன் தேவாலயம் :-**
  - சியுஸ் என்பவரை முதன்மையாகக் கொண்டு கிரேக்கத்தில் பல ஆலயங்கள் உருவாகின. இருந்த போதும் பாதினன் தேவாலயம் அதினா தேவதைக்காக அமைக்கப்பட்டுள்ளது. கி.பி. 05 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இதில் அதீனா தேவதைக்கு வழிபாடுகள் செய்தனர்.

- பீடியஸ், கலிகிரேட்ஸ், இக்தினஸ் எனும் கலைஞர்கள் இதனை நிர்மாணித்தனர்.
- இக்கட்டடம், கட்டட நிர்மாணிப்பைப் போன்று செதுக்கல் வேலைப்பாடுகளின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.
- செவ்வக அடித்தள அமைப்பைக் கொண்ட இதில் வெளிப்புறமாக அழகிய டொரிக் தூண்கள் வரிசையாக உள்ளன. தேவாலய முன்பக்கத் தோற்றத்ததில் 8 தூண்கள் காணப்படுவதுடன் மேற் பகுதியில் 'பெடிமன்ர்' (Pediment) எனப்படும் அழகிய செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்ட முக்கோண வடிவ அமைப்புக் காணப்படுகிறது.
- இது சலவைக் கல்லை ஊடகமாக உபயோகித்து நிர்மாணிக்கப்பட்ட மிகப் பழைமையான கிரேக்க நிர்மாணிப்பாகும்.
- தூண்கள், வளைகள் என்பன தாங்கி நிற்கும் விதத்தில் கட்டடத்தின் கூரை அமைக்கப்பட்டுள்ளது. அதினா தேவதையின் சிலைக்கு தேவாலய உட்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.
- இதன் பீடப்பகுதி ஆலயத்துக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்தது. எளிமையான அமைப்பைக் கொண்ட போதிலும் இவ்வாலயம் எடுப்பான தோற்றத்துடன் காணப்படுகிறது.

- **கிரேக்கத் தூண்கள் :-**
  - **டொரிக் தூண்கள்**
  - கிரேக்கக் கலையின் மிகப் பழைமையான தூண் வகை இதுவாகும்.
  - இது எளிமையான அமைப்பைக் கொண்டிருக்கின்ற போதிலும் எடுப்பாகக் காணப் படுகிறது. டொரிக் தூண்களே கட்டடத்தின் அளவை உறுதிப்படுத்துகின்றது.
  - இதன் தலைப் பகுதி வெளித்தள்ளிய நிலையில் எளிமையான மணியுருக்கட்டுகளால் அமைக்கப்பட்டுள்ளது. டொரிக் தூண்களே பாதினன் ஆலயத்தைக் கட்ட உபயோகப் படுத்தப்பட்டன.

- **அயொனிக் தூண்கள் :-**
  - செம்மறி ஆட்டின் கொம்புகள் உட்பக்கமாக வளைந்திருப்பது போல் இத் தூண்களின் தலை அமைக்கப்பட்டுள்ளது.
  - அயோனியன்களால் வளர்ச்சி காணப்பட்ட இத் தூண்கள் கட்டடம் ஒன்றின் உயரத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றன.
  - இத் தூண்களின் இடைப்பகுதி செங்குத்துக் கோடுகளாக பிரிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருப்பதுடன் அடிப்பகுதி டொரிக் தூண்களின் அடிப்பாகங்களை விட அலங்கார அமைப்புகளைக் கொண்டுள்ளன.
  - இரெக்தியன் (Erechtheion) கட்டடத்தின் வடக்குப்புற நுழைவாயிலில் இத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாமோசில் உன்ன ஹேரா தேவதைக்கு வழிபடும் தேவாலயத்திலும் இத் தூண்களைக் காணலாம்.

- **கொரிந்தியன் தூண்கள் :-**
  - இத் தூண்கள் அதிக வேலைப்பாடுகளைக் கொண்டிருப்பதால் இவற்றைக் கொண்டு நிர்மாணிக்கப்படும் கட்டடங்களும் அழகுடன் தோற்றமளிக்கின்றன.
  - எகன்தஸ் இலைகளின் ஒழுங்கமைப்பில் இத்தூண்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கிரேக்க பேரரசான கொரிந்தி எனும் பெயரால் இத்தூண்கள் அழைக்கப்பட்டன.

- ஏதன்சில் அமைந்துள்ள சியுஸ் என்பவருக்காகக் கட்டப்பட்ட ஆலயம், கொரிந்தியன் தூண்களைக் கொண்டுள்ளன.

## கணிப்பீடு

- பாதினன் ஆலயத்தின் கட்டட நிர்மாணிப்புப் பண்புகளை விளக்குக.
- கிரேக்க ஆலயங்கள் 5 இன் பெயர்களைக் குறிப்பிடுக.
- கிரேக்கதூண் வகைகளைக் குறிப்பிட்டு அவை ஒன்றுக்கொன்று வேறுபடும் விதத்தினை விளக்குக. அத்துடன் அவற்றினால் கட்டடம் பெறும் செல்வாக்கினையும் விளக்குக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.23 : கிரேக்க களி மட் பாத்திரங்களை ஆராய்ந்தறிவார்.**

**செயற்பாடு 7.23.1 : கிரேக்க களி மட் பாத்திரங்களை ஆராய்ந்தறிவோம்.**

- **கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் (Black figure pottery)**
- **செந்நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் (Red figure pottery)**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- கிரேக்க மட்பாண்டங்களின் நிர்மாணிப்புக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்துவார்.
- கிரேக்க மட் பாண்டக் கலையின் தொழிநுட்பம், உபயோகம், அழகு, அலங்கரிப்புக் கோலங்கள் என்பவற்றை விபரித்துக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்கச் சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களைக் கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **கிரேக்க மட்பாண்டங்கள் :-**
  - கிரேக்க மட்பாண்டக் கலை வளர்ச்சியடைந்து காணப்பட்டது. பல்வேறு நோக்கங்களை முன்னிட்டு இம்மட்பாண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன.
  - ஏறக்குறைய கி.மு. 1000ல் இருந்து கி.மு. 400 வரையுள்ள காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பல் வேறுபட்ட வடிவமைப்புகளைக் கொண்ட மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டன. நீரை நிரப்பி வைக்க, எண்ணெய் நிரப்பி வைக்க, வாசனைத் திரவியங்களை இட்டு வைக்க, பொருட்களைக் கொண்டுச் செல்ல, நாளாந்த பாவனைக்கு எனும் பல்வேறுபட்ட நோக்கங்களுடன் மட்பாண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. பீங்கான், கோப்பை, சாடிகள், கூசாக்கள் என விதவிதமான மட்பாண்டங்கள் உள்ளன.

- இவை அழகிய ஓவியங்களையும் அலங்கார அமைப்புகளையும் கொண்டுள்ளமை அவற்றின் சிறப்பியல்பாகின்றன.
- வனைச்சில்லின் துணையுடன் அமைக்கப்படும் இப் பாண்டங்களுக்குரிய அடிப்பகுதி, கைப்பிடி என்பன தனியாக அமைக்கப்பட்டு பின்னர் பொருத்தி விடப்பட்டன.
- “கெரமோஸ்” (Keramos), எட்டிக் (Attic) எனப்படும் களிமண் வகை இவற்றுக்காக உபயோகப்பட்டன.

- **Black figure pottery கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் :-**
  - இம் மட்பாண்டங்களை அலங்கரிக்க உபயோகித்த உருவங்கள் கறுப்பு வர்ணத்தைக் கொண்டன. அவ்வுருக்களில் வரையப்பட்ட கோடுகள் சிவப்பு வர்ணமுடையவை.
  - இக் கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் மிகவும் பழைமை வாய்ந்தவையாக இருப்பதுடன் கொரிந்தியர் இவற்றை முதல் முதலில் நிர்மாணித்ததாகக் கருதப்படுகிறது.
  - ஏறக்குறைய கி.மு. 700களில் இருந்து இது வரை 20000க்கு அண்மித்த தொகையைக் கொண்ட மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டன.
  - இப் பாண்டங்களில் கிரேக்க கற்பனைக் கதைகள் மதம் சார்ந்த கதைகள், சமூக நிகழ்வுகள், விளையாட்டு வீரர்கள், கடல் விலங்குகள், பூக்கள் செடிகள் என்பன ஓவியங்களாகக் காணப்பட்டன.
  - மிகப் பழைமையான பாண்டங்களில் கேத்திர கணித கோலங்களை அதிகம் காணலாம். இருந்த போதும் பிற்காலத்தில் பலவித உடல் நிலைகளைக் கொண்ட லலிதத்துடன் காணப்பட்ட மனித, விலங்குருவங்கள் சேர்க்கப்பட்டன.
  - இக் கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் சூளையில் இட்டுச் சுடுவதற்கு முன் கறுப்பு வர்ணம் பூசப்பட்டுப் பின்னர் கூரான உபகரணமொன்றினால் களி மண் மேற்பரப்பைச் சுரண்டி உருவங்கள் வெளிக்கொணரப்படும். பின்னர் வெள்ளை, சிவப்பு வர்ணங்களும் பாண்டங்களில் பூசப்பட்டன.

- **செந்நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் :-**
  - கிரேக்க மட்பாண்டங்களின் மேற்பரப்பை அலங்கரிக்க உபயோகித்த வர்ணங்களைக் கொண்டு இவை வகைப்படுத்தப்பட்டன.
  - செந்நிற உருக்களுடைய மட்பாண்டங்களில் கறுப்பு நிறப் பின்னணியில் செந்நிறத்தில் உருவங்களும் அலங்கரிப்புக் கோலங்களும் வெளிக்கொணரப்படும். இவ்வுருக்களில் காணப்படும் கறுப்பு நிறக்கோடுகள் உருவங்களின் விளக்கத்தைத் தெளிவு படுத்துகின்றன.
  - கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்களை விட இயல்பான தன்மைகளைக் கொண்ட பண்புகளும் நுணுக்கமான விபரிப்புகளும் அதிகளவில் காண்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கருமை நிற உருக்களுடைய மட்பாண்டங்களில் உருக்கள் பக்கம் திருமபியருக்கம் தன்மை கொண்ட போதிலும் செந்நிற உருக்களுடைய மட்பாண்டங்களில் உருவங்கள் நேராகவும் முக்காலப்பகுதி (Three quarler view) தெரியும் விதத்திலும் காண்பிக்கப்பட்டுள்ளன.
  - ஏறக்குறைய கி.மு. 530 களில் இருந்து இச்செம்மை நிற உருக்களுடைய மட்பாண்டங்கள் பிரபல்யமடைந்தன.

## கணிப்பீடு

- கிரேக்க மட்பாண்டங்களில் காணப்படும் ஓவியங்கள், அலங்கரிப்புக் கோலங்கள் என்பவற்றைக் கலந்துரையாடுக.
- கிரேக்க கருமை நிற, செம்மை நிற உருக்களையுடைய மட்பாண்டங்கள் பற்றிய கட்டுரையொன்றை எழுதுக.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.24 : கிரேக்க சிற்பங்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.24.1 :** கிரேக்க தொன்மை மற்றும் செந்நெறி காலத்துக்குரிய சிற்பங்களைக் கற்றறிவோம்.

- குறோஷ் மற்றும் கோறி சிலைகள் (Kouros and Kore)
- பரிதி வட்டம் வீசுபவன் (Discobolus)
- டொரிபரஸ் (ஈட்டியை ஏந்தி நிற்பவன்) (Doryphoros)
- ஹர்மிஸ் மற்றும் டயோனீசியஸ் (Hermes and the Infant Dionysus)

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- கிரேக்க தொன்மைக் காலத்துக்கும் தொல்சீர்காலத்துக்கும் உரிய சிற்பங்களைக் குறிப்பிடுவார்.
- கிரேக்க ஆகேக காலத்து சிற்பங்களின் பண்புகளை விபரிப்பார்.
- தொன்மைக் காலத்து கிரேக்கக் கலையின் அடிப்படைப் பண்புகளை வகைப்படுத்துவார்.
- தெரிவு செய்யப்பட்ட செந்நெறி காலத்துக் கிரேக்க கலையின் சிற்பங்களை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்க சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களைக் கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- **குரோஷ் மற்றும் கோறி சிலைகள் :-**
  - கிரேக்க தொன்மையான ஆகேக காலத்துக்குரிய முக்கிய சிற்பங்கள் இரு வகைப்படும். இதில் ஆண் சிற்பங்கள் குரோஷ் என்றும் பெண் சிற்பங்கள் கோறி என்றும் அழைக்கப்படுகின்றன.
  - இந்த சிற்பங்கள் எகிப்திய கலையின் செல்வாக்கை அதிகம் பெற்றுள்ளது. மென்குரேயும் அவரின் மனைவியும் என்ற எகிப்திய சிற்பங்களை மிகவும் ஒத்ததாக இந்த சிலைகளின் உடல்நிலைகள் உள்ளன.

- இச்சிற்பங்கள் சலவைக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு இவை நிற்கும் உடல் நிலையில் உள்ளன.
- ஆண் சிற்பம் நிர்வாணமாகக் காணப்படுகின்றது. அவை எகிப்திய சிற்பங்கள் போன்றே கைகளை பொத்தியவாறும், இடது காலை முன்வைத்து முன்னோக்கிப் பார்த்த வண்ணமும் உள்ளன.
- பெண் உருவில் கழுத்திலிருந்து கால் வரையிலான நீண்ட ஆடை காணப்படுகின்றது. இந்த இரு சிலைகளிலும் பின்னப்பட்ட சிகை அலங்காரங்கள் காணப்படுகின்றன.
- ஆரம்ப காலத்தில் இச்சிற்பங்களின் முகங்களில் முகபாவம் சிரிப்பின்றிக் காணப்பட்ட போதிலும் பிற்காலத்தில் அவை புன்சிரிப்புடன் காணப்பட்டன.

- **பரிதி வட்டம் வீசுபவர் :-**
  - மைரன் எனும் கலைஞனால் இது நிர்மாணிக்கப்பட்டது. இச் சிலையானது பரிதி வட்டம் வீசத்தயாராக இருக்கும் விளையாட்டு வீரர் ஒருவரைக் குறிக்கிறது.
  - இது கி.மு. 450 களில் நிர்மாணிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இது ஆரம்ப காலத்தில் வெண்கலத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. இருந்த போதும் இன்று காணக்கூடியதாக இருப்பது சலவைக் கல்லால் அமைக்கப்பட்ட உரோம சிற்பத்துக்கு ஒத்ததொன்றாகும்.
  - முழு நிறைவான உடலமைப்புடன் காணப்படும் விளையாட்டு வீரர் பரிதி வட்டத்தை வீசத்தயாரான நிலைக்கு வேண்டிய சக்தியைப் பெறும் மெய் நிலையை சிற்பி திறம்பட நிர்மாணித்துள்ளார். முறுகியிருக்கும் உடற் சுபாவத்துக்கு இணங்க மாற்றமடையும் என்புகள் தசைகள் நரம்புகள் என்பவற்றின் தொழிற்பாட்டை நுணுக்கமாக ஆராய்ந்த பின்னரே சிற்பி இச் சிலையை நிர்மாணித்துள்ளார்.
  - முகத்தின் பாவ வெளிப்பாடு உடலின் அசைவுக்குப் பொருந்த வில்லை என்ற குறை இச் சிற்பம் தொடர்பாக முன்வைக்கப்படுகிறது.
  - வலக்காலை நிலத்தில் ஊன்றிப் பலத்தைப் பெற்றுப் பரிதிவட்டத்தை வீசத் தயாராகும் விளையாட்டு வீரரின் உருவம் கிரேக்கக் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

- **டொரிபரஸ் (ஈட்டியை ஏந்தி நிற்பவர்) :-**
  - கி.மு. 440 களில் பொலிக்கிளீடஸ் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது.
  - ஒரு காலை ஊன்றி நிர்வாணமான முறையில் நிற்கும் மெய் நிலையைக் குறிக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட இது கிரேக்க சிலை நிர்மாணிப்பின் பிரசித்தி பெற்ற உடல் நிலையில் ஒன்றை எடுத்துக் காட்டுவனவாக உள்ளது.
  - மனித உடலின் உடலமைப்பை நன்றாக ஆராய்நதறிந்து வடிவமைக்கப்பட்ட ஆரம்ப கால கிரேக்க படைப்புகளில் ஒன்றாகும்.
  - இது 6 அடி 6 அங்குலம் உயரமுடையது. இது நன்கு வளர்ச்சியடைந்த திடகாத்திரமான உடலுறுப்புகளைக் கொண்ட ஆண் ஒருவரின் உடலின் உருவத்தைக் குறிக்கிறது.
  - ஒரு காலை ஊன்றியிருக்கும் போது உடலின் ஏனைய பகுதிகள், என்புகள், தசைகள் என்பவற்றின் மாற்றங்களை நுணுக்கமான முறையில் நிர்மாணித்துள்ளார்.
  - ஒரு கையில் ஈட்டி இருந்த போதிலும் தற்போது அதை காண முடிவதில்லை.

- **ஹர்மீஸ், டயோனிசியஸ் சிலைகள் :-**
  - பிரக்ஸிடேல்ஸ் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது. இது செந்நெறி கிரேக்கக் கலையின் முக்கியமானதொரு நிர்மாணிப்பாகும்.

- கி.மு. 4ம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட இச் சோடிச் சிலைகளின் உயரம் 7.1 அடி ஆகும்.
- முழு நிறைவான உடல் அமைப்பைக் கொண்ட ஒரு இளைஞனாக ஹர்மீஸ் இன் உருவம் நிர்மாணிக்கப்பட்டு அவரது ஒரு கையில் டயோனிசியஸ் எனப்படும் குழந்தையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- ஒரு பாதத்தை ஊன்றி இருப்பதைப் போன்ற வலிதான கிரேக்க உடல் நிலையை (Contrapposto-counterpose) இவ்வுருவிலும் காணலாம்.
- முழு நிறைவான உடலமைப்பின் சரியான முறையை ஹர்மீஸ் உருவத்திலும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இருந்த போதும் குழந்தையின் உருவம் சரியான அளவீட்டில் காட்டப்படாமல் இருப்பது ஒரு குறைபாடாகக் கருதப்படுகிறது.
- ஹர்மீஸ் இனது கையில் இருந்து கீழே தொங்கவிடப்பட்ட வஸ்திரம் குழந்தையை ஏந்தி நிற்கும் கை முறிவதைத் தடுப்பதற்கு எடுத்த ஒரு நுட்பப் பிரயோகமாகும். ஹர்மீஸ் இனது உயர்த்தப்பட்ட வலக்கையில் திராட்சைக் குலையொன்று இருந்திருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது.

## கணிப்பீடு

- தொன்மைக் காலத்துக்கும் செந்நெறி காலத்துக்கும் உரிய கிரேக்க சிலைகளைக் குறிப்பிடுக.
- கிரேக்க பண்டைய ஆகேக காலத்துக்குரிய சிலைகளைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளை விபரிக்க.
- கிரேக்க செந்நெறி கால கலையின் பொதுப் பண்புகள் எவை?
- கிரேக்க செந்நெறி கால சிற்பங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றைச் செய்க.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.24 :** **கிரேக்க சிற்பங்களை கற்பார்.**

**செயற்பாடு 7.24.2 :** ஹெலனிஸ்டிக காலப்பகுதிக்குரிய கிரேக்க சிற்பங்களைக் கற்றறிவோம்.

- லெஒக்கூன் (Laocoon)
- சமோதராசின் வெற்றித் தேவதை (Winged victory of Samothrace/ Nike)
- இறக்கும் கலாத்தியன் (The dying Galatian)

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலையாக்கங்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்கள் உள்ளடங்கிய இறுவெட்டுக்கள், Power point presentation, எறிவை இயந்திரங்கள், கணினிகள்

**கற்றற் பேறுகள் :**

- கிரேக்க ஹெலனிஸ்டிக் காலப் பகுதிக்குரிய சிற்பங்களைக் குறிப்பிடுவார்.
- ஹெலனிஸ்டிக் சிற்பங்களின் பொதுப் பண்புகளை விபரித்துக் கூறுவார்.
- ஹெலனிஸ்டிக சிற்பங்களுக்குச் செல்வாக்குச் செலுத்திய கற்பனைக்கதைகளை விபரித்துக் கூறுவார்.
- கிரேக்க செந்நெறி கால சிற்பங்களையும் ஹெலனிஸ்டிக காலத்துக்குரிய சிற்பங்களையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறைகள்:-**

கலந்துரையாடல் முறை, ஒப்படை முறை, குழுச் செயற்பாடுகள் ஊடாக ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல், தெரிவு செய்த கலை ஆக்க சேகரிப்புத் தொகுதி அல்லது அவ்விடங்களைக் கண்காணித்தல், செயற்றிட்ட முறை ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- **லெஒக்கூன் :-**
  - துன்பகரமான நிலைக்குள்ளான ரோஜன் பாதிரியாரும் அவருடைய இரு மகன்மாரும் இதனால் குறிக்கப்படுகின்றன.
  - செந்நெறி காலத்தில் முழுநிறைவான உடல் தன்மை வெளிப்பட்ட போதும், ஹெலனிஸ்டிக காலத்தில் யதார்த்தவாதமும் இயற் பண்புவாத இயல்புகளும் வெளிப்பட்டன.

- கடலில் இருந்து தோன்றிய ஒரு சர்ப்பம் பாதிரியாரையும் இரு பிள்ளைகளையும் சுற்றிக் காணப்படுகிறது. அவர்கள் அனைவரும் சர்ப்பத்தின் பிடியில் இருந்து தப்பிக்க எத்தனிக்கின்றனர்.
- இங்குள்ள மூன்று மனித உருவங்களும் வேதனை உணர்வுகளின் மூன்று நிலைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. துன்பத்தை வெளிப்படுத்தும் பாவ உணர்வு செந்நிறக் காலத்து கலையில் அரிதாகக் காணப்படும் அதேவேளை ஹெலனிஸ்டிக் காலப் பகுதியில் அதிகம் காணப்படுகின்றன.
- மூன்று மனித உருவங்களும் மூவகையான உடல் நிலைகளைக் குறித்து நிற்பதுடன் உடற் கட்டமைப்பு யதார்த்தமாகவும் இயற் பண்புகளுடனும் காட்டப்பட்டுள்ளது.
- ஏறக்குறைய கி.மு. 25 இல் நிர்மாணிக்கப்பட்ட இச்சிலை மறுமலர்ச்சிக் கால அதிகமான கலைஞர்களுக்குச் செல்வாக்கை செலுத்திய ஒரு நிர்மாணிப்பாகும்.

- **சுமோதிராசின் வெற்றித் தேவதை :-**
  - முக்கிய ஹெலனிஸ்டிக் சிலையாகிய இது கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்குரியதெனக் கருதப்படுகின்றது. நய்க் எனப்படும் வெற்றியின் தேவதையை இது குறிக்கின்றது.
  - தேவைதையின் உடல்நிலைகளும் பாகங்களும் மிகத் திறமையாக நிர்மாணிக்கப் பட்டுள்ள போதிலும் தற்போது சிலையின் தலைமை காண முடிவதில்லை.
  - வெற்றியின் தேவதை தனது சிறகுகளை விரித்த வண்ணம் வலுமிக்கவராகக் கப்பலொன்றுக்கு முன்னால் நிற்கும் நிலை காணப்படுகின்றது.
  - கடல் காற்றினால் அவரது ஆடை அசைகின்றது. மெல்லிய ஆடையூடாக சில உடல் பாகங்கள் ஊடுருவித் தெரிகின்றது.
  - சிலையின் உயரம் 8 அடிகளாகும்.
  - கலைஞர் சிறகுகளை மிகவும் திறமையாக செதுக்கியுள்ளார். சலவைக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட இச்சிலை தற்போது லூவர் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

- **இறக்கும் கலாத்தியன் (Dying gual) :-**
  - உயிரோட்ட அளவில் காணப்படும் இச்சிலை முக்கோண வடிவமைப்புக்குள் அடங்கும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
  - ஆரம்ப காலத்தில் இது வெண்கலத்தால் அமைக்கப்பட்ட போதிலும் தற்போது காணக்கூடியதாக இருப்பது சலவைக்கல்லால் அமைக்கப்பட்ட உரோம சிற்பத்துக்கு ஒத்ததொன்றாகும்.
  - கோலின் கால்களின் சக்தி இளக்கப்பட்டு நிலத்தில் வீழ்ந்து கிடப்பதுடன் ஒரு புறத்தில் நழுவியிருக்கும் வாள் காணப்படுகிறது.
  - செந்நெறி கால முழு நிறைவான உடல் அமைப்புக்குப் பதிலாகக் காயங்களின் வடுக்கள், கலைந்த கேசத்தையுடைய உணர்ச்சி வசப்பட்டுக் காணப்படுகிறது.
  - கோலின் உடல் சுய கட்டுப்பாட்டை இழந்து காணப்படுகிறது. வேதனையை வெளிப்படுத்தும் பாவ உணர்வு ஹெலனிஸ்டிக் காலம் செந்நெறி காலத்தில் இருந்து வேறுபடும் ஒரு முக்கியமான பண்பொன்றாகக் கருதப்படுகிறது. இந்தப் பாவ உணர்வு இதில் நன்றாகப் புலப்படுகிறது. அத்துடன் செந்நெறிக் கால உடல் நிலைகளுக்குப் பதிலாக வேறுபட்ட உடல் நிலைகள் பிரதியிட்டிருப்பது தொடர்பாகவும் இது சான்று பகிர்கின்றது.

## கணிப்பீடு

- கிரேக்க ஹெலனிஸ்டிக கலைக்குரிய சிலைகளைக் குறிப்பிடுக.
- ஹெலனிஸ்டிக கலையின் பொதுப் பண்புகளை உள்ளடக்கி அட்டவணை ஒன்றை அமைக்க.
- கிரேக்க ஹெலனிஸ்டிக் கலையின் சிலைகள் தொடர்பாகக் கலையுணர்வுடனான மதிப்பீடு ஒன்றை செய்க.
- கிரேக்க செந்நெறிக் காலக் கலையினதம், ஹெலனிஸ்டிக கலையினதும் ஒத்த ஒதிர் பண்புகளை ஒப்பிட்டுக் கலந்துரையாடுக.

# சித்திரக்கலை

தரம் 12


ஆசிரியர் வழிகாட்டி

# புகைப்படத்திரட்டு

## தேர்ச்சி 6.0

சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசனைக்குட்படுத்தி, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

# தேர்ச்சி மட்டம் 6.2




உரு 01 - பேயோட்டியின் மகள், ஏ.சி.ஜி.எஸ். அமரசேகர



உரு 02 - தச்சனின் வீடு/ தொழில் இன்மை, ஏ.சி.ஜி.எஸ். அமரசேகர



உரு 03 - வெற்றியுடன் ஜெருசலம் நகரத்துக்குள் நுழைதல், டேவிட் பெயின்டர்




உரு 04 - நல்ல சமாரியன், டேவிட் பெயின்டர்



உரு 05 - நடனமாது (சந்திரலேகா/ லொரெத்), ஜே.டி.ஏ. பெரேரா



உரு 06 - பிரதிமை ஓவியம் (சீதா டி சேரம்), ஜே.டி.ஏ. பெரேரா



உரு 07 - மகாமாய தேவியின் கனவு, எம். சார்ளிஸ்



உரு 08 - திருமணக்காட்சி, எம். சார்ளிஸ்



உரு 09 - புத்த பெருமான் மகியங்கனைக்கு வருகை தரல், களனி புதிய விகாரை சுவரோவியம், சோலியஸ் மெண்டிஸ்



உரு 10 - சிவனொளிபாத மலையில் ஸ்ரீ பாதங்களைப் பதித்தல், களனி புதிய விகாரை சுவரோவியம், சோலியஸ் மெண்டிஸ்



உரு 11 - திருமணக்காட்சி, பெல்லன்வில விகாரை ஓவியமொன்று. சோமபந்து வித்தியாபதி



உரு 12 - இயமனை தோற்கடித்தல், பெல்லன்வில விகாரை ஓவியமொன்று. சோமபந்து வித்தியாபதி



உரு 13 - சூர சங்காரம், வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் ஓவியம், நாராயணசுவாமி



உரு 14 - “அசுராசுர சங்காரம்” வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் ஓவியம், நாராயணசுவாமி


## தேர்ச்சி மட்டம் 6.3



உரு 15 - சரஸ்வதி, இராஜா ரவி வர்மா




உரு 16 - இந்திரசித்து வெற்றி, இராஜா ரவி வர்மா




உரு 17 - பாரத மாதா, அபனிந்திர நாத் தாகூர்



உரு 18 - அசோக அரசனின் ராணியும் அரசமரமும், அபனிந்திர நாத் தாகூர்



உரு 19 - நஞ்சுண்ட சிவன், நந்தலால் போஸ்



உரு 20 - ராதாவின் விரகதாபம், நந்தலால் போஸ்

## தேர்ச்சி மட்டம் 6.4



உரு 21 - மொனாலிசா **(Mona Lisa),** லியானாடோ டாவின்சி **(Leonardo da Vinci)**




உரு 22 - இறுதி இராப் போசணம் **(The Last Supper),** லியானாடோ டாவின்சி **(Leonardo da Vinci)**



உரு 23 - பாறையின் மீது கன்னிமரியாள் **(Vergin of the Rocks),**
லியானாடோ டாவின்சி **(Leonardo da Vinci)**



உரு 24 - இறுதித் தீர்ப்பு **(Last Judgement),** மைக்கல் அஞ்சலோ **(Michelangilo)**



உரு 25 - ஆதாமைப் படைத்தல் **(Creation of Adam),** மைக்கல் அஞ்சலோ **(Michelangilo)**



உரு. 26 - பியெற்றா சிலை **(Pieta),** மைக்கல் அஞ்சலோ **(Michelangilo)**



உரு. 27 - டேவிட் சிலை **(David),** மைக்கல் அஞ்சலோ **(Michelangilo)**



உரு. 28 - மோசஸ் சிலை **(Moses),** மைக்கல் அஞ்சலோ **(Michelangilo)**



உரு. 29 - ஏதென்ஸ் பள்ளி **(School of Athens),** ரபாயெல் சென்சியோ **(Raphael Sanzio)**




உரு. 30 - உருமாற்றம் **(Parnassus),** ரபாயெல் சென்சியோ **(Raphael Sanzio)**



உரு. 31 - அல்பா மடோனா **(Alba Madona),** ரபாயெல் சென்சியோ **(Raphael Sanzio)**


## தேர்ச்சி மட்டம் 6.5



உரு. 32 - சூரிய உதயத்தின் மனப்பதிவு **(Sunrise;Impression),** க்ளோட் மொனே **(Claude Monet)**




உரு. 33 - நீர் அல்லிகளும் ஜப்பானியப் பாலமும் **(Water Lilies and the Japanese Bridge)** க்ளோட் மொனே **(Claude Monet)**



உரு. 34 - றோவுன் தேவாலயம் (சூரியனின் முழுமை ஒளி) **(Rouen Cathedral; Full Sunlight),** க்ளோட் மொனே **(Claude Monet)**



உரு. 35 - நடன வகுப்பு **(The Dance Class),** எட்கா டெகா **(Edgar Degas)**



உரு. 36 - குளியற் தொட்டி **(The Tub),** எட்கா டெகா **(Edgar Degas)**



உரு. 37 - தலைவாரும் பெண் **(Women Combing Her Hair),** எட்கா டெகா **(Edgar Degas)**



உரு. 38 - நீல அறை (The Blue room), மேறி கசற் (Mary Cassat)



உரு. 39 - தலையை சீர் செய்யும் பெண் பிள்ளை (Girl Arranging Her Hair), மேறி கசற் (Mary Cassat)



உரு. 40 - ஸ்சானம் (The Bath), மேறி கசற் (Mary Cassat)




உரு. 41 - உருளைக்கிழங்கு உண்போர் **(The Potato Eaters),** வின்சன்ட் வன்கோ **(Vincent Van Gogh)**




உரு 42 - நட்சத்திரங்கள் நிறைந்த இரவு **(The Starry Night),** வின்சன்ட் வன்கோ **(Vincent Van Gogh)**




உரு. 43 கதிரை **(Vincent's Chair),** வின்சன்ட் வன்கோ **(Vincent Van Gogh)**



உரு 44 - மஞ்சள் நிற இயேசு **(The Yellow Christ),**
போல் கொகான் **(Paul Gauguin)**



உரு 45 - தெய்வங்களின் தினம் **(The Day of the God),** போல் கொகான் **(Paul Gauguin)**




உரு 46 - நாம் எங்கிருந்து வருகிறோம், நாங்கள் யார்? நாம் எங்கு போகிறோம் **Where do we come from? What are we? Where are we going?),** போல் கொகான் **(Paul Gauguin)**



உரு 47 - சீட்டாடுவோர் **(The Card Players),** போல் செசான் **(Paul Cezanne)**



உரு 48 - அப்பிள் தட்டு **(The Basket of Apple),** போல் செசான் **(Paul Cezanne)**



உரு 49 - வெடித்த சுவருடன் கூடிய வீடு **(The House with the Cracked Walls),**
போல் செசான் **(Paul Cezanne)**

# தேர்ச்சி மட்டம் 6.6



உரு 50 - அவிக்நோன் யுவதிகள் **(The Maids of Avignon /Les Demoiselles d' Avignon),** பப்லோ பிகாசோ **(Pablo Picasso)**



உரு 51 - குவர்ணிகா **(Guernica),** பப்லோ பிகாசோ **(Pablo Picasso)**



உரு 52 - அழுது புலம்பும் பெண் **(The Weeping Woman),** பப்லோ பிகாசோ **(Pablo Picasso)**



உரு 53 - வீடும் மரமும் **(Houses and Trees),** ஜோர்ஜஸ் பிராக் **(Georges Braque)**



உரு 54 - மனிதனும் கிட்டாரும் **(Man with a Guitar),** ஜோர்ஜஸ் பிராக் **(Georges Braque)**



உரு 55 - பாதத்துடன் கூடிய மேசை **(Pedestal Table),** ஜோர்ஜஸ் பிராக் **(Georges Braque)**

## தேர்ச்சி 7.0

வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திர, சிற்ப, செதுக்கல் மட்டும் கட்டட நிர்மாணிப்புக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.


# தேர்ச்சி மட்டம் 7.1



உரு 56 - தந்திரிமலைக் குகை



உரு 57 - அம்பெய்பவன்
(தந்திரிமலைக் குகை)



உரு 58 - விலங்கொன்றின் மீது செல்லும் மனிதன்
(தந்திரிமலைக் குகை)




உரு 59 - புள்ளிமானின் பின்னால் நிற்கும் மனிதன்
(தந்திரிமலைக் குகை)



உரு 60 - பலவிதக் குறியீடுகள்
(தந்திரிமலைக் குகை)



உரு 61 - தொறவக்க குகை



உரு 62 - மீனும் மனித உருவமும்
தொறவக்க குகை




உரு 63 - யானையும் குட்டியும், தொறவக்க குகை



உரு 64 - மனித உருவமொன்று
தொறவக்க குகை



உரு 65 - செதுக்கப்பட்ட உருவங்கள் பல
தொறவக்க குகை



உரு 66 - பில்லாவ குகை



உரு 67 - எருதின் உருவமொன்று, தொறவக்க குகை



உரு 68 - கேத்திர கணித வடிவங்களையுடைய மனித விலங்கு உருவங்கள், தொறவக்க குகை



உரு 69 - வெட்ரம்புகல குகை



உரு 70 - அதிக வேலைப்பாடுகளையுடைய வட்ட வடிவங்கள், வெட்ரம்புகல குகை



உரு 71 -
இரு மனித உருவங்கள்,
வெட்ரம்புகல குகை



உரு 72 -
யானைக் கூட்டமொன்று
வெட்ரம்புகல குகை



உரு 73 - யானை, வெட்ரம்புகல குகை



உரு 74 -
அம்பு, வில்
வெட்ரம்புகல
குகை

# தேர்ச்சி மட்டம் 7.2



உரு 75 - லஸ்கோ குகை, பிரான்சு **(Main hall - Lascaux, France)**



உரு 76 - குதிரை **(Hourse with arrow, Lascaux - France)**



உரு 77 - மான் **(Engraved deer, Lascaux-France)**



உரு 78 - பைசன் எருதுகள் **(Crossed bison, Lascaux - France)**



உரு 79 - கறுப்பு தலையுடைய பசு **(Black headed cow, Lascaux - France)**



உரு 80 - ஒற்றைக் கொம்புடைய குதிரை **(Unicorn, Lascaux - France)**



உரு 83 - பறவைத் தலையுடைய மனிதன் **(Man with a bird's head, Lascaux - France)**



உரு 81 - எருதுகளும் மான்களும் **(Aurochs and deers, Lascaux - France)**



உரு 82 - தாடியுள்ள குதிரை **(Engraved bearded horse, Lascaux - France)**



உரு 84 - அல்ராமீரா குகை, ஸ்பெயின் **(Altamira, Spain)**



உரு 85 - பைசன் எருது
**(Bison, Altamira - France)**



உரு 86 - பைசன் எருது
**(Bison, Altamira - France)**



உரு 87 - பெண்மான்
**(Hind, Altamira - Spain)**



உரு 88 - காட்டுப் பன்றி
**(Wild boar, Altamira - Spain)**



உரு 89 - எதிர்மறையான கையடையாளங்கள்
**(Negative hand print, Altamira - Spain)**



உரு 90 - நேர்மறையான கையடையாளங்கள்
**(Positive hand print, Altamira - Spain)**



உரு 91 - குறியீடுகள்
**(Sign, Altamira - Spain)**




உரு 92 - சோவெ குகையின் ஒரு பகுதி, பிரான்சு **(Chauvet, France)**



உரு 93 - சிறு பிள்ளையுடையது எனக் கருதக் கூடிய காலடையாளம் **(Chauvet, France)**



உரு 94 - குதிரையுருவங்கள் **(Chauvet, France)**



உரு 95 - காண்டா மிருகங்களின் உருவங்கள் **(Chauvet, France)**



உரு 96 - மமத் உருவங்கள் **(Chauvet, France)**




உரு 97 - சிம்ம உருவங்கள் **(Chauvet, France)**



உரு 98 - பனி மான்கள் **(Chauvet, France)**



உரு 99 - குகைக் கரடி **(Chauvet, France)**



உரு 100 - சிறுத்தை **(Chauvet, France)**



உரு 101 - கையின் சின்னங்கள் **(Chavet, France)**




உரு 102 - பொண்டிகோமி குகை
(Font de Gaume, France)



உரு 103 - பைசனும் மான்களும் **(Font de Gaume, France)**



உரு 104 - கருங்குதிரை **(Font de Gaume, France)**



உரு 105 - பைசன் உருவங்கள் **(Font de Gaume, France)**



உரு 106 - பைசன் **(Font de Gaume, France)**



உரு 107 - பனி மான்கள்
**(Font de Gaume, France)**

# தேர்ச்சி மட்டம் 7.3



உரு 108 - தூபாராம தாதுகோபம் - அனுராதபுரம்



உரு 109 - ருவன்வலி மகாசாய - அனுராதபுரம்



உரு 110 - அபயகிரி தாதுகோபம் - அனுராதபுரம்



உரு 111 - ஜேத்தவனராமய தாதுகோபம் - அனுராதபுரம்



உரு 112 - ரன்கொத் விகாரை - அனுராதபுரம்



உரு 113 - கிரி விகாரை - அனுராதபுரம்



உரு 114 - ஹங்குரன்கெத்த பொத்குல் விகாரைத் தாதுகோபம்


# தேர்ச்சி மட்டம் 7.4



உரு 115 - ஆசனகர, புலுகுனாவ ஆசனகர, திருகோணமலை



உரு 116 - போதிகர, நில்லக்கம போதிகர, குருணாகல்



உரு 117 - பதானகர, பஷ்சீமாரமய - அனுராதபுரம்



உரு 118 - உபோஷதகர, அனுராதபுர லோவா மகா பாய, - அனுராதபுரம்



உரு 119 - ஜந்தாகர, அரங்கலே

## தேர்ச்சி மட்டம் 7.5



உரு 120 - வாகல்கடம், மிகிந்தலை கண்டக சைத்தியம்



உரு 121 - சந்திரவட்டக்கல், அநுராதபுர பிசோ மாளிகை



உரு 122 - சந்திரவட்டக்கல், பொலநறுவை வட்டதாகே



உரு 123 - சந்திரவட்டக்கல், கண்டி தலதா மாளிகை



உரு 124 - காவற்கல், அநுராதபுர ரத்தின மண்டபம்



உரு 125 - கைப்பிடி, அநுராதபுர, ரத்தின மண்டபம்



உரு 126 - படிவரிசை - அநுராதபுர பிசோ மாளிகை



உரு 127 - நிறை குடங்கள், அநுராதபுரம் இரட்டைக் கேணி

# தேர்ச்சி மட்டம் 7.6



உரு 128 - திவங்க சிலை மனை, பொலநறுவை



உரு 129 - தூபாராமய சிலைமனை, பொலநறுவை



உரு 130 - இலங்காதிலக்க சிலைமனை, பொலநறுவை



உரு 131 - 1 ஆம் சிவாலயம், பொலநறுவை



உரு 132 - 2ம் சிவனாலயம், பொலன்னறுவை



உரு 133 - விஜயோத்பாய (வைஜந்தி மண்டபம்), பொலநறுவை



உரு 134 - நிஸ்ஸங்கலதா மண்டபம், பொலநறுவை




உரு 135 - பொலநறுவை வட்டதாகே



உரு 136 - திரியாய வட்டதாகே



உரு 137 - மெதிரிகிரிய வட்டதாகே



உரு 138 - இரட்ரைக் கேணி, அநுராதபுரம்



உரு 139 - குமார கேணி, பொலநறுவை



உரு 140 - தாமரை கேணி, பொலநறுவை



உரு 141 - ரன்மசு பூங்காவின் குளம், பொலநறுவை

# தேர்ச்சி மட்டம் 7.7



உரு 142 - காதலர் செதுக்கல், இசுருமுனிய



உரு 143 - மனிதனும் குதிரைத் தலையும் செதுக்கல், இசுருமுனிய



உரு 144 - அரச குடும்பம் செதுக்கல், இசுருமுனிய



உரு 145 - நீராடும் யானைகள், இசுருமுனிய

# தேர்ச்சி மட்டம் 7.8



உரு 146 - மகா இலுப்பல்லம புத்தர் சிலை




உரு. 147 - சமாதி புத்தர்சிலை (மகாமெவுனா பூங்கா) - அனுராதபுரம்



உரு 148 - தொலுவில புத்தர் சிலை



உரு 149 - பங்குளிய புத்தர் சிலை - அனுராதபுரம்




உரு 150 - அவுக்கன புத்தர் சிலை

# தேர்ச்சி மட்டம் 7.9



உரு. 151 - கல் விகாரையின் நின்ற நிலை புத்தர் சிலை, பொலநறுவை




உரு. 152 - கல் விகாரையின் அமர்ந்த நிலை புத்தர் சிலை (தோரணத்துடன்), பொலநறுவை






உரு. 153 - கல் விகாரையின் வித்தியாதர குகையின் அமர்ந்த நிலை புத்தர் சிலை (குடையுடன்), பொலநறுவை



உரு. 154 - கல் விகாரையின் துயிலும் நிலை புத்தர் சிலை, பொலநறுவை



உரு. 155 - பொலநறுவையின் வட்டதாகேயின் புத்தர் சிலைகள்




உரு. 156 - பொத்குல் விகாரையின் சிலை, பொலநறுவை



உரு. 157 - கடலாதெனிய அமர்ந்த நிலை புத்தர் சிலை



உரு. 158 இலங்காதிலக்க அமர்ந்த நிலை புத்தர் சிலை



உரு. 159 - தம்புள்ளை ரஜமகா விகாரையின் புத்தர் சிலைகள்

## தேர்ச்சி மட்டம் 7.10



உரு. 160 - அர்த்த நாரீஸ்வரர்



உரு. 161 - அவலோகிதேஸ்வர எனப்படும் புத்தரின் போதிசத்துவர் சிலை



உரு. 162 - கண்ணகி (மாலாதாரா)



உரு. 163 - தெதிகம கொட்ட விகாரையின் யானை விளக்கு



உரு. 164 - நடராஜா



உரு. 165 - சிவ சோமஸ்கந்த மூர்த்தி


## தேர்ச்சி மட்டம் 11



உரு. 166 - சிகிரியா ஓவியங்கள்



உரு. 167 - ஹிந்தகலை ஓவியங்கள்



உரு. 168 - கொனாகொல்ல ஓவியங்கள்



உரு. 169 - மகியங்கனை சாயலின் தாதுகர்ப்பத்தின் ஓவியங்கள்












அ) தேவாராதனை

ஆ) புத்தபெருமான் சங்கஸ்ஸப் புரியை அடைதல்

இ) சுல்லபதும கதை


உரு. 170 - பொலநறுவை, திவங்க சிலைமனையின் ஓவியங்கள்



உரு. 171 - பொலநறுவை கல்வி விகாரையின் வித்தியாதர குகையில் உள்ள ஓவியங்கள்



உரு. 172 - திமபுலாகல மாரா வீதியின் ஓவியங்கள்




அ) யானைகளைத் தானமாக வழங்குதல் (வெஸ்சந்தர ஜாதகக் கதை)



ஆ) இயமனைத் தோற்கடித்தல்

உரு. 173 - தெகல்தொருவ ரஜமகா விகாரை ஓவியங்கள்



அ) இரு பிள்ளைகளைத் தானம் பண்ணுதல் (வெஸ்சந்தர ஜாதகக்கதை)



ஆ) செய்தி - உரக ஜாதகக் கதை

உரு. 174 - மெதவல டெம்பிட்ட விகாரை ஓவியங்கள்



அ) இயமனைத் தோற்கடித்தல்



ஆ) ஆனோதத்த குளம்

உரு. 175 - தம்புளைக் குகைச் சித்திரங்கள்



அ) மகாதன செல்வந்தனின் கதை - இசையுடன் கூடிய உல்லாசம்



ஆ) மகாதன செல்வந்தனின் கதை - நடனக்காரரும் மேளக்காரரும்



இ) வெஸ்ஸந்தர ஜாதகக் கதை - வெஸ்ஸந்தர தாய்மாருக்கு பரிசு வழங்குதல்

உரு. 176 - கத்தலுவ பூர்வாராமயவின் ஓவியங்கள்



அ) தேலபத்த ஜாதகக் கதை - செவிப்புலன்களை கவருதல்



ஆ) சிவி ஜாதகக் கதை - அரச ஊர்வலத்தில் இசை வல்லுனர்கள்



இ) சிவி ஜாதகக் கதை - அரிட்டபுர சிவி மன்னன்

உரு. 177 - முல்கிரிகல விகாரை ஓவியங்கள்



(அ) ஏர்மங்கலமும் சித்தார்த்தரின் முதற் தியானமும்



(ஆ) மகாஜனக்க ஜாதகக் கதை
- விதேகயவில மூடி சூட்டுதல்



(இ) கட்டஹாரி ஜாதகக்கதை
- அரண்மனைக்குள் இருக்கும் பரனெஸ் மன்னன்

உரு. 178 - கரகம்பிட்டிய சுபோதாராமயவின் ஓவியங்கள்



(அ) தகம்சொண்ட ஜாதகக் கதை - பரிந்தியாகமும் மீள் விளைவும்



(ஆ) சுள்ள தர்மபால ஜாதகக் கதை - பொறாமை கொண்ட மன்னன்

உரு. 179 - தெல்வத்த விகாரையின் ஓவியங்கள், காலி

# தேர்ச்சி மட்டம் 7.12



(அ) குளிக்கும் தடாகம்



(ஆ) வீடுகள்



(இ) நீர்த்தொட்டி



(ஈ) வடிகாலமைப்புக் கால்வாய்




(உ) கிணறொன்று

உரு. 180 கட்டடக்கலை ஆக்கங்கள் சிந்துவெளி நாகரிகம்



(அ) செம்மணற் கல்லால் அமைக்கப்பட்ட முண்ட வடிவம்







(ஆ) நரை நிற மணற் கல்லினால் அமைக்கப்பட்ட முண்ட வடிவம்

உரு. 181 - முண்ட வடிவம், சிந்துவெளி நாகரிகம்



உரு. 182 நடன மாது உருவம், சிந்து வெளி நாகரிகம்



உரு. 183 - பூசகர் உருவம், சிந்து வெளி நாகரிகம்



உரு. 184 - தாய்த் தெய்வம், சிந்துவெளி நாகரிகம்



உரு. 185 - யோகாசனத்தில் வீற்றிருக்கும் தெய்வ உருவங்களின் முத்திரைகள், சிந்துவெளி நாகரிகம்




உரு. 186 - விருட்ச தெய்வம் (செவிமடுப்பவர்களும் ஆடும்) முத்திரைகள், சிந்துவெளி நாகரிகம்



உரு. 187 - இரு வேங்கைகளுடன் போர் புரியும் மனிதனின் முத்திரைகள், சிந்துவெளி நாகரிகம்

# தேர்ச்சி மட்டம் 7.13





உரு. 188 - சாஞ்சி தூபி, இந்தீய மௌரியக் கலை



உரு. 189 - லௌரியா நந்தங்கர் தூண் - இந்திய மௌரியக்கலை



உரு. 190 - சாரனாத் தூணின் உச்சி, இந்திய மௌரியக்கலை



உரு. 191 - ராம்பூர்வா தூணின் உச்சி - இந்திய மௌரியக் கலை

# தேர்ச்சி மட்டம் - 7.14



(அ) கிழக்குத் தோரணச் செதுக்கல்கள் - சாஞ்சித் தோரணம் - இந்திய சாத்தவாகன கால கலை நிர்மாணிப்புகள்




(ஆ) மேற்கு தோரணச் செதுக்கல்கள் - சாஞ்சித் தோரணம், இந்திய சாத்தவாகன கால கலை நிர்மாணிப்புகள்

உரு. 192 - சாஞ்சித் தோரண செதுக்கல்கள், இந்திய சாத்தவாகன கால கலை நிர்மாணிப்புகள்



(இ) வடககுத தோரண செதுக்கல்கள் - சாஞ்சித் தோரணம், இந்தீய சாத்தவாகன கால கலை நிர்மாணிப்புகள்



(இ) தெற்குத் தோரண செதுக்கல்கள் - சாஞ்சித் தோரணம், இந்தீய சாத்தவாகன கால கலை நிர்மாணிப்புகள்

உரு. 193 - சாஞ்சித் தோரண செதுக்கல்கள், இந்திய சாத்தவாகன கால கலை நிர்மாணிப்புகள்









(அ) மகாமாயா தேவியின் கனவு, பாறுத் செதுக்கல்கள்



(ஆ) றூரு மிக ஜாதகக் கதை, பாறுட் செதுக்கல்கள்



(இ) மகாகபி ஜாதகக்கதை, பாறுத் செதுக்கல்கள்



(இ) அனேபிண்டு செல்வந்தன் ஜேதவனராமயவை காணிக்கையாகக் கொடுத்தல், பாறுத் செதுக்கல்கள்

உரு. 194 - பாறுத் கல்வேலி செதுக்கல்கள், இந்திய சங்க கால கலை நிர்மாணிப்புகள்

## தேர்ச்சி மட்டம் 7.15



உரு. 195 - கனிஷ்க அரசனின் நாணயம்



உரு. 196 - கோர்ட் மன்தார் புத்தர் சிலை



உரு. 197 - பிறெகம் புத்தர் சிலை - காந்தாரக் கலை



உரு. 198 - தக்திபஹீர் புத்தர் சிலை - காந்தாரக் கலை



உரு. 199 - சஹரி ப.்.லொல் சிலை - காந்தாரக் கலை



உரு. 200 - கடினச் செயல் (துஷ்கர கிரியாவ) சிலை - காந்தாரக் கலை



உரு. 201 - கத்ரா புத்தர் சிலை - மதுராக் கலை



உரு. 202 - கனிஷ்க அரசனின் உருவம் - காந்தாரக் கலை

## தேர்ச்சி மட்டம் 7.16




உரு. 203 - மகாமாயா தேவியின் கனவு - அமராவதி செதுக்கல்கள்



உரு. 204 - ராகுல குமாரர் உரிமைச் செல்வங்களைக் கேட்டல், அமராவதி செதுக்கல்கள்



உரு. 205 - நளாகிரி யானையை அடக்குதல், அமராவதி செதுக்கல்கள்



உரு. 206 - இல்லறத்தை துறந்து செல்லல், அமராவதி செதுக்கல்கள்




உரு. 207 - புத்தரின் உருவம் உள்ளடக்கிய செதுக்கற் தகடு (இல்லறத்தை துறந்து செல்லல், ஞானம் பெறுதல், மறையுரை வழங்குதல், பரிநிர்வாணம்), அமராவதி செதுக்கல்கள்

## தேர்ச்சி மட்டம் 7.17




உரு. 208 - மதுரா நின்ற நிலைப் புத்தர் சிலை, குப்த கலை மரபு



உரு. 209 - சாரநாத் அமர்ந்த நிலைப் புத்தர் சிலை, குப்த கலை மரபு


# தேர்ச்சி மட்டம் 7.18



உரு. 210 - பத்மபாணி போதிசத்துவர் உருவம், அஜந்தா ஓவியங்கள்



உரு. 211 - அப்சரா உருவம், அஜந்தா ஓவியங்கள்



உரு. 212 - மரண தறுவாயில் அரசிளங்குமரி, அஜந்தா ஓவியங்கள்



உரு. 213 - விஜயனின் இலங்கை வருகை (சீகளாவதானய), அஜந்தா ஓவியங்கள்



உரு. 214 - புத்த பெருமான் கிம்புள்வத்புரத்திற்கு வருகை தரல், அஜந்தா ஓவியங்கள்





உரு. 215 - ஐத்தன்த ஜாதகக் கதை, அஜந்தா ஓவியங்கள்


# தேர்ச்சி மட்டம் 7.19



உரு. 216 - குப்பு (சியோப்ஸ்) பிரமிட் **(Pyramid of Khufu /Cheops),** எகிப்து



உரு. 217 - கப்றே பிரமிட் **(Pyramid of Khafre),** எகிப்து



உரு. 218 - அபுசிம்பல் தேவாலயம் **(Temple of Abu Simbel),** எகிப்து



உரு. 219 - லக்சோர் தேவாலயம் **(Temple of Luxor),** எகிப்து

# தேர்ச்சி மட்டம் 7.20




உரு. 220 - நர்மயர் பலகம் **(Pallet of King Narmer),** எகிப்து





உரு. 221 - மென்குரே அரசனும் அவனது மகாராணியும் **(King Menkaure and his wife, queen Khamerernebty),** எகிப்து



உரு. 222 - ஸ்கிறைப் சிலை **(The Seated Scribe),** எகிப்து




உரு. 223 - நெபர்ரிரி (மார்பளவு சிலை) **(The Bust of Nefertiti),** எகிப்து


# தேர்ச்சி மட்டம் 7.21



உரு. 224 - பறவை வேட்டை **(Fawling Scene),** எகிப்து



உரு. 225 - மீடம்மின் வாத்துக்கள் **(Geese of Meidum),** எகிப்து



உரு. 226 - இசைக்கலைஞர்களும் நடனக் கலைஞர்களும் **(Musicians and Dancers),** எகிப்து

## தேர்ச்சி மட்டம் 7.22




உரு. 227 - பாதினன் தேவாலயம் (**The Parthenon Temple),** கிரேக்கம்



டொறிக் **(Doric)** | அயோனிக் **(Ionic)** | கொறிந்தியன் **(Corinthian)**

உரு. 228 - கிரேக்க தூண்கள் **(Greek Columns),** கிரேக்கம்



உரு. 229 - டொறிக் தூண்கள் **(Doric Columns),** கிரேக்கம்



உரு. 230 - அயோனிக் தூன்கள் **(Doric Columns),** கிரேக்கம்



உரு. 231 - கொறிந்தியத் தூண்கள் **(Corinthian Columns),** கிரேக்கம்

# தேர்ச்சி மட்டம் 7.23



உரு. 232 - கறுப்பு உருவ மட்பாண்டங்கள் **(Black figure pottery),** கிரேக்கம்



உரு. 233 - சிவப்பு உருவ மட்பாண்டங்கள் **(Black figure pottery),** கிரேக்கம்

## தேர்ச்சி மட்டம் 7.24




கூரோஸ் **(Kouros)**



கூரே **(Kore)**

உரு. 234 - கூரோஸ் மற்றும் கூரே சிலை **(Kouros and Kore),** கிரேக்கம்




உரு. 235 - தட்டெறிபவன் (பரிதி வட்டம் வீசுபவன்) **(Discobolus),** கிரேக்கம்



உரு. 236 - டொறிப்றஸ் (ஈட்டி ஏந்தி நிற்பவன்) **(Doryphoros),** கிரேக்கம்




உரு. 237 - ஹர்மிஸ்சும் டயோனிசிஸ்சும் (**Hermes and the Infant Dionysus),** கிரேக்கம்



உரு. 238 - லஒகூன் **(Laocoon),** கிரேக்கம்



உரு. 239 - சமோத்திரசின் சிறகு கொண்ட வெற்றி **(Winged Victory of Samothrace / Nike),** கிரேக்கம்



உரு. 240 - இறக்கும் கலாத்தியன் **(The dying Galatian/Gaul),** கிரேக்கம்

# மேலதிக வாசிப்பு நூல்கள்

குமாரசுவாமி, ஆனந்த. (1994). மத்திய கால சிங்களக் கலை, கொழும்பு தேசிய நூதனசாலை

கொடகும்புரே, சார்ள்ஸ். (1981). பனாவிட்டிய விடுதியின் செதுக்கல்கள், தெல்பொருளியல் திணைக்களம், சமயவர்தன அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). காவற்கல், தெல்பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). திவங்க சிலை மனை சுவரோவியங்கள், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). சந்திரவட்டக்கல், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). பொலநறுவை வெண்கலச் சிலைகள், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1984). புத்தர் சிலைகள், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

வனரத்தன தேரர், கம்புருட்டியே. (1983). இலங்கை புத்தர் சிலைகள், கம்புருட்டியே, வரையறுக்கப்பட்ட மாத்தற வர்த்தகர்கள்

சார்ள்ஸ், எஸ்.பீ. (2000). பழைமையான சுவரோவியங்கள், மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

விக்கிரமகமகே, சந்திரா. (1995). இலங்கையின் பழைமையான கட்டட வாயில்கள், இலங்கை பண்பட்டுக் கல்வி நிலையம்

விக்கிரமகமகே, சந்திரா. (1998). கல்விகாரையின் கலையும் வாஸ்துக் கலையும், ஸ்ரீதேவி அச்சகம் (தனியார்) லிமிடெட்

விக்கிரமகமகே, சந்திரா. (2001). அட்டமஸ்தான, தரஞ்சி அச்சகம்

விக்கிரமசிங்க, எஸ்.ஏ. (1992). இலங்கைக் கலை வரலாறு

விஜேசேகர, நந்ததேவ. (1990). சிற்பக்கலை, செம்மையாக்கம், தொல்பொருளியல் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - மெதவல, மத்திய பண்பர்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - தம்புள்ளை, மத்திய பண்பர்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (2004) இலங்கையின் சிற்பங்கள் - பௌத்த, மத்திய பண்பர்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - கத்தலுவ, மத்திய பண்பர்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - கரகம்பிட்டிய, மத்திய பண்பர்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

பரணவிததான, எஸ். (1963) இலங்கையின் தூபிகள்: Vம் பகுதி இலங்கை அரச அச்சகம்

பரணவிததான, எஸ். (1995) தொல்பொருளியல் சஞ்சிகை, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

குணவர்தன, பிரியசாந்த. (2005). பழைமையான இடங்களும் நினைவுத்தூபிகளும், தொல்பொருளியல் திணைக்களம்

தயானந்த, சார்ள்ஸ் (2002). சோலியஸ் மெண்டிஸ்: களனி விகாரை சுவரோவியங்கள், சோலியஸ் மெண்டிஸ் பண்பாட்டு மன்றம்

திசானாயக, ஜே.பீ. (1996). நாட்டின் மகிமை (தெகல்தொருவ), கொழும்பு: எஸ் கொடகே கம்பெனி

தர்மசிரி, அல்பேட். (2013). பெல்லன்வில சுவரோவியங்கள், சரசவி வெளியீட்டாளர், ஷாப் கிரபிக்ஸ்வறவுஸ் (தனியார்) லிமிடெட்

பஷாம் ஏ.எல். (1995). வியத்தகு இந்தியா, கொழும்: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

பண்டார நாயக்க, சேனக்க. (1970) சந்திரவட்டக்கல்லும் வேறு ஆவணங்களும், எம்.டீ. குணசேன கம்பெனி

பஸ்நாயக்க, எச்.டீ. (1998). பழைமையான இநதிய நாகரிகம், கொழும்பு: குணசேன கம்பெனி

லக்துசிங்க, சிரிநிமல் (1990). கண்டிக்காலம், நந்ததேவ விஸேசேகர, சித்திரக்கலை, கொழும்பு: தொல்பொருளியல் திணைக்களம்

விமலவங்ச, பத்தேகம. (1969). எமது பண்பாடு

விஜேசேகர, நந்ததேவ. (1990). சித்திரக்கலை, செம்மையாக்கம் தொல் பொருளியல் திணைக்களம்

விஜேசேகர, நந்ததேவ. (1964). பழைமையான சிங்கள சுவரோவியங்கள், கொழும்பு: அரச கரும மொழித் திணைக்களம்

சமரசிங்க, எஸ்.ஜீ. (199). இலங்கை கலை சங்கத்தின் கலைச்சஞ்சிகை, சமயவர்தன அச்சகம், கொழும்பு

சிரிசேன. சிஹில் எம். (1992) இலங்கைக் கலைசெய்தி, சதற வெளியீட்டாளர்களும் அச்சக வினைஞரும்

சேனவிரத்தின, அனுராத. (1966) இலங்கையின் வட்டதாகே, வரையறுக்கபப்ட எம்.டீ. குணசேன கம்பெனி

சேனவிரத்தின, அனுராத. (1995). அனுராதபுரம், கொழும்பு: தொல்பொருளியல் திணைக்களம்

சேனவிரத்தின, அனுராத. (1998). பொலன்னறுவை, கொழும்பு: தொல்பொருளியல் திணைக்களம்

சேனவிரத்தின, அனுராத. (2013). மலைநாடு:கண்டி, கொழும்பு: மத்திய பண்பாட்டு நிதியம்

சோமதிலக்க, எம். (2004) தொன்மையான இலங்கையின் சித்தரக்கலை, எஸ்.கொடகே

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1991) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, 36ம் இதழி, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், தரங்க அச்சகம், மகரகம

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1992) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, 4ம் இதழி, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், ஶ்ரீதேவி அச்சகம், தெகிவளை

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1991) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், தரங்க அச்சகம், மகரகம

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1991) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, 36ம் இதழி, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், ஶ்ரீதேவி அச்சகம், தெகிவளை

Adams, Laurie Schneider. (2008). *A History of western Art*, John Jay College and the Graduate Center, City University of Newyork, McGraw-Hill, New York.

Bandaranayaka, Senaka. (1986). *The Rock and Wall painting of Sri Lanka*, Stamford (pvt) ltd.

Bronze from Ceylon, (1986). *Bronze from Ceylon*, National musium, Colombo.

Dharmasiri, Albert. (1988). *Modern Art in Sri Lanka,* Lakehouse.

Janson, H.W (2011). *History of Art: The Western Tradition*, London: laurence King Publishing ltd.

Paranavithana, Senarath. (1971). *Art Of Ancient Sinhales*, Maharagama: Visudunu Prakashakayo.

Premathilaka, Lilananda. (1986). *Sri Lankan Bronzes*, National musium, Colombo.

Premathilaka, Lilananda. (1995). *The Heritege of Sri Lanken Bronze Sculpture,* lilananda Premathilaka, National musium, Colombo.

Rathus, Lois Fichner . (2004). *Undestanding Arts*, USA, Thomson W ordsworth.

Sholder ,Von. (1992). *Buddist Sculpture of Sri lanka*, ,Hongkong.

Sholder ,Von. (1992). *The Golden Age of Sculpture in Sri lanka*, Hongkong.

Somadeva, Raj. (2012). *Rock Painting and Engraving Sites in Sri Lanka*, PGIAR-Publication.

Turner , J. (1996). The Dictioíry of Art, Macmillan Publisher Limited, London.